# திருச்சபை சரித்திரச் சுருக்கம்

இயற்றியது

அ. பெரியநாயக முதலியார். பி.ஏ. எல்.டி.

Q62:6
N26
78180

A 611
280

சேசு மரி சூசை துணை.

OFFICE OF REGISTRAR OF BOOKS
4 OCT 1926
MADRAS

# திருச்சபை
# சரித்திரச் சுருக்கம்.

ஆ. பெரியநாயக முதலியார், பி.ஏ., எல்.டி.,
அர்ச். மிக்கயேல் ஐ ஸ்கூல், கோயமுத்தூர்.

TOTAL PAGES - 294
ACESSNO - 78180

Rights Reserved.

PRINTED AT
THE 'VICTORIA PRESS,' COIMBATORE.

Nihil obstat :

C. S. MARIAROKIAM, censor ad hoc

Coimbatore, die 23ª Junii 1925.

Imprimatur :

✠ AUGUSTINE,

*Bishop of Coimbatore.*

Q62:6
N26

78180



The Most Rev.
Alexis Henry M. Lepicier O.S.M.
*Visitor Apostolic to India,*
1925-26.

The Right Rev.
Augustine Roy D.D.
*Coimbatore.*

VICTORIA PRESS, COIMBATORE.

G

## Letter of Approbation

*of*

## H. E. The Visitor Apostolic.

No. 248.

COIMBATORE, JANUARY 9TH 1926.

To

**Mr. Periyanayagam Mudaliar** B.A., L.T.,

Coimbatore.

Dear Sir,

It has been brought to my notice that, in order to facilitate the study of the history of the Catholic Church in our schools, where the Tamil Language is prevalently used, you have resolved to bring out in that language a book which would embody the principal facts which have marked the succeeding centuries of the church. For this purpose you have made use of the excellent book of Chantrel, adding to it the more recent events thus giving a complete and harmonious presentation of that wonderful institution which had its origin in the Sacred Heart of Jesus, our Divine Savior.

This your purpose is indeed worthy of approval and I gladly bless your efforts, the more so as, in the development of the book, you have ever before your mind both the supernatural character of the Holy Catholic Church and the words of Our Lord that the gates of Hell shall never prevail against her.

I am glad therefore, to call the abundance of the divine blessings both upon you, my dear Sir, and upon those who from a reading of your book shall derive a greater esteem and appreciation of that glorious Church which Christ purchased at the price of His own Blood, that he might present it without blemish and wrinkle. Believe me, dear Sir,

Your faithfully in Christ,

✠ **Alexis Henry M. Lepicier O. S. M.**

*Archbishop of Tarsus*
*Visitor Apostolic to India.*

D

மாட்சிமை தங்கிய அப்போஸ்தலிக்குத் தரிசிகரின்
அங்கீகார நிருபம்

நெ. 248.

கோயமுத்தூர்,
1926-ஹு ஜனவரி-மீ 9-உ

மகா-௱-௱-ஸ்ரீ பெரியநாயகமுதலியார் பி.ஏ,எல்.டி., அவர்களுக்கு.

பிரியமுள்ள ஐயா,

தமிழ் மொழிபரவி வழங்கும் நமது பள்ளிக்கூடங்களில் கத்தோலிக்குத்திருச்சபையின் சரித்திரத்தைக்கற்க உதவும்பொருட்டுத்திருச்சபையில் ஒவ்வொரு நூற்றாண்டிலும் நடந்தேறிய விசேஷமான சம்பவங்கள் அடங்கிய ஓர் நூலை அஷ்டி பாஷையில் பிரசுரம் செய்ய நீர் தீர்மானித்திருப்பதாய் நமக்குத்தெரிவிக்கப்பட்டது. இதற்காக 'ஷாக்தரல்' எழுதிய சிறந்த நூலை உபயோகித்திருக்கிறீர். அத்துடன் சமீபகால சம்பவங்களையும் சேர்த்து நமது திவ்வியரக்ஷகராகிய சேசுநாத சுவாமியின் திருஇருதயத்தில் உற்பவித்த இந்த அற்புதமான ஸ்தாபனத்தைப்பூரணமாயும் பொருத்தமாயும் வர்ணித்திருக்கிறீர்.

உமது இந்தத்தீர்மானம் அங்கீகரிக்கத்தகுந்ததே. நாமும் உமது முயற்சியை அகமகிழ்ந்து ஆசீர்வதிக்கிறோம். தவிர, பரிசுத்த கத்தோலிக்குத்திருச்சபையின் சுபாவத்துக்கு மேலான தன்மையையும், பாதாளவாசல்கள் அதனை மேற்கொள்ளா என்று நமது ஆண்டவர் உரைத்த மொழியையும் சற்றும் மறவாமல் இந்நூலை எழுதும்போது நீர் கையாடி வந்திருப்பது நமக்கு மிகவும் அகமகிழ்ச்சியைத் தருகிறது.

ஆகையால் பிரியமுள்ள ஐயா, உமக்கும் உமது புஸ்தகத்தை வாசித்து கங்குகரையில்லாததாய்க் காட்டும்பொருட்டு, தமது சொந்த இரத்தத்தால் கிறிஸ்துநாதர் வாங்கின மகத்துவம் பொருந்திய திருச்சபையினிடம் அதிகமான மதிப்பும் அபிமானமும் அடைவோர்களுக்கும் தேவாசீர்வாதம் ஏராளமாய்உண்டாகும்படி அகமகிழ்ச்சியுடன் கோருகிறோம்,

இப்படிக்கு
கிறிஸ்துநாதரிடம் விசுவாசமுள்ள,
✠ அலக்சிஸ் மரிய லெபசியர் ஓ.எஸ்.எம்.
தார்சுஸ் அதிமேற்றிராணியார்
இந்தியாவின் அப்போஸ்தலிக்குத் தரிசிகர்.

மிகவும் சங்கைக்குரிய L. பேஷ சுவாமிகளின்

# முகவுரை.

---

கிறிஸ்துநாதரின் திருச்சபை துவக்கி 1900-வருஷங்களாயிற்று. எப்போதுமிருந்தது போலவே இப்போதும் இது சத்தியத்தின் தூணும் உலக இரக்ஷணியத்தின் ஏதுவுமாயிருக்கிறது. உலகமெங்கும் பரவியுற்ற 320 கோடி ஜனங்களை ஆண்டு வருகிறது. உலகின்காரியங்கள் நாளடைவில் அழிவுறுவதாயினும், பழமையான இத்திருச்சபை எவ்விதமாற்றமுமடையாமல், எப்போதும் போலவே தற்போதும் கிறிஸ்துநாதருடைய யௌவனமும், வனப்பும் பொருந்திய பத்தினியாயிருக்கிறது.

சகலமனிதரையும் இரக்ஷணியத்துக்குள் செலுத்தும் விசேஷித்த அலுவலைக்கிறிஸ்துநாதர் இத்திருச்சபை ஒன்றுக்கே அளித்திருக்கிறார். இவ்வலுவலை நிறைவேற்றக் கோடிக்கணக்கான வேதசாட்சிகள் தங்கள் இரத்தத்தைச்சிந்த அந்த இரத்தம் புதுக்கிறிஸ்தவர்களுக்கு வித்தாயிற்று. இரத்தஞ்சிந்தல் அவசியமற்றகால் எண்ணிக்கையில்லாத பரிசுத்த ஸ்துதியர்களும், கன்னியர்களும் கிறிஸ்துவின் அன்புக்குத்தங்கள் உயிரைப்பலியாக்கினார்கள். இப்படித் தலைமுறை தலைமுறையாய்த் திருச்சபை நீடித்து உலகமெங்கும் சுவிசேஷ வெளிச்சத்தைப்பரப்பித்தல், மனிதசாதியைப்புதுப்பித்தல், மனிதர் இருதயங்களைமேனோக்கி எழச்செய்தல், ஆத்தும சரீரநோக்காடுகளைத் தீர்த்தல், ஜனசமூகத்தில் ஏற்படும் குறைகளை நீக்குதல், முதலிய தனது தெய்வீக அழைப்பை நிறைவேற்றிக் கொண்டு வருகிறது. பண்டைக்காலத்தில் 'கோர்னீலியா' காட்டியதுபோல் திருச்சபையும் தன்மக்களைச் சுட்டிக்காட்டி "என் ஆபரணங்களும் என் பூஸ்திதியும் இதோ இருக்கின்றன." எனச் சற்றும் தவறின்றிச்சொல்லலாம்.

இப்படி நன்மையையே பயக்கும் இத்திருச்சபை விரோதிக்கப்படுவதற்கும், நன்றிகெடப்பாவிக்கப்படுவதற்கும் யாது காரணம்? அறியாமையின் காரணமாக இதை விரோதிப்போர் உலகிற்பலர்

உண்டு; அறிந்தும் தங்கள் கெட்ட சுபாவங்களைத் தடுத்தல் காரணமாக இதை விரோதிப்போரும் பலர் உண்டு. "இதன் தலையையும் இருதயத்தையும் தாக்குக" எனச்சாத்தான் இவர்களைத் தூண்டுகிறான். ரோமை திருச்சபையின் தலையும், பிராஞ்சு அதின் இருதயமுமென உண்மையாய்ச் சொல்லப்பட்டதால், இவ்விரோதிகள் மற்ற பக்கங்களைவிட இப்பக்கங்களிலேயே விசேஷித்த அலுவலாயிருப்பது சற்றும் வியப்பு உண்டாக்குவதன்று. 'தேசஒற்றுமைச்சங்கம் (League of nations) உலகில் சமாதானம் நிலைப்பித்தாலும், போராடுந் திருச்சபைக்குச் சமாதானம் ஏற்படாது. ஏனெனில் உலகை முடிவுபரியந்தம் அதன் விரோதிகள் தங்களுக்குள் ஒற்றுமைப்பட்டுக்கொண்டே வருவார்கள். ஆயினும் இறந்தகாலத்தில் ஜெயமடைந்தாற்போலவே எதிர்காலத்திலும் ஜெயமடையப் போவதால் திருச்சபை இதற்குச் சற்றும் பயப்படுகிறதில்லை. ஏனெனில் "நரக வாசல்கள் இதை மேற்கொள்ளா"

திருச்சபை குழந்தையாய்த் தொட்டிலிலிருக்கும்போதே அஞ்ஞானம் அதை நசுக்கிக்கொல்ல எழுந்தது. ஆனால் முன்னூறு வருஷங்கள் நீடித்த ஓயாத வேதனைகளின்பின் திருச்சபை தான் அம்மட்டும் ஒளிந்திருந்த இருட்டறைகளினின்று வெளிக்கிளம்பி, அழிந்துபோன ரோமை சாம்ராச்சியத்தின்மேல் ஜெயம் பெற்று நின்றது. சில நூற்றாண்டுகளின்பின் மகமதியர் ஐரோப்பாவில் நுழைந்து நாசம்பண்ணினார்கள். பின் மகமதியமதம் ஐரோப்பாவில் தரைமட்டமாக்கப்படத் திருச்சபை முன்போல் நிலைபெற்றோங்கியது. பிரிவினைக்காரரும், பற்பல தப்பறைகளைக் கைப்பற்றினோரும் திருச்சபையின் களங்கமற்ற ஆடையைக்கிழிக்க எத்தனித்துப் பேதுருவின் கற்பாறையை வீணே மோதினார்கள். நானூறு வருஷங்கட்குமுன் ஐரோப்பாவில் பாதி லுத்தர், கல்வின் முதலிய பதிதரைத் தொடர்ந்தது. தற்காலம் பதிதமதம் ஆயிரக்கணக்காய்ச் சின்னாபின்னப்பட்டு ஓர் மதமெனவின்றி மரித்துப் போயிற்று. ஆனால் திருச்சபை மட்டும் எப்போதும்போலவே வீரியத்துடன் நிலை பெற்று நின்று துருவமுதல் துருவத்துக்கு "கிறிஸ்துநாதர் ஜெயமடைந்தார், கிறிஸ்துநாதர் அரசாளுகிறார்; கிறிஸ்துநாதர் ராஜாதிராஜனாயிருக்கிறார்" என்ற தனது அழியாத சங்கீதத்தைப் பாடிக்கொண்டு வருகிறது.

இந்த சம்பவங்களே திருச்சபை சரித்திரத்திற் கூறப்படு வன. ஆகையால் ஓர் சுருக்கமான சரித்திரம் தமிழறிவோர்க்குத் தற்போது கிடைத்திருப்பது மிகவும் சந்தோஷமானதே. பெருமை வாய்ந்ததும், உபயோகமுள்ளதுமான இவ்வலுவலை நிறைவேற்றிய மகா-ா-ா-ஸ்ரீ ஆ. பெரியநாயக முதலியாருக்கு மனப்பூர்வமான வாழ்த்துதல் புரிகிறோம். இச்சிறப்பான புஸ்தகம் ஒவ்வோர் கத்தோலிக்க வீட்டிலும், பாடசாலையிலும், நுழையவேண்டுமென்பதே எமது தாற்பரியம். ஒவ்வொரு தேசக் கத்தோலிக்கரும் தங்கள் தாயாகிய திருச்சபையின் சரித்திரத்தை நன்கு தெரிந்திருத்தல் அவசியமே. ஏனெனில் அவர்கள் எவ்வளவுக்கதிகம் திருச்சபை எப்படிப்பட்டதென்றும், யாது செய்கிறதென்றும், என்ன போதகம் போதிக்கிறதென்றும் அறிவார்களோ, அவ்வளவுக்கதிகமாய் அதைச்சிநேகித்து, விசுவாசத்துடன் அதற்குக்கீழ்ப்படிந்து, நுட்பமாய் அதற்கு ஊழியஞ்செய்து, அதன் எதிரிகளுடனும் போராடிக்காப்பார்கள்.

கத்தோலிக்கரல்லாதவர்களுங்கூட இப்புத்தகத்தை வாசித்து அழிவற்ற திருச்சபை மனிதர் ஆத்தும சரீரங்கட்குச் செய்துவந்தவற்றையும், செய்துவருவனவற்றையும், அறிவார்களாக. அவர்களும் திருச்சபையைப் பின்பற்றிச் சத்தியத்தின் துறைமுகத்தையடையவும், அதினால் சீக்கிரத்தில் ஒரேமேய்ப்பனும், ஒரே மந்தையுமுண்டாகவும் சர்வேசுரன் வரமளிப்பாராக.

கோயமுத்தூர்,
15—8—25

L. பேஷ V.G.,

# நூலாசிரியர் முகவுரை.

ஆதாமுதல் மெசியாவை எதிர்பார்த்திருந்த தேவப்பிரசைகள் வசித்து, யூதாவின் சந்ததியில் நமது கர்த்தர் பிறந்து, பாடுபட்டுத்தம் திருச்சபையை ஸ்தாபித்த கிறிஸ்து மதத்தின் ஜென்ம நாடாகிய ஆசியா கண்டத்தின் ஓர் பாகமாய்ப் பழமையான நாகரீகம் பொருந்திய நமது இந்தியாதேசத்தில் அப்போஸ்தலரான அர்ச். தோமையார் வேதம் போதித்து, அர்ச். சவேரியார் முதல் அநேக நூற்றுக்கணக்கான வேதபோதகர்கள், போதகங்களாலும் புத்தகம், பத்திரிகைகளாலும், மேம்பட்ட ஒழுக்கங்களாலும், மற்றும் தற்கால நாகரீகத்துக்கேற்ற பற்பல ஏதுக்களாலும் நமது திவ்விய வேதத்தைப் பரவச்செய்தும், மிகப் பெருந்தொகையான நமது சகோதரர்கள் இன்னும் ஞான வெளிச்சமின்றி இருளில் மூழ்கிக்கிடப்பது பரிதாபமே!

நம் தேசத்தார் ராமாயண முதலிய கதா வாசகங்களை வாசிப்பதில் விசேஷ தாற்பரியமுள்ளவர்களானதால், கதா வாசகமாய் யாவரும் வாசித்தறியக்கூடிய எளியநடையில் மேனாட்டுப்பாஷைகளிலிருக்கும் திருச்சபை சரித்திரத்தைத் தமிழ்ப்பாஷையில் எழுதினால் உயர்ந்தவிஷயங்களைக்கொண்டு மேம்பட்ட நடையில் எழுதியிருக்கும் பிரபந்தங்களை வாசித்தறியக்கூடாதோர், எளியநடையுள்ள சரித்திரத்தை யென்கிலும் வாசித்துத் திருச்சபை தொடங்கிய காலத்திலிருந்த அஞ்ஞான ராச்சியங்கள் அதை அழிக்கச் செய்த பற்பலஎற்பாடுகளால் அது அழியாது, அந்த ராச்சியங்களே அதற்குட்பட்டதையுணர்ந்து கிறிஸ்து மதத்தின் மட்டில் நல்ல அபிப்பிராயங்கொண்டு, அதன் உட்பொருளையும் தேடியடைய சிலருக்கேனும் இது தூண்டுகோலாயிருக்கும் என்றும், தற்காலத்திய கல்வி பதிதக்கொள்கையை ஒட்டியிருப்பதால், பதிதமதம் உண்டாயின விதத்தை இச்சரித்திரத்தின் வழியாய் அநேகர் அறிவார்கள் என்றும் நம்பிக்கை கொண்டிருந்தேன். மேலும் கத்தோலிக்காகித் தங்கள் ஆத்துமரக்ஷணியத்துக்கு அவசியமான மந்திரம், கற்பனை, குறிப்பிடம் முதலியவற்றைக்கொண்ட நமது சகோதரர்களுக்குள்ளும் பெரும்பான்மையோர் தங்கள் தாயாகிய திருச்சபை

யின் மகத்துவத்தைச் சரிவர அறியாமலிருப்பது அவர்கள் அதன் சரித்திரத்தை அறியாத குறைவாலேற்படுவதால், கத்தோலிக்கரில் பள்ளிக்கூடமாணாக்கர்கள் முதல் முதிர்ந்த வயதோரும், கல்விமான்களும், சாமானியர்களும் கற்றறியுமாறும் இச்சரித்திரத்தை எழுதினேன்.

திருச்சபை அங்கீகாரம் பெற்றுப் பிராஞ்சுபாஷையில் சான்ற்றெல் எழுதிய சரித்திரம் இங்கிலீஷில் மொழி பெயர்க்கப்பட்டதைத் துணையாகக் கொண்டு, சான்ற்றெல் சரித்திரத்தைப் பிரித்தெழுதியபடியே தொடர்ந்து விஷயங்களைக்கையாடியிருக்கிறேன். ஐரோப்பியருக்கெழுதியதில், ஐரோப்பா சரித்திரத்தையதிகம் பாராட்டியிருப்பது சரியென்கிலும், திருச்சபை சரித்திரத்துக்கு அவசியமான சம்பவங்களை மட்டும் குறித்திருக்கிறேன். மேலும் பலவிடங்களில் விசுவாச சத்தியங்கள், திருச்சபை யாட்சி சீர்திருத்தங்கள், திருச்சபை சங்கங்களின் தீர்ப்புகள் முதலியவற்றில் சாமானிய ஜனங்களும் நன்கறிந்துணருமாறு ஆங்காங்கு போதுமான வியாக்கியானங்களும் செய்துள்ளேன்.

இதை அங்கீகரித்து உற்சாகப்படுத்தி ஓர் நிருபமருளிச் செய்த மாட்சிமைதங்கிய அப்போஸ்தொலிக்கு தரிசிகருக்கும், இதைப்பிரசுரஞ்செய்ய விசேஷித்த உதவிபுரிந்த மிகவும் வந்திக்கப்படத்தக்க அருஸ்தீன் ருவா மேற்றிராணியாருக்கும், இதற்கு ஓர்முகவுரையை எழுதித்தந்த மகா. சங். பெஷே சுவாமிக்கும், எழுதுகையில் அப்போதைக்கப்போது தகுந்த யோசனைகளுடன் திருத்தமுஞ்செய்துவந்த சங். மரியஆரோக்கியநாதர் சுவாமிக்கும், பிரதிகளைத்திருத்தஞ்செய்து உதவிய அர்ச். மிக்கயேல் ஐ ஸ்கூல் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் தே. சு. ராமசாமி முதலியாருக்கும் எனது மனமார்ந்த வந்தனமளிக்கிறேன்.

இதில் திருச்சபை போதகத்துக்கு விரோதமாய் எவ்வித சொற்குற்றம், பொருட்குற்றமிருப்பினும் அவைபாவையும் திருச்சபைக்குப் பணிந்து தாழ்மையுடன் திருத்திக்கொள்ள மனதாயிருக்கிறேன்.

கோயமுத்தூர்
1—8—25

ஆ. பெரியநாயக முதலியார்.

# பதிகம்.

## திருச்சபை சரித்திரம்.

---

திருச்சபை சரித்திரம் இரண்டு பெரிய பாகங்களடங்கியது. நமது கர்த்தராகிய சேசுக் கிறிஸ்துநாதருக்கு முந்திய காலத்தில் ஆதாமுதற்கொண்டு நடந்தேறியசம்பவங்கள் முகற்பாகத்துக்கும், நமது கர்த்தர் பிறப்புக்குப்பின் அவர் ஸ்தாபித்த அருள்வேத சபையின் சம்பவங்கள் இரண்டாம் பாகத்துக்குஞ் சேர்ந்தவை. முதற்பாக சரித்திரம் வேதாகம சரித்திரம் எனப்பெயர்படும். ஆகையால் திருச்சபை துவக்கமுதல் நடந்தேறிய சம்பவங்களைக் குறிக்கும் பாகத்திற்கே திருச்சபை சரித்திரம் என்ற விசேஷப்பேர் பொருந்தும்.

இவ்வுலகின்கண் நாம் காணுவதும், கேட்பதும், நூல்களைக் கொண்டு வாசித்தறிவதும் முதலிய எவ்வகையான வைபவங்களும், திருச்சபை சரித்திரத்திற்கு இணையாகாமல், இச்சரித்திரம் மற்ற சரித்திரங்களோடு ஒப்புவமையின்றித் தனிப்பட்டு நிற்பதாகும். நமது திவ்வியகர்த்தர் பிறக்கும்போது ரோமையருக்குட்பட்டு மற்றெல்லோராலும் கேவலமாய்ப் பாராட்டப்பட்ட யூதர் என்ற ஓர் சிறிய சாதியாரைத்தவிர உலகமெல்லாம் அஞ்ஞான அந்தகாரத்தில் மூழ்கி ஒழுக்கங்கெட்டுப்பல தீமைகளுக்கும் உறைவிடமாயிருந்தது. இவ்விருளின்கண் யூதசாதியைச்சார்ந்து கேவலம் ஓர் தச்சன் மகனைப், சிறியதோர் கிராமத்தில் யாராலும் கைவிடப்பட்டு மாடுகள் வசிக்கும் குடிலில் ஓர்குழந்தை பிறக்கிறது. ஆட்டிடையர்கள் அவரை வந்துபார்க்கிறார்கள். கீழ்த்தேசத்திலிருந்து மூன்றரசர்கள் வந்து தண்டனிட்டுப் பணிகிறார்கள். மற்றபடி உலகமெல்லாம் இவரைச் சற்றுமறிகிறதில்லை. ஏரோதுராயன் இவரைக் கொல்ல பெத்திலகேமிலும் அதைச்சுற்றிலுமுள்ள விடங்களிலும் இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளை வாளுக்கிரையாக்குகிறான். இவரோ அதற்குத்தப்பித்து யாருமறியாமல் தமது முப்பத்துமூன்று வயது வரையில் ஓர் சிறு கிராமத்தில் தச்சன் மகனாய்த்தச்சு வேலை

செய்து வளருகிறார். உலகத்தில் ஞானிகள் தங்கள் போதனைகளைப் போதிக்கத் தனவந்தர்கள் சரீர இச்சைகளில் ஆழ்ந்து முழுகுகிறார்கள்; தரித்திரர்கள் வதைக்கப்படுகிறார்கள்; எங்கும் ஒழுக்கம் கெட்டுப்போய்ப் பசாசின் இருள் விர்த்தியாகிக்கொண்டு வருகிறது.

பெத்திலகேமிற் கொலையுண்டிறந்தார் எனப்பாராட்டப்பட்ட குழந்தை ஆளாகி சில சீஷர்களைக் கூட்டிக்கொண்டு தம்மை மெசியாவெனப்பகிரங்கப்படுத்தி, எங்குந்திரிந்து பிரசங்கித்து நன்மையைத்தூண்டிக்கொண்டு, தாம் ஸ்தாபிக்கும் அருள்வேத ஏற்பாட்டுக்கு முஸ்திப்பு செய்துவருகிறார். சனங்கள் இவர் புத்தி பிரசங்கங்களைக் கேட்டும், இவரது புதுமைகளைக் கண்ணுற்றும், தங்களைத் திருத்துவதையும், தன் ராச்சியபாரம் ஒழிவதையும்கண்ட பசாசு உலக சாஸ்திரிகளையும், ஆட்சியுள்ளோரையும் தூண்ட, கிறிஸ்துநாதர் நீசக்குற்றவாளிபோல் ஓர் சிலுவையில் அறையுண்டு மறிக்கிறார்.

இவர் சீஷர்களோ பரம ஏழைகளும், மிகக் கோழைத்தனமுடையோருமாய், இவரை விட்டு ஓடிப்போகிறார்கள். உலகத்தையுண்டாக்கி நடத்திவரும் கடவுளாகிய கிறிஸ்துநாதர் இச்சீஷர்களுக்கு ராச்சியபாரமாவது, பெருத்த சொத்துக்களாவது அளிக்காமல் உலகமெங்குந்திரிந்து மனிதர்களைத் தபஞ் செய்யத்தூண்டும்படிக்கு மட்டும் கற்பிக்கிறார். மிகத் தாழ்ந்த அந்தஸ்துள்ளவராய்க் கொடிய குற்றவாளிபோல் சிலுவையிலறையுண்டு கேவலமாய் மரித்த தங்கள் குருவின் உபதேசத்தைப் பயிரங்கமாய்ப் போதிக்க இக்கோழைகள் துணிவார்களோ? இவர்கள் தங்களை வெளிப்படையாய் முதலாய்க் காட்டவும் உலகம் ஏற்குமோ? இவர்களையும் நீசர்களென்றல்லவோ கொள்ளுவார்கள்,

இப்படிப்பட்டவர்களைக் கொண்டு உலகத்தை முற்றும் மாற்ற வேண்டுமெனக் கிறிஸ்துநாதர் எண்ணங்கொண்டிருந்தது மிக்க வியப்புக்குறியதன்றோ? அவர் ஒன்றில் உண்மையான ரக்ஷகராயிருக்கவேண்டும், அல்லது ஓர் பித்தனாயிருக்கவேண்டும். நமது திவ்வியகர்த்தர் பித்தனாய்ப்பாவிக்கப்பட்டு மரித்ததால் அவர் எடுத்துக்கொண்ட உலக ரக்ஷணியம் அவர் கல்லறையோடே வெறுந் தமாசாய் முடிந்திருக்கவேண்டுமல்லவா ?

மகமதியருக்கு விரோதமாய்ச் சிலுவையுத்தங்களை நடத்துகிறது. ஐந்தாம்பாகத்தில்கிறிஸ்துதேசம் க்ஷீணதசையடைந்து தப்பரைகள் தொடங்கி அஞ்ஞானக்கல்வியெழுச்சி ஏற்பட்டு கிறிஸ்துவர்களுடைய ஒழுக்கம், சட்டம், சாஸ்திரம் முதலியவற்றையும் மாற்றிப் பதிதமதத்துக்கு வழியாக்குகிறது. ஆறும்பாகத்தில் பதிதமதமெழும்பி உலகத்தில் சுய இச்சையைப் பரப்பி, ஏழாம்பாகத்தில் கடவுளுக்கும் மனிதருக்கும் உலகத்தின் எவ்வித ஆசாரங்கட்கும் விரோதியாய் அழிவொன்றையே பாராட்டும் ராசகலகத்துக்கு ஏற்பாடு செய்கிறது.

# திருச்சபை சரித்திரச் சுருக்கம்.

## முதல் பாகம்.

### திருச்சபை ஸ்தாபகமும் வேத கலகங்களும்.

(கி. பி. 29—313)

### 1-ம். அத்தியாயம்.

### சேசுக்கிறிஸ்துவின் சீவியம். (கி. பி. 29 வரை)

உட்பிரிவுகள்:—

மெசியாவின் வருகைக் கெதிர்பார்த்தல்; நமது கர்த்தரின் சீவியம்; திருச்சபைத் துவக்கம்.

#### 1. மெசியாவின் வருகைக் கெதிர்பார்த்தல்.

சர்வ வல்லபமுள்ள சர்வேசுரன் தம்மில்தாமாய் நித்தியமாயிருந்து, தமது மகத்துவத்தின்பொருட்டு அநேக கோடிக்கணங்களான சம்மனசுக்களை உண்டாக்கினர். இவர்களில் பல கோடிப் பேர் தங்கள் தலைவனான லூசிப்பேருடன்கூடி ஆங்காரத்தினல் கெட்டுப்போய் நரகக் குழியில் தள்ளுண்டார்கள். அப்பால் இவர்களிழந்த மோக்ஷபதவிக்கு ஆதாம் ஏவாளாகிய நம் முதற்பெற்றோரைப் பரிசுத்த அந்தஸ்தில் உண்டாக்கி, உலகின் சுதந்தரமெல்லாம் அவர்கட்கும் அவர்கள் சந்ததிக்கும் கொடுத்துச் சிங்காரத்தோட்டத் திருத்தி, அதில் ஓர் மரத்தின் கனியைமட்டும் புசிக்கவேண்டாமெனக் கட்டளையிட்டார்.

தானிழந்த அந்தஸ்துக்கு நீசசாதியான மனிதன் உயர்த்தப் படவிருப்பதைப் பொறுக்கமுடியாத லூசிப்பேய் தன் இயல்பான ரூபத்தைமாற்றி பாம்பின் வேடங்கொண்டு ஏவாளையும் அவள் வழியாய் ஆதாமையும் ஏமாற்றிப் பாவத்தில் விழுத்தாட்டியது. உடனே தங்கள் நீச அந்தஸ்துக்குமேலாக இவர்களுக்குச் சர்வேசுரன் அளித்திருந்த வரங்களெல்லாம் நீங்கிச் சாவு, வறுமை, துன்பம் முதலிய உலகில் மனிதனைப் பீடிக்கும் பலசங்கடங்கட்கும் நரகத்திற்கும் உள்ளானார்கள்.

ஆயினும் இவர்கள் மனஸ்தாபப் பட்டமையால், சர்வேசுரன் இவர்கட்கிரங்கி மனித சந்ததியை நித்தியசாவினின்றும், பசாசின் அடிமைத்தனத்தினின்றும் மீட்டு மோக்ஷானந்தத்தை மறுபடியுங் கொடுக்கச் சித்தமாகிப் பரம திரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய தமது சுதன் மனிதனுப்ப் பிறந்து மனிதருக்காய்ப் பாடுபட்டு மீட்பார் என வாக்கருளினார்.

சர்வேசுரன் அளவில்லா வல்லமையும் நன்மையுமானதால் அவருக்குச் செய்யப்பட்ட குற்றமும் அளவுகடந்தது. ஆகையால் நீச சுபாவமும் அளவுக்கு உட்பட்டதுமான மனுக்குலமெல்லாம் கூடி எவ்வளவு பாடுபடினும் சர்வேசுரனுக்கு நேர்ந்த குற்றத்திற்குச் சரியான பரிகாரஞ்செய்ய முடியாது. ஆகையினால்தான் மனிதன் மேலுள்ள நிகரில்லா விரக்கத்தால் சர்வேசுரன் தாமே மனிதனுக்காய்ப் பாடுபட்டு மீட்கலானார்.

ஆதாம் ஏவாட்கு இவ்வாக்கருளிய கடவுள் பசாசை நோக்கி, “நீ ஏவாளை ஏமாற்றி மனுக்குலத்தைக் கெடுத்தபடியால் அக்குலத்தில் பிறக்கும் ஓர் கன்னிகை உன்தலையை நசுக்குவாள்; அவள் கன்னிமை சற்றுங்கெடாது, அவளிடத்துப் பிறக்கும் குமாரனால் உன் ராச்சியபாரமும் நீக்கப்பட்டு மனுக்குலம் ஈடேற்றப்படும்,” எனச் சபித்து எல்லோரையும் சிங்காரத் தோட்டத்தினின்று துரத்தினார்.

ஆதாம் ஏவாளைச் சார்ந்த மனுக்குலம் சர்வேசுரனால் வாக்களிக்கப்பட்ட மெசியாவில் நம்பிக்கைவைத்து, பரம்பரையாய் அவர்

வருகைக்குக் காத்திருந்தது. சர்வேசுரனும் பிதாப்பிதாக்களைக் கொண்டு இவர்களைத் திடப்படுத்தித் தம்முடைய வழியில் நிறுத்தி வந்தார். ஆனால் கெட்ட சுபாவமுள்ள மனுக்குலம் பின்னும் பின்னும் அவரை மறந்துவர, பின்னல் மோயிசனைத் தெரிந்து சினாய் மலையில் தமது கற்பனைகளைக் கொடுத்து அவர் வழியாய் "வரிவேதத்தை" ஏற்படுத்தினார். இவ்வேற்பாடு நமது இரட்சகப் பெருமான் பிறந்து பாடுபட்டு "அருள் வேத" மென்ற புதிய ஏற்பாட்டை அளிக்கும் வரையில் நடைபெற்றது.

மெசியா வருவது உலகமெங்கும் எல்லா ஜனங்களும் நம்பி இருந்த விஷயம். பாரசிகத்தில், சொரோஸ்டர், "ஓர் காலம் வரும், அப்போது தீங்கிழைக்கும் அஹிரிமான் அழிக்கப்படும்" எனவும்; "அத்திய பசாசை அழிப்பவர் ஓர் கன்னிகையிடத்தில் பிறப்பார்," எனவும், சொல்லியிருந்தான். சீனர்கள் பரிசுத்தர் ஒருவர் பிறப்பார், உலகமெல்லாம் அவரை வணங்கும் எனவும், இந்தியர் கிருஷ்ணவதாரங்களால் கடவுள் உலகிற் பிறப்பார் என்றும் நம்பிக் கொண்டிருந்தார்கள். கிரேக்கருக்குள் வரப்போகிறவரே மனிதரை மீட்பவர் எனச் சொல்லப்பட்டிருந்தது. ரோமையருக்குள்ளோவெனில் ஒவ்வோர் உயர்குலக் குழவியும் வரப்போகிறவரோ எனச் சந்தேகிக்கப் பட்டது. இப்படியாய்ச் சர்வேசுரன் மனிதனாய்ப் பிறப்பது உலகமெல்லாம் நம்பி எதிர்பார்த்திருந்த விஷயமே.

## உலகத்தின் நிலைமை.

---

கிறிஸ்துவைத் துவேஷித்து அவரைத் தொடர்ந்தவர்களைக் குரூரமாய் அழிக்கப்போகும் உலகம், மெசியாவை எதிர்பார்த்திருந்ததெனில், அவர்வருகை அச்சமயம் எவ்வளவு அத்தியாவசியமெனக் கண்டுணரலாம். உலகத்தில் எங்கும் ஒழுக்கஞ் சற்றுமின்றி அழிந்து, இவர்களும் மனிதர்கள்தானோ என்னும்படிக்கிருந்தது. இதற்கு முக்கிய அத்தாட்சி உலகத்துக்கெல்லாம் சிறந்து விளங்கிய ரோமையாம். பேர்போன ராச்சியபாரங்களை யழித்துத் தனக்குட்படுத்தி, ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா கண்டங்களிற்பரவி, சகல

கல்விகளுக்குஞ் சாஸ்திரங்களுக்கும் இருப்பிடமாய், எக்காலத்தும் கேட்டிராத நாகரிகத்தையடைந்து உலகத்திற்கே ஓர் கண்ணடி போன்ற ரோமை, மனிதவொழுக்கஞ் சற்றுமின்றி இருந்ததென்றல், மற்றவிடங்கள் எப்படியிருந்திருக்குமென நாமேதெரிந்து கொள்ளலாம். உலகத்தில் மனிதர் அனுபவிக்கக்கூடிய சுகங்களெல்லாம் மகா உன்னதநிலையில் இங்கு இருந்தன. ரோமையருக்கு எதுவும் இல்லையென்றில்லை. இப்படி உலகத்துக்கெல்லாம் ஓர் முடியாய் மகாபெருமை சிறப்புடன்வாழ்ந்த ரோமை, வெளியில் அழகாய்த் தோன்றி, உள்ளே பல அசுத்தங்களும் நிறைந்த மனுஷனுடம்புபோன்றும், மேற்பூச்சுப்பூசிய கல்லறைபோலவும் இருந்தது. மனிதருக்குள் கடவுள் விசுவாசஞ் சற்றுமின்றிப் போக இவர்களிடத்துத் தோன்றிய கெட்டநடத்தைகளைக் கருத மனமொப்புவதுமில்லை, எடுத்துச் சொல்வதற்கு கிறிஸ்து பாஷையில் வார்த்தைகளுமில்லை. இவர்களுடைய மதமோ சகல அக்கிரமங்களும் ஒன்ருய்ச் சேர்த்துத் திரட்டியதுபோன்றது! இவர்கள் வழிபட்ட கடவுள்களோ அக்கிரமங்களே உருவெடுத்தவை! வீனஸ் ஓர்பரஸ்திரி; ஜுப்பிட்டர் ஓர்மோகி; மெர்க்குரி திருட்டில்நிபுணன். இப்படியாய் மற்றதேவர்களும் அக்கிரமத்தில் கரைகண்டவர்கள். வேதமும் வேதம்போதிக்கும் தேவர்களும் இப்படியாளுல் மனிதர்களிடத்தில் என்ன நன்மையிருக்கும்?

சர்வேசுரன் மனிதனுய்ப் பிறந்தகால் உலகநிலைமை இதுவே. சேசுநாதர்சுவாமி சர்வேசுரனுயிராவிடில் இப்பசாசின் ஆழ்ந்த ராச்சியபாரத்தை அழித்திருக்கக்கூடுமோ? அவர் மரித்தபின்னர் அப்போஸ்தலர்கள் சத்தியவேதத்தைப் போதித்து ரோமை ராச்சியத்தை அதற்குட்படுத்தி, அர்ச். இராயப்பர் ரோமைப் பட்டணத்திலேயே தமதுசிம்மாசனத்தை ஏற்படுத்த சர்வேசுரனுடையஇராச்சியத்திற்கும் அப்பட்டணமே ராசதானியும் ஆயினதென்ருல், அவர்களால் போதிக்கப்பட்ட வேதம் சர்வேசுரனுடைய வேதமென்றும், அதைஅருளியவர் சர்வேசுரன் என்றுங் கொள்ள வேறு அத்தாட்சியும் வேண்டுமோ?

## 2. சேசுநாதரின் சீவியம்.

---

### சேசுநாதர் பிறப்பு—அறிவிப்பு.

மெசியா வரவேண்டிய காலங்கிட்டியதும்,முன்னர் தானியேல் தீர்க்கதரிசிக்கு அவர் வரவிருக்கும் காலத்தை அறிவித்த கபிரியேல் சம்மனசு, ஜெருசலேங் தேவாலயத்தில் ஆரோன் வங்கிஷத்தைச் சேர்ந்து குருவாகிய சக்கரியாசுக்குத் தோன்றி, "உமது மனைவி எலிசபெத்தம்மாள் கற்பமாகி, உமக்கு ஓர் மகன் பிறப்பார்; அவருக்கு அருளப்பர் என நாமஞ்சூட்டுவீர், அவரே மெசியாவின் வழியை முஸ்திப்புச் செய்வார்," என்றனர். 70 பிராயமும் மலடியுமான தம்மனைவி எவ்விதம் கற்பமாவாள் எனச் சக்கரியாஸ் சந்தேகிக்கச் சம்மனசானவர் இவரை அக்குழந்தை பிறக்குமட்டும் ஊமையாக்கினர்.

இது சம்பவித்த ஆறும்மாசம் இச்சம்மனசானவரே நசரேத்தூரில் தாவீது குலத்தாராகிய சூசையப்பருடைய மனைவி மரியாயிக்குத் தரிசனையாகி, மிகப்பணிந்து நமஸ்கரித்து "பிரியத்தத்தத்தினாலே பூரணமானவளே வாழ்க, கர்த்தர் உம்முடனே பெண்சாதிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே!"எனமங்களங்கூறினர்.

இம்மொழிகளைக்கேட்டு மரியாயி மனந்திடுக்கிட, இவர் மறுபடியும், "சர்வேசுரன் உம்மிடத்தில் கிருபைகூர்ந்து உலக இரட்சகருக்குத் தாயாக உம்மைத் தெரிந்துகொண்டிருக்கிறார். திவ்விய இஸ்பிரீத்து சாந்துவின் நிழல் உம்மேல்சாட, நீரும் உமதுபரிசுத்த சரீரத்தில் சர்வேசுரனுடைய குமாரனைக் கற்பந்தரிப்பீர்" என்றனர். இதுசர்வேசுரன் சித்தமெனக்கண்ட மரியாயி எழுந்து, "ஆண்டவரே! இதோ உமது அடியாள்; உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது" என ஒப்புக்கொள்ள, அக்கணமே வார்த்தையானவர் அவள் கர்ப்பத்தில் மாம்சமாயின பரம இரகசியம் நிறைவேறிற்று. தேவ கன்னிகை பெண்களுக்குள் எல்லாம் தன்னைத்தெரிந்து கொண்டதற்காகச் சர்வேசுரனுக்கு மிகத்தாழ்ந்து தோத்திரஞ் செய்தாள்.

பின் தன் மச்சினச்சி எலிசபெத்தம்மாள் கற்பவதியானதை அறிந்து அவளை மினவச் சென்றாள். மரியாயின் வார்த்தையைக் கேட்டமாத்திரத்திலே எலிசபெத்தம்மாள் கற்பத்திலிருந்த குழந்தை சந்தோஷத்தால் துள்ளியது. அப்போதே அக்குழவி சென்மப்பாவத்தினின்று நீக்கப்பட்டது. எலிசபெத்தம்மாள் தேவமாதாவுக்கு நேர்ந்தவற்றை இஸ்பிரீத்துவால் அறிந்து மகிமைப்படுத்த அவ்வாழ்த்தைத் திவ்வியமாது மகா தாழ்மையாய் ஏற்று 'மாக்னிபிக்காத்' என்னும் தேவ தோத்திரப் பாடலைப்பாடினாள்.

## கர்த்தர் பிறப்பு.

---

திவ்விய இரட்சகர் தாவீது குலத்திலுதித்து அவர் ஊராகிய பெத்திலகேமிற் பிறப்பார் எனத் தீர்க்கதரிசன மிருந்தது. சூசையப்பரோ நசரேத்தூரில் வசித்தார். சேசுநாதர் பிறக்கவேண்டிய காலம் அடுத்ததும், யூதேயா நாட்டைக் கைக்கொண்டு ஆண்ட ரோமைச் செசார் ராயன் தன் ராச்சியமுழுதும் ஜனசங்கை செய்யவேண்டுமெனவும், அவரவர் தத்தம் சொந்த ஊரில்சென்று அக்கணக்குக் கொடுக்கவேண்டுமெனவும் கட்டளை பிறப்பித்தான். ஆகையால் சூசையப்பர் நிறை கர்ப்பிணியான மரியாயுடன் பெத்திலகேம் சென்றார். அங்கே ஜனங்கள் பல பக்கங்களிலுமிருந்து பெருங்கூட்டமாய் வந்திருந்ததால், ஏழையாகிய இவருக்கு எங்கும் இடங்கிடையாமல் ஓர் மாட்டுக்கொட்டலில் தங்கினர். தமது ராச்சியத்தை ஏற்படுத்தவந்த இரக்ஷகப் பெருமான் இம்மாட்டுக்கொட்டாயை ஓர் மாளிகையாகவும், வைக்கோலைப் பஞ்சணைமெத்தையாகவுங்கொண்டு பரம ஏழையாய்ப் பிறந்தார். உடனே சம்மனசுக்கள் தோன்றி ஆட்டுமந்தையைக் காத்திருந்த இடையர்களுக்கு இச்சுபசெய்தியை அறிவித்து "பரலோகத்தில் சர்வேசுரனுக்குப் புகழ்ச்சியும், பூவுலகில் சுத்த மனதுள்ளவர்களுக்குச் சமாதானமும்" என்று கீதம்பாடினார்கள். இடையர்கள்எழுந்து பெத்திலகேமுக்குச் சென்று சம்மனசுக்களறிவித்த தேவகுமாரனைக் கண்ணுற்று வணங்கினர்கள்.

## மூன்று ராசர்கள்.

திவ்விய குழந்தைபிறந்த எட்டாநாள் விருத்த சேதனஞ் செய்து 'சேசு' என நாமஞ்சூட்டி நாற்பதாநாள் மோயிசன் கட்டளைப்படி தேவாலயத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுத் தார்கள். அப்போது பெரிய குருவாகிய சிமெயோன் தேவ மாதாவை நோக்கி "வியாகுலமென்னும் ஓர்வாள் உமது ஆத்துமத் தை ஊடுருவும்" என்றனர். இதற்குக் கொஞ்சகாலம் பொறுத்து சேசுவின் புது நட்சத்திரத்தைக் கண்டு அதனல் வழிகாட்டப்பட் டுக் கீழ்த்திசையினின்று மூன்று ராசர்கள் இவரை வணங்க ஜெருச லேமுக்கு வந்தார்கள். அதையாண்ட ஏரோது, யூதர் ராசனுய்த் தாவீது ராசாவின் ஆட்சியை மறுபடி நிலைநாட்டுதல், தேச ஆட்சி யின்றி வேத ஆட்சியென அறியாது, தனக்கு ஓர் எதிரிவந்ததாய்ப் பயந்தான். ஆகையால் அவரை எப்படியும் கொல்லநினைத்து அர சர்களைநோக்கி, "நானும் அவரைக் கண்டு தரிசிக்க நீங்கள் பார்த்த பிறகு இவ்வழியாய்த் திரும்பிவாருங்கள்" என வாக்குத்தத்தம் வாங்கினன்.

பெத்திலகேமிற்பிறப்பார், எனக்குருக்களால்அறிந்து, மூன்று அரசர்கள் அங்குசென்று திவ்விய குழந்தையின்முன் பணிந்து பொன், மீரை, தூபம் மூன்றையும் ஒப்புக்கொடுத்து அவரை ராசா வாகவும், மனிதனுகவும், சர்வேசுரனுகவும் பாராட்டினுர்கள். பின் சம்மனசால் எச்சரிக்கப்பட்டு ஜெருசலேம் செல்லாது வேறுவழி யே சென்ருர்கள்.

## குழவிகள் வதை.

ஏரோதன் இவர்கள் வராததாற் கோபமூண்டு, யூதர் ராசா பிறந்திருப்பது உண்மையென அறிந்து, அவரை எப்படியும் கொல் லும்பொருட்டு பெத்திலகேமிலும் அதைச்சுற்றிய நாடுகளிலும் இரண்டு வருஷத்துக்குட்பட்ட குழந்தைகளை யெல்லாம் தலைவெட்

டக் கட்டளை செய்தான். இதைச் சர்வேசுரன் சூசையப்பருக்குக் கனவில் அறிவிக்க, அவர் எழுந்து தம் மனைவியையும் குழந்தையையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்குச் சென்று அங்கிருந்தார். எரோதன் கொஞ்சகாலத்தில் கடின வியாதிகண்டு புழுத்துச் செத்தான். அப்பால் சம்மனசு சூசையப்பருக்குத் தோன்றி "எழுந்து குழந்தையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு இஸ்ராயேல் தேசம் போம், ஏனெனில் குழந்தையைக் கொல்ல ஏற்பாடு செய்தவர்கள் மரித்தார்கள்" என்றார். இவர் உடனே புறப்பட்டுச் சென்று எரோதன் மகன் இராச்சியமாளுகிறான் எனப்பயந்து, தூக்கத்தில் எச்சரிக்கப்பட்டு கலிலேயா தேசஞ்சென்று நசரேத்தூரில் தங்கி வசித்தார். இப்படியாய் நமது கர்த்தர் 'நசரேத்தூரான்' என அழைக்கப்படுவார், என்ற தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

இங்கு சேசுநாதர் சூசையப்பருக்குந் தாயுக்கும் பணிந்து நடந்துவந்தார். இவருக்குப் பன்னிரண்டு வயதாகையில் பாஸ்காவைக்கொண்டாடக் குடும்ப சகிதமாய் ஜெருசலேமுக்குச் சென்றார்கள். தேவாலயஞ்சென்று திரும்புகையில் சேசுநாதர் தம் பெற்றோருடன் செல்லாது மறைந்துகொள்ள அவர்கள் மூன்று நாளளவும் இவரைப் பலவிடங்களிலும் தேடிக் கடைசியாய்ச் சாஸ்திரிகள் மத்தியில் தர்க்கித்துக் கொண்டிருக்கக்கண்டு "ஏன் எங்களைப் பிரிந்தீர்," என, "என் பிதாவின் காரியங்களில் அலுவலாயிருக்க வேண்டாமோ?" என்று பதில்சொல்லிப் பணிந்து அவர்களுடன்சென்று நசரேத்திலிருந்து தச்சுவேலை செய்துவந்தார்.

## யோர்தா நதியில் ஞானஸ்நானம்.

அப்பால் சூசையப்பர் மரிக்கத் தாய்க்கு உதவிபுரிந்து வந்து தமது ராச்சியபாரத்தை நிலைநாட்டுங் காலமணுகியதும், அவளிடம் விடைபெற்று யோர்தா நதிக்கரை சேர்ந்து, தாம் சர்வ நன்மையாயினும் தமது முன்னோடியாகிய அர்ச். ஸ்நாபக அருளப்பரிடம் ஞானதீட்சை பெற்றார். இவ்வருளப்பர் சிறு பிராயத்தில் பெற்றோரையிழந்து வனாந்தர வாசியாய் வெட்டுக்கிளிகளையும், காட்டுத்.

தேனையும் புசித்துச் சீவித்து சேசுநாதருடைய வழியை முஸ்தீப்பு செய்யத் தவத்தைப் பிரசங்கித்து தம்மை அடுத்தவர்களுக்கெல்லாம் ஞானஸ்நானம் கொடுத்து வந்தார். நமது கர்த்தர் தம்மிடம் வந்ததும் அருளப்பர் அதற்குத் தான் அபாத்திரனெனச் செப்பியும், கர்த்தரின் சித்தப்படி ஞான தீட்சை அளிக்கப் பிதாவாகிய சர்வேசுரனும் சேசுக்கிறிஸ்துவிடத்துத் தமது நிகரில்லா அன்பைக் காட்டினர். திவ்விய இஸ்பிரீத்துசாந்தும் ஓர் மாடப்புறாவைப் போல் இவர் மேல் நிழலிட, ஓர் ஆகாயவாணியுண்டாகி "நமக்கு உகந்தவராயிருக்கிற நம்முடைய நேசகுமாரன் இவரே" எனக் கூறியது.

இதன்பிறகு சேசுக்கிறிஸ்துநாதர் வனாந்தரம் புகுந்து நாற்பது நாளிரவும் பகலும் ஒருசந்திபிருந்தார். இங்கு பசாசு அவரைச் சோதிக்க, அவரும் சுவிசேஷ வாக்கியங்களைக் கொண்டு அதை வென்று துரத்தினர்.

## முதல் சீஷர்கள்.

அப்பால் சேசுக்கிறிஸ்துநாதர் தேசத்துக்குள் நுழைந்து பிரசங்கித்து அநேக சீஷர்களைச் சேர்த்துப் பல புதுமைகளால் அவர்களை உறுதிப்படுத்தினர். இவரது முதல் சீஷர்கள் சகோதிரரும் செம்படவருமாகிய பெலவேந்திரரும், சிமியோனும். சிமியோன் இவரைச் சேர்ந்ததும் அவருக்கு அதுமுதல் இராயப்பர் எனப் பெயரளித்தார். இது கி. பி. 26-ல் நேர்ந்தது.

## முதல் புதுமை.

சேசுநாதர் கானாவூர் கலியாணத்துக்குத் தமது சீஷர்களுடன் சென்றார். அங்கே திராட்சை ரசம் குறைவுபட்டதால் மரியம்மாள் சேசுநாதருக்கு அறிவிக்க, ஆறு பெரியசாடிகளில் ஜலம் நிரப்பச் செய்து அதை ரசமாக மாற்றினர்.

இதன்பிறகு தமது சீஷர்களில் பன்னிருவரைத் தெரிந்து அவர்கட்கு அப்போஸ்தலர்கள் எனப் பெயரிட்டு அவர்களை ஓர் மலையின்மேல் கூட்டிச்சென்று "எட்டுப் பாக்கியங்களைப்" பிரசங்கித்தார். பின்னர் தாம் செல்லுமிடமெல்லாம், ஊர்களிலும், தேவாலயங்களிலும், செபக்கூடங்களிலும், எங்கும் 'சுவிசேஷத்தைப் பிரசங்கித்து பிதாப்பிதாக்களால் வழிபார்த்து வந்த மெசியா வந்துவிட்டாரெனச் சொல்லி, பிரசங்கங்களாலும், உவமைகளாலும், புதுமைகளைக்கொண்டும் ஜனங்கட்குப் போதித்து மனந்திருப்பி வந்தார்.

## திருச்சபை ஸ்தாபகம்.

ஓர்நாள் தமது சீஷர்களைச் சோதிக்க, "மனிதர்கள் மனுமகனை யார் என்று சொல்லுகிறார்கள்" எனக் கேட்டார். சிலர் ஸ்நாபக அருளப்பர் என்றும், வேறுசிலர் எலியாஸென்றும், மற்றவர்கள் எரேமியாஸ் தீர்க்கதரிசி யென்றும் சொல்லுகிறார்கள்" எனப் பதிலளித்தார்கள். "நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" எனக் கேட்க "நீரே சீவியரான சர்வேசுரனுடைய குமாரனான கிறிஸ்துவாயிருக்கிறீர்" என்று இராயப்பர் எல்லோர் பேராலும் மறுமொழி பகர்ந்தார். தமது தெய்வீகத்தைக் குறித்து சாக்ஷி சொன்னதைக் கேட்டு நமதுகர்த்தர் "யோனாவின் மகனாகிய சிமியோனே, நீபாக்கியவான்; நீ கல்லாயிருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் எனது திருச்சபையைக் கட்டுவேன்; நரகத்தின் வாசல்கள் அதனை மேற்கொள்ள மாட்டா; மேலும் பரலோகத்தின் திறவுகோல்களை உனக்களிப்பேன்; பூலோகத்தில் நீ கட்டுவதெல்லாம் பரலோகத்திலுங் கட்டப்படும்; பூலோகத்தில் நீ கட்டவிழ்ப்பதெல்லாம் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்படும்" என்று திருவுளம்பற்றினார். மேலும் தாம் உயிர்த்தபின் அவரைநோக்கி "என் ஆடுகளையும், ஆட்டுக் குட்டிகளையும் போஷிப்பாய்" என்றுஞ் சொல்லித் திருச்சபையின் தலைமை சுதந்தரத்தை அவருக்கு அருளினார். மற்ற அப்போஸ்தலர்களுக்கும், இராயப்பருக்குக் கீழ் அதே வல்லமையை

அளித்து, "மெய்பாகவே சொல்லுகிறேன், நீங்கள் பூலோகத்தில் எதைக் கட்டுவீர்களோ பரலோகத்தில் அது கட்டப்படும்; பூமியில் எதைக் கட்டவிழ்ப்பீர்களோ பரலோகத்தில் அது கட்டவிழ்க்கப்படும்; மேலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறவன் எனக்குச் செவிகொடுக்கிறான்; உங்களைப் புறக்கணிக்கிறவன் என்னையும் புறக்கணிக்கிறான்," என மொழிந்தார். பின்னும் தாம் பரலோகத்துக்கு ஆரோகணமாகுமுன் "நீங்கள் பூமியின் எத்திசையுஞ்சென்று நமது சுவிசேஷத்தைப் போதியுங்கள். உங்களைக் கேட்டு ஞான தீட்சை பெறுகிறவர்கள் பிழைப்பார்கள்; உங்களைப் புறக்கணிப்பவர்கள் நித்திய சாவுக்குள்ளாவார்கள்" என்றும் இப்படியாய் திருச்சபையை ஸ்தாபித்தார்.

## பரிசேயர் பொறாமை.

சேசுநாதருடைய மகிமை நாடெங்கும் பரவத் தங்கள் தொழில் ஒழிந்ததெனக் கண்ட குருக்களும், ஆசாரியர்களும், தங்கள் வெளிமயக்கைப் பகிரங்கப்படுத்தித் தங்களது மதிப்பைத் தாழ்த்தியதால் பொறாமைகொண்ட பரிசேயரும், இவரிடத்துச் சனங்கள் கொண்ட மேலான விசுவாசத்தை அழித்து இவரையும் தப்பரைக்குள்ளாக்கி குற்றவாளியாக்கக் கருதினார்கள். ஓர்நாள் பரிசேயர் தீயநடத்தையுள்ள ஓர் மனுஷியை இவருக்குக்காட்டி "மோசேசு சட்டப்படி இவளைக் கல்லாலெறிந்து கொல்ல வேண்டாமோ?" என்றனர். சேசுநாதர் ஆம் என்றால் இவரிடத்தில் சற்றும் இரக்கமில்லையென்றும், கூடாது என்றால் மோசேசு சட்டத்துக்கு விரோதஞ்செய்தார் என்றும் குற்றஞ்சாட்ட இவர்கள் எண்ணியிருந்ததைக் கர்த்தர் அறிந்து "உங்களில் பரிசுத்தமானவன் எவனோ அவன் முதலில் கல் எறியட்டும்" எனப் பதிலளிக்க ஒருவனும் துணியாது வெட்கிச் சென்றார்கள்.

## சேசுநாதர் ஒட்டோலகராய் ஜெருசலேம் சென்றது.

இதன்பின் பெத்தானியா ஊரில் மரித்து மூன்றுநாள் கல்ல

ரயில் அடக்கப்பட்டிருந்த லசாரை உயிர்ப்பித்தார். இச்சங்கதி ஜெருசலேமுழுவதும் பரவத் திரளான சனங்கள் கும்பல் கும்பலாய் வந்து இவரே சர்வேசுரனுடைய சுதனென அங்கீகரித்தார்கள். தாம் மனிதருக்காக மரிக்குங் காலம் வந்ததென கர்த்தரும் ஜெருசலேமுக்குள் நுழைய ஆயத்தமாயிருந்ததால், இச்சனங்கள் அவரை ஓர் கோவேறு கழுதையின் மேலேற்றி மரக்கிளைகளைக் கை யிலேந்தி முன்னும் பின்னுமாய்த் "தாவீதுராசனின் குமாரனே, சர்வேசுரனுடைய பேரால் வருகிறவரே வாழ்க!" என ஆர்ப்பரித்து பட்டணத்துக்குள் நுழைந்தார்கள். பட்டணத்தைக் கண்ணுற்ற தும் அழுகையோடு "ஐயோ ஜெருசலேமே! உனக்கு வரப்போகிற காரியங்கள் இப்போது உன் கண்ணுக்குத் தெரியவில்லை; உனக்குக் காலம் வரும், அப்போது உன் சத்துருக்கள் உன்னை வளைத்துச் சிதைத்துத் தரைமட்டமாக்கிக் கல்லின்மேல் கல்நில்லாமற் செய் வார்கள்" என வாக்கிட்டார். பிறகு தேவாலயஞ்சென்று அங்கே வியாபாரஞ் செய்தவர்களை நோக்கி "என்வீடு ஜெபத்தின் இருப்பிடம் என எழுதியிருக்க நீங்களோ திருடர்களுறைவிட மாக்கினீர்கள்" எனச்சொல்லி அவர்களைத் துரத்தினர். ஆகை யால் பரிசேயரும், குருக்களும் இவரை எப்படியும் கொன்றுவிட எண்ணி பன்னிரண்டு சீஷரில் யூதாஸ் ஸ்காரியோத்துடன் சதியா லோசனை செய்ய முப்பது வெள்ளிக்காசுக்காக அவனும் தன் கர்த் தரைக் காட்டிக்கொடுக்க இணங்கினன்.

## தேவ நற்கருணை உண்டாக்கியது.

---

இச்சமயம் யூதர்களுடைய பாஸ்கா பண்டிகையாதலால் வியா ழக்கிழமை தமது சீஷர்களைக்கூட்டி அவர்களுடன் பாஸ்காவை யருந்தி பழைய ஏற்பாட்டின் முக்கிய கோட்பாட்டை இவ்விதமாய் அநுசரித்தபிறகு, தாம் அளிக்கப்போகும் புதிய ஏற்பாட்டுக்கு முஸ்தீப்பு செய்யத் தமது சீஷர்களின் பாதங்களைக் கழுவி எல்லோ ரும் அமர்ந்தபின் ரொட்டியை எடுத்துக் கண்களையுயர்த்தி நன்றிய றிந்த தோத்திரஞ் செய்து, ஆசீர்வதித்து "இதைவாங்கிப் புசியுங்

கள்; இது உங்களுக்கு அளிக்கப்பட்ட என்சரீரம்" எனக் கொடுத்தார். பின் ரசத்தை எடுத்து முன்போலாசிர்வதித்து "யாவரும் இதிலே பானஞ்செய்யுங்கள்; ஏனெனில் இது பாவங்களுடைய பொறுத்தலினிமித்தம் அநேகருக்காகச் சிந்தப்படும் புதிய உடன்படிக்கையினுடைய என் இரத்தம்; இதை என் ஞாபகமாய்ச் செய்யுங்கள்" என்று திருவாக்கருளி அதையுங்குடிக்கத்தந்தார். இப்படி தமக்குப் பிறகு உலக முடிவு பரியந்தம் புதிய ஏற்பாட்டில் இது நடந்தேறக் கட்டளையிட்டார்.

இதுமுடிந்து தமது சீஷர்களுக்கு மிக அன்பான வசனங்களுரைத்து, தாம் சாகப்போகிறதாயும், அவர்களை விட்டுத் தம் பிதாவிடஞ் செல்வதாயும், ஆனால் சீக்கிரத்தில் தம்மைப் பார்ப்பார்களெனவும், தாம் போனபின் அவர்கள் அனுபவிக்க விருக்கும் துன்ப துரிதங்களில் அவர்களைத் தேற்றத் தமது இஸ்பிரீத்து சாந்துவை அனுப்புவோமென்றும் வாக்கருளி, தம்மரண மட்டுந் தம்மைப் பின்செல்லாது எல்லோரும் ஓடிப்போவார்கள் எனவும் திருவுளம் பற்றினர். இராயப்பர் "ஆண்டவரே! யார் உம்மைவிட்டு அகன்றாலும் நான்மட்டும் அகலேன்" எனச் சொல்ல, அவரை நோக்கி "நீ என்னை விட்டகன்று போவது மாத்திரமல்ல, இன்று சேவல் கூவுமுன் மும்முறை என்னை மறுதளிப்பாய்" என்றார்.

## பூங்காவனத்தில் இரத்தவேர்வை வேர்த்தது.

## யூதாசின் சதிமானம்.

இதுமுடிந்து, ஒலிவேத்து மலைபடிவாரத்திலுள்ள ஜெத்சேமனியென்னும் தோட்டத்துக்குச் சென்று, தமது சீஷர்களை ஓர் கல்லெறி தூரத்தில் தங்கவிட்டுத் தனியே அகன்று தமது பாடுகளின் நேரங்கிட்டியதால், தமது பேரிலிருக்கும் மனுஷசந்ததியின் பாவச்சுமை தம்மைத் தாழ்த்தத் தமது நிகரில்லாப் பாடுகள் அநேகருக்குப் பலன்படாது போவது நோக்கிச் சொல்லொண்ணுச் சலிப்பு விசனப்பட்டு மரண அவஸ்தைபாகி இரத்தவேர்வை வேர்த்

தார். பின் தமது பிதாவை நோக்கி "என் பிதாவே! கூடுமானால் இக்கசப்பான பாத்திரம் என்னைவிட்டு அகலக்கடவது; ஆனால் என் மனதின்படியல்ல உமது சித்தத்தின்படியே ஆகட்டும்," என மூம் முறை செபித்தார். இதற்கிடையில் தம் சிஷர்களை நினைத்து அவர்களிருக்குமிடஞ் செல்ல எல்லோரும் அயர்ந்து நித்திரை செய்தார்கள். அவர்களையெழுப்பி "நீங்கள் ஒரு மணி நேரமாகிலும் என்னிமித்தம் நித்திரையின்றி இருக்கக்கூடாதோ? சோதனைக்குள் உட்படாது விழித்திருந்து செபம் பண்ணுங்கள், ஏனெனில் சரீரம் துர்ப்பலமுள்ளது; மேலும் என் நேரம் வந்தது, என்னைக் காட்டிக் கொடுப்பவன் இதோ வருகிறான்" என்றார். இது சொன்னதும் யுத்தவீரர்களுடன் வந்த யூதாஸ் நமது கர்த்தரையணுகி "குருவே வாழ்க!" எனக் கன்னத்தில் முத்தமிட்டான். சேசுநாதர் அவனை நோக்கி "சிநேகிதனே எதுக்காக முத்தமிட்டாய், முத்தத்தினால் மனுமகனைக் காட்டிக் கொடுக்கிறாயோ" எனவே யூதாசுடன் வந்தவர்கள் கர்த்தரைச் சூழ்ந்தார்கள். சேசுநாதர் அவர்களையணுகி "யாரைத் தேடுகிறீர்கள்," என, "நசரேனுவாகிய சேசுவை" என்றார்கள். "அவர் நாமே" எனக் கர்த்தர் பதிலுரைக்க எல்லோரும் பயந்து பின்வாங்கி மல்லாந்து விழுந்தார்கள். பின்பு பயந்தெளிந்து எழுந்து கர்த்தரைப் பிடித்துக் கொண்டார்கள்.

தம் கர்த்தரைத் தப்புவிக்கும் பொருட்டு இராயப்பர் தன் வாளை உருவிப் பிரதான ஆசாரியனின் ஊழியக்காரனுடைய காதை வெட்டினார். சேசுநாதர் அவரை நோக்கி "உன் பட்டயத்தை அதன் உரையிற்போடு, ஏனெனில் பட்டயத்தை எடுத்தவர்கள் பட்டயத்தால் சாவார்கள்" எனச் சொல்லி அறுபட்ட காதை ஒட்டிச் சொஸ்தப்படுத்தினார். அப்பால் சேவகர் இவரைப் பெரிய குருவாகிய கைப்பாசிடம் கொண்டு சென்றார்கள்.

## கைப்பாசன் தீர்ப்பு.

தமது சீஷர்களைப் பற்றியும், போதனைகளைப் பற்றியும் கைப்

பாஸ் இரக்ஷகரை வினவ, அவர் "நான் ஒன்றும் ரகசியமாய்ச் செய்யவில்லை. என் போதனைகளைக் கேட்டோர் சொல்லுவார்கள்" எனப் பதிலுரைக்க, ஒருவன் எங்கள் பெரிய குருவிடம் இப்படிப் பதில் சொல்லுவீரோவென்று இவரை ஓர் அடி அடித்தான். பின் யூதர் சாட்டிய பொய்க் குற்றங்களை நிரூபிக்கப் பொய்ச் சாட்சிகளைக் கொண்டுவந்தார்கள். இவர்களோ தங்கள் சாட்சியத்தால் தங்களிஷ்டத்துக்கு விரோதமாய்ச் சேசுநாதர் குற்றவாளியல்லவெனக் காட்டினார்களாதலால், இவரைக் குற்றம் விதிக்க ஒன்றுந்தோன்றாமல் கைப்பாஸ் "சீவியராகிய கடவுளின் ஆணையால் கேட்கிறேன், நீ சர்வேசுரனுடைய சுதனாகிய கிறிஸ்துவோ?" என்றனன். மறுமொழியாக "ஆம் அதை நீரே சொன்னீர்" எனச் சேசுநாதர் சொல்ல; "இதோ தேவதூஷணஞ் சொன்னானே, இனி நமக்கு சாட்சியேதுக்கு" எனச் சொல்லி மரணத் தீர்வையிட்டான். உடனே சேவகர் இவரைப் பிடித்துக் கடினமாய் அடித்துப் பலவிதமாய் ஆகடியஞ் செய்தார்கள். அப்போது தான் இராயப்பர் "நான் அவரை அறியேன்" என மும்முறை மறுதளித்தது. உடனே தேவ வரப்பிரசாதக்கதிர் இவரது ஆத்துமத்தை ஊடுருவத் தம் குற்றத்தை அறிந்து வெளியில் சென்று மிக்க மனஸ்தாபப்பட்டார். யூதாசோ சர்வேசுரனுடைய இரக்கத்தில் நம்பிக்கையின்றி, அதோகதியாய்த் தான் வாங்கின பணத்தையும் எறிந்துவிட்டு நான்று கொண்டு மரித்தான்.

## போஞ்சுப்பிலாத்து தீர்ப்பு.

யூதர்கள் ரோமையருக்குட்பட்டு மரண தண்டனை நிறைவேற்றச் சுதந்தர மற்றிருந்ததால், மறுநாள் ரோமையர் தேசாதிபதியான போஞ்சுப் பிலாத்திடம் சேசுநாதரைக் கூட்டிச்சென்றார்கள். இவர் குற்றமில்லாதவர் என்றறிந்த பிலாத்து எப்படியும் இவரை விடுதலை செய்ய எண்ணி அவர்களிஷ்டப்படி அடிக்கச்சொல்லி, உடம்பெல்லாம் சின்னாபின்னமாய்க் கிழிந்து செங்குருதி வழிந்தோடி மனிதசாடையற்ற இவரை "இதோ மனிதன்" எனக்

காட்டி அவர்களிருதயங்களில் இரக்கமுண்டாக்கப் பார்த்தான். ஆனால் யூதர் கன்னெஞ்சராயிருந்தது கண்டு, பாஸ்கா காலத்தில் ஓர் குற்றவாளியை விடுதலைசெய்வது வழக்கமாகையால் இவரை விடுதலை செய்பலாமென இவன்சொல்ல, யூதர்கள் கொலைக்காரனை பரபாசை விடுதலைசெய்யும், இவனைக்கொல்லும், கொல்லும் என ஆர்ப்பரித்துச் "செசார் அரசனின் உண்மையான ஊழியனுகில் தன்னை ராசாவென்ற இம்மனிதனைக் கழுவேற்றும்" எனப் பய முறுத்தினர்கள். பிலாத்து பயந்து இந்நீதிமான் இரத்தத்தில் நான் குற்றவாளி அல்லவெனத் தன் கைகழுவ, யூதர் "இவன் இரத்தம் எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருக்கட்டும்" என்றனர். ஆகையால் பிலாத்து மரணதண்டனை விதித்தான்.

## கல்வாரி மலையில் மரணம்

யூதர்கள் பெரிய சிலுவையைச் சுமத்திக் கர்த்தரை இழுத்துக் கல்வாரிமலைசென்று இரண்டு கள்ளருக்கு நடுவில் சிலுவையிலறைந்தார்கள். இங்கு உயிர் பிரியுமுன் வியாகுலவாளால் ஊடுருவப்பட்டுப் பின்சென்ற தமது திருமாதாவுக்குத் தம் பிரிய சீஷனுகிய அருளப்பரைக் கையளித்துத் தம்மைப்பற்றிய தீர்க்கதரிசனங்களெல்லாம் நிறைவேறியது கண்டு, "பிதாவே உமது கரங்களில் என் ஆத்துமத்தை ஒப்புக்கொடுக்கிறேன்," என்று கூவித் தலைகுனிந்து மரித்தார்.

## கர்த்தர் உத்தானம்.

சீஷர்கள் சடலத்தைச் சிலுவையினின்று இறக்கி வெள்ளைத் துணியால் மூடிக் கல்லறையில் அடக்கஞ் செய்தார்கள். இவர் மூன்றுநாள் உயிர்ப்பேனெனச் சொல்லியிருந்ததால், இவர் உயிர்த்தால் இவரது தேவத்துவத்துக்கு வேறுசாட்சி வேண்டியதில்லை என அறிந்த குருக்கள், 'சீஷர்கள் சடலத்தைத் திருடிப்போய், இவர் உயிர்த்துவிட்டார்' எனச் சொல்லுவார்கள் என்று நினைத்துக் கல்லறைவாயிலில் ஓர் பெருங்கல்லை உருட்டிவைத்து முத்திரை

யிட்டு சேவகரைக்கொண்டு காவலுஞ் செய்தார்கள். மூன்றுநாள் சூரிய உதயத்துக்கு முன் கர்த்தர் சாவினின்று உயிர்த்து எழுந்தார். உடனே ஓர் சம்மனசு கல்லறையின் கல்லைப்புரட்டி அதின்மேல் உட்கார்ந்திருக்கச் சேவகர் விழித்துத் திடுக்கிட்டு ஓடிப்போய் குருக்களுக்கு அறிவித்தார்கள். அவர்கள் தங்கள் ஏற்பாடுகளெல் லாம் பொய்த்துப்போனது கண்டு "நீங்கள் தூங்கிக்கொண்டிருக் கையில் சீஷர்கள் சரீரத்தை எடுத்துப் போய்விட்டார்கள் எனச் சொல்லுங்கள்" என்று சேவகர்க்கு கைக்கூலி கொடுத்தார்கள். இவர்கள் தூங்குகையில் சீஷர்கள் எடுத்துப்போனது இவர்கட்கு எப்படித் தெரிந்திருக்கும் என்ற சாதாரண நியாயம் இவர்கள் யாருக்கும் சற்றுந் தோன்றவில்லை!

உத்தானத்தின் பின் நமது கர்த்தர் தனித்தனியாயும், ஒருங் காகவும் தம் சீஷர்களுக்குப் பலமுறை தம்மைக்காட்டி அவர்களை ஸ்திரப்படுத்தி வந்தார். தோமையார் மிகச் சந்தேகியாயிருக்கக் கர்த்தர் அவரைத் தமது காயங்களில் கை வைத்துப் பார்க்கும்படி ஏவினார். இப்படி நாற்பது நாளளவு மிருந்து கடைசியில் ஓர் மலை மேற்சென்று சுமார் 500 பேர்முன்பாகப் பரலோகஞ் சென்றார். அப்போஸ்தலர்களும், தேவமாதாவும், மற்ற புண்ணிய ஸ்திரீகளும் ஜெருசலேம் சென்று திவ்விய இஸ்பிரீத்து சாந்துவின் வருகைக்கு செபத்தினாலும் தியானங்களாலும் தங்களை முஸ்தீப்புச் செய்து வந்தார்கள்.

## 3. திவ்விய இஸ்பிரீத்து சாந்து வருகை.

சேசுநாதர் மோக்ஷத்துக்குச் சென்ற பத்தாநாள் தேவமாதா, அப்போஸ்தலர்கள், சீஷர்கள், பரிசுத்த ஸ்திரீகள் சகிதமாய்க் கர்த் தருடைய இராப்போசன சாலையில் அமர்ந்திருக்க, திடீரென்று ஆகாயத்தினின்று கடும்புசல் கிளம்பியதுபோல் ஓர் சப்தமுண்டாகி ஒவ்வொருவர் தலைக்குமேலும் ஓர் அக்கினி நாக்கு ரூபமாய் இஸ்பி ரீத்து சாந்து இறங்கினார். உடனே இஸ்பிரீத்து சாந்துவால் நிறப் பப்பட்டு ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாஷை பேசத் தொடங் கினார்கள்.

அது பண்டிகை காலமாகையால் வெகுசனங்கள் ஜெருசலேமில் கூடியிருந்தார்கள். அப்போஸ்தலர்களுக்கு நேர்ந்த புதுமைச் செய்தி பரவவே திரளான சனங்கள் அங்கு வந்து, அப்போஸ்தலர்கள் எல்லோரும் கலிலேயராயினும், அவர்கள் பற்பல பாஷைகளிலே பேசுவதைக் கேட்டு அப்புதுமைக்கு மகா ஆச்சரியப்பட்டார்கள்.

## இராயப்பர் முதல் பிரசங்கம்.

சேசுநாதர் பிடிபட்டபோது கோழைத்தனமாய் ஓடிப்போன அப்போஸ்தலர்கள், திவ்ய இஸ்பிரீத்து சாந்துவால் திடப்படுத்தப்பட, அவர்களின் தலைவரான இராயப்பர் தைரியமாய்ப் போதிக்கத் துவக்கினர். இவர் போதனையைக் கேட்ட சனங்கள் "நாங்கள் என்ன செய்யவேண்டும்" என, இராயப்பர் "தவம் செய்யுங்கள்; உங்கள் பாவங்கள் நீக்கப்பட்டு நீங்களும் இஸ்பிரீத்து சாந்துவைப் பெற சேசுக்கிறிஸ்துநாதரின் நாமத்தால் ஞானஸ்நானம் பெறுங்கள்" என்றார். உடனே மூவாயிரம்பேர் ஞானஸ்நானம் பெற சத்திய திருச்சபை அன்றுமுதல் பகிரங்கமாய்த் தொடங்கியது.

# 2-ம். அத்தியாயம்.

## அப்போஸ்தலர்கள் காலம் (கி. பி. 29—100)

உட்பிரிவுகள்:—

அப்போஸ்தலர்கள் நடவடிக்கை; ஜெருசலேம் அழிந்தது; அப்போஸ்தலர்கள் காலமுடிவு; பதித மதங்கள்.

### 1. அப்போஸ்தலர்கள் நடவடிக்கை.

#### அப்போஸ்தலர்களின் துன்பங்கள்.

அர்ச். இராயப்பர் முதல் பிரசங்கம் செய்தது கி. பி. 29 ம் ஆண்டில். தாம் சொல்லிய வேத சத்தியங்களுக்கு அத்தாட்சியாக இவர் அநேக புதுமைகளைச் செய்ய யூதேயாவின் எல்லாப் பக்கங்களிலும் இச்செய்தி பரவி நாளுக்கு நாள் கிறிஸ்துவர்களின் தொகை அதிகரித்தது. இதைக்கண்ட யூதகுருக்களும், ஆசாரியர்களும், மோசேஸ் ஏற்படுத்திய வேதம் அழிந்து தங்கள் பிழைப்பும் நாசமாகுமென்று பயந்து, பொறாமை கொண்டார்கள். அதினால் நயத்திலும் பயத்திலும் கிறிஸ்துவர்களை மிரட்டி அவர்கள் தொகையைக் குறைக்க எவ்வளவோ பிரயாசைப்பட்டும் அது கைகூடாமையால், அப்போஸ்தலர்களைச் சிறையிலடைத்து உபத்திரவித்தார்கள். இதுதான் முதல் வேத கலகம். இதில் அர்ச். முடியப்பர் முதல் வேதசாட்சியாகக் கல்லாலெறியுண்டு மரித்தார். அர்ச். இராயப்பரும் சாவுக்கு நியமிக்கப்பட்ட முந்தின இரவில் ஓர் சம்மனசினால் சிறை நீக்கப்பட்டு இக்கொடிய சாவினின்று தப்புவிக்கப்பட்டார்.

#### சின்னப்பர் மனந்திரும்பல் கி. பி. 34.

இப்படியிருக்கையில் வேத விரோதிகளிலெல்லாம் மிகக்கொடியரான சவுல் என்பவரைப் புதுமையாய் வேதத்தில் உட்படுத்தி அவரையே தமது வேதத்திற்கு ஓர் சிறந்த தூணாக்கும்படி சர்வேசுரன் சித்தமானார். அதெப்படியெனில், இச்சவுல் என்பவர் ஜெருசலேமில் தான் செய்த கொடுமை போதாதென்று தமாஸ்கு

என்ற பட்டணத்துக் கிறிஸ்துவர்களை அழிக்க பெரிய குருவிடத்தில் உத்திரவுபெற்று, சிலபேருடன்கூடி குதிரை ஏறிச் செல்லுகையில், திடீரென "சவுலே ஏன் நம்மை உபத்திரவிக்கிறாய்,... நீ உபத்திரவிக்கிற சேசுநாதர் நாமே" என்று ஓர் ஆகாயவாணி உண்டாயிற்று. இவர் திடுக்கிட்டு ஒன்றும் தோன்றாது பெருங்குரலாய் "சுவாமி நான் என்ன செய்யவேணும்" என்று ஓலமிட, ஆண்டவர் "எழுந்து பட்டணத்திற்குள் செல், அங்கே நீ செய்யவேண்டியது என்னவெனச் சொல்லப்படும்," என்றார். கண்கெட்டு மூர்ச்சித்துக் கிடந்தவர் பயத்துடன் எழ, கூட இருந்தவர்கள் பட்டணத்திற்குள் இவரைச் சேர்த்தார்கள். அங்கு புதுமையாய்க் கண் திறக்கப்பட்டு ஞானஸ்நானத்தில் சின்னப்பர் எனப்பேர் பெற்று, ஸ்பிரீத்து சாந்துவின் வரங்களை மிகுதியாய் அடைந்து; ஊக்கமுள்ள வேதபோதகர் ஆகி யூதர்கள் தம்மை இகழ்வதைச் சற்றும் கவனியாது தர்க்கித்து அவர்களை வாயடைத்து வந்தார்.

## திருச்சபைத்தலைமை.

இப்படியாய் கி. பி. 40 வருஷம் வரையில் அப்போஸ்தலர்கள் யூதேயா நாட்டிலேயே பிரசங்கித்து வந்தார்கள். வேத கலகத்தால் கிறிஸ்துவர்கள் சிதறடிக்கப்பட்டு யூதேயா நாட்டின் சுற்றுப் பக்கங்களுக்குச் செல்ல, அவர்களிலும் அநேகர் வேதம் போதிக்கிறவர்கள் ஆனார்கள். இப்படி வேதம் போதிப்பவர்கள் தொகையும் அதிகரித்து அப்போஸ்தலர்களும் பல இடங்களுக்குச் செல்ல வேண்டிவந்ததால், விசுவாச சத்தியங்கள் இன்னவையென திட்டப்படுத்தல் அவசியமாயிற்று. அப்போஸ்தலர்கள் அனைவோரும் இஸ்பிரீத்து சாந்துவைப் பெற்று சத்தியம் தவறாத வரமுள்ளவர்கள் எனினும், மற்றவர்களுக்கு அவ்வரமில்லை. தவிர அர்ச். இராயப்பரை திருச்சபைக்குத் தலைவராக நமது இரட்சகர் ஏற்படுத்தியமையால், திருச்சபை போதிக்க வேண்டிய விசுவாச சத்தியங்கள் அவரது அநுமதியின்றி போதிக்கப்பட நியாயமுமில்லை. ஆகையினால் தான் அப்போஸ்தலர்கள் ஒன்றாகக் கூடி விசுவாச சத்தியங்களை அர்ச். இராயப்பரைக் கொண்டு நிர்ணயிக்க நேர்ந்தது.

கத்தோலிக்க திருச்சபை ஒரே மேய்ப்பனுக்கு உட்பட்டு ஒரே விதமான சத்தியங்களை விசுவசித்து ஒன்றாய் இருக்கும்சபை. இந்த ஏகத்துவம் அதின் முக்கியமான அறிகுறிகள் நான்கில்ஒன்று. சர்வ காலங்களையும் பகுத்தறியும் கர்த்தர் தற்காலத்தில் மனிதர் ஆங்கா ரத்தால் வீங்கி திருச்சபையை விரோதித்து, அதை ஆண்டு நடத்தி வரும் தம் ஸ்தானாதிபதியும் அர்ச். இராயப்பரின் பதிலாளியும் ஆகிய பாப்புவை துவேஷித்து, அவருக்குக் கீழ்ப்படியாது பதிதர் களாகவும், பிரிவினைக்காரர்களாகவும், திருச்சபையிலேயே இருந்து அவவிசுவாசிகளாகவும் ஆவார்களென்று கண்டிருந்தார். இதினாலே தான் திருச்சபையின் தலைவருக்குக் கீழ்ப்படிந்து நடப்பது கடமை யென்று காட்ட அப்போஸ்தலர்களை எல்லாம் ஒன்று கூட்டி அர்ச். இராயப்பரால் விசுவாச சத்தியங்களை வரையறுக்க சித்தமானார்.

இதனால் அப்போஸ்தலர்கள் யாவரும் அர்ச். இராயப்பரை திருச்சபையின் தலைவராக அங்கீகரித்து நடந்தார்களென நாம் நிச் சயிக்க நியாயமுண்டு. தவிர, அர்ச். சின்னப்பர் அந்தியோக்கியா பட்டணத்தில் பிரசங்கிக்கும் போது, அங்கே கிறிஸ்துவர்களான யூதர்கள், யூதர் அல்லாத மற்ற ஜாதியார் கிறிஸ்து மதத்துட்படில் விருத்த சேதனம் செய்தல் அவசியமென்று சாதித்தார்கள். அர்ச். சின்னப்பர் அதை மறுத்து அருள் வேதத்திற்கு அது அவசிய மில்லை என்று சொல்லியும், அது விஷயமாய் திருச்சபைத் தலைவ ருடைய தீர்ப்பு அவசியமென உணர்ந்து ஜெருசலேமுக்குச் சென்று அர்ச். இராயப்பருடைய தீர்ப்புப்பெற்று வரவே கிறிஸ்து யூதர்கள் விருத்தசேதனம் அவசியம் இல்லையென்று ஏற்றுக்கொண்டார்கள்.

இதனாலும், அப்போஸ்தலர்களும் கிறிஸ்துவர்களும் அர்ச். இராயப்பரைத் திருச்சபையின் தலைவரெனக் கொண்டு, முக்கிய மான விஷயங்களில் விவாதம் ஏற்படில் அவரது தீர்ப்புப்பெற்று அதின்படி நடந்தார்கள் என்றும் நாம் அறிகிறோம்.

மேலும், அர்ச். இராயப்பரும் சின்னப்பரும் கொலைக்காரர் களால் சிறையினின்று பிரிக்கப்பட்டுச் செல்லுகையில் சின்னப்பர் இராயப்பரைப் பார்த்து "ஆலயங்களைக் கட்டுகிறவரும், ஆடுகளையும்

ஆட்டுக் குட்டிகளையும் போஷிப்பிக்கும் ஆயனுமானவரே உமக்குச் சமாதானம்" என, இராயப்பர் அதற்குப் பதிலாக, "நன்மையைப் போதிக்கிறவரும், நீதிமான்களின் தலைவரும் இரட்சணியத்திற்கு உதவியுமானவரே சமாதானமாய் போம்" என்றார். இவர்கள் ஒருவரொருவரை நோக்கிச் சொல்லும் தன்மையிலேயே அர்ச். இராயப்பரே திருச்சபைக்குத் தலைவரென்று கண்டறியலாம்.

முற்கூறிய நியாயங்களினால் அர்ச். இராயப்பருக்குப் பதிலாக வரும் அர்ச். பாப்புவை திருச்சபைத் தலைவரென்று ஏற்றுக்கொள்ளவும், விசுவாச சத்தியங்களையும், மற்றும் திருச்சபைக் கடுத்த எல்லாக் காரியங்களையும், அவரது ஏற்பாட்டின் படியே அநுசரிக்கவும் சகல கிறிஸ்துவர்களுக்கும் கடமை உண்டு.

ஆனால் அர்ச். பாப்பானவர் அர்ச். இராயப்பருக்குப் பதிலாக வருகிறவரோ, அர்ச். இராயப்பரை அங்கீகரித்தது போல் இவரையும் அங்கீகரிக்க வேண்டுமோ, என்பதையும் சற்று கவனிப்போம். அர்ச். இராயப்பர் ரோமாபுரிக்குச் சென்று அதின் மேற்றிராணியாராயிருந்து அங்கேயே வேதசாட்சி முடிபெற்றாரென்று சரித்திரமூலமாய் நாம் அறிகிறோம். ஆகையால் அவருக்குப்பின் அவரைத்தொடர்ந்து வந்த ரோமை மேற்றிராணிமார்களே அவருக்குப் பதிலாளிகளும் திருச்சபை அதிகாரிகளுமாகி, அர்ச். இராயப்பருடைய எல்லாச் சுதந்தரங்களையும் பெற்றவர்களாம்.

சில வருஷங்களுக்கு முன் நம்மை ஆண்டு வந்த எட்வர்டு சக்கரவர்த்தி இறந்தபின் அவருக்குப் பதிலாய் சிம்மாசன மேறிய ஜார்ஜ் அரசர் தமக்கு முன்னிருந்தவருடைய சுதந்தரங்கள் எல்லாம் கொண்டு இருக்கிறதில்லை என யார் சொல்லுவார்? அதுபோலவே, அர்ச். இராயப்பருடைய ஸ்தானத்திற்கு வந்தவர் அவரது சுதந்தரங்களுக்குப் பாத்தியப்பட்டவர் என்பதற்கு யாது சந்தேகம்? தவிர, நமது திவ்விய கர்த்தர் திருச்சபையை உலகம் முடியுமட்டும் மனித இரக்ஷணியத்துக்காக ஸ்தாபித்தாரன்றோ? அர்ச். இராயப்பர் மரித்தபின் திருச்சபைக்கு வேறே தலைவர் வேண்டாமோ? திருச்சபையை உண்டாக்குங்கால் இரக்ஷகர் அர்ச். இராயப்ப

ரை நோக்கி சொன்னதென்ன? "நீர் கல்லாயிருக்கிறீர், இக்கல்லின் மேல் என்னுடைய திருச்சபையைக் கட்டுவேன். நரகவாசல் அதை மேற்கொள்ளாது," "மேலும் உலக முடிவு பரியந்தம் நாம் உம்மோடே இருப்போம்," என்றதல்லவா? இதினால் திருச்சபை உலக முடியுமட்டும் நீடித்திருக்க வேண்டு மல்லவோ? ஆகையால் அர்ச். இராயப்பருடைய ஸ்தானத்திற்கு வருகிறவர் அவரது சுதந்தரங்களை பெற்று திருச்சபையை நடத்தி வராவிடில், அவர் இறந்த பிறகு திருச்சபை ஏது? ஆகையினால் நமது திவ்விய கர்த்தர் அர்ச். இராயப்பருடைய பதிலாளியைத் திருச்சபையின் தலைவராய் உலக முடியுமட்டும் அதை ஆண்டு நடத்த வேண்டுமென்று சித்தமானார் என நாம் நிச்சயக்க வேண்டாமோ? ஆயைால் சகல கிறிஸ்துவர்களும் அர்ச். பாப்பானவருக்கு கீழ்ப்படிந்து அவரால் போதிக்கப்படும் சத்தியங்களை அனுசரிப்பதுடன், திருச்சபைக்கு அடுத்த மற்றெல்லாக் காரியங்களிலும் அவரது உத்தாவின் படியே நடந்து கொள்ளவும் கடமைப் பட்டிருக்கிறார்கள். அப்படி அனுசரியாதவர்கள் திருச்சபையின் சொற்படி கேளாதவர்களாய் நமது திவ்விய கர்த்தர் வாக்கின்படி அக்கியானிகளாம்.

## அப்போஸ்தலர்களின் அன்னிய போதகம்.

அப்போஸ்தலர்கள் கூடி விசுவாச சத்தியங்களை திட்டப்படுத்தினார்கள் என்று முன் சொல்லி இருக்கிறது. அதற்குப் பிறகு அப்போஸ்தலர்கள் பல திக்குகளிலும் சென்றார்கள். அர்ச். இராயப்பர் சீரியா, அந்தியோக்கியா, ரோமை இவ்விடங்களில் போதித்து, கடைசியாய் ரோமை நாட்டின் ராஜதானி பட்டணமாகிய ரோமாபுரியில் தமது சிங்காசனத்தை ஏற்படுத்தினார். உலகமெல்லாம் ஆண்டு வந்த ரோமையரின் முக்கிய இருப்பிடமாகி, சகல செல்வங்களும் நிறைந்து அஞ்ஞான இருள் மூண்டு எவ்வித அக்கிரமங்களுக்கும் ஊருணியும், பசாசின் முதல் இருப்பிடமுமாகிய இந்த ரோமை, திருச்சபைக்கும் ராசதானியாகி சூரிய வெளிச்சத்துக்கு முன் ஒதுங்கும் பனிபோல் பாவ இருள் முற்றும் நீங்கி, சர்வ புண்ணியங்களிலும் உலகத்துக்கு ஓர் திலகமாய் விளங்க

வேண்டுமென்று நமது இரக்ஷகப் பெருமான் சித்தமானார் போலும்! அர்ச். சின்னப்பர், அரேபியா, சின்னஆசியா, மாசிடோனியா, கிரீஸ் நாடுகளில் பிரசங்கித்து ரோமை நகரடைந்து வேதசாட்சி முடி பெற்றார். அர்ச். தோமையார், இந்து தேசம் சேர்ந்து மயிலாப்பூரில் இருந்து சின்ன மலையில் வேதசாட்சி ஆனார். அர்ச். அருளப்பர் சின்ன ஆசியாவிலும்; அர்ச். பெலவேந்திரர் சித்தியாவிலும்; அர்ச். பிலிப்பு மேல் ஆசியாவிலும்; அர்ச். பர்த்தலோமியு ஆர்மேனியாவிலும்; அர்ச். மத்தேயு பாரசீகத்திலும்; அர்ச். சிமியோன் மெசொபொட்டாமியாவிலும்; அர்ச். யூதா அரேபியாவிலும்; அர்ச். மத்தியாஸ் ஆப்பிரிக்காவின் வடபாகங்களிலும்; சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். இப்படியாய் தெரிந்த உலகம் முழுதும் அப்போஸ்தலர்கள் காலத்திலேயே வேதம் போதிக்கப்பட்டது.

## 1-ம் வேத கலகம்.

இப்படி வேதம் எங்கும் பரவுவதையும் தன்னுடைய முக்கிய ஸ்தலமான ரோமையிலேயே தன் ஆளுகை அழிவுறுவதையும் கண்ட பசாசு, ஓர் பெரிய வேதகலகத்தை எழுப்பி அநேகர் வேதசாட்சிகளாவதற்கு ஏதுவானது.

இப்பசாசு கலகம் செய்தது எப்படியெனில்: நீரோ என்னும் ஓர் கொடுங்கோலன் அப்போது ரோமையை ஆண்டிருந்தான். இவன் மனிதருடைய அவஸ்தையைக் கண்டு இரங்குவதின்றி சந்தோஷம் கொள்ளும் நீசன். இவன் ரோமையைத் திருத்திக் கட்ட எண்ணி, ஓர் நாள் அதன் ஓர் பாகத்தை தீக்கொளுத்திவிட அக்கினி சுவாலை எங்கும் பரம்பி மனிதர்கள் அந்தோ செத்தோம் என ஓலமிட்டுக் கொண்டு எங்கும் ஓடி தப்பித் தவிப்பதை தன் மாடியினின்று பார்த்து பெருத்த சந்தோஷம் கொண்டான். ஆனால் ஜனங்கள் இவனைக் குற்றஞ்சாட்டா வண்ணம் ஓர்உபாயந்தேடி அஞ்ஞான ரோமையர் விரோதிக்கும் கிறிஸ்துவர்கள் மேல் அக்குற்றத்தைச் சாட்டி அநேகரை பலவிதமாய் மடித்தான். இவன் குரூரங்களைச் சொல்வதும் கஷ்டம், அவற்றைக்கேட்பதும் மிக்க பரிதாபம்! கிறிஸ்துவர்களை நாய்கள் சுலபமாய் தாக்கிக் கடித்துத் தின்னும்

பொருட்டு புதிய தோல்களால் மூடினார்கள்; மேலும் அநேகரைச் சிலுவையில் அறைந்தார்கள். இதுவும் போதாதென்று தேகம் எல்லாம் ரோசனத்தைப் பூசி பாதைகளில் தீபங்களுக்குப் பதில் இம்மனிதரை கொளுத்தினார்கள். தன் தோட்டத்திலும் இம் மனித தீபங்களை ஓர் இரவில் எரிக்க ஏற்பாடு செய்தான். ரோமை பசாசின் இருப்பிடம் என்பதற்கு வேறு அத்தாட்சியும் வேண்டுமோ? இன்னும் தன் இராச்சியம் எங்கும் இப்படியே கிறிஸ்துவர்களை சித்திரவதை செய்து கொல்லக் கட்டளையும் செய்தான். அப்போது தான் அர்ச். சின்னப்பர் தலை வெட்டுண்டும், அர்ச். இராயப்பர் தம் வேண்டுகோளின்படி தலைகீழாய் சிலுவையில் அறையப்பட்டும் வேத சாட்சிகளாய் மரித்தது.

## 2 ஜெருசலேம் அழிந்தது.

### யூதேயாவில் கலகம்.

---

யூதர்கள் ரோமையர் அரசாட்சிக்கு உட்பட்டு அநேக வருஷங்களாய் ரோமை தேசாதிபதிகளால் மிகவும் கொடுமை செய்யப்பட்டு கடைசியில் கி. பி. 66ல் கலகம் செய்தார்கள். ஆனால் ரோமையரது சேனாபலத்தை இவர்கள் அறிந்தவர்களுமல்ல, அவர்களுடன் யுத்தம் செய்து சுயாதீனம் அடைய போதுமான ஒற்றுமை உள்ளவர்களும் அல்ல. துவக்கத்தில் அடைந்த சொற்ப வெற்றியால் கர்வங்கொண்டு கலகத்தை அதிகரித்தார்கள். அதினால் நீரோ வெஸ்பாஸியன் என்னும் தன் சிறந்த சேனைத்தலைவனை பெரும்படையுடன் அனுப்பினான். அப்போதும் தங்கள் பலவீனத்தை உணர்ந்து யூதர் சரணம் பண்ணாது கடுமையாய்ப் போர் புரிந்தார்கள். ஆகையால் ஜெருசலேமுக்கு வடக்கிலுள்ள நாடெல்லாம் தன் வசமாக்கிக்கொண்டு வெஸ்பாஸியன் ஜெருசலேமைத் தாக்கும்படி தன் மகன் தீத்துஸுக்கு கட்டளையிட்டு ரோமை சேர்ந்து சக்கரவர்த்தியானான்.

## ஜெருசலேம் முற்றுகை.

ஜெருசலேமைச் சுற்றி ரோமையர் முற்றுகை போட்டார்கள். அச்சமயத்தில் பாஸ்காவைக் கொண்டாட பெருந்தொகையான யூதர்கள் பல திக்குகளிலுமிருந்து அங்கே வந்திருந்தார்கள். இவ்விதமாய் சர்வேசுரன் தமது சாபத்தின் முடிவை யூத ஜனங்களுக்கெல்லாம் காட்ட சித்தமானார். முற்றுகைக்கு முன் ஒற்றுமையின்றி இருந்த யூதர்கள் போசனத்துக்கு வேண்டியவற்றைச் சேகரிக்கவில்லை. முற்றுகை நான்கு மாதகாலம் நீடிக்க யூதர்கள் பட்ட நிர்ப்பாக்கியம் சொல்ல முடியாது. சர்வேசுரனுடைய சாபமானது ஒரு கால் தம்முடையதான இப்பட்டணத்தையும் தெய்வ கொலைஞரான அதன் ஜனங்களையும் படவைத்த பரிதாபத்தைக்கேளுங்கள். பஞ்சமும் பசியும் அதிகரிக்க மனிதருடைய நீசத்தனம் பார்ப்பவர்கள் கண்களைக் கூசுவிக்கும். ஒருவரொருவர் தின்பதை பிடுங்கிக் கொள்ளுவார்கள். குழந்தைகள் கையிலிருக்கும் பண்டங்களை முதலாய்க் கருடனைப்போல் பாய்ந்து பிடுங்கிப் போவார்கள். கொள்ளைக்காரரும் சேவகர்களும் வீடுகளில் நுழைந்து கிடைத்தவை எல்லாம் வாரிப் போவார்கள். கடைசியாய் கிடைக்கும் எதையும் தின்பார்கள். தெருக்களில் கிடக்கும் எச்சில்களையும், புழுத்து நாறிக்கிடக்கும் வஸ்துக்களையும் சற்றும் கூச்சமின்றி எடுத்துப் புசிப்பார்கள். ஓர் நாள் ரோமைய போர்வீரர் தெருவழியே போய்க்கொண்டிருக்கையில், ஓர் வீட்டினின்று கரிசல் நாற்றம் உண்டாக அவ்வீட்டிற்குள் பிரவேசிக்கையில், அங்கே அவர்கள் கண்ணுக்கு என்ன கண்டதென்று நினைக்கிறீர்கள்? ஐயோ பரிதாபம்! ஓர் யூத ஸ்திரீ தன் குழந்தையை இரண்டாய் வெட்டி ஓர் பகுதியை சுட்டுத் தின்றுவிட்டு, மறு பகுதியை மறு நாளைக்கென்று மறைத்து வைத்திருந்தாள். சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையை புசியோமென்ற இச்சனங்கள், அந்தோ! அவர் சாபத்தின் கடுமையால் தங்கள் குழந்தைகளையே தின்கிறார்கள்!

தன் குழந்தைக்காக உயிர் துறக்கும் தாயானவள் இப்படிச் செய்ய நேரிட்டிருந்தால் சர்வேசுரனுடைய சாபத்தால் விளையும் நிர்ப்பாக்கியத்தை நம்போலியரால் சொல்லவாவது அதை அளவறுக்கவாவது முடியுமோ ?

## தேவாலய அழிவு.

கடைசியாய் யூதர்கள் பின்னடைந்து தேவாலயத்துக்குச் சென்று யுத்தஞ் செய்கையில் தீத்துஸ் அதன் வாயிலில் தீ வைத்து மத்திய பாகத்தை மட்டும் அழிவின்றி பாதுகாக்கும்படி கட்டளை இட்டான். ஆனால் "கல்லின் மேல் கல் நில்லாது" என்னும் நமது கர்த்தரின் சாபமும்; "கிறிஸ்துவானவர் கொல்லப்பட்டபின் ஓர் ஜாதியார் தங்கள் தலைவனுடன் வந்து ஜெருசலேமையும், அதன் தேவாலயத்தையும் அழிப்பார்கள்" என்னும்; தானியேல் வசனித்த தீர்க்கதரிசனமும் நிறைவேற வேண்டி இருந்ததால், அதை சற்றும் அறிந்திராத ஓர் ரோமை சேவகன் ஓர் எரி கொள்ளியை வீச நெருப்பு திடீரெனப் பாவி நாற்புறமும் சூழ்ந்து தேவாலயம் முழுதும் வெந்து தரைமட்டம் ஆக்கப்பட்டது. அநேகாயிரம் யூதர்கள் இக்கலகத்தில் வெட்டுண்டும், பஞ்சம், பசி, பிணிகளால் மரித்தும், மடிந்தார்கள். இன்னும் அநேகாயிரம் பேர் அடிமைகள் ஆக்கப்பட்டு பிரதேசத்தாருக்கு விற்கப்பட்டார்கள். மீதியானவர்கள் சிதறடிக்கப்பட்டு உலகத்தில் பலவிடங்களிலும் சென்று இந்நாள் மட்டும் தங்களுடையதென ஓர் சொந்த நாடின்றி கேவலமாய் இருக்கிறார்கள். ஆனால் தங்களுடைய இராச்சியமாகிய திருச்சபையில் இவர்களெல்லாம் உட்பட்ட பிறகே உலகம் முடியுமென்று நம்பப்படுகிறது.

## 3. அப்போஸ்தலர்கள் காலமுடிவு.

### 2-ம் வேத கலகம்.

அர்ச். இராயப்பர் கி. பி. 67ல் மரித்தபின் முதல் நூற்றாண்டில் மூன்று பாப்புமார் வந்தார்கள். மூவரும் வேத சாட்சிகளாய் மரித்தார்கள். மூன்றாவது பாப்புவின் காலமாகிய கி. பி. 95ல் தொமிசியன் என்னும் ரோமை ராயன் கிறிஸ்துவர்களை அழிக்க ஓர் கட்டளை செய்தான். இராச வம்சத்தில் சேர்ந்த கிறிஸ்துவர்கள் முதலாய் இதற்குத் தப்பவில்லை.

## அர்ச். அருளப்பர் வேதசாட்சியம்.

இக்கலகத்தில் வேதசாட்சி ஆனவர்களில் மிகப் பேர்போன வர் அப்போஸ்தலர்களுக் கெல்லாம் வயதிற் சிறியவரும், நமது இரட்சகருக்கு விசேஷ பிரியமுள்ளவருமாகிய அர்ச். அருளப்பர். இவர் நமது இரட்சகரிடத்து வைத்த விசுவாச நிமித்தமாய் கல்வாரி மலைமட்டும் சென்று அங்கே நமது ஆண்டவர் ஆக்கினையின் படி அர்ச். கன்னிமரியாயிக்கு மகன் ஆனுரென்றும், அவர் வழியாய் உலகம் எங்குமுள்ள கிறிஸ்துவர்களுக் கெல்லாம் அர்ச். கன்னி மரியாயி விசேஷ தாயானுள் என்றும் நாம் அநேக முறை கேட்டிருக்கிறோம்.

இவர் தேவமாதாவின் மரண பரியந்தம் ஜெருசலேமில் தங்கி கி. பி. 47 க்குப்பின் சின்ன ஆசியாவில் பிரசங்கித்து வருகையில் மேற்சொன்ன வேதகலகம் உண்டாக சிறைப்படுத்தப்பட்டு ரோமை சேர்ந்தார். குரூரமே ரூபமெடுத்தது போன்ற தொமிசியன் இவரது முதிர்ந்த வயதுக்காவது சற்றும் இரங்காது, எண்ணெய் கொப்பளித்துக் கொண்டிருந்த ஓர் கொப்பரையில் இவரைப் போட்டு கொல்லக் கட்டளை செய்தான். ஆனல் தெய்வ சித்தத்தால் அது இவருக்கு ஓர் குளிர்ந்த ஸ்நானம் போல் இருந்தது. அப்பால் இவரை மாந்திரிகன் என பொய்க்குற்றம் சுமத்தி பாட்மோஸ் என்னும் தீவில் கொண்டு விட்டுவிடக்கட்டளைசெய்தான். இவ்விடத்தில் தான் அர்ச். அருளப்பர் காட்சியாகமம் எழுதியது. தொமிசியன் வெட்டுண்டு இறந்தபின் இவர் இத்தீவு விட்டு தாம் முன்னிருந்த இடஞ் சென்று முன் போலவே சுமார் நூறு பிராயமாகியும் கடினமாய் உழைத்து வந்தார். ஓர் நாள் ஒரு கவுதாரியை கையில் கொண்டு அத்துடன் விளையாடிக் கொண்டு இவர் உலாவி வருவதை ஒரு வேடன் கண்டு ஆச்சரியப் பட்டான். இவர் அவன் வில்லின் கயிறு இளக்கமாய் இருந்தது கண்டு "வில்லைச் சரியே இழுத்துக் கட்டாதிருப்பானேன்" என; அவன் "எப்போதும் இழுத்துக் கட்டி இருந்தால் சீக்கிரம் அறுந்து போகும்" என்று பதிலுரைக்க, அர்ச்சியசிஷ்டவர் அவனை நோக்கி "அப்படியானல் என்னுடைய

மனதிற்கு சற்று இளைப்பாற்றியை நான் தேடுவது பிறகு நன்றாய் வேலை செய்தற்குத் தானே, அப்படியிருக்க நீ வியப்பு அடைவானேன்'' என்று சொன்னார். அர்ச். அருளப்பர் கி. பி. 100ல் பாக்கியமாய் மரித்தார்.

## 4. பதிதமதங்கள்.

திருச்சபைக்கு விரோதம் செய்து வேத புரட்டர்களாகிப் பதிதர் உண்டானது தற்காலத்தில் மட்டுமல்ல; இம்முதல் நூற்றாண்டிலேயே இப்படிப்பட்ட பதிதர் எழுந்தார்கள். கி. பி. 91—100ல் அர்ச். கிளமென்ஸ் பாப்புவாயிருந்தார். அக்காலத்தில் கிறிஸ்துவர்களில் சிலர் நமது திவ்விய கர்த்தருக்கு தேவ சுபாவம் இல்லையென்றும், சிலர் கர்த்தர் ஞானஸ்நானம் பெறுமட்டும் தேவன் அல்லவென்றும், வேறு சிலர் மோசேஸ் வேத கட்டளைகள் கிறிஸ்துவர்கள் இரக்ஷணியத்துக்கு அத்தியாவசியம் என்றும் பிதற்றினார்கள். அஞ்ஞானிகளிலும் சிலர் நமதாண்டவர் மனிதனல்ல ஓர் சிறந்த சம்மனசு என்றார்கள். அர்ச். கிளெமென்ஸ் காலமெல்லாம் இவர்களுடன் தர்க்கித்து இப்பித்தர்களை அடக்குவதிலேயே கழிந்தது. அர்ச். அருளப்பர் இவர்களை வாயடக்கும் பொருட்டே சுவிசேஷத்தை எழுதினார். இப்படியாய் முதல் நூற்றாண்டிலேயே நமது திவ்வியவேதம் புரட்டர்களிடமிருந்து பாதுகாக்கப்பட்டது.

# 3-ம். அத்தியாயம்.

## வேத கலகங்கள். கி. பி. 100—303.

உட்பிரிவுகள்:—

திருச்சபை சட்டதிட்டம்; வேத கலகங்கள்.

### 1. திருச்சபை சட்டதிட்டம்

#### திருச்சபைத்திட்டம்.

அப்போஸ்தலர்கள் காலமுடியும் முதல் நூற்றூண்டின் இறுதியிலேயே, அத்தியாவசியமான விஷயங்களாகிய விசுவாச சத்தியங்களும், சர்வேசுரனுக்குச் செலுத்தும் ஸ்துதி வணக்கங்களும், கிறிஸ்துவர்கள் அநுசரிக்க வேண்டிய ஒழுக்கங்களும், திருச்சபையின் அமைப்பும் ஆகிய இவைகள் யாவும் திட்டமாக்கப்பட்டிருந்தன.

விசுவாச சத்தியங்கள்:—சுவிசேஷமும், பரம்பரை உபதேசமும், விசுவாச சத்தியங்களின் மூலமாம். அவற்றை வியாக்கியானஞ் செய்வதும் உபதேச பரம்பரையை நிர்ணயம் செய்வதும் திருச்சபைக்கு மட்டும் உரிய அலுவல். பிற்காலத்தில் பதிதமதங்கள் (herecies) ஏற்பட இவ்வேத சத்தியங்கள் மேன்மேலும் தெளிவாய் விளக்கப்பட்டனவேஅன்றி திருச்சபை இவற்றைக்கூட்டவும் குறைக்கவுமில்லை. ஏனெனில் திருச்சபைக்கு அவ்வதிகாரமில்லை. ஆகையால் பதிதர் சொல்லுவது போல் திருச்சபையில் புது விசுவாச சத்தியங்கள் கிடையா.

ஆராதனை முறை:—சர்வேசுரனுக்குச் செய்யும் ஸ்துதி வணக்கம் பூசை முறைகளும் முக்கிய அம்சங்களில் ஏற்படுத்தப்பட்டுப் பின்னால் திருச்சபைக்குச் சுயாதீனமுண்டான காலத்தில் கிறிஸ்துவர்களுடைய விருப்பப்படி அநேக வெளிச்சடங்குகள் சேர்க்கப்பட்டன.

ஆசாரம்:—ஆசாரமும் ஏற்பாடாகி காலத்துக்கும், இடத்துக்கும், ஜனங்களுக்கும் தக்காப் போல் சிற்சில மாற்றங்கள் பெற்று வந்தது.

அரசியல்:—திருச்சபை அரசியலமைப்பும் ஸ்தாபிக்கப்பட்டுப் பின் காலத்துக்குக்காலம் அநேக ஒழுங்குகள் சேர்க்கப்பட்டன.

அர்ச். பாப்பாணவர்:—திருச்சபை நீடித்திருக்க அதற்கு சீவியமாயுள்ள விசுவாச சத்தியங்களும், அவைகட்கு மூலமான சுவிசேஷமும், உபதேச பரம்பரை யடங்கிய நூல்களும், யாது வித்தியாசமு மின்றி பாதுகாக்கப்பட ஓர் அரசாட்சி திருச்சபைக்கு அவசியம். இது முதல் நூற்றாண்டிலேயே இருந்ததாகவும், அர்ச். இராயப்பரும் அவர் வழியாய்வரும் ரோஷம மேற்றிராணியாரும் திருச்சபையின் தலைவரென்றும், அவரின்றித் திருச்சபையில்லையென்றும், முன் அத்தியாயத்திற் காட்டி யிருக்கின்றது. இத்தலைவருக்கு "பாப்பு" (தகப்பன்) எனப்பெயர். இப்பெயர் முதலில் எல்லா மேற்றிராணிமார்களுக்கும் பொதுப் பெயராயிருந்து, பின்னுல் மேற்றிராணிமார்களிலெல்லாம் விசேஷ மேற்றிராணியாராகிய திருச்சபைத்தலைவருக்குச் சிறப்புப் பெயராயிற்று.

மேற்றிராணிமார்கள்:— அர்ச். பாப்புவின்கீழ் "மேற்பார்வையிடுவோர்" (episcopoi) என்னும் பெயர்கொண்ட மேற்றிராணிமார்களிருந்தார்கள். இக்காலத்திற்போலவே அக்காலத்திலும் இவர்கள் ஏழைகள், விதவைகள், அநாதப்பிள்ளைகள் முதலியோரைக் கண்காணித்து வந்தார்கள். இவர்கள் தான் தர்மம் கொடுப்பார்கள். மேலும் பிரசங்கஞ்செய்வது இவர்களுக்கு உரித்தான அலுவலாம். நியமிக்கப்பட்டவுடன் மேற்றிராணியார் அர்ச். பாப்பானவருக்குத் தெரிவித்து அங்கீகாரம் பெறவேண்டும். இப்படியே முதல் நூற்றாண்டிலேயே திருச்சபை ஆளுகையில் ஒற்றுமை இருந்ததாய் முன்கூறப்பட்டுள்ளது.

குருக்கள்:—மேற்றிராணிமார்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்குக் கீழ்ப்படிந்து "மூத்தோர்" (Presbyteri) என்னும் பெயர் கொண்ட குருக்களிருந்தார்கள். தக்க வயதாகித்

தங்கள் நடத்தையில் சிறந்துள்ளவர்களே இவ்வந்தஸ்துக்குத் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாதலால் இவர்களுக்கு மூத்தோர் என்னும் பெயருண்டாயிற்று. குருக்களின் கீழ் டீக்கன்களும், சப்டீக்கன் களும், மற்ற ஒன்று முதல் நான்கு பட்டம் பெற்றவர்களும் இருந் தனர்.

**சன்னியாசிகளும், கன்னியாஸ்திரீகளும்:**—மேலும் இக்கா லத்திலேயே கிறிஸ்துவர்களில் அநேக ஆண்கள் தங்களுக்குள்ள எல்லாவற்றையும் துறந்து சன்னியாசம் பூண்டு கற்பை அநுசரித் துத் தபத்திலுஞ் செபத்திலுங் காலங் கழித்தார்கள். பெண்களி லும் அநேகர் கன்னியாஸ்திரிகளானார்கள். ஆகவே தற்காலம் நாம் பார்ப்பது போல அக்காலத்திலும் திருச்சபையின் அரசியல் முக்கியமான எல்லாவிஷயங்களிலும் திட்டப்படுத்தப்பட்டிருந்தது.

**கிறிஸ்துவர்களின் ஒழுக்கம்:**—கத்தோலிக்குத் திருச்சபை யென்பதற்கு அத்தாட்சியாகத் தரித்திரரும், வேலையாட்களும், அடிமைகளும், கிழவிகளும், அறிவீனர்களும், அறிவுள்ளவர்களும், ஆகப்பல அந்தஸ்துள்ளவர்களும் இதில் உட்பட்டிருந்தும் ஒரு வரையொருவர் அந்நியோந்நிய பக்ஷத்துடன் நேசித்து, நற்குண நற்செய்கைகளில் மேம்பாடுள்ளவர்கள் ஆனார்கள். வயதுக்குத் தக்கபடி சிலர் குழைந்தைகளும், சிலர் தகப்பன்மார்களும், சிலர் தாய்மார்களும், சகோதர சகோதரிகளுமாகி ஒரே குடும்பம்போன் றிருந்தார்கள்.

**தேவாராதனை:**—பிரதிதினமும் விசேஷமாய் ஞாயிற்றுக்கிழ மையிலும் பொதுவாய்க் கூடிச் செபித்தலே கிறிஸ்துவர்களின் முக்கிய அலுவல். முதலில் வீடுகளின் அசனசாலைகளிலும், பிறகு வேதகலகங்கள் அதிகரித்த காலங்களில் சமயம் வாய்த்த விடங்களி லும் கூடிவந்தார்கள். விசேஷமாய் மனிதர் சஞ்சாரமில்லாத குகைகளிலும் நிலச்சுரங்கங்களிலும் செபிப்பார்கள். இக்கூட் டங்களில் முக்கியமான செபம் திவ்ய பூசைப்பலியே. மேற்றிராணி யார் தற்காலம் பெரிய வியாழக்கிழமை செய்வது போல் பூசை

செய்வார். அவரில்லாத சமயத்தில் மட்டும் குருக்கள் பூசை செய்வார்கள். சுவிசேஷ முடிவில் மேற்றிராணியாரே பிரசங்கமும் செய்வார்.

பிரசங்கத்துக்குப் பின் ஞானஸ்நானம் பெருதவர்களை யெல்லாம் (Catechumeus) வெளியே அனுப்பிவிட்டுத் திருப்பலிதொடங்கும். ஜனங்கள் தங்கள் ஒற்றுமையையும் பிறர் சிநேகத்தையும் காட்ட ஆண்கள் ஆண்களுக்கும் பெண்கள் பெண்களுக்கும் முத்தம் கொடுப்பார்கள். தற்காலம் பெரிய பாட்டுப் பூசையில் குருக்கள் ஒருவரொருவரை இவ்விதம் முத்தங் கொடுப்பதை நாம் பார்க்கலாம். பின்னல் பலிக்குரிய 'தேவ வசீகர வார்த்தைகளைச்' சொல்ல அப்பமும் ரசமும் நமது திவ்விய கர்த்தரின் திருச்சரீரமாகவும் இரத்தமாகவும் மாறுபடும். அப்பால் பரமண்டல மந்திரஞ் சொல்லி பூசை செய்பவர் நற்கருணை உட்கொண்டு அங்குள்ள கிறிஸ்துவர்களுக் கெல்லாம் திவ்விய நற்கருணை கொடுப்பார்.

**தற்போது திவ்விய நற்கருணை அப்பரூபமாய் மட்டும் கொடுக்கக் காரணங்கள்:**—அக்காலத்தில் திவ்ய நற்கருணை அப்பத்தின் வழியாகவும்,ரசத்தின் வழியாகவும் கொடுக்கப்பட்டதுண்டு. இக்காலத்தில் அப்படியில்லை. ஏனெனில் நமது திவ்விய இரட்சகர் திருப்பலியை நிறைவேற்ற மோக்ஷத்திலிருந்து உயிருடன் வருகிறார். அவர் சரீரமும் இரத்தமும் தனித்தனி பிரிந்திருக்கிறதில்லை. ஆகையால் அவர் திருச்சரீரமாகும் அப்பத்தில் திரு இரத்தமும் இருக்க வேண்டுவது அவசியம். ஆனதினுல் அவரை அப்பத்தின் வழியாய் மட்டும் பெற்ருல் திவ்விய நற்கருணைக்குப் போதும். மேலும் திவ்விய இரத்தமாகிய இரசத்தை மனிதருக்குக் கொடுக்குங்கால் சுலபமாய்ச் சிதறிப்போகும். இது அவசங்கைக்குக் காரணமாகிறது. இன்னும் ஒரே பாத்திரத்தை அநேகர் வாயில் வைக்கிறதால் சில தொத்துவியாதிகள் சுலபமாய் ஒருவரிடமிருந்து மற்றவர்களையும் பிடிக்கும். இக்காரணங்களால் இப்போது தேவநற்கருணை ரசத்தின் ரூபமாக விசுவாசிகளுக்குக் கொடுக்கப்படுகிறதில்லை.

ரோமையர் கிறிஸ்துவர்களைப் பற்றி நினைத்த தப்பு எண்ணங்கள்:—ஒரு புதிய கூட்டமுண்டு, இவர்கள் பகிரங்கமாய்த் தேவர்களைத் துவேஷித்து அவர்கள் பீடங்களையும் தகர்க்கிற கெட்ட நாஸ்திகர். சேசுக்கிறிஸ்து ஓர்கால் ஓர்ராச்சியம் தங்களுக்கு அளிப்பார் என்று பிதற்றி செசார் ராயருக்காக செபம் செய்கிறதில்லை. இவர்கள் எவ்வித அக்கிரமங்களையும் செய்யும் துஷ்டர். உலகத்துக்கே விரோதிகளாகி மகா கொடூரச் செய்கைகளில் அமிழ்ந்தி மனிதரைக் கொன்று தின்னும் சண்டாளர். சட்டங்களுக் கஞ்சாமல் சூரியன் நாளாகும் ஞாயிற்றுக்கிழமை கூடி, மாபூசி தேகமுழுதும் ரூபமாறின ஓர் குழந்தையை அறுத்து இரத்தத்தைக் குடித்தபின் மாமிசத்தையும் புசிக்கிறார்கள். விக்கிரகங்களை வணங்கோம் என்கிறார்கள்; ஆயினும் குற்றவாளியாய் சிலுவையிலறையுண்டு அவமானமாய் மரித்த கிறிஸ்துவை வணங்குகிறார்கள். இவ்வளவு மூடத்தனம் போதாதென்று தாங்கள் மரித்த பின் உயிர்ப்போம் எனவும் சொல்லுகிறார்கள். தேவர்களுக்குப் படைத்த வஸ்துக்களை தின்கிறதுமில்லை, தேவர்களுக்கு மேலான ஜூப்பிட்டரை வணங்குவதுமில்லை. செத்தமனிதர் கல்லறையில் செபிக்கிறார்கள். இன்னும் எவ்வித கேவலமானவர்களையும், அக்கிரமிகளையும் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். இவர்கள் தங்கள் குருக்களிடத்தில் சென்று பாவசங்கீர்த்தனம் செய்தால் போதுமாம். இம்மாந்திரிய குருக்கள் தண்ணீரை இவர்கள் மேல் ஊற்ற, பாவமெல்லாம் நீக்கப்படுகிறதாம். இக்கிறிஸ்துவர்களெல்லாம் தாழ்ந்தவர்களான துணிநெய்வோரும், கயிறு திரிப்போரும், செருப்புத் தைப்போருமாம், என இவ்விதமாய்க் கிறிஸ்துவர்களை இகழ்வார்கள்.

## 2. வேத கலகங்களும் வேத சாட்சியங்களும்.

### 3-ம் வேத கலகம். கி. பி. 106.

இரண்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில் திரையான் ரோமை ராயனானான். இவனால் கி. பி. 106ல் மூன்றாம் வேதகலக முண்டாயிற்று. கலகமும் நீரோ, தொமிசியன் காலங்களில் நடந்தவண்

ணமே குரூரமாகி, ஓர் சமயம் அமர்ந்தும், பின் முன்னிலும் மிகக் கடுமைபாய் எழுந்தும், ராச்சியமுழுதும் பரவிற்று. கிறிஸ்துவர்கள் கிறிஸ்துவர்களாயிருப்பதின் பொருட்டே மடிக்கப்பட்டார்கள்.

இளைய பிளினியின் அபிப்பிராயம். ஆனால் ரோமையர் இவ் விஷயத்தைக் குறித்து என்ன நினைத்திருந்தார்களென அறிந்தால் மிக வியப்பாயிருக்கும். எப்படியெனில், ரோமையரில் மிகப் பேர் போன பாண்டித்தியமுள்ள "இளைய பிளினி" என்பவர் இச்சமயம் 'பித்தினியா' தேசத்தின் தேசாதிபதியாகி ராச கட்டளையை நிறைவேற்றக் கடமைப் பட்டுக் கிறிஸ்துவர்களிடத்தில் யாது குற்றமும் காணாது திரையான் மன்னனுக்குப் பின்வரும் நிருபம் எழுதினார், "நான் கிறிஸ்துவர்கள் நடத்தையைக் கவனித்தேன்; இவர்கள் ஓர்நாளில் சூரியோதயத்துக்கு முன் கூடி கிறிஸ்து வென்னும் தங்கள் கடவுளுக்குத் துதி பாடுகிறார்கள். இவர்கள் சர்வேசுரன் ஆணையால் குற்றமின்றியும், திருட்டுப் புரட்டு, வேசித் தனமின்றியும் நடப்பதுடன், வார்த்தை தவராது செய்த வாக்குத் தத்தத்தையும் சுமுத்திரையாய் நிறைவேற்றுகிறார்கள். இப்போது சர்க்காரால் நடத்தப்படும் ஏற்பாட்டால் ஆண் பெண் இருசாதியிலும் அநேகர் மடிவார்கள். ஏனெனில் பட்டணங்களில் மாத்திரமின்றி கிராமங்களிலும் இவ்வேதம் பரவியிருப்பதால் நமது தேவாலயங்களில் பூசை, பலி, முதலியன சரியாய் நடப்பதுமில்லை, பலிக்கு வேண்டியவற்றை ஒருவரும் வாங்கிக் கொடுப்பதுமில்லை. ஆயினும் கிறிஸ்துவர்கள் மேன்மையான நடத்தை உள்ளோராதலால் எவ்வித நியாயங்களால் இவர்களைத் தண்டிக்கிறதென்றும், அப்படியே மேலுத்தரவின்படி நடப்பினும், சிறுவர், சிறுமிகளையும் கூட வதைத்துக் கொல்லுகிறதோவென்றும், வேதத்தை மறுதலிக் கிறவர்களைத் தண்டியாது விட்டுவிட வேண்டாமோவென்றும், பல சந்தேகங்கள் உண்டாகின்றன. ஆகையினால் நான் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென மேலுத்தரவை எதிர்பார்க்கிறேன்."

கிறிஸ்துவர்களுடைய மேம்பட்ட ஒழுக்கத்தைக் குறித்து இக்கடிதத்திலும் வேறு சிறந்த அத்தாட்சி வேண்டுமோ? திரை

யான் இதற்குப் பதிலாக "நீ கிறிஸ்துவர்களைத் தேடாதே, உன் முன்னிலையில் கொண்டுவரப்பட்டுத் தங்கள் வேதத்தில் ஊன்றி யிருப்பார்களாயின் கொலைக்குத் தீர்ப்புச் செய்" என்று எழுதி யிருந்தான். இதில் கிறிஸ்துவர்களைத் தேடவேண்டா மென்றதால் இவர்கள் குற்றமற்றவர்களென நன்றாய்த் தெரிகிறது. ஏனெனில் குற்றவாளிகளைத் தேடிப் பிடித்துத் தண்டிப்பது சர்க்காரின் முக்கிய அலுவல். மேலும் கிறிஸ்துமதம் ரோமை நாடெங்கும் பரவியிருந்ததையும் பிளினி நிருபத்தால் அறியலாம்.

அந்தியோக்கியா அர்ச். இஞ்ஞாசியார்:—இக்கலைத்தில் வேத சாட்சிகளில் பேர்போனவர் அர்ச். அருளப்பர் சீஷரும் அந்தியோக்கியா பட்டணத்தின் மேற்றிராணியாருமாகிய அர்ச். இஞ்ஞாசியார். திரையான் பார்த்தியாவின்மேல் படையெடுத்து அந்தியோக்கியா சென்று கிறிஸ்துவர்களைத் தன் தேவர்களுக்குப் பலிகொடுக்க எண்ணி அர்ச். இஞ்ஞாசியாரைத் தன்னிட மழைத்து "ஓ! துஷ்டப் பசாசே! நீயோ என் கட்டளையை அநுசரியாது மற்றவர்களையும் வீணாக மடியும்படி தூண்டுகிறாய்" என்றான். அர்ச்சியசிஷ்டவர் "கடவுளை இருதயத்தில் வைத்திருக்கிற 'தியோபோரஸ்' என்னும் பெயருடைய என்னைத் துஷ்டப் பசாசு என யாரும் சொல்லத்துணியார்" என்று பதிலுரைத்தார். அப்பால் ராயன் "எனக்கு வெற்றிகளைக் கொடுக்கும் என் தேவர்கள் என் இருதயத்தில் இல்லை என நினைக்கிறாயோ" என்றான். அதற்கு இஞ்ஞாசியார் "நீர்வணங்கும் பசாசுகளைத் தேவர்கள் என்பது தப்பறை. பரமண்டலமும் பூமண்டலமும் அவைகளிலடங்கிய சகலமும் படைத்த சர்வேசுரனே கடவுள். அவருடைய ஏக குமாரனாகிய சேசுக்கிறிஸ்துநாதர் ஏற்படுத்திய திவ்விய ராச்சியத்தில் சேர்வதே என் ஆசை யொழிய, நீ வணங்கும் பசாசுகளை வணங்குவதில்லை" என்றார். இதன்மேல் அவர் இணங்கமாட்டாரென அறிந்த ராயன், ரோமாபுரியில் ஜனங்களின் காட்சிக்காக அவரைத் துஷ்ட மிருகங்களுக்கு இரையாக்கக் கட்டளை செய்தான்.

இஞ்ஞாசியார் வேதசாட்சி முடிபெறும் வரம் தமக்குக் கிடைத்ததற்கு மிக்க சந்தோஷமாகி "என் ஆண்டவரே! உமது பேர் போன அப்போஸ்தலராகிய அர்ச். சின்னப்பர் கட்டுண்ட சங்கிலிகளையே எனக்கும் தேவரீர் தயை புரிந்ததற்கு மிக்க வந்தனம்" என்று சொல்லிக்கொண்டு துரிதமாய்ச் சேவகருக்குத் தம்மைக் கையளித்தார். தன்னைத் தப்புவிக்க ரோமைக் கிறிஸ்துவர்கள் யாதோர் ஏற்பாடு செய்தால் தான் வேதசாட்சியாவது தடைபடும் என்று பயந்து, அப்படியவர்கள் செய்யாதிருக்க ஓர் நிருபம் எழுதினார். இவருக்கு நேர்ந்த செய்தி எங்கும் பரவவே கிறிஸ்துவர்கள் இவர் போகும் வழியெங்கும் கூட்டங் கூட்டமாய் வந்து சந்தித் தழுதார்கள். கடைசியாய் ரோமையர் நோன்பும், காட்சிகளும் முடிவு பெறும் கடைசித் தினத்தில், இவர் ரோமைக்குக் கொண்டுவரப்பட்டு கி. பி. 107ம் ஆண்டு டிசம்பர் 20ல் சிங்கங்களுக்கு இரையாகப் போடப்பட்டார்.

## அதிரையான் காலம்.

### அர்ச். சிம்பரோசா.

திரையான் மடிந்து அவன் தத்துப் புத்திரனாகிய அதிரையான் பட்டத்துக்கு வந்து கி. பி. 117 முதல் 138 வரையில் ஆண்டு வந்தான். இவன் திரையானிலும் மிகக் கொடியவனும், கேவல நடத்தையுமுள்ளவன். இவன் காலத்திலும் வேதகலகம் மும்முரமாய் நடந்து இரண்டு பாப்புமார்களும், அநேக மேற்றிராணிமார்களும், குருக்கள் கிறிஸ்துவர்களும் மடிக்கப் பட்டார்கள். இக்காலத்தின் வேதசாட்சிகளில் மிகச்சிறந்தோர் அர்ச். சிம்பரோசாவும், அவளது ஏழு குமாரருமாம்.

அதிரையான் ரோமைக்கு வெளியே ஓர் கிராமத்தில் நேர்த்தியான வீடமைத்து அதில் வசித்து வருகையில், அதே ஊரில் அர்ச். சிம்பரோசாவும் அவள் மக்களும் கிறிஸ்துவை வணங்குவது தேவர்களின் கோபத்தை அதிகரிக்கும் என, குருக்கள் ராயனு

க்குச் சொல்லவே, இவன் சிம்பரோசாவையும் அவள் மக்களையும் வரவழைத்து, முதலில் சாதுரிய வசனங்களால் வெல்ல நினைத்தான். ஆனால் இப்பெண்ணுத்தமி "என் கணவரும், அவர் சகோதிரரும் உமது தேவர்களுக்குப் பூசை புரியாததால் பலவிதமாய்க் கொல்லப் பட்டார்கள், நாங்களும் அப்படித்தான்" என்றாள். ராயன் கோபங்கொண்டு "நீயும் உன் மக்களும் என் தெய்வங்கட்குப் பூசை செய்யாவிடில் உங்களை அவர்கட்குப் பலியிடுவேன்" எனப்பயமுறுத்தினன். இம்மாதோ தைரியமாய் "உமது தேவர்கள் எங்களைப் பலியேற்க வல்லவரல்லர். ஆனால் சேசுக்கிறிஸ்துவுக்காய் நாங்கள் வெந்தால் அத்தேவர்களுக்கு இப்போதிருக்கும் நரகாக்கினை இன்னும் அதிகப்படும் என்று உணரும்" எனப் பதிலுரைக்கவே, இம்மாதைக் கோயிலுக்குக் கொண்டுபோய்க் கன்னத்திலறைந்து தலைமயிரைப் பிடித்துத் தூக்கிக்கட்டி உதைத்தபின், கழுத்தில் ஓர் பெரிய கல்லைக்கட்டி ஆற்றில் தள்ளினார்கள். அடுத்த நாள் ஏழு மக்களையும் அழைத்து எவ்வித பிரயாசையும் முடியாதது கண்டு, அவர்களையெல்லாம் கழுவேற்றினார்கள். இக்கழுமரங்களில் தொங்கும் போதும் ஒருவரையொருவர் திடப்படுத்திக் கொள்ளுவதைக்கண்டு சகிக்கக் கூடாதவனாய் ராயன் இவர்களைக் கொலைசெய்யக் கட்டளையிட, இவர்கள் பலவிதமாய்க் கொல்லப்பட்டார்கள்.

இவ்விதமாய் அதிரையான் ஆளுகையெல்லாம் கலகம் நடந்து, கடைசி இரண்டு வருஷமட்டும் சில கவர்னர்கள் எழுதிக் கொண்டதின் மேலும், கிறிஸ்துவர்களுக்குள்ளே சிலர் தோன்றி சர்க்கார் செய்யும் அநியாயங்களை எடுத்துக்காட்டி கண்டனம் செய்ததாலும் சற்று அமர்ந்தது.

அதிரையான் இறந்து அவன் தத்துப் புத்திரனாகிய அந்தோனைனஸ் பியுஸ் பட்டத்துக்கு வந்தான். இந்த ராயன் ரோமை அரசர்களிலெல்லாம் மிகக் சாதுவெனப் பெயர் பெற்றவன். ஆயினும் அஞ்ஞானம் மிகுந்தவன். இவன் சுபாவத்தில் சாதுவாயினும் தன் குருக்கள் கிறிஸ்துவர்களுக்கு விரோதமாய்ச் சொல்லிய

வற்றைத் தடுக்காது ரோமை அதிகாரி புப்லியுஸ் என்பவனுக்குக் கிறிஸ்துவர்களைக் கையளித்தான்.

## அர்ச். போலிக்கார்ப்பு கி. பி. 155.

சின்ன ஆசியாவின் முக்கிய பட்டணமாகிய ஸ்மிர்ணவில் அர்ச். போலிக்கார்ப்பு இச்சமயம் மேற்றிராணியாராயிருந்தார். அங்கே நடந்த கொடுமை சொல்ல முடியாது. கிறிஸ்துவர்களை அடித்த அடிகளால் சதைமுழுதும் கிழிந்து எலும்புகளும், நரம்புகளும் இரத்தநாடிகளும் நன்றாய்த் தெரியும். பார்த்த ஜனங்கள் பரிதாபப் பட்டாலும், வேதசாட்சிகள் தங்கள் துன்பத்தை எவ்விதமும் காட்டாது, சர்வேசுரனிடத்தில் செல்லும் எண்ணமே நிறைந்து சரீரத்துக்கு மரித்தவர்களைப் போலிருந்தார்கள்.

அர்ச். போலிக்கார்ப்பு வயோதியானதால் கிறிஸ்துவர்கள் வேண்டுகோளின்படி பட்டணத்துக்கு வெளியே சென்று வசித்தார். ஆயினும் பகையாளிகள் அங்கும் சென்று அவரைப் பிடித்து ஓர் கழுதை மேலேற்றிப் பட்டணத்துக்குள் கொண்டு சென்றார்கள். இரண்டு உத்தியோகஸ்தர்கள் எதிர்வந்து "செசார் ராயனை தெய்வமென ஏற்றுக்கொண்டு தேவர்களுக்குப் பலி கொடுக்கிறதில் என்ன விக்கினம்?" என, இவர் "நீங்கள் கேட்பதை ஒருபோதும் நிறைவேற்றேன்" என்று பதிலுரைத்தார். உடனே இவரை வசைகள் பேசிக் கீழே தள்ள இவருக்கு ஓர் கால் ஒடிந்தது. அப்பால் ஜனங்கள் கூடியிருக்கும் காட்சிசாலைக்குக் கொண்டு சென்றார்கள். அதிகாரி இவரை நோக்கி "நீர் மிக வயோதியாயிருக்கிறீர், ஆகையால் குரூர சாவினின்று தப்பிக்க கிறிஸ்துவை மறுத்தால் நான் சும்மா விட்டுவிடுவேன்" என்றான். இவர் "நான் 86 வருஷம் கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்தேன்; அவர் என்னை ஒருபோதும் கைவிட்டதில்லை. அப்படியிருக்க எவ்விதம் நான் அவரை மறுதலிக்கிறது. ஓர் நாள் இன்னும் எனக்கு நீர் தயை செய்தால் உம்மையும் என் மதத்தினுடைய உண்மையை அறியச் செய்வேன்" என்று பதிலுரைத்தார். அதிகாரி கோபித்துச் சீறி எழுந்து

"நான் உம்மை மிருகங்களுக்கு இரையாக்கக் கூடுமென அறியாயோ?" என, இவர் "அவைகளை இங்கே அழையும்" என்று பதில் சொன்னார். அப்பால் அவன் "மிருகங்களுக்கு நீர் பயப்படாவிடில் நெருப்புக்கு உம்மை இரையாக்குவேன்" என்று பயமுறுத்தினான். பயமுறுத்தலுக்கு அஞ்சாத இவர் "நீர் சொல்லும் தீர்வை ஓர் மணி நேரத்தில் தீரும், ஆனால் துஷ்டர்களுக்கு வரவிருக்கும் நரகத் தீர்வையின் நெருப்பு ஓயாதென அறிந்து கொள்" என்றார்.

இதற்குள்ளாக ஜனங்கள் "இவர் ஆசியாவின் போதகன். நம் தெய்வங்களை அழித்தவர் இவரே; ஓர் சிங்கத்தை இவர்மேல் பாய விடும்" எனக் கூவினார்கள். பின்னும் மிருகங்களின் சண்டை முடிந்ததாகக் கண்டு இவரை உயிருடன் நெருப்பில் வேகச் செய்ய வேண்டுமென இரைத்தார்கள். அதிகாரி அப்படியே தீர்ப்புச் செய்யப் பலரும் குதூகலித்துப் பலவிடங்களிலும் சென்று விறகு கொண்டுவந்து, பெருநெருப்பு மூட்டவே இப்புண்ணியவான் தம் உடுப்பைக் களைந்துவிட்டு நெருப்பண்டை சென்றார். கொலையாளர் இவர் தப்பித்து ஓடாவண்ணம் ஓர் மரத்தில் இவரைக்கட்டத் தொடங்க, "இது அவசியமில்லை,நான் இத்துன்பம் அநுபவிக்கத் திடங் கொடுக்கும் கர்த்தர் நெருப்பிலிருந்து வேகவும் கருணை செய்வார்" என்றார். ஆயினும் அவர்கள் இவர் இருகரங்களையும் பின்னாகப் பிடித்துக் கட்டினார்கள். இச்சமயத்தில் சர்வேசுரன் ஓர் புதுமை செய்யச் சித்தமாக, நெருப்புச் சுவாலை நாற்புறமும் இவரைச்சுற்றி எரிந்ததன்றி இவரைத் தாக்கிச் சுடவில்லை. நெருப்பிலிட்ட தங்கம், வெள்ளி, பழுக்கச் சிவந்து ஜொலிப்பது போல் ஜொலித்துக் கொண்டிருந்தார். மேலும் தூபமிட்டது போல் ஓர் சுகந்த பரிமளமும் எங்கும் வீசியது. அஞ்ஞானிகள் இதுகண்டு இவரை வாளால் வெட்டிக் கொன்று சரீரத்தை அந்நெருப்பிலே சுட்டார்கள்.

## 4-ம் வேத கலகம். கி. பி. 161—180.

அந்தோனேனஸ் பியுஸுக்குப்பின் மார்க்குஸ் ஔரீலியுஸ் கி. பி. 161 முதல் 180 வரையில் ஆண்டான். இவன் ரோமை

அரசர்களிலெல்லாம் சிறந்த சாஸ்திரி எனப்பேர் எடுத்தவன். ஆனால் இவன் சாஸ்திரத்தினால் கிறிஸ்துவர்களுக்கு யாது நன்மையும் உண்டாகவில்லை. "கிறிஸ்துவர்களைப் பிடித்துத் தேவர்களுக்குப் பூசை செய்யச் சொல்லுங்கள், அவர்கள் அது செய்யாவிடில் பலவித துன்பங்களைச் செய்து கொல்லுங்கள்" என்று தன்ராச்சியம் எங்குமுள்ள அதிகாரிகளுக்கு இவன் கட்டளை செய்தான்.

## அர்ச். ஆனந்தம்மாள் கி. பி. 162.

இக்காலத்தில் அர்ச். சிம்பரோசாவும் அவள் எழுமக்களும் போலவே, அர்ச். ஆனந்தம்மாளும், அவள் எழுமக்களும் மிக வயிராக்கியம் உள்ளவர்களாய் இருந்தார்கள். அதிகாரி அவர்களை வரவழைத்துத் தாயைத் தனியே கூப்பிட்டு தன் மக்களுக்காவது இரங்கி தேவர்களுக்கு வணக்கம் செய்யச் சொன்னான். அவளும் "பயமுறுத்துதற்கு நான் அஞ்சுகிறதில்லை, இச்சமயம் படவேண்டிய துன்பங்களைப் பொறுமையுடன் அநுபவிக்க ஆண்டவர் எனக்குத் திடங்கொடுப்பார்" என்றாள். அதிகாரி சீறி எரிந்து "நீச ஜென்மமே! சாவு உனக்கு இனிமையாயினும் உன் பிள்ளைகளாவது அதுக்குத் தப்பிப்பதை நீ தடுக்காதே" எனவே, "உன் தேவர்களை வணங்காவிடில் என் மக்கள் பிழைப்பார்கள், அவர்களை வணங்கினால் நித்திய ஆக்கினைக்கு உட்படுவார்கள்" என இம்மாது பதிலுரைத்தாள். அதிகாரி அன்று அமர்ந்திருந்து மறுநாள் தேவாலயத்துக்கு இவர்களைக் கொண்டுவரச் செய்து, தாயை நோக்கி "பாவியர்களான உன் மக்கள் ராச்சியத்தில் பெரிய உத்தியோகம் பெற்று மேன்மையாய் வாழலாம்; ஆகையால் அவர்கள் க்ஷேமத்துக்காவது ராயர் கட்டளைக்குக் கீழ்ப்படிவாய்" என்றான். இப்புண்ணியவதி "நீர் கேட்கும் இவ்விரக்கம் குரூரமின்றி இரக்கமல்ல; அநித்திய சாவுக்குப் பயந்து நித்திய கேட்டுக் குள்ளாகத்தான் இவ்விரக்கம்" என்று பதிலுரைத்து, தன்மக்களைப்பார்த்து "மோக்ஷத்திலிருக்கும் நம் கர்த்தரை நோக்கிப் பாருங்கள், அவரது கருணையால் பசாசுடன் சரியான போர் புரிவீர்" என்று அவர்

களைத் திடப்படுத்தினள். உடனே அதிகாரி இம்மாதை அப்புறப் படுத்தி மக்களை ஒவ்வொருவனுக் கூடியவரையில் வேதத்தை மறுக்கச் சொல்லியும் கூடாமையால், எழுபேரையும் பற்பல விதமாய்க் கொன்றான். இம்மாது நான்கு மாதம் சிறையிலிருந்து பின் தலை வெட்டுண்டாள்.

## ஜஸ்தின் ஞானி கி. பி. 163.

இதே காலத்தில் 'ஜஸ்தின்' எனப் பேர்கொண்ட ஓர் சிறந்த ஞானி இருந்தார். இவர் நெயாப்பொலி பட்டணத்தில் பிறந்து கல்வி கேள்விகளில் தேர்ந்து அஞ்ஞான சாஸ்திரிகள் போதிக்கும் போதனையால் திருப்தியின்றிச் சத்தியத்தைத் தேடிச் சுவிசேஷத்தை வாசித்தும், கிறிஸ்துவர்களின் மேலான நடத்தையைக் கண்டும் மனந்திரும்பி, அஞ்ஞானிகளுக்கு விரோதமாய் அநேக தர்க்கங்களைச் செய்து, தர்க்க நூல்களும் எழுதினார். கிறிஸ்துவர்களைச் செய்யும் கொடுமையைக்கண்டித்து ரோமையருக்கு இரண்டு நிருபங்கள் அனுப்பினார். இந்நிருபங்களே இவர் சாவுக்குக்காரணமாயின. இவர் எழுதியதாவது:- "ரோமையரே! நாங்கள் இரகசியத்தில் அருவருப்பான குற்றங்களைச் செய்கிறதாய்ச் சொல்லுகிறீர்கள். ஆனால் நாங்கள் வெறுக்கும் இவ்வினைச்செயல்களை நீங்களே பகிரங்கமாய்ச் செய்கிறீர்கள்; இவற்றை நற்செயல்களென்றும் புகழ்ந்து வருகிறீர்கள். ஆகையால் அநியாயமாய் நீங்கள் சாற்றும் இக்குற்றங்களை நாங்கள் செய்தோமென்றாலும், உங்களைக்கண்டு பாவித்து புண்ணியம் செய்தோம் எனச் சொல்லக் கூடாதோ? நாங்கள் சிறு குழந்தைகளை இரகசியத்தில் கொன்று பலியிடுவதாய்ப் பொய் சொல்லுகிறீர்கள். ஆனால் நீங்கள் சனி என்னும் தேவனுக்கு இப்பலியை எல்லோரும் அறியச் செய்கிறீர்கள். நாங்கள் கற்புக்கு விரோதமான பாவங்களைச் செய்கிறதாய்க் குற்றம் சாட்டுகிறீர்கள். ஆனால் நாங்கள் உங்கள் தேவர்களைக் கண்டு பாவிக்கிறோம் என்று சொல்லக்கூடாதோ? ஆயினும் உங்களைப் போலின்றி இவ்வக்கிரமங்களைக் கண்டித்து இவற்றிற்கு விரோதமான புண்ணியங்களை நாங்

கள் செய்வதினாலல்லவா எங்களை இவ்விதம் உபாதிக்கிறீர்கள்? எங்கள் மதம் உண்மையான மதமில்லையேல் கணக்கில்லாத பேர் அதற்குத் தலை கொடுப்பார்களோ? சாக்ராத்திஸ் என்னும் பேர் போன உங்கள் சாஸ்திரியின் போதனையை அநுசரிக்க உங்களில் எத்தனை பேர் மரணத்துக்குத் துணிவார்கள்? நான் எழுதுகிறதால் எனக்குச் சாவுவரும் என அறிவேன். ஆயினும் நான் அதற்குப்பயப்பட்டேனில்லை, என்று இவ்விதமாய் அஞ்ஞானிகளைக் கண்டித்தார்.

இவர் நினைத்த வண்ணம் பகையாளிகள் இவரையும் இவர் சீஷர்களில் சிலரையும் சிறைப்படுத்த, ரோமையதிகாரி "ராயனுக்குப் பணிந்து என் தேவர்களுக்கு வணக்கம் செய்" என, "சற்றும் நீதியுள்ள எவனும் கிறிஸ்துநாதருடைய கற்பனைகளை அநுசரிக்கிறவர்களை வதையான்" என்று பதிலுரைத்தார். அதிகாரி "உமது கொள்கை என்ன" என்க, "நான் எல்லாக்கொள்கைகளையும்,பார்த்த பின் கிறிஸ்துமதக் கொள்கைகளே சரியெனக் கொண்டிருக்கிறேன்" என்றார். அதிகாரி "நீங்கள் அநுசரிக்கும் கொள்கைகள் என்னவென," இவர் "பரலோகமும் பூலோகமும் அவற்றிலடங்கிய சகலமும் படைத்தவர் 'பிதா' என்றும், அவரது ஏகபுத்திரன் தீர்க்கதரிசிகளால் உலகுக்கு அறிவிக்கப்பட்டு இரக்ஷணியத்தின் இருப்பிடமும் அதைப் போதிப்பவருமாகி, உலகுக்கெல்லாம் தீர்வை செய்யும் ஏக சக்கரவர்த்தி எனக் கொண்டிருக்கிறோம்" என்றார். அதிகாரி "நீங்கள் எங்கே கூடுகிறீர்கள்" என, "எங்கு சமயம் வாய்த்ததோ அங்கு கூடுவோம். எங்கள் கடவுள் ஓரிடத்தில் அடைக்கப்பட்டின்றி எங்கும் பரவிய அரூபியானதால் எவ்விடத்தும் அவரை வணங்கலாம்" என்றார். என்றலும் அதிகாரி "நீ மிக்க சாதுரியமாய்ப் பேசுகிறாய். ஆனால் உன்னைக் கசைகளால் உச்சிமுதல் உள்ளங்கால் பரியந்தம் அடித்துச் சின்னபின்னம் செய்த பின், நீ மோக்ஷத்துக்கு ஏறிப் போகக்கூடுமென நினைக்கிறாயோ?" என்று கேட்டான். ஞானியானவர் "நான் நினைக்கிறது மாத்திரமல்ல, இவ்விஷயத்தில் உறுதியாய் இருக்கிறேன்; ஏனெனில் கர்த்தர் இவ்விதமாய் வாக்கு கொடுத்திருக்கிறார், என்று அறியும்" எனச்

சொல்ல, அதிகாரி இவரையும் இவர் சீஷர்களையும் கொடுமையாய் அடித்து தலைவெட்டக் கட்டளைசெய்தான்.

## அர்ச் செசீலியம்மாள்.

இவ்வுத்தமி ஓர் சிறந்த குடும்பத்தில் பிறந்தவள். குளிக்கும் சிற்றறையிலேயே காற்றின்றிச் சாகும்படி அடைக்கப்பட்டு புதுமையாய்ச் சாகாமலிருந்து, பின்னர் தலைவெட்டப்பட்டும், சட்டப்படி மூன்று வெட்டினால் தலை அறுபடாது, மூன்று நாள் கொடிய அவஸ்தைப்பட்டு மரித்தாள்.

## பேரிடி வருத்திய சேனை கி. பி. 174.

இதற்குப் பின் புதுமையான ஓர் சம்பவம் நடக்கவே கிறீஸ்துவர்களின் துன்பங்களும் சற்றுத் தணிந்தன. மார்க்குஸ் ஓர் தேசத்தின்மேல் படையெடுத்து வரட்சியான ஓரிடத்தில் பகைவரால் சூழப்பட்டதுமன்றி, தன் சேனைக்குக் குடிக்கத் தண்ணீருமின்றி அவஸ்தைப்பட, ராணுவத்திலிருந்த கிறிஸ்து சேவகர் சுவாமியை நோக்கிப் பிரார்த்தித்தனர். க்ஷணத்தில் மேகங்கள் கூடிப் போதுமான மழைபெய்ய இவர்கள் தாகந்தீர்ந்தார்கள். பகைவர் இச்சமயங்கண்டு இவர்களை நெருங்கித் தாக்க, மழையுடன் பேரிடிகளும், ஆலங்கட்டிகளும் அவர்கள் பக்கம் விழவே ரோமையர் ஜெயமடைந்தனர். ஆயினும் ராயன் மனந்திரும்பவில்லை.

## 5-ம் வேத கலகம் கி.பி. 193—211.

இவன் இறந்து இவன்மகன் கொம்மோதுஸ் 192வரை ஆண்டான். இவன் சுபாவமாய்க் குரூர சிந்தனை உள்ளவனாயினும், கிறிஸ்துவர்களை அதிக வாதை செய்யவில்லை. இவனுக்குப் பின் செப்திமுஸ் செவெருஸ் என்பவன் கி. பி. 211 வரை ஆண்டான். இவன் முதலில் கிறிஸ்துவர்கள் மட்டில் நல்ல எண்ணமுடையவனாய்த் தன் மகனையும் ஓர் கிறிஸ்துவனால் கல்விகற்பிக்க ஏற்பாடு செய்தான். ஆயினும் இவன் நல்லெண்ணம் நெடுநாள் நீடித்திருக்க

வில்லை. கிறிஸ்துவர்களைக் கொல்ல இவனும் ஓர் கட்டளை பிறப்பித்தான். பிராஞ்சு தேசத்தின் தெற்கிலுள்ள லையான்ஸ் பட்டணத்தில் மட்டும் இருபதினாயிரம் பேருக்கு மேல் மடிந்தார்கள் என்றால், சோமை நாடெங்கும் எத்தனை லக்ஷம் பேர் மடிந்திருப்பார்கள் என யோசித் தறியலாம்.

## அலெக்சாந்தர் செவெருஸ் கி. பி. 222—235.

இவன் மிகநல்லவன். ஓர் வேத சாஸ்திரியால் வளர்த்தப் பட்டவன். பிறர் நம் விஷயத்தில் எவ்விதம் ஒழுகவேண்டுமென நாம் விரும்புவோமோ அவ்விதமே நாமும் அவர்கள் விஷயத்தில் ஒழுக வேண்டும், என்று அடிக்கடி சொல்லி வருவான். கிறிஸ்துவர்களுக்கு மேலான உத்தியோகங்களும் கொடுத்தான். சேசுக் கிறிஸ்துநாதர் பேருக்கு ஓர் ஆலயங்கட்டவும் எண்ணியிருந்தான். ஆனால் ராயன் நல்லவனெனினும் தேச சட்டம் கிறிஸ்துவர்களுக்கு விரோதமானதால், இக்காலத்திலும் வேதத்துக்குத் தலை கொடுத்தோர் அநேகர்.

## 6-ம் வேத கலகம் கி. பி. 235—38.

செவெருஸ் ராயனுக்குப்பின் மாக்சிமின் பட்டத்துக்கு வந்து ஆறும்கலகஞ் செய்தான். இக்கலகத்தில் இரண்டு பாப்புகள் வேத சாட்சியானார்கள்.

## 7-ம் வேத கலகம் கி. பி. 249—51.

இக்காலத்தில் தேசியுஸ் என்னும் ராயனிருந்தான். இவன் மிகக் கொடியவனானதால் இவன் காலத்திலும் பலவாயிரக் கணக்கான பேர் இறந்தார்கள். அர்ச். ஆகத்தம்மாள் இக்கால வேத சாட்சி.

## 8-ம் வேத கலகம் கி. பி. 253—260.

தேசியுஸ் இறந்து, வலேரியன் பட்டத்துக்குவந்து கி. பி. 257 வரை கிறிஸ்துவர்களை துன்புறுத்தாதிருந்து, பின் ஓர் புதிய கட்

டளை செய்தான். அர்ச். சிக்டஸ் பாப்பு ஓர் கல்லறையில் பூசைசெய்யும் நேரத்தில் சிறைப்பட்டுப் போகையில், லௌரேஞ்சியார் என்னும் அதிமேக்கன் பின் சென்று "என்னை விட்டுப் போகிறீரே" என்று விசனப்பட, பாப்பு "எனக்குப்பின் மூன்றுநாளில் வேதசாட்சியாவீர். அதற்குள் நாம் சேர்த்து வைத்திருக்கும் திரவியத்தை அஞ்ஞானிகள் கைக்கொள்ளாதபடி ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடும்" எனக் கட்டளையிட்டார். அர்ச். பாப்புவைத் தலை வெட்டிவிட்டு லௌரேஞ்சு மேக்கனைப் பிடித்துவந்து, அதிகாரி "உங்கள் வசத்தில் பொன், வெள்ளிப் பாத்திரங்களும், வெள்ளி நாணயங்களும் இருப்பதாகத் தெரியவருகிறது. இவற்றைச் சக்கரவர்த்திக்குக் கொடுத்து விடவேண்டும்" என்றான். லௌரேஞ்சியார், "எனக்குப் போதுமான சமயங்கிடைத்தால் அவையெல்லாம் ஒழுங்கு செய்வேன்" என, இதற்காக மூன்று நாள் கட்டளையிட்டான். உடனே இவர் பட்டணமெங்கும் சென்று கூன், குருடு, முடம், குஷ்டம், முதலிய குறை உள்ளோரையும் கிழவர் கிழவிகளையும், இன்னும் ரோமையால் கைவிடப்பட்டு திருச்சபையால் உதவி செய்யப்பட்ட ஏழைகளையும் திரளாய்க் கூட்டி அதிகாரிக்கு அறிக்கை செய்து "நீர் விரும்பும் பொன் உபயோகமில்லாத பொருள். இவர்களோ வெளியில் அவலக்ஷணமாயினும் நித்திய வெளிச்சம் மனதில் கொண்டவர்கள். இவர்களே திருச்சபையின் சிறந்த இரத்தினங்கள். இத்திரவியத்தைப் பெற்று அநுபவியும்" என்றார். உடனே பழுக்கக் காய்ச்சின இரும்பைக் கொணர்ந்து அதன்மேல் இவரைக் கிடத்திச் சுட்டார்கள். இவ்விதமாய் இவர் சற்றுநேரம் அவஸ்தைப்பட்டு அதிகாரியை நோக்கி "என்னைக் கிடத்திய பக்கம் நன்றாய்ச் சுடப்பட்டிருக்கிறது, மற்ற பக்கம் திருப்புங்கள்" என, அவனும் அப்படிக்கட்டளை செய்தான். சற்றுப் பொறுத்து "என் சதையெல்லாம் சரியாய்ச் சுடப்பட்டது; இதை எடுத்துப் புசியுங்கள்" என்றார். பின் அர்ச். இராயப்பர் சின்னப்பர் இரத்தம் விதைக்கப்பட்ட ரோமையை மனந்திருப்பச் சர்வேசுரன் சித்தமாக என்று உரக்கச் செபித்து மரித்தார்.

## 9-ம் வேத கலகம் கி. பி 274.

வலேரியன் பாரசிகருக்கு விரோதமாய்ச் சென்று தோற்றுக் கைதியாக்கப்பட்டான். அப்பால் அநேக வருஷம் ரோமையில் ராச கலகம் உண்டாகி எங்கும் அக்கிரமம் மிகுந்தது. கடைசியாய் கி. பி. 270ல் ஔரேலியன் ராயனாகி கி. பி. 274ல் கிறிஸ்துவர்களை வதைக்கச் சட்டம் பிறப்பித்தான். இவன் 8 மாதத்தில் மரிக்க, பின் ரோமை நாடெங்கும் ஒற்றுமையின்றி திரும்பவும் கலகம் எழும்பிக் கடைசியில் தியோக்கிலேசியன் பட்டத்துக்கு வந்தான்.

## தியோக்கிலேசியன் கி.பி. 284

## 10ம் வேத கலகம். கி.பி. 288—313

இவன் மாக்ஸிமியன் எர்க்குலிஸ் என்னும் கொடியவனைத் தன்னுடன் சேர்த்தினான். இக்காலத்தில் ரோமையருடைய ஓர் பட்டாள முழுதும் கிறிஸ்துவர்களாதலால், ராயர்களும் கிறிஸ்துவர்கள் மட்டில் நல்ல அபிப்பிராயங்கொண்டு சற்று மதித்துவந்தார்கள். ஆகையால் சேவகத்தில் அமையும் கிறிஸ்துவர்கள் ராசாவுக்கு உண்மையாய் ஊழியஞ் செய்வோமென்று செய்யும் சத்தியத்தில் வேத விரோதம் ஒன்றும் இன்றிச் செய்யப்பட்டது. ஆனால் மாக்ஸிமியன் மிகக் கொடியவன் ஆகையால், இதை அநுசரியாது இக் கிறிஸ்துவர்கள் அடங்கிய பட்டாளத்தை காலியருடன் சண்டைக்கு இட்டுச்சென்று தன் தேவர்களின் முன் சத்தியம் செய்யக் கட்டளையிட்டான். இவர்கள் அதற்குச் சம்மதியாததால் பட்டாளம் முழுதும் கத்திக் கிரையாக்கினான்.

## அர்ச்: செபஸ்தியார் கி. பி. 288.

இக்காலத்தில் அர்ச். செபஸ்தியார் அரண்மனைக் காப்புச் சேவகரின் தலைவராயிருந்தார். இவர் வேதத்தில் மிக்க வயிராக்கியங் கொண்டு சிறையிலிருப்பவரை விசாரிப்பதும் கோழையானவர்களைத் தேற்றுவதும் அன்றி, அநேகம் அஞ்ஞானிகளையும் மனந்திருப்

பினர். ரோமை அதிகாரியையும் மனந்திருப்ப அவன் வீட்டிலே யே அர்ச். பாப்புவும் பூசை செய்து வந்தார். இதைக் கேள்வியுற்ற மாக்ஸிமியன் கிறிஸ்துவர்களை மறுபடியும் அழிக்க ஏற்பட்டான். அநேகரைக் குரூரமாய்க் கொன்றபின், அர்ச். செபஸ்தியார் தியோக்கிலேசியனுக்கு முன்னால் கொண்டு வரப்பட்டு ராசதுரோகம் என்னும் குற்றஞ் சாட்டப்பட்டார். அதற்கு அர்ச்சியசிஷ்டவர் "நான் ராயருடைய ஊழியத்தில் எப்போதும் நுணுநுணுக்கமாய் இருந்ததுமன்றி அவர் நன்மைக்காகவும் செபித்து வந்திருக்கிறேன். ஆயினும் கல்லினாலும் மரத்தினாலும் செய்யப்பட்ட விக்கிரகங்களை வணங்குவது தப்பெ‌ன அறிந்து மோக்ஷத்திலிருக்கும் 'பிதாவுக்கும்' அவர் சுதனாகிய 'சேசுவுக்குமே' என் செபங்களை செய்து வந்தேன்" என்றுரைத்தார். ராயன் கடுந்து வில்லாளிகளை அழைத்து, இவரை ஊருக்கு வெளியில் அம்பாலெய்து கொல்லக் கட்டளையிட, அவர்கள் அப்படியே இவர் தேகத்தை ஊடுருவச் செய்து மரித்தாரென்று விட்டுப் போனார்கள். ஆனால் இவர் மரிக்கவில்லை. ஓர் விதவை இவரை அரண்மனைக்குள் இருந்த தன் வீட்டுக்குத் தூக்கிச் செல்ல, சில நாள் பொறுத்துச் சுகப்பட்டுப் பார்த்தோர் வியக்க ராசவாயிற் காப்போருடன் போய் இருந்தார். இதைக் கண்ட ராயன் மிகக் கோபித்து இவரைக் கடினமாய் அடித்துக் கொல்லும்படி ஆக்கியாபித்தான். இப்படியாய் கி. பி. 288 ல். இவர் வேதசாட்சியானார்.

## அர்ச். ஆஞ்ஞெஸ் கி. பி. 304

இக்காலத்தில் தான் சிறு பிராயமுள்ள அர்ச். ஆஞ்ஞெஸ் என்னும் புண்ணியவதி வேதசாட்சியானது. இவள் பேர்போன ஓர் குடும்பத்தில் பிறந்து அழகிற் சிறந்து அநேகர் மணம்புரிய வந்தும், அவர்களை மறுத்துக் கன்னிகையாயிருந்தாள். இவளால் தள்ளுண்ட ஒருவனால் காட்டிக்கொடுக்கப்பட்டு நீதி அதிகாரியின்முன் கொண்டுவரப்பட்டாள். அதிகாரி இவளைப் பயமுறுத்த எண்ணிக் கொலைபுரியும் ஆயுதங்களையெல்லாம் இவள்முன் சேர்த்து நெருப்பும் மூட்டுவித்தான். ஆனால் இவற்றிற்குப் பயப்படுகிறதில்லை என

அறிந்து; தங்கள் தேவதைக்குத் தூபம் கொடுக்கும்படி இழுத்துப் போனார்கள். ஆனால் இம்மாது சிரோமணி சிலுவை வரைய மாத்திரமே கையைத் தூக்கினாள். இது கண்ட அதிகாரி இவளைத் துஷ்டர்கள் இருக்குமிடத்துக்கு அனுப்பிக் கெடுப்பேனென்று பய முறுத்தினான். இம்மாதோ "நீ என் இரத்தத்தைச் சிந்தலாம், ஆனால் என் சரீரத்தை எவ்வித அவசங்கையும் செய்யமுடியாது; ஏனெனில் ஆண்டவர் தன் அடியாளின் கற்பை எவ்விதத்திலும் காப்பார்" என்றனள். அதிகாரியும் தான் சொல்லியபடி செய்ய துஷ்டர்கள் இம்மாதை அணுகிவந்து பார்த்தவுடனே மிகுந்த மரியாதை செய்து நின்றார்கள். ஒருவன் மாத்திரம் துணிந்தவனாய்ப் பக்கத்தில் நெருங்கியதும் கண் கெட்டுச் செத்தவன்போல் விழுந்தான். இம்மாது மனமிரங்கி இவனுக்காகச் சர்வேசுரனைப் பிரார்த்திக்க இவனும் கண்ணைப் பெற்றுச் சென்றான். இம்மாதைத் தலைவெட்டுண்டு இறக்க அதிகாரி கட்டளை செய்தான்.

## வேதசாட்சிகளின் காலம்.

தியோக்கிலேசியன் கிறிஸ்துவர்கள் மட்டில் பொதுவாய் நல்ல எண்ணம் உடையவனாயினும் கி. பி. 303 ல் கலேரியுஸ் என்னும் கொடியனால் மிக்க வற்புறுத்தப்பட்டுக் கடைசியாய் ஓர் சங்கம் கூட்டினான். அச்சங்கத்தார் கிறிஸ்துவர்களை மடிப்பதே சரியெனத் தீர்மானித்தார்கள். அப்பால் தியோக்கிலேசியன் கிறிஸ்துவர்களுடைய கோயில்கள் இடிக்கப்படவும், வேத புஸ்தகங்கள் எரிக்கப்படவும், கிறிஸ்துவர்களுக்கு இருந்த சுதந்தரங்கள் எடுக்கப்படவும், அவர்கள் அடிமைகளைப் போல் பாவிக்கப்படவும் கட்டளை செய்தான். காலியா தேசத்தில் கவர்னரான கொன்ஸ்தாந்தியுஸ் மட்டும் கலகஞ் செய்யவில்லை. மற்ற தேசங்களெங்கும் பெருந்தொகையான கிறிஸ்துவர்கள் மடிந்தார்கள். இக்கொன்ஸ்தாந்தியுஸ் மிக நல்லவர், கிறிஸ்துவர்களை நன்றாயறிந்தவர். இவர் செசாரரயன் கட்டளையை அனுசரிக்கக் கடமைப் பட்டிருந்தும் குற்றமற்றவர்களைத் தண்டித்தல் சரியல்லவென்று உணர்ந்து, தன் ஊழியத்திலிருந்த கிறிஸ்துவர்களைத் திரட்டி ராயன் கட்டளையைக்காட்ட, அநேகர் "நாங்கள் எங்கள் வேதத்துக்காய் எங்கள் அலுவல்களை இழக்கச்

சித்தமாயிருக்கிறோம்" என, சிலர் மட்டும் வேதத்தை மறுக்க ஆயத்தமானார்கள். கொன்ஸ்தாந்தியுஸ் இவர்களைப் பார்த்து, "நீங்கள் இப்படி உங்கள் தேவனை மறுத்தீர்களாயின் ஓர்கால் என்னையும் சுலபமாய் மறுப்பீர்கள்; ஆதலால் உங்களிடம் நான் விசுவாசமாயிருத்தல் பிசகு" என்று அவர்களைத் துரத்திவிட்டு வேதத்துக்காக வேலையிழக்கத் துணிந்தோரையெல்லாம் மறுபடியும் சேவகத்தில் அமர்த்தார். அநேகம் பாப்புமாரும் மேற்றிராணிமார்களும் மிகப் பெருந்தொகையான கிறிஸ்துவர்களும் வேதசாட்சிகளான இக்காலத்துக்கு 'வேதசாட்சிகளின் காலம்' எனப் பெயர் கொடுக்கப்பட்டது.

## சமாதானம் கி. பி. 313.

இவ்விதமாய் மூன்று நூற்றாண்டளவும் பசாசு திருச்சபைக்கு விரோதமாய் எழும்பிக் கடிய போர் செய்து அபஜெயமடைய, சர்வேசுரனும் தமது சபை உண்மையான திருச்சபையென உலகத்திற்குக் காட்டிய பின்னர் கி. பி. 313ல் சமாதானம் கட்டளையிடச் சித்தமானார். எப்படியெனில், தியோக்கிலேசியன் கலேரியுஸால் துரத்தப்பட்டு நாக்கினின்று புழு சுக்கிக்கொண்டு இறந்தான். மாக்ஸிமியனும் தற்கொலை புரிந்து கொண்டான். கலேரியுஸோ, சரீரத்தின் கீழ்ப்பாகத்தில் ஓர் பெரிய புண் உண்டாகி சீழும் அதனுடன் புழுக்களும் வடிந்து எவ்வித மருந்தாலும் சுகமடையாது, சர்வேசுரன் சாபமென்று உணர்ந்து பின்வரும் கட்டளை பிறப்பித்தான். "முந்தின சக்கரவர்த்திகளைப் போல் நாமும் தேச நன்மை எனக் கருதிக் கிறிஸ்துவர்களை அழித்தோம். ஆனால் இவர்கள் எவ்வித துன்பங்களுக்கும் அஞ்சாது வேதத்தில் ஊன்றியிருப்பதால் இவர்களை வீணே மடிக்காது, நாம் எப்போதும் கொண்டிருக்கும் காருண்ணியத்தைக் காட்ட இவர்களுக் கிரங்கி இனிமேல் சுதந்தரம் கொடுக்கிறோம்." ஆனால் இதினால் கலேரியுஸுக்கு எவ்வித பயனும் உண்டாகவில்லை. இவன் கொடும் வியாதியால் மரிக்க, கொன்ஸ்தாந்தீன் பட்டத்துக்கு வரவிருந்ததால், கிறிஸ்துவின் சிலுவையும், ரோமை ராச்சியக் கொடியுடன் சேர்க்கப்படும் காலம் வந்தணுகியது.

# இரண்டாம் பாகம்.

## பதித மதங்களும், நாகரீக மற்றேரும் கி. பி. 313-800

## 1-ம் அத்தியாயம்.

## கிறிஸ்துசக்கரவர்த்திகளும் ஆரியமதமும் கி.பி.313-395

உட்பிரிவுகள்:—

திருச்சபையின் ஜெயம்; வணுந்தர ரிஷிகள்; ஆரியர்; சுலியான் வேதகலகம்; வேதபாரகரும், அர்ச்சியசிஷ்டவர்களும்.

### 1. திருச்சபையின் ஜெயம்.

### கொன்ஸ்தாந்தீன் சிம்மாசனமேறல் கி. பி. 313.

கலேரியுஸ் ராயன் கிறிஸ்துவர்களை அழிக்க முடியாமல் தான் தோல்வியுற்றதை உணர்ந்து, அவர்கள் தங்கள் வேத கோட்பாடுகளை அனுசரிக்க உத்தரவு அளித்த விஷயம் முன் அத்தியாயத்தில் கூறப்பட்டது. இவன் கி. பி. 311ல் மரித்தான். அப்பால் கொன்ஸ்தாந்தீன், பிரித்தானியா, காலியா, ஸ்பானியா தேசங்களிலும்; மாக்ஸென்சியுஸ் இத்தாலியா ஆப்பிரிக்காவிலும்; மாக்ஸிமின் தெயியா, இலெரியா, கிரீஸ், கிரேசியாவிலும் ஆண்டு வந்தார்கள். ஆனால் ஒவ்வொருவரும் இராச்சியபாரம் முழுதும் அடைய ஆசித்துப் போர் தொடுத்தார்கள்.

முதலில் மாக்ஸென்சியுஸ் காலியாவைத் தாக்க எண்ணியிருக்கையில் கொன்ஸ்தாந்தீன் ஆல்ப்ஸ் மலையைக் கடந்து சூசாவைப் பிடித்து, எதிர்த்த மாக்ஸென்சியுஸுடைய படைகளை முறியடித்து வெரோனவைக் கைப்பற்றிக் கொண்டு ரோமையைத் தாக்கினர். ஆயினும் மாக்ஸென்சியுஸ் ராயனது சேனை மிகப் பெரிதானபடியால் அத்துடன் போர் புரிந்து ஜெயித்தல் அசாத்தியம் எனக் கண்டு பொய்த்தேவதைகளைச் சற்றும் நம்பாது, அஞ்ஞானிபாயினும்

கிறிஸ்துவர்களது தெய்வ உதவியைத் தேட எண்ணினர். இப்படி இருக்கையில் சர்வேசுரன் இவருடைய விசுவாசத்துக்குப் பலனாக ஓர் ஆச்சரியமான புதுமை செய்யச் சித்தமானார். அது எப்படியெனில், ஓர் நாள் மத்தியானம் இவர் தம் துருப்புகளுடன் போய்க் கொண்டிருக்கையில் வானத்தில் சூரியனுக்கு மேலாகப் பிரகாசிக்கின்ற ஓர் சிலுவை தென்பட்டு, அதில் "இந்த அடையாளத்தால் வெல்லுவாய்" என எழுதியிருந்தது. மறுநாளிரவில் அச்சிலுவை இவர்கனவில் தென்பட, நமது கர்த்தரும் தம்மை இவருக்குக் காட்டி "உமது கொடியில் சிலுவை அடையாளம் பதிப்பாய்" என மொழிந்தார். இது முதல் ரோமையரது கழுகுக் கொடிகளுடன் சிலுவைக் கொடியும் கூட்டப்பட்டது. இச்சிலுவை மரத்தினால் செய்யப்பட்டு உச்சியில் தங்கத்தில் இரத்தினங்கள் இழைத்த ஓர் கொடியைக் கொண்டது. கொடிக்குமேல் தங்க முடியொன்று வைக்கப்பட்டு, அதன் மத்தியில் நமது கர்த்தரின் பெயரைக் குறிக்கும் கிரேக் பாஷையின் இரண்டு பதங்களின் முதல் எழுத்துக்களாகிய (X. P.) பதிக்கப் பட்டிருந்தன.

இக்கொடிக்கு 'லபாரம்' எனப் பெயரிட்டு, இவ்வெழுத்துக்களையும் சிலுவையையும் போர்ச் சேவகருடைய தொப்பிகளிலும் பதித்தார்கள். சண்டை கி. பி. 312 ஆகஸ்டு 28ல் நடந்து, தெய்வ உதவியால் கொன்ஸ்தாந்தீன் பகைவனை முறியடித்து கெம்பீரமாய் ரோமையில் நுழைய, கிறிஸ்துவர்களெல்லாம் இவரை எதிர்சென்றழைத்தார்கள். இச்செயத்தைப் பிரசித்தப்படுத்தும் பொருட்டு ஞாபகமாக ஓர் ஜெய வில்வளைவு கட்டடம் கட்டப்பட்டு இன்னுமிருக்கிறது.

## கிறிஸ்துவர்களுக்கு அளித்த சுதந்தரங்கள்.

இதுமுதல் கிறிஸ்துவர்களுக்கு சுதந்தரம் ஏற்பட்டு, இதர மதஸ்தரைப் போலவே அவர்களும் பகிரங்கமாய்த் தேவாராதனை செய்யவும், ஆலயங்கள் கட்டவும் உத்தரவு அளிக்கப்பட்டது.

மேலும் கிறிஸ்துவர்களிடமிருந்து சர்க்கார் அபகரித்த பொருள்களையெல்லாம் திரும்பக் கொடுக்கவும் அச்சொத்துக்கள் புறத்தியாருக்குச் சொந்தப் படுத்தப்பட்டிருந்தால் அவர்களிடமிருந்து திரும்ப விலைக்கு வாங்கிக் கொடுக்கவும் கி. பி. 313ல் கட்டளை பிறந்தது. இன்னும் மற்ற மதக் குருக்களுக்குள்ள எல்லாச் சுதந்தரங்களும் சத்திய குருக்களுக்கும் அளிக்கப்பட்டன.

## லாட்டெரன் அரண்மனை.

இவைமட்டுமின்றி, கொன்ஸ்தாந்தீன் அர்ச்.பாப்பு திருச்சபையின் அரசரென்று அங்கீகரித்து அவரது மகத்துவத்துக் கேற்ற வண்ணம் வசிக்கவேண்டுமெனக் கருதி, லாட்டெரன் அரண்மனையை இருப்பிடமாய் அளித்து, அவரது உன்னத பதவிக் கேற்ற வண்ணம் பிரதி வருஷமும் ஓர் பெருந் தொகை குத்தகை வரும் நிலங்களையும் சர்வ மானியமாய்க் கொடுத்தார்.

## தோனத்துவஸ் பிரிவினை கி. பி. 365.

திருச்சபை சுரங்கங்களில் மறைந்திருந்த காலங்களில் முதலாய் குழப்பக்காரர் தோன்றினார்களென்றும், அக்காலத்திய பாப்புமார் அப்போதைக்கப்போது அவற்றைக் கண்டனம் செய்து வந்தார்களென்றும் முன் அறிவித்தேன். திருச்சபை ராஜ அங்கீகாரம் பெற்று பகிரங்கமாய் விளங்கிய இக்காலத்தும் இப்புரட்டர்கள் கிளம்பினார்கள்.

ஆப்பிரிக்காவில் நுமிடியாவின் மேற்றிராணியாரான தோனத்துஸ், "வேதகலாபனைக் காலருக்குச் சுவிசேஷங்களைத் தீக்கொளுத்தக் கொடுத்துத் தன்னைத் தப்புவித்துக் கொண்டார்" என்ற பொய்க் குற்றத்தை கார்த்தேஸ் மேற்றிராணியார் மேல்சாற்றி, வேறு அநேகரை கி. பி. 305ல் தன்னுடன் சேர்த்துக்கொண்டார். இவர்கள் ஓர் கூட்டம் கூடிக் கார்த்தேஸ் பட்டணத்து மேற்றிராணியாரைத் தள்ளிவிட்டு, கொன்ஸ்தாந்தீன் அரசனைத் தங்கள் வசம் சேர்க்கக் கருதி, வேதகலாபனை இல்லாத காலியா தேசத்துச் சில மேற்றிராணிமார்கள் தங்கள் நியாயத்தைத் தீர்க்க வரவேண்டுமென ராயரை வேண்டிக்கொண்டார்கள்.

"சர்வேசுரனுடையவற்றைச் சர்வேசுரனுக்கும் செசாருக்குச் சொந்தமானவற்றைச் செசாருக்கும் கொடுங்கள்" என்னும் சுவிசேஷ வாக்கியத்தில் நம்பிக்கை கொண்ட ராயன் இவர்கள் கேட்ட வண்ணமின்றி அர்ச். பாப்புவுக்கு அறிவிக்க, அவர் தமது அரண்மனையில் ஓர் சங்கம் கூட்டினார். தோனத்துஸ் இச்சங்கத்தில் தன் வாதத்தை ஊர்ச்சிதப்படுத்த வந்து தானே குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்டும் அதை ஏற்றுக்கொள்ளாமல் பிரிவினை செய்ததால், நாலாம் நூற்றாண்டு முழுதும் ஆப்பிரிக்காவில் இக்குழப்பம் நடந்தது.

## லிசினியுஸ் வேத கலகம்.

இதிப்படியிருக்க இத்தாலிக்குக் கிழக்கிலுள்ள நாடுகளை ஆண்ட லிசினியுஸ், கொன்ஸ்தாந்தீன் கிறிஸ்துவர்களுக்குப் பரோபகாரியாகி அவர்களை வசப்படுத்தியதின்மேல் பொறாமை கொண்டு அக்கியானிகளைத் தன் வசப்படுத்தக் கருதித் தன் தேசத்திலுள்ள கிறிஸ்துவர்களைத் துன்புறுத்தினான். ஆனால் இது காரணமாய் இருவருக்கும் போர் தொடங்கி கி.பி. 324ல் லிசினியுஸ் தோல்வியுற, கொன்ஸ்தாந்தீன் ரோமை நாடெல்லாவற்றுக்கும் ஏக சக்கரவர்த்தியானதால் கிறிஸ்துமத ஜெயக்கொடி எங்கும்ஸ்தாபிக்கப்பட்டது.

## திருச்சிலுவை கண்டெடுக்கப்படல்.

தான் கொண்ட ஜெயத்தின் ஞாபகமாக கல்வாரி மலையில் ஓர் ஆலயம் கட்ட கொன்ஸ்தாந்தீன் விரும்பினார். அவர் தாயார், அர்ச். எலேனம்மாள், அச்சமயத்தில் மனந்திரும்பி மிக்க பக்தியுற்று 80 வயதுக்கு மேற்பட்டிருந்தும் அக்கட்டடத்தைத் தானக் கட்டி முடிக்கவும், நமது திவ்விய இரக்ஷகர் அறையுண்ட சிலுவையைக் கண்டெடுக்கவும் பிரியங் கொண்டாள்.

இது சுளுவான தல்லவென்கிலும், அக்காலத்திய யூதர்கள் குற்றவாளிகளை அடக்கஞ் செய்யும் குழிக்குப் பக்கத்தில் அவர்கள் சாவுக்குக் காரணமாகிய கருவிகளைப் புதைத்து வைப்பது வழக்க

மாகையால், நமது திவ்ப கர்த்தரின் கல்லறையைத் தோண்டினல் திருச்சிலுவை கிடைக்குமென உத்தேசித்தாள். ஆனல் ரோமையர் யூதகலகத்தில் ஜெருசலேமை முற்றும் அழித்து விட்டார்கள். மேலும் நமது திவ்ப கர்த்தரின் கல்லறையின் மேல் திரையான் ராயன் தன் பொய்த் தேவதைக்கு ஓர் கோயிலும் கட்டியிருந்தான்.

இக்கோயிலைத் தகர்த்து அவ்விடமுழுதும் சுத்தம் செய்து, பின் பூமியைத் தோண்டவே நமது கர்த்தரின் கல்லறை காணப்பட்டது. அதற்குப் பக்கத்தில் மூன்று சிலுவைகளும், நமது கர்த்தரின் திரு உறுப்புகளைத் துளைத்த திரு ஆணிகளும், யூதர் ராசாவென்று சிலுவையில் பதித்திருந்த எழுத்துக்களும் கிடைத்தன. இவ்வெழுத்துக்கள் சிலுவையினின்று எடுபட்டிருந்தமையால் நமது இரக்ஷணிய சிலுவை யாதென அறியக் கூடவில்லை. அப்பால் ஜெருசலேமின் மேற்றிராணியார் ஓர் யுக்தி செய்தார். அதிக வியாதியுற்று யாவராலும் கைவிடப்பட்ட ஓர் பெண்பிள்ளையிடம் இச்சிலுவைகளைக் கொண்டுவந்து, ஒவ்வொன்றாய் அவள் மீது வைக்க முதல் இரண்டு சிலுவைகளால் யாதொரு வித்தியாசமுமின்றி, மூன்றாவது சிலுவை மேல்பட்ட அக்ஷணமே அவள் முழுச் சவுக்கியமுற்றாள். ஆகையினால் மூன்றாவதே திருச்சிலுவை யென்று நிச்சயிக்கப்பட்டது. அதுமுதல் திருச்சிலுவை கண்டெடுக்கப்பட்ட திருநாள் (மே 3, தேதி) திருச்சபையில் கொண்டாடப்பட்டுவருகிறது.

நமது திவ்விய கர்த்தரின் கல்லறையின் மேல் ஓர் மகத்தான கோயிலும், அவர் மோக்ஷத்துக்கு ஆரோகணமான இடத்தில் ஓர் கோயிலும் கட்டினார்கள். அர்ச். எலேனம்மாள் கி. பி. 327ல் நல்ல மரண மடைந்தாள்.

## கிறிஸ்து மத மதிப்பு.

மத சுதந்தரம் அடைந்த இக்காலத்தில், கிறிஸ்து மேற்றிராணிமார்களின் சங்கங்களும், பிரசங்கங்களும், கத்தோலிக்க ஞானிகளுடைய புஸ்தகங்களும் சத்தியகோட்பாடுகளைப் பரப்பவே,

நாளடைவில் ரோமையருடைய நடவடிக்கைகளும் தேச சட்டங்களும் வித்தியாசப்பட்டு சத்திய வேதத்துக் கேற்றவண்ணமாய்ச் சீர்திருத்தப்பட்டன. இச்சீர்திருத்தத்தைக் கொன்ஸ்தாந்தின் எவ்வளவு விரும்பினரென்றால், ரோமை நாடெங்கும் ஞாயிற்றுக்கிழமையை ஓய்வுநாளாய் அனுசரிக்கவும், அந்நாளில் கச்சேரிகள் அடைக்கப்படவும், சரீரப் பிரயாசையுள்ள வேலைகள் நிறுத்தப்படவும் ஓர்சட்டம் பிறப்பித்தார்.

தவிர அநியாயமாய் அடிமைகள் ஆக்கப்பட்டவர்கள் சுதந்தரம் பெறவும், அப்படிச் சுதந்தரம் பெற, கத்தோலிக்க குருக்களது கடிதம் போதுமென்றும் ஆக்கியாபித்ததுமன்றி, தந்தேசமெங்கும் குற்றவாளிகளைச் சிலுவையில் அறைதலும், ஆக்கினை இடப்பட்டவர்களை நெற்றியில் சூடுபோடலும், ரோமை தகப்பன் தனக்கு இஷ்டமில்லாத குழந்தையைக் கொன்றுவிடும் சுதந்தரமும், இது முதல் தகாதென்றும் சட்டங்கள் ஏற்படுத்தினர்.

ஆயினும் அஞ்ஞானமதம் தொன்றுதொட்டு நடைபெற்று வந்ததால் அதை முழுதும் அழிக்கவுமில்லை; அம்மதஸ்தருக்கு எவ்விதத் தீங்கும் செய்யவுமில்லை. கிறிஸ்துமதம் பரவச் சூரியனைக் கண்ட பனிபோல் அஞ்ஞானம் அழிந்து விடுமெனக் கருதியிருந்தார்.

இவர் செய்த யாவினும் கி. பி. 318ல் பிறப்பித்த ஓர் சட்டம் மிகச் சிறந்தது. இதினல் நியாயஸ்தலங்களின் தீர்ப்பை எதிர்பாராது எவரும் தங்கள் பிரயாதுகளைத் தங்கள் மேற்றிராணிமார்களுக்குக் கொண்டு போகலாமெனவும், அவர்களது தீர்ப்பு நீதிஸ்தலத் தீர்ப்புப் போலவே அங்கீகரிக்கப் படவேண்டுமெனவும் நிரூபித்தார். இதினல் மேற்றிராணிமார்கள் கிறிஸ்துவர்களுக்கு ஞானமேய்ப்பர்களாய் இருப்பதுமன்றி, *இக்காலமுதல் லௌகீக விஷயங்களிலும் நியாயாதி பதிகளாய் ஏற்பட்டுத் திருச்சபையின் லௌகீக அரசியலும் பகிரங்கமாயிற்று.

---

*இச் சுதந்தரம் மேற்றிராணிமார்களுக்கு எப்போதும் உண்டெனினும், இதுகாறும் ரோமை சர்க்கார் அங்கீகரிக்கவில்லை.

## கிறிஸ்துமதக் கோயில்கள்.

ரோமையில் மேன்மையான கோயில்கள் கட்டப்பட்ட காலம் இதுதான். இவற்றில் முதலாவது லாட்டொன் அரண்மனையில் அர்ச். பாப்புவின் மேற்றிராசனக் கோவில். இதனுடைய வனப்பால் இது சொர்னலயம் எனப் பெயர்பெற்றது. இப்போது நம் பாப்பரசர் வசிக்கும் வத்திக்கான் அரண்மனையைச் சார்ந்து இவ்வுலகின் ஆலயங்களிலெல்லாம் சிறந்து விளங்கும் அர்ச். இராயப்பர் கோயில் இக்காலத்தில் தான் முதல் கட்டப்பட்டது. பின்காலத்தவர்கள் இதனைச் சுற்றிலும் முன்னும் பின்னுமாய்ப் பெரிய கட்டடங்கள் கட்டினார்களெனினும் அப்போதைய கட்டடம் இன்னும் இருக்கிறது.

இதற்கு அஸ்திவாரமிட்டது எப்படியெனில், அர்ச். பாப்புவும், கொன்ஸ்தாந்தீன் ராயரும் ரோமை நகர்வாசிகளுடன் கூடி தேவதோத்திரப் பாட்டுகள் பாடிக்கொண்டு ரோமைக்கு வெளியில் அப்போஸ்தலர்களின் தலைவரான அர்ச். இராயப்பர் அடக்கப்பட்ட இடஞ்சென்றார்கள். அங்கு ராயர் தாழ்ச்சி மிகுதியால் தாம் அவ்விடம் சேர யோக்கியம் அற்றவரென்று முகங் குப்புறவிழுந்து அவ்விடத்திலேயே ஓர் குழியைத் தோண்டிப் பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் பேரால் பன்னிரண்டு கூடைகள் நிறைய மண்ணெடுத்து, அக்குழியில் அஸ்திவாரக் கல்லிட்டார். அர்ச். இராயப்பரது கல்லறை தேவாலயத்தின் மத்தியாயிற்று.

## 2. வனந்தர ரிஷிகள்.

இப்படியாய்க் கிறிஸ்து மதம் வெற்றி கொண்டெழுந்து பரவவே கிறிஸ்துவர்கள் முன் வேதத்துக்காகப் பட்ட சொல்லொண்ணாத் துன்பங்களும் நீங்கித் தலைகொடுத்து வேத சாட்சிகளாகும் பாக்கியமும் அற்றுப்போக, விசேஷ பக்தியுள்ளவர்கள் வேதசாட்சி முடி பெறவிடினும், தங்கள் ஆஸ்தி பாஸ்திகளையும், சுற்றத்தார்களையும் துறந்து மனித சஞ்சாரமில்லாத பாலைவனங்களில் சென்று ஞான ஒறுத்தல்களால் அர்ச்சியசிஷ்ட முடி பெற்றார்கள்.

## அர்ச். வனத்துச் சின்னப்பரும்,

## அர்ச். வனத்து அந்தோனியாரும். கி. பி. 251–356.

எகிப்து தேசத்தில் தனவந்தர்களும் பக்திமான்களுமான தாய் தந்தையரிடம் பிறந்து வளர்ந்த அந்தோனியென்னும் ஓர் வாலிபர் இருந்தார். ஓர் நாள் கோயிலில் "நீ முழுதும் கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பின் உன்னுடைய சொத்துக்களை விற்று ஏழைகளுக்குக் கொடுத்தால் மோக்ஷத்தில் திரவியம் சேகரிப்பாய்" என்னும் வசனங்களைக் கேட்டுத் தன் சொத்துக்களை யெல்லாம் தானஞ் செய்துவிட்டு உலகத்தைத் துறந்து தம் ஊர்விட்டு வெகு தூரம் சென்று வனாந்தரத்தில் தங்கினார். இவருடைய நடத்தையை அறிந்த அநேகர் இவரைப் பின்பற்றவே இவர் பின்னும் பின்னும் ஒதுங்கிச் சென்று கொண்டே யிருந்தார். கடைசியாய் எகிப்து தேசத்தின் தெற்குப் பாலைவனத்தின் எல்லை வரைக்கும் இவர் இப்படியே செல்லச்செல்ல, இவரைப் பின்பற்றிய துறவிகள் அநேகாயிரம் பேரானார்கள். இவருடைய கீர்த்தி ரோமை நாடெங்கும் பரவவே, பலர் இவருடைய ஆலோசனை கேட்பார்கள். வேத விரோதிகளான ஆரியர் எகிப்தில் பரவி சத்திய வேதத்தைத் தந்திரமாய் அழிக்க முயன்றகாலத்தில், அலெக்சாந்திரியாவின் பிதாப்பிதாவாகிய மிகச் சிறப்புற்ற அர்ச். அத்தனாசியுஸ் இவருடைய ஆலோசனை கேட்டு இவரால் உற்சாகப் படுத்தப்பட்டாரெனில் இவரது கீர்த்திக்கு வேறு அத்தாட்சியும் வேண்டுமோ? இவர் ஆரியரது கொள்கையைக் கண்டித்து மறுத்துக் கொன்ஸ்தாந்தீன் அரசனுக்கும் நிருபம் எழுதினார்.

இவர் இவ்விதமாய் வசிக்குங் காலத்தில் ஓர் நாள் கனவுகண்டு அதில் தூண்டப்பட்டபடியே தாம் மிகவும் வயோதிகராயினும் தம்முடைய கோலையூன்றி நடந்து கொண்டு தனியே இரண்டு நாளும் ஓர் இரவும் பாலைவனத்தில் செல்லுகையில், ஓர் குகையும், அதன் வாயிலில் அடைத்து வைத்திருக்கும் ஓர் கல்லும் தென்பட்டது. அக்குகைக்குப் பக்கத்தில் அணுகி கல்லைத் தட்டி

"திறக்க, நான் யாரென்றும், எங்கிருந்து வருகிறேனென்றும் எதுக்காக வருகிறேனென்றும் நீர் அறிவீர். உமது முகத்தைப் பார்க்க நான் அபாத்திரவான் எனினும் சேசுக்கிறிஸ்து நாதருடைய சிநேகத்துக்காவது கதவைத்திறக்க, இல்லாவிடில் உமது குகையின் முன் சாவேன்" எனச் சொன்னார். அதிக முதிர்ந்த வயதாலும் கடினமான தவ ஒறுத்தல்களாலும் மிகவும் மெலிந்து ஓர் எலும்புக்கூடே போன்றிருந்த ஓர் கிழவர், முழுதும் நரைமயிர் படிந்தவருமாய்ப் பனைபோலையா லமைந்த பாயால் மூடினவருமாய்த் தோன்றிக் கதவைத் திறந்தார். இவர் யாரெனில் கி. பி. 250 முதல் யாருமறியாது பிரதிதினமும் காகங் கொண்டு வந்த ஓர் அரை ரொட்டியைப் புசித்து ஜீவித்து வந்த அர்ச். வனத்துச் சின்னப்பர்.

இருவரும் ஒருவரொருவர் பேரைக் கேட்டிராதிருந்தும் பார்த்த உடனே ஒருவர் மற்றவர் பேரைச் சொல்லி வரவேற்றார்கள். பின் இருவரும் அர்ச். சின்னப்பருக்கு ஜலம் உதவி வந்த ஊற்றின் பக்கத்தில் ஓர் பாறையின் மேல் உட்கார்ந்து பேசத்தொடங்கி, அர்ச். சின்னப்பர் வந்தவரை நோக்கி "இச்சமயம் மனிதர் என்ன செய்கிறார்கள்? இன்னும் பழைய பட்டணங்களில் புதிய வீடுகளைக் கட்டுகிறார்களல்லவா? இவர்களுக்கு ராசன் யார்? கிறிஸ்துவர்களை இன்னம் வதைக்கிறார்களா?" எனப் பலவாறு வினவினார். அர்ச். அந்தோனியார் இவற்றுக்கெல்லாம் தக்க மொழி சாற்றிவிட்டு அர்ச். சின்னப்பரின் அந்திய காலம் கிட்டினமையால் உடனே எழுந்து, அர்ச். அத்தனாசியுஸ் தமக்கு அளித்த போர்வையை எடுத்து வரும்பொருட்டுத் தம்மிருப்பிடம் திரும்பிச் சென்றார். ஏனெனில் இப்போர்வையால் சுற்றப்பட்டுத் தன் சடலம் அடக்கம் பண்ணப்பட அர்ச். சின்னப்பர் ஆசித்தார். அர்ச். அந்தோனியார் கூடிய தீவிரத்தோடு திரும்பியும் அவர் சேருமுன்னே அர்ச். சின்னப்பர் மரித்துவிட்டார். அப்பால் தான் கொண்டு வந்த போர்வையால் சரீரத்தை மூடிவிட்டு எவ்விதம் குழி தோண்டக் கூடுமென யோசித்துக் கொண்டிருக்கையில், இரண்டு சிங்கங்கள் வந்து மரித்த சரீரத்தை அடக்கப் போதுமான ஓர் குழியை

நகங்களால் பறித்தன. அர்ச். அந்தோனியார் இதற்குப் பின் பதினைந்து வருஷமிருந்து கி. பி. 356ல் தமது 105ம் பிராயத்தில் மரணித்தார்,

## துறவிகளின் ஜீவியம்.

இத்துறவிகள் தரித்திரம் கீழ்ப்படிதல் கற்பு இம்மூன்று விரதங்களையும் கொண்டு செலுத்தினார்கள். இவ்விரதங்களைச் சரியே அநுசரிக்க, ஏகாந்தம், கடின வேலை, ஒருசந்தி, ஜெபம், இந்நான்கும் ஏதுக்களாயிருந்தன. உலகத்துக்கு மறைந்து இவர்கள் வசித்துவந்த பாலைவனங்கள் மனிதர் குடியேறச் சற்றும் ஏற்றவையல்ல; எங்கும் வரட்சியான சமநிலங்களும் பாறைகளுமன்றிச் செழிப்பான நிலங்கிடையாது. துறவிகள் இப்பாலைவனங்களில் மரத்தினாலேயோ அல்லது நாணலினாலேயோ சிறுசிறு குடிசைகள் கட்டிக்கொண்டு வசித்தார்கள். நாள் முழுதும் பாய் பின்னுவதும் கூடை முடைவதும் அவற்றை விற்று ஏழைகளுக்குக் கொடுப்பதுமே இவர்கள் தொழில். ஞாயிற்றுக்கிழமை தவிர வருஷத்தில் எல்லா நாட்களிலும் ஒருசந்தி இருப்பார்கள். ஆனால் இப்படிப்பட்ட கடின ஜீவியம் இவர்களைப் பலவீனப் படுத்தாமல், பலம் அதிகரிக்கச் செய்தமையால் அநேகர் அதிக முதிர்ந்த வயது வரையில் ஜீவித்து வந்தார்கள்.

இவர்கள் பிரதிதினமும் செபிக்க இருமுறை ஒன்று கூடுவார்கள். ஒவ்வொரு சமயமும் பன்னிரண்டு சங்கீதங்கள் பாடின பின் சுவிசேஷம் வாசிப்பார்கள். மற்ற சமயங்களில் தங்கள் சிற்றறைகளிலேயே செபிப்பார்கள். தகப்பனுக்குப் பிள்ளைகள் எவ்விதம் கீழ்ப்படிகிறார்களோ அவ்வண்ணமே இவர்கள் தங்கள் சிரேஷ்டருக்குக் கீழ்ப்படிவார்கள். இத்துறவி மடங்களின் கீர்த்தி பரவவே ரோமை நாடெங்கும் அநேக சந்நியாச மடங்கள் ஏற்பட்டன.

## 3. ஆரிய பதித மதம்.

நம் காலத்திய பதித மதத்தைப் போலவே அக்காலத்திலும் பதிதப் புரட்டர்கள் தோன்றித் திருச்சபையில் குழப்பம்

உண்டாக்கினர்களென்றும் அப்போதைக்கப்போது அவர்கள் குருட்டாட்டத்தைத் திருச்சபை கண்டனம் செய்ததாகவும், முன் சொல்லியிருக்கிறது. ஆனால் கலகம் செய்விக்கும் சாத்தான் திருச்சபையின் ஜெயத்தையும், அதன் கீர்த்தியையும், மேலும், மேலும், அதிகரித்து வந்த சந்நியாசக் கூட்டங்களால் திருச்சபையில் வளரும் நன்மைகளையுஞ் சகிக்கக் கூடாதவனாய்ப் பெரிய ஓர் குழப்பம் உண்டு செய்தான்.

## ஆரியுஸ்.

அக்காலத்தில் மகா பக்திமானைப் போலவும், வேத விஷயங்களில் மிக்க தாற்பரியமுள்ளவன் போலவும் வெளிக்குத் தன்னைக்காட்டிக் கொண்டு, மனதில் தான் பெரிய பதவிக்கு வரவேண்டுமென்னும் பேராசை கொண்ட ஆரியுஸ் என்ற ஓர் குரு இருந்தான். சாத்தானுடைய ஏவலினால் இந்நிர்ப்பாக்கியன் "வார்த்தையானவர் சர்வேசுரன் அல்ல, ஆனால் சர்வேசுரனால் சிருஷ்டிக்கப்பட்ட ஓர் வஸ்து" எனப் போதித்தான்.

இத்தப்பறையை அலெக்சாந்திரியாவின் பிதாப் பிதாக்கள் திரும்பத் திரும்பக் கண்டித்தும் ஆரியுஸ் அதை உணராமல் அநேகரைத் தன்னுடன் சேர்த்துக்கொள்ள இப்பதிதக் கொள்கை எகிப்தில் மட்டுமின்றி ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் பரவிற்று.

ஆகையால் கி. பி. 320 ல் அலெக்சாந்திரியாவில் கூடிய மேற்றிராணிமார்கள் சங்கத்தால் ஆரியுஸ் வேதத்துக்குப் புறம்பாய்த் தள்ளப்பட்டான். அப்பால் இவன் சீரியாவுக்குச் சென்று கொன்ஸ்தாந்தீன் சகோதரி வழியாய் ராயனுடைய அநுக்கிரகம் சம்பாதித்தான்.

## 1-ம் பொதுச் சங்கம், நைசியா. கி. பி. 325.

தனக்கும் எதிரிகளுக்கும் சேசுக்கிறிஸ்துவைப் பற்றி உபயோகிக்கும் வார்த்தை வித்தியாசம் ஒழிய விசுவாச சத்தியத்தில் எவ்வித வித்தியாசமும் இல்லையென இவன் ராயரிடம் சொல்ல,

அவர் அனத நம்பி அலெக்சாந்திரியாவின் பிதாப் பிதாவுக்கு விரக்கு வாதத்தை நிறுத்தும்படி ஓர் நிருபம் எழுதினர். ஆனல் பிறகு உண்மையையும் தன் தப்பிதத்தையும் அறிந்து, அர்ச். சில்வேஸ்திரி பாப்புடன் கூடி கி. பி. 325.ல் நைசியாவில் திருச்சபையின் முதல் பொதுச் சங்கம் கூட்டினர்.

கூட்டத்துக்குக் குறித்த நாளில் உலகத்தில் நாற்றிசையிலும் இருந்து சுமார் முந்நூற்றுப் பதினெட்டு மேற்றிராணிமார்களும், கணக்கில்லாத குருக்களும், குருப்பட்டத்துக்கு நியமிக்கப் பட்டவர்களும், விசுவாசிகளும் வந்து கூடினர்கள். இதுவரைக்கும் உலகத்தில் இவ்வளவு கெம்பீரமான ஓர் கூட்டம் நடந்தேறியதில்லை.

அஞ்ஞான காலங்களில் மிகப் பேர்பெற்ற கிரேக்கிய சாஸ்திரிகள் சுமார் ஆயிரவருஷமும், இந்திய சாஸ்திரிகள் பல நூற்றாண்டுகளாகவும் தர்க்கித்து தங்களது சத்திய விஷயங்களில் ஓர் தீர்மானமும் செய்யக் கூடாமலிருந்தும், நைசியாவின் கிறிஸ்துவ மகா சங்கம் சில தினங்களுக்குள் வேதசத்தியங்களை யெல்லாம் ஒருமித்துத் தீர்மானம் செய்தது மிக ஆச்சரியமன்றோ? இது கத்தோலிக்க திருச்சபையின் ஒற்றுமையையும், அது ஓர் மேய்ப்பனுக்கு உட்பட்டு நடந்து வருவதையும் சிறந்து விளக்குகிறதல்லவோ?

ஆரியுஸ் தன் கட்சியாருடன் சங்கத்திற்கு வந்து தன் சமர்த்தினல் ஒன்றும் முடியாது பின்னிடைந்தும் குற்றத்தில் ஊன்றியிருந்தான். ஆகையால் ஆரிய கொள்கையைக் கண்டனம் செய்து இச்சங்கம் அப்போஸ்தலர்களால் போதிக்கப்பட்டுத் தங்கள் முன்னோர்கள் நீதிஸ்தலங்களிலும், சிறைக்கூடங்களிலும், கழுமரங்களிலும், பகிரங்கமாய் விசுவசித்த விசுவாச சத்தியங்களை விளக்கி, அப்போஸ்தலர் காலமுதல் திருச்சபையில் நடந்த பல அநுஷ்டானங்களையும் தீர்க்கமாய் ஊர்ஜிதப்படுத்திற்று. பின் தாங்கள் செய்த தீர்ப்பெல்லாம் அர்ச். பாப்புவின் அநுமதிபெற அனுப்பியதால், இம்முதற் சங்கம் அர்ச். பாப்புவே திருச்சபையின் நிகரற்ற அரசர் என்று நிரூபித்தது. ரோமை மேற்றிராணிமார்கள் அர்ச் இராயப்பருக்குப் பின் வேத கலாபனைக்குப் பயந்து சுரங்கங்களில் ஒழிந்து மறை

வான சீவியம் சீவித்து வந்தமையால், அர்ச். இராயப்பரையும் அவர் பதிலாளியாகும் அர்ச். பாப்புவையும் நமது திவ்ய கர்த்தரே திருச்சபையின் தலைவராக ஏற்படுத்தியிராவிடில், உலகம் எங்குமிருந்து வந்து கூடிய இம்மகா சங்கத்தினர் இந்த ரோமை மேற்றிராணியாரைத் தங்களுக்கெல்லாம் மேலாய் மதிப்பார்களோ? பரிச்சேதமில்லை. ஆகையால் அப்போஸ்தலர் காலமுதல் நடந்து வந்ததை இவர்கள் ஊர்ஜிதப் படுத்தினார்களொழிய, மற்றபடி சச்கத்திற்கு வராமலிருந்த ரோமை மேற்றிராணியாரை வேறு எவ்விதத்திலும் பெருமை செய்யக் கருதியதல்லவென்று நாம் வெளியாங்கமாய் அறியலாம்.

## சங்கத் தீர்ப்பு.

இச்சங்கம் செய்த தீர்ப்புகளில் மிக முக்கியமானது, **நமது திவ்விய கர்த்தர் திரித்துவத்தின் இரண்டாம் ஆளாகும் சுதனாகிய சர்வேசுரன்** என்பதாம். இது முற்றும் பின்வருமாறு விளக்கம் செய்யப்பட்டது.

"காணப்பட்டதையும் காணப்படாததையும் சிருஷ்டித்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய ஏக சர்வேசுரனை விசுவசிக்கிறோம். தேவ சுதனும், பிதாவிடத்தில், அதாவது அவரது சுபாவத்தில் ஜனித்தவரும், சர்வேசுரனில் ஜனித்த சர்வேசுரனும், ஜோதியில் ஜனித்த ஜோதியும், மெய்யான சர்வேசுரனிடத்தில் ஜனித்த மெய்யான சர்வேசுரனும், சிருஷ்டிக்கப்படாமல் ஜனித்தவரும், பிதாவுடன் ஒரே வஸ்துவாயிருக்கிறவரும், எவரால் பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ள சர்வமும் சிருஷ்டிக்கப்பட்டனவோ அவரும் ஆகிய, ஏக நாதனாகிய சேசுக்கிறிஸ்துவையும் விசுவசிக்கிறோம். இவர் நமக்காகவும் நம்மை ரக்ஷிக்கவும் அவதாரமாகி, மனுஷனாய்ப் பிறந்து, பாடுபட்டு மூன்றாநாள் உயிர்த்தெழுந்து, பரலோகத்துக்கு ஆரோகணமானார். சீவியர்களையும் மரித்தவர்களையும் நடுத்தீர்க்க வருவார். இஸ்பிரீத்து சாந்துவையும் விசுவசிக்கிறோம்."

"அவர் (சுதனாகிய சர்வேசுரன்) இல்லாதிருந்த காலம் உண்டு என்றும், ஜனிப்பதற்கு முன் அவர் இல்லை என்றும், ஒன்றுமில்லாமை

யினின்று உண்டானார் என்றும், யார் சொல்லுகிறார்களோ; அல்லது, அவர் வேறு வஸ்து, வேறு சுபாவம் (பிதா வேறு வஸ்து, வேறு சுபாவம்) என்றாவது, தேவசுதன் சிருஷ்டிக்கப்பட்டவர், நிர்விகாரியல்ல, மாற்றமடைபவர், என்றாவது, யார் சொல்லுகிறார்களோ அவர்களை கத்தோலிக்க திருச்சபை சபித்து புறம்பாய்த் தள்ளுகிறது."

ஆரியுஸும் வேறு இருவரும் தவிர மற்றெல்லோரும் இதை ஏற்றுக்கொள்ள, கொன்ஸ்தாந்தீன் தம் தேசமெங்கும் இதுவே சட்டமாகக் கொள்க, எனத் தீர்ப்புச் செய்தார்.

## கர்த்தர் உத்தானத் திருநாள்.

இவ்வலுவல் முடிந்ததும் கீழ் நாடுகளில் கர்த்தர் உயிர்த்த பண்டிகை கொண்டாடும் தேதி விஷயத்தில் ஒற்றுமை இன்றி இருந்தமையால் அதுவும் ஒழுங்கு செய்யப்பட்டது. முன்னிருந்த பாப்புமார்கள் ஒழுங்கு செய்திருந்தும், யூதர்கள் வழக்கம் போலவே சிலர் மார்ச்சு மாதம் 21 ந் தேதிக்குப்பின் வருகிற பௌர்ணமி தினத்தில் வாரத்தின் எக்கிழமையிலும் இத்திருநாளைக் கொண்டாடி வந்தார்கள். அது திருச்சபையின் வழக்கமன்று. இச்சங்கம் முன் பாப்புமார் செய்த ஏற்பாட்டின்படியே பாஸ்குத் திருநாளை ஞாயிற்றுக் கிழமையிலேயே கொண்டாட வேண்டுமென்றும், அது மார்ச்சு மாதம் 21 ந் தேதிக்குப்பிறகு வரும் பௌர்ணமி கழிந்த முதல் ஞாயிறு எனவும் தீர்மானித்தது.

## நைசியா சங்க ஒழுங்குகள்.

இன்னும் அப்போஸ்தலர்கள் கால முதல் திருச்சபையில் நடந்து வரும் அநேக அநுஷ்டானங்களையும் இச்சங்கம் ஒழுங்கு செய்தது. அவைகளுக்கு 'அப்போஸ்தலர்கள் நடவடிக்கை' எனப்பெயர்.

தற்காலமிருப்பது போலவே கலியாண ஒழுங்குகளைத்திட்டஞ் செய்து, பிரிவினைக்காரர் ஞானஸ்நானம் செல்லக்கூடியதால் வேறு ஞானஸ்நானம் 'அவசியமில்லை' யென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இன்னும் குருக்கள் துறவிகளாய் இருத்தலின் அவசியமும், மேற்றிராணிமார்கள், குருக்கள் முதலியோருடைய அபிஷேகம் செய்யு முறைகளும் திட்டப்படுத்தப்பட்டன. ரோமை மேற்றிராணியாரே அர்ச். இராயப்பரின் பதிலாளியும், திருச்சபையின் அரசரும் எனத் தீர்மானித்து, மற்ற பிதாப்பிதாக்களுக்கு உள்ள மேலதிகாரத்துவம் இன்னின்னவை எனவும் குறித்து, இவை யாவற்றிலும் சரியான ஒழுங்குகளும் செய்யப்பட்டன. இவையாவையும் அர்ச். பாப்பு அங்கீகரித்து திருச்சபையில் அமுலுக்குக் கொண்டுவந்தார்.

## ஆரியர் மறுபடியும் கலகஞ் செய்தல்

முற்கூறிய சங்கத்தீர்ப்பை கொன்ஸ்தாந்தீன் ராயர் அங்கீகரித்து, ஆரியுஸை தம் தேசத்துக்கு வெளியே துரத்தியிருந்தும், பின்னல் நைசியாவின் விசுவாச சத்தியங்களை நம்புவதாய் இவன் பொய் சொல்லத் திரும்பவும் இவனை வரவழைத்துக் கொண்டார். ஆரியர் மறுபடியும் முன்போல் மிக்க துணிவுடன் குழப்பந் தொடங்கி, தங்களது முக்கிய விரோதியாகும் அர்ச். அத்தனாசியுஸ் மேல் அநியாயமாய்ப் பல குற்றங்கள் சாற்றினார்கள். இவையெல்லாம் அர்ச்சியசிஷ்டவர் பொய்யெனக் காட்டியும், கொன்ஸ்தாந்தீன் ராயர் ஆரியர் பக்ஷமாயிருந்து, அர்ச். அத்தனாசியுஸை விசாரிக்க டைர் என்ற இடத்தில் கி. பி. 335ல் ஓர் சங்கம் கூட்டுவித்தார்.

## டைர் சங்கம்.

சங்கத்தில் ஆரியுஸ் கூட்டத்தார் அர்ச். அத்தனாசியுஸ் மேல் ஐந்து குற்றம் சாற்றினார்கள். இவற்றில் முக்கியமானது, இவர் எகிப்து தேசத்தில் இப்செல் பட்டணத்து மேற்றிராணியாரான ஆர்செனியுஸ் என்பவரைக் கொன்று, மாந்திரிகம் செய்வதற்காய் அவரது வலது கையை அறுத்து வைத்திருந்தார் என்பதாம். அதற்கு அத்தாட்சியாக ஓர் பெட்டியைத் திறந்து அதில் ஓர் மனிதனுடைய காய்ந்த வலதுகரத்தைக் காட்டினார்கள். அதை நோக்கியதும் சங்கத்திலிருந்தவர்கள் எல்லோரும் திடுக்கிட்டு அர்ச்சியசிஷ்டவரை நோக்கிப் பார்த்த வண்ணமே இருந்தார்கள்.

ஆனால் இப்பொய்யை விளக்க அர்ச்சியசிஷ்டவர் முன்னமே முஸ்திப்பா யிருந்தமையால், சங்கத்தை நோக்கி "இதில் ஆர்செனியுஸைத் தெரிந்தவர்கள் உண்டோ?" என்று கேட்க, "ஆம் தெரியும்" எனப் பலர் சொன்னார்கள். அப்பால் தம்முடைய ஓர் குருவுக்கு இவர் சைக்கினைசெய்ய அவர் வெளியிற்சென்று ஓர் கிழவரை அழைத்து வந்தார். அக்கிழவரைச் சங்கத்துக்குக் காட்டி "இவர்தானோ நான் கொலைசெய்து வலது கரமும் அறுபட்டவர்?" எனக் காட்டினார். அக்கிழவர் உண்மையாய் ஆர்செனியுஸ் தான். ஆரியர்கள் அவரை வனத்தில் ஒழித்து வைத்திருந்தார்கள். ஆனால் தன்னைப்பற்றி அர்ச்சியசிஷ்டவர் பொய்க்குற்றம் சாற்றப்படுவ தறிந்து, அவர் அர்ச். அத்தனாசியுஸுக்குத் தன்னை அறிவித்தமையால், ஆரியர் ஜெயம் கொண்டோமெனக் குதூகலிக்குஞ் சமயத்தில், அவர்களது அநியாயச் சந்தோஷத்தை அடக்குமாறு சங்கத்தில் பகிரங்கமாய்க் காட்டப்பட்டார். "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்!" அப்பால் அர்ச்சியசிஷ்டவர், முதலில் அவரது ஒரு கரத்தையும், பின் மறு கரத்தையும் காட்டி, "மனிதனுக்கு இருகரங்களே உண்டு, அப்படியானால் பெட்டியில் வைத்திருக்கும் கரம் யாருடையது?" என ஆரியரைக் குற்றம் சாற்றிக் கேட்டார். ஆனால் அக்கூட்டத்தில் இருந்தவர்களில் பெரும்பாலார் ஆரியர்களானபடியால், இவர் குற்றவாளியல்லவென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்திருந்தும், தங்கள் பொறாமையால் குற்றம் சாட்டப்பட்ட எல்லா வகையினும், இவர் குற்றவாளி எனத் தீர்மானித்தார்கள். கத்தோலிக்க மேற்றிராணிமார்கள் மட்டும் இதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால் அவர்கள் சொற்பத்தொகையாய் இருந்தமையாலும், கொன்ஸ்தாந்தீன் ராயர் நடந்த காரியங்களை நேரில் அறியாது ஆரியர் வழியாய் மட்டும் அறிந்தபடியாலும், அர்ச்சியசிஷ்டவரைக் குற்றவாளியென்று ஏற்றுக்கொண்டு சங்கத்தின் தீர்மானத்தை அங்கீகரித்தார்.

இச்சங்கத் தீர்மானங்களில் மிக்க ஆச்சரியமானது யாதெனில், அர்ச். அத்தனாசியுஸால் கொல்லப்பட்டவரென்ற ஆர்செனியுஸ், அவர் குற்றவாளியென்று செய்த தீர்மானத்திற்குக் கையொப்பம்

இட்டிருந்தார். இச்சங்கத்தின் கேவலத்துக்கும், அதன் பொய்யான முடிவுக்கும் இதினிலும் வேறு அத்தாட்சி வேண்டுமோ?

அர்ச். அத்தனுசியுஸ் தாம் குற்றவாளியல்ல வென்பதை ராயருக்கு நேரில் விளக்கிக்காட்ட எண்ணங்கொண்டு, கொன்ஸ்தாந்திநோப்பிளிக்குச் சென்று ராயர் பட்டணத்தில் பிரவேசிக்குஞ் சமயத்தில் "உம்மைப்பார்க்க உத்தாரந்தாரும்" என்க, ராயர் அதற்குச் சம்மதியாததால், "நீர் சர்வேசுரனுக்குக் கணக்குச் சொல்லுவீர்" என்றனர். அது கேட்டு ராயர் பயந்து இவர்மேற் குற்றஞ்சாட்டியவர்களை வரவழைத்து விசாரிக்க, அவர்கள் புதிய குற்றங்களைக் கொண்டுவந்தார்கள். ஆர்ச்சிபசிஷ்டவரைச் சிரச்சேதமின்றி காலியா தேசத்தில் ஓர் இடத்துக்குப் போய்விடும்படி ராயர் தீர்ப்புச் செய்தார்.

இச்சம்பவங்களையெல்லாம் வயதுமுதிர்ந்த அர்ச். சில்வேஸ்திரி பாப்பு பொறுக்கக் கூடாதவராய் கி. பி. 335ல் மரணமாயினர்.

ஆரியர் தங்களுடைய கொள்கையை நிலைநாட்டித் திருச்சபையில் எப்படியும் நுழைத்துவிடக் கருதிப் பலவாறு முயன்றனர். கொன்ஸ்தாந்தீனது ராசதானியாகிய கொன்ஸ்தாந்திநோப்பிலி பட்டணத்திலேயே தங்கள் ஜெயத்தை ஊர்ஜிதப்படுத்த வேண்டுமென்று, அப்பட்டணத்தின் பிதாப்பிதாவான அர்ச். அலெக்சாந்தரிடம் சொல்லி ஆரியுஸைத் திரும்பவும் திருச்சபையில் சேர்த்துக்கொள்ளப் பிரயாசைப்பட்டு முடியாமல், ராயர் வழியாய் முயன்றனர். ரயார் இவனைச் சேர்த்துக்கொள்ளக் கட்டளையிட்டதால், அர்ச். அலெக்சாந்தர் ராயரிடம் சொல்லுவதில் பிரயோசனமில்லை எனக்கண்டு, தம் கிறிஸ்துவர்களுடன் சர்வேசுரனை வேண்டிக்கொண்டார்.

## ஆரியுஸ் மரணம் கி. பி. 336.

குறிக்கப்பட்ட நாள் வரவே ஆரியர்கள் குதூகலித்துப் பட்டணமுழுதும் மிக்க ஆரவாரஞ்செய்து ஆரியுஸை கோயிலுக்குக் கூட்டிப்போனார்கள். கோயிலுக்கு முன் வந்ததும் ஆரியுஸ்

உருவமாறி அங்கமுழுதும் நடுக்குற, அவனை ஓர் தனி இடத்துக்கு அனுப்பினார்கள். அதிக நேரம் அவன் அங்கிருந்து வாராமையால், அவன் சிநேகிதர் உள்சென்று பார்க்க, அவன் குடல்கள் வெளிப்பட்டு ரத்தத்தில் தோய்ந்து செத்துக்கிடந்தான். இச்சங்கதி பரம்பவே கிறிஸ்துவர்கள் சர்வேசுரனுக்குத் தோஸ்திரம் செய்தார்கள்; ஆரியரில் அநேகர் மனந்திரும்பினார்கள். ஆயினும் ஆரிய கொள்கை முற்றும் ஒழியவில்லை.

கொஞ்ச நாளுக்குப்பிறகு கி. பி. 337ல் கொன்ஸ்தாந்தீன் மரித்தார்.

## கொன்ஸ்தாந்தியுஸ் கி. பி. 337—361.

கொன்ஸ்தாந்தீன் மரணத்துக்குப்பின், அவரது குமாரர் மூவரும் பட்டத்துக்கு வந்தார்கள். இருவர் கொஞ்சகாலத்தில் மரிக்க, மூன்றாவதான கொன்ஸ்தாந்தியுஸ் கி. பி. 361ம் வரை தேசமாண்டார். இவர் முதலில் சீரியா, சின்னாசியா, முதலிய கீழ் நாடுகளின் அரசனாயிருந்தமையால், அங்குள்ள ஆரியரால் ஏமாற்றப்பட்டுக் கடைசிபரியந்தம் ஆரிய கொள்கையைக் கொண்டிருந்தார். இக்காலமெல்லாம் திருச்சபையில் சமாதானமின்றி இருந்தது. எவ்விதமெனில், கொன்ஸ்தாந்தீன் ராயர் மரணத்துக்குப்பின் அர்ச். அத்தனாசியுஸ் மறுபடியும் அலெக்சாந்திரியா சேர்ந்து மேற்றிராணியாராக, ஆரியர்கள் அவரை விடாது கொன்ஸ்தாந்தியுஸ் ராயனைக்கொண்டு மறுபடியும் துரத்தினார்கள். பின்னும் திரும்பத் திரும்ப சங்கங்கள்கூட்டித் தங்கள் கொள்கையை ஊர்ஜிதப்படுத்தினார்கள். அர்ச். பாப்புமார் அப்போதைக்கப்போதே அவற்றைத் தப்பறையென மறுத்து வந்தார்கள். கடைசியாய் ஆரியருக்கு உதவியாய்க் கத்தோலிக்க மேற்றிராணிமார்களை வதைத்து வந்த கொன்ஸ்தாந்தியுஸுக்கு மருமகனாகிய ஜூலியன் கி. பி. 361ல் தன்னை ராசனெனப் பகிரங்கஞ் செய்வித்தான். இவனுக்கு விரோதமாய்ப் படையெடுத்துச் செல்லுகையில் கொன்ஸ்தாந்தியுஸ் மரித்தார்.

# 4. ஜூலியன் கி. பி. 361—363.

## வேதகலகம்.

இம்மன்னன் முதலில் வேத வைராக்கியமுள்ளவன்போல் நடித்திருந்தும் மிகக் கர்வங்கொண்டவன். ஜோசியர்களையும், அஞ்ஞான சாஸ்திரிகளையும் கூட்டி அவர்கள் தன்னைப் பலவாறு ஸ்துதிக்கவும், பெருமைப்படுத்தவும் ஆசை கொண்டவன். இப்படியிருக்க இவனைச் சுளுவாய் அஞ்ஞானியாக்கிவிட்டார்கள். அப்பால் இவன் கிறிஸ்துமதத்தை அழிக்கவும், அஞ்ஞான மதத்தைத் திரும்பப் பழைய நிலைமைக்குக் கொண்டுவரவும் கருதினான். முதல் மூன்று நூற்றாண்டுகளில் நடந்த வேதகலாபனைகளாலும், கிறிஸ்துவர்களைச் செய்த சொல்லொண்ணா உபாதைகளாலும், கிறிஸ்து மதத்தை அழிக்கக் கூடாமையை உணர்ந்து, வேறுவகைகளால் *'கலிலேயனுடைய மதத்தை' அழிக்க முயன்று, பின்வரும் மத சுதந்தரத்தைப் பற்றிய ஓர் ஆக்கினை செய்தான். இதில் முன் அரசாட்சியில் துரத்தப்பட்ட கத்தோலிக்க மேற்றிராணிமார்களுக்குச் சுதந்தரம் கொடுத்தானெனினும், அஞ்ஞான மதக்குருக்களுக்கும், ஜோசியருக்கும், மற்றும் குறிசொல்வோர் முதலியோருக்கும், முன்னிருந்த நிலைமையை அளித்தான். இச்சட்டப்படி கொன்ஸ்தாந்தீன் ராயனால் அழிக்கப்பட்ட கோயில்கள் மறுபடியும் கட்டப்பட்டு முன்னிருந்த வரும்படிகளும் விடப்படவும், கிறிஸ்துவர்களால் அழிக்கப்பட்ட கோயில்களை அவர்களே மறுபடி கட்டிக் கொடுக்கவும், அக்கோயில்களிலிருந்து கிறிஸ்து கோயில்களுக்கு கொன்ஸ்தாந்தீன் கொடுத்த நிதிகள் திரும்பக் கொடுக்கப்படவும் கட்டளையிட்டான்.

ஆரெத்துசாவின் மேற்றிராணியார் அவ்விதம் திருப்பிக் கொடுக்க ஒன்றும் இல்லாதவராயிருக்க, சட்டப்பிரகாரம் அவரைப் பிடித்துவந்து பலவந்தமாய் அடித்து, தாடி ரோமமெல்லாம் பிடுங்கி, தேகமுழுதுந் தேனைப்பூசி, ஓர் வலையில் கட்டித் தொங்க

---

* இவ்விதமாய் இவன் நமது கர்த்தரைச்சொல்லுவது வழக்கம்.

விட்டு கொளவிகளால் கடியுண்டு இறக்கச்செய்தான். கொன்ஸ் தாந்தீன் ராயனுடைய கோபத்திற்கு இவன் குடும்பமெல்லாம் இரையாகுஞ் சமயத்தில் இவனை ஒளித்துக் காப்பாற்றிய இம்மேற் றிராணியாருக்கு இவன் செய்த பிரதி நன்றி இதுவே.

கிறிஸ்து மதத்தை உபாதைகளால் அழிக்க முடியாதென அறிந்த இவன், அதைக் கேவலப்படுத்த எண்ணினன். கிறிஸ்து குருக்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த மதிப்புள்ள சுதந்தரங்களை யெல்லாம் பிடுங்கிச் சன்னியாசிகள், கன்னியாஸ்திரீகளுக்கு அளிக்கப்பட்டுவந்த திரவிய உதவியையும் நிறுத்தினன். கிறிஸ்து மதத்தையும், கிறிஸ்துவர்களையும் கேவலப்படுத்தி மற்றோருக்குச் சிரிப்புக்கு இடஞ்செய்யக் கருதிய இவன், "அவர்கள் நல்ல வேதப்படி அவர்கள் தங்களை ஒறுக்கவேண்டும், உலக ஆசைகளை விட்டுவிடவும் வேண்டும், நானும் அவர்கள் நடக்கும் மோக்ஷ வழியைச் சுளுவாக்கவே அவர்களது திரவியங்களைப் பிடுங்குகிறேன்" என்று எக்காலத்தும் வேத விரோதிகள் சொல்லுகிற இவ்வாக்கியங்களைச் சொல்லுவான். கிறிஸ்துவர்களைக் கேவலமாய்ப் பேசும்போது, அல்லது நடத்தும்போது, அவர்கள் மனஞ் சகியாது வருத்தப்படில், "நீங்கள் உங்கள் வேதப்படி உபத்திரவங்களைச் சகிக்கவேண்டாமோ" எனக் குரூரமாய்ச் சிரிப்பான்.

பின்னும் கிறிஸ்து உபாத்திமார்கள், லத்தீன், கிரேக் பாஷைகளைப் போதியாதபடிக்கும், கிறிஸ்துப் பிள்ளைகள் இப்பாஷைகளைக் கற்காதபடிக்கும், ஓர் சட்டம் செய்தான். "அஞ்ஞானப் புத்தகங்களைப் போதித்தால் அஞ்ஞானக் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளுங்கள். நீங்களோ அப்படி ஏற்றுக் கொள்ளுகிறதில்லை; ஆகையால் அவற்றைப் போதியாதிருங்கள்" என்று மனிதர்கள் எதையும் படித்து அறியும் இயல்பான சுதந்தரத்தை நீக்கினன். ஆனால் கிறிஸ்துவர்கள் உடனே அநேக புத்தகங்கள் எழுதினர்களாகையால், படிப்பு விஷயத்தில் அவர்களுக்கு எவ்வித கஷ்டமும் நேரிடவில்லை.

ஜூலியன் கிறிஸ்துவர்களை வதை செய்ய விருப்பாயிடினும் இவனைச் சுற்றியுள்ளோர் சுளுவில் இவனை ஏமாற்ற இக்காலத்தும் பலர் வேதசாட்சிகளானார்கள். தியோக்கிலேசியன் காலத்தும் அறிந்திராத ஓர் குரூரச்செயலைக் கைபாடி, அநேக கன்னியாஸ்திரிகளை உடையின்றிப் பலரும் பார்க்கச் செய்தபின், வயிற்றைப் பிளந்து உள்ளே காஞ்சியைப்போட்டு நிரப்பிப் பன்றிகளைத் தின்ன விடுவார்கள்.

இப்படியும் கிறிஸ்துமதம் அழியாமை கண்டு, "அறுபத்திரண்டு வாரங்களின்பின் கிறிஸ்துவானவர் கொல்லப்படுவார். ஓர் சாதியார் தங்கள் தளகர்த்தனோடு வந்து ஜெருசலேம் பட்டணத்தையும், அதன் தேவாயத்தையும் அழிக்கப் பலிகள் நிறுத்தப்பட்டு, உலகம் முடிவுபரியந்தம் இருக்கும்" என்ற தானியேல் தீர்க்கதரிசனத்தையும், "இத்தேவாலயம் அழிக்கப்படும், கல்லின்மேல் கல் நில்லாது" என்ற நமது கர்த்தரின் வாக்கியத்தையும் பொய்ப்படுத்தி, கிறிஸ்துமதம் பொய் மதம் எனக்காட்டக் கருத்துக்கொண்டு, ஜெருசலேம் தேவாலயத்தை மறுபடியும் கட்ட ஏற்பாடு செய்தான்.

## ஜெருசலேம் தேவாலயம்.

அர்ச். சிரில் அப்போது ஜெருசலேமில் மேற்றிராணியாராய் இருந்தார். பெருந்தொகையான அஞ்ஞானிகள் கூடியதையும், தேவாலயத்தைக் கட்ட அநேக சாமான்கள் சேர்க்கப்பட்டதையும் பார்த்த கிறிஸ்துவர்கள் பயந்திருக்க, இவர் அஞ்ஞானிகள் செய்யும் ஏற்பாடுகளால் அவர்களே அபஜெயமடைவார்களென்று அவர்களைத் தேற்றி வந்தார். வேண்டிய சாமான்கள் வந்து சேர்ந்ததும், பகலும் இரவுமாக வேலைசெய்து முன்னிருந்த அஸ்திவாரக் கட்டடத்தைப் பெயர்த்துக் கல்லின்மேல் கல் நில்லாது என்னும் நமது கர்த்தரின் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றி ஒரு கல்லுமின்றி எடுத்துவிட்டார்கள். அப்போது சர்வேசுரன் தமது வல்லமையைக்காட்டினார். எப்படியெனில், இவர்கள் மறுபடியும்

கட்டடத் துவக்கு முந்திய நாளில் அஸ்திவார மிடவேண்டிய கற்களைக் குழியில் போட்டிருந்தமையால், அன்று இராத்திரி ஓர் பெரிய பூகம்பம் உண்டாகி, அக்கற்கள் தூரத்தில் எறியப்பட்டுச் சுற்றிலுமுள்ள கட்டடங்கள் அழிந்தன. தேவாலயம் கட்டப்படுவதைப் பார்க்கப் பலவிடங்களிலுமிருந்து வந்திருந்த அநேக யூதர்கள் அந்த இரவு தங்கியிருந்த கட்டடங்கள் அழிந்து, அவற்றில் இருந்தவர்களெல்லாம் உயிர் துறந்தார்கள். மேலும் புசற்காற்று எழும்பி, அங்கே சேர்த்து வைக்கப்பட்டிருந்த மணல், சுண்ணும்பு, இன்னும் மற்ற சாமான்களையும் சிதறடிக்க, அஸ்திவாரத்தினின்று கிளம்பிய நெருப்பு, தேவாலயத்தின் கீழ் மண்ணுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த வேலைக்கருவிகளை யெல்லாம் எரித்துவிட்டது. பொழுது விடிந்ததும் சனங்கள் முன்னிரவின் சேதத்தைப் பார்க்க அங்குமிங்குமாய் செல்லுகையில், கட்டடத்தின் மத்தியில் நெருப்புண்டாகி நாற்பக்கமும் வீசிப் பக்கத்தில் அணுகிய யூதரையெல்லாம் கொன்றது. அதே நாளில் பலமுறை தீக்கிளம்பியதுடன், அவர்கள் உடுப்புகளின் மேல் அக்கினிச் சிலுவைகளும் பதியப்பட்டன. இவற்றை நீக்க அவர்கள் செய்த பிரயாசை ஒன்றும் சித்திக்கவில்லை. இத்துடன் வானத்தில் ஓர் அக்கினிச் சிலுவையும் தென்பட்டது.

இவ்வகைகளால் சர்வேசுரன் தமது பராக்கிரமத்தைக் காட்டியும் யூதர்கள் புத்தி தெளியவில்லை. பின்னும் பின்னுங் கட்டடத்தைத் துவக்க முஸ்தீப்புச் செய்தார்கள். ஆனால் ஒவ்வொரு சமயமும் அக்கினி தோன்றி வேலையாட்களை அணுக விடாது துரத்தினதை ஜூலியன் அறிந்து, கட்டடத்தை நிறுத்திவிடக் கட்டளை செய்தான். சர்வேசுரனைப் பொய்யாக்க எண்ணி, அவர் வாக்கியத்தை உலகுக்கு நிலைநாட்டி இவன் அடைந்த முதல் அபஜெயம் இது!

## பாரசீக யுத்தம், ஜூலியன் மரணம்.

கிறிஸ்து மதத்தை அழித்து அஞ்ஞானத்தை ஸ்தாபித்தலுடன், போராடி தேசம் சேர்க்கவும் ஜூலியன் ஆசித்திருந்தான்.

ஆனால் முந்திய எண்ணங்கள் எவ்விதம் நிறைவேறாமற் போயிற்றோ அப்படியே யுத்தமுமாகி, போர்க்களத்திலேயே அவன் முடிவும் ஏற்பட்டது. ஜூலியன் பாரசீகத்தை ஜெயிக்கத் தொடங்கி சில வெற்றிகளடைந்து அத்தேசத்தினுள்ளே சென்றான். ஓர் நாள் அவன் கூட்டத்தில் சேர்ந்த புலவனாகிய லிபானியுஸ், அந்தியோக்கியா பட்டணத்தில் தனக்கு அறிமுகமாயிருந்த ஓர் கிறிஸ்துவனை நோக்கி, "தச்சனுடைய மகன் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறான்" என்று கேவலமாய்க் கேட்க, அக்கிறிஸ்துவன் "ஜூலியனது அடக்கத்துக்குப் பெட்டி செய்கிறார்" என மறுமொழிந்தான். கி. பி. 365 ஜூன் 26ல் பாரசீகரால் ஜூலியன் முறியடிக்கப்பட்டுப் பின்னிடைந்தான். பின்னிடைந்து ஓடுகையில் தன் சேனையைப் பாரசீகர் துரத்திப் பின்னுள்ளோரைத் தாக்கியதைக் கண்டு, உருக்கவசம் அணியாமல் அங்கு சென்று சில ஏவல்கள் கற்பிக்குஞ் சமயத்தில் திடீரென இன்ன விடமிருந்து வந்ததென்று யாரும் அறியக்கூடாமல், ஓர் அம்பு இவனைத் தாக்கி ஈரல் மட்டும் பாய்ந்தது. அச்சமயம் இவன் தன் காயத்தில் விரலை வைத்துக் கை நிரம்ப இரத்தத்தைப் பிடித்து ஆகாயத்தில் வீசி, "கலிலேயனே! நீ ஜெயித்துக்கொண்டாய்" எனத் தூஷணம் கக்கிக் கொண்டு தரையில் விழுந்து செத்தான். ஜூலியன் மரண முதல் அஞ்ஞானம் தொலைந்து சத்திய ஜெயக்கொடி எங்கும் விளங்கிற்று.

## 5, வேதபாரகரும் அர்ச்சியசிஷ்டவர்களும். மாசிடோனியர் பதிதமதம்.

ஜூலியனுக்குப் பின் கி. பி. 364 முதல் 379 வரையில் கீழ்த் தேசங்களில் ஆண்ட வாலென்ஸ் ஒருவனைத் தவிர மற்றெல்லோரும் சத்திய வேதத்துக்கு ஒத்தாசையா யிருந்தார்கள்.

இவர்களில் முக்கியமானவர் மகா தியோடோசியுஸ். இவர் கி. பி. 379 முதல் 395 வரை ஆண்டார். இக்காலத்தில் திருச்சபை மிகச் சிறந்தோங்கிற்று. எப்படியெனில், ஆரிய மதத்தை

அழித்து, ஆரியர்களுக்கு விஷமே போன்ற அத்தனாசியுஸுக்குப் பிறகு திருச்சபையில் அவரைபொத்த வேதபாரகரும் அர்ச்சிய சிஷ்டவர்களும் இல்லாமற் போகவில்லை. இவர்களில் முக்கியமான சிலரை மட்டும் இங்கு குறிப்பேன்.

## அர்ச். கிரெகோரி நாசியான்சன்.

இவர் கொன்ஸ்தாந்திநோப்பிலி பட்டணத்தின் பிதாப்பிதாவாகி, ஆரியருடைய கலாபத்தால் தன் மேற்றிராசனத்தை விட்டுத் தனியே சென்று தவம் புரிந்து கப்படோசியாவில் கி. பி. 389ல் மரித்தார். இவர் அநேக நிருபங்களும், வியாக்கியானங்களும் செய்துள்ளார். இவற்றின் சிறப்பைக் குறிக்க இவருக்கு 'தியோலோசியன்', அல்லது வேத சாஸ்திரி என்ற பட்டம் அளிக்கப் பட்டது. இவர் கிரேக் சாஸ்திரிகளில் ஒருவரெனக் கொண்டாடப் படுவர்.

## அர்ச். பேசில்.

மேற்படியாரது சிநேகிதராகிய அர்ச். பேசில் கப்படோசியா தேசத்தில் செசாரியாவின் மேற்றிராணியார். இவர் அநேக நிருபங்களும் தர்க்க நூல்களும், சுவிசேஷ வியாக்கியானங்களும் எழுதியுள்ளார். இவர் ஆரிய மதத்தைத் தழுவிய வாலென்ஸ் ராயனால் மிகவும் துன்பப் படுத்தப்பட்டு, முன்னைய வேதசாட்சிகளைப்போலவே சற்றும் பின்னிடாது நிலையாய் நின்றவர். எப்படியெனில், ஓர்நாள் ராயன் தன் அதிகாரியை இவரிடம் அனுப்ப, அவன் "ஆரிய கொள்கையை ஏற்றுக் கொள்ளாவிடில் உமது சொத்துக்களைப் பிடுங்குவேன்" எனவும், "என் தேசத்திலிருந்து துரத்தி மரணத்துக்குத் தீர்வை யிடுவேன்" எனவும் பயமுறுத்தினன்,

அர்ச். பேசில் அதிகாரியை நோக்கி, "என் விசுவாசத்தைத் தவிர எனக்குச் சொத்து யாதுமில்லை, தூர தேசத்துக்குத் துரத்தினால் எனக்குப் பயமுமில்லை; ஏனெனில் மோக்ஷத்தைத் தவிர உலகமெல்லாம் பரதேசமும், உலக சீவியம் மோக்ஷத்துக்குச்

செல்லும் வழியும், மரணமானது சீக்கிரத்தில் சர்வேசுரனிடம் செலுத்தும் வாசலுமாதலால், அதுவும் எனக்குப் பயமுள்ளதல்ல'' என்றார். அதிகாரி இவரது மனத்திடத்துக்கு ஆச்சரியமுற்று, "உம்மைப்போன்ற ஒரு மனிதனை இதுவரை கண்டறியேன்'' என்றனன். அர்ச். பேசில் பதிலாக "நீ ஒரு மேற்றிராணியாரை இதுவரை பார்த்திருக்க மாட்டாய். மேற்றிராணிமார்கள் உலக விஷயங்களில் ராயருக்கு மட்டுமல்ல, அவரது அடிமைகளுக்குங் கூடப் பணிவார்கள். ஆனால் விசுவாச விஷயங்களில் சர்வேசுரனைத் தவிர மற்று யாவருக்கும் பணியார்கள்'' என்றார்.

இராயன் இவ்விஷயங்களைக் கேட்டு ஆச்சரியமுற்றுச் செசாரியா சென்று இவரைப் பார்த்தான். இவர் கி. பி. 379ல் மரித்தார்.

## * அர்ச். கிறிசொஸ்தோமுஸ் அருளப்பர்.

இவர் கொன்ஸ்தாந்திநேப்பிளி பட்டணத்தில் அதிமேற்றிராணியாராயிருந்து ஆரிய துர்ப்போதனையை எற்ற ராயனால் துரத்தப்பட்டு கி. பி. 407ல் மரித்தார். இவர் அநேக நூல்கள் செய்துள்ளார். இவர் மகா சாதுரியமான பிரசங்கியாதலால் இவருக்கு 'பொன்வாய் அருளப்பர்' என்ற பேரளிக்கப்பட்டது.

## அர்ச். அம்புரோசியார்.

இத்தாலியாவில் மில்லான் பட்டணத்தின் மேற்றிராணியாராகி பேர்பெற்ற வேதசாஸ்திரியான அர்ச். அம்புரோசியார் இக்காலத்தவர். தேதேயும் என்ற உன்னதசங்கீதஞ் செய்தவர் இவரே. தவிர, "அம்புரோசியார் சடங்குகள்'' என்று சொல்லப்படும் சடங்குகளையும் எழுதியுள்ளார். இவர் காலத்தில் கி. பி. 390ல் தெசலோனிக்காவில் ராயருக்கு விரோதமாய்க் கலகம் ஏற்படவே ராயர் பட்டாளத்தை யனுப்பி, ஜனங்களை மிருகங்களைப்போல் கொல்லக் கட்டளையிட, அநேகம் பேர் அநியாயமாய் மடிக்கப்

---

* அர்ச். கிறிசொஸ்தோமுஸ் அருளப்பரைப் பற்றிப் பின் அத்தியாயத்தில் காண்க.

பட்டார்கள். அது முடிந்தபின் ராயர் மில்லான் பட்டணம் வருவதையறிந்து ஆர்ச். அம்புரோசியார் அரசனது கோபத்தையும் அவரது பெரிய குற்றத்தையும் கடிந்து ஓர் கடிதம் எழுதி, "உம்முடைய சந்நிதியில் நான் பூசை செய்யத் துணியேன்" என்றனர். ஆயினும் அரசன் பூசைக்கு வர உத்தேசித்திருந்தமையால் அர்ச்சியசிஷ்டவர் முன்னடியே கோயில் வாசலுக்குச் சென்று, ராயரை நோக்கி, "இரத்தத்தில் தோய்ந்துள்ள உமது கரங்களை நீர் சர்வேசுரனுக்குக் காட்ட எவ்விதம் துணிந்தீர், உமது குற்றங்களுடன் இன்னும் ஏன் குற்றங் கட்டிக் கொள்ளுகிறீர்; ஆகையால் உள்ளே நுழையாது போம்" என்று சொல்லினர். ராயர் திடுக்கிட்டு, "தாவீது ராசா என்னைப் போல் குற்றஞ் செய்யவில்லையோ?" என்றனர். உடனே அர்ச்சியசிஷ்டவர், "நீர் தாவீது ராசாவைப் போல் பாவம் செய்தமையால் அவரைப்போல் தவமும் செய்" என்று செப்ப, ராயர் அரண்மனைக்குத் திரும்பித் தம் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டார். எட்டு மாதங்கழிந்து கர்த்தர் பிறந்த திருநாளை ராயர் மற்ற கிறிஸ்துவர்களைப் போல் தாமும் கொண்டாட முடியாததற்கு விசனித்து அர்ச்சியசிஷ்டவரிடம் சென்று, "என் குற்றத்தை மன்னித்து என்னைத் திருச்சபையில் மறுபடியும் சேர்க்கவேண்டும்" என வேண்டிக்கொண்டார். அவர் பதிலாக, "நீர் என்ன தவம் செய்துள்ளீர்" என்று கேட்டார். "நான் இன்ன பரிகாரம் செய்ய வேண்டுமென்று நீர் அல்லவோ கட்டளையிடவேண்டும்" என்று ராயர் சொல்ல, அம்புரோசியார், "உம்முடைய குற்றம் கோபத்தினுல் ஏற்பட்டமையால் உமது கோபத்தை இனிமேல் அடக்க முயலுவதுடன், உமது ராச்சியத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 30 நாட்களுக்குப் பிறகே நடத்தப்பட வேண்டுமென ஓர் சட்டம் பிறப்பியும்" என்று கட்டளையிட்டார். அப்படியே அரசன் செய்ய, அர்ச். அம்புரோசியார் தமது மன உறுதியால் மேற்றிராணிமார்கள் எப்படியிருக்க வேண்டுமென்றும், ராயர் தம் தாழ்ச்சியால் கிறிஸ்து அரசர்கள் எப்படிப்பட்ட நடத்தை உள்ளவர்களாயிருக்க வேண்டுமென்றும் அத்தாட்சி யானர்கள்.

## அர்ச். இலாரியும். அர்ச். மர்த்தீனும்.

திருச்சபையின் மூத்த மகளென்ற சுவிகாரப்பட்டம் பெற்ற பிராஞ்சு தேசம் அக்காலத்திலேயே மிகச் சிறப்புற்றோங்கியது. அதிலும் அநேக அர்ச்சியசிஷ்டவர்கள் இருந்தார்கள். இவர்களில் மிகச் சிறப்புற்றவர்கள், அர்ச். இலாரியும், அர்ச். மர்த்தீனும். அர்ச். மூர்த்தீன் பிராஞ்சு தேசத்தார் விசேஷமாய்க் கொண்டாடப்படும் அர்ச்சியசிஷ்டவர்களில் ஒருவர். இவர் பன்னோனியாவில் 316ல் பிறந்து போர்ச் சேவகத்தில் அமர்ந்திருந்தார். ஓர் நாள் இவர் அமியெனுக்குக் குதிரையேறிப் போகையில் யாது உடையுமின்றித் தரித்திரம் மூண்டு குளிரால் நடுங்கிச் சாகக் கிடக்கும் ஓர் ஆளைக் கண்டார். இம்மனிதன் நமது திவ்விய கர்த்தரன்றி வேறு யாருமல்ல. சேவகர் ஏழைக்குக் கொடுக்க ஒன்று மில்லாமையால் தன் வஸ்திரத்திற் பாதியைக்கிழித்து அந்த ஏழையை மூடினார். பின் இவர் குருப்பட்டம் பெற்று டூர்ஸ் நகர மேற்றிராணியாராகித் தமது வைராக்கியத்தாலும், தருமத்தாலும் பிராஞ்சு தேசமுழுதும் மிகச் சிறப்புற்றோங்கி அநேகரை மனந் திருப்பினார். இவர் கி. பி. 397ல் மரித்தார். பிற்கால ராயர்களால் பிராஞ்சு தேசம் இவர் பாதுகாவலில் வைக்கப்பட்டது.

## மாசிடோனியர் பதிதமதம்.

ஆரிய கொள்கை உண்டானதும், அதை அழிக்கச் செய்த முயற்சிகளும், அது க்ஷீணதசை அடைந்ததும், முன் வாசித்திருக்கிறோம். அது தொலையுஞ் சமயத்தில் மாசிடோனிய கொள்கை யென்ற ஓர் புதுத்தப்பறை கிரீஸ் தேசத்தில் கிளம்பிற்று. கி. பி. 341ல் ஆரியரால் கொன்ஸ்தாந்திநோப்பிளி மேற்றிராணியாராக்கப் பட்டு, அவர்களாலேயே பின்னர் அப்பட்டத்திலிருந்து நீக்கப்பட்ட மாசிடோனியுஸ், கி. பி. 695ல் கத்தோலிக்க மதத்துக்கு விரோதமாய் “இஸ்பிரீத்து சாந்து தேவனல்ல, சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்களில் ஓர் விசேஷ சிருஷ்டிப்பு” என்று பிதற்றினன்.

இதைத் தொலைக்கப் பின்வரும் சட்டத்தைத் தியோ டோசியுஸ் ராயர் ஆக்கியாபித்தார். "நமது பிரசைகள் அப்போஸ் தலர்கள் தலைவராகிய அர்ச. இராயப்பரால் போதிக்கப்பட்டு அவர் பதிலாளியாகும் அர்ச். பாப்புவால் இப்போது கொள்ளப்படும் கொள்கையின் பிரகாரம், பிதாவும், சுதனும், இஸ்பிரீத்துசாந் துவும், ஒரே ஏக சர்வேசுரனுய், மூவரும் சரிசமானமான வல்லமை பொருந்தி, ஒரே திரித்துவ மெனக் கொள்ளுவார்கள். இப்படிக் கொள்ளுபவர் மட்டும் கத்தோலிக்கர், மற்றவர் அஞ்ஞானிகள். ஆகையால் அன்னவர் கூட்டங்களைத் திருச்சபை என்று சொல்லத் தகாது."

## 2-ம் பொதுச்சங்கம்,

## கொன்ஸ்தாந்திநோப்பிலி கி. பி. 381.

ஆனால் தமது சட்டத்தால் இத்தப்பறையைத் தொலைக்க முடியாமல் கொன்ஸ்தாந்திநோப்பிலி பட்டணத்தில் திருச் சபையின் ஓர் பெரிய சங்கம் கூட்டுவித்தார். இதில் வயோதிகரான அர்ச். பாப்பு வரக்கூடாமை பற்றி, அந்தியோக்கியா பட்டணத்தின் பிதாப்பிதாவாகிய அர்ச். மிலேசியுஸ் அக்கிராசனம் வகித்தார். இக்கூட்டத்துக்கு முன், ராயர் கண்ட கனவில் இவ்வர்ச்சிய சிஷ்டவர் ஓர் கரத்தில் ராச உடையும், மற்ற கரத்தில் முடியும் கொண்டவராய்த் தோன்றினர். ஆகையால் தம் கனவைப் பரி சோதிக்க விரும்பி பிறர் உதவியின்றித் தாமாகவே அவரைக்கண்டு, அவரது பேர்பெற்ற பரிசுத்ததன்மையையும் அறிந்து அவரை யணுகி மிகப் பயபக்தியுடன் வரவேற்றார்.

இச்சங்கத்தார் மாசிடோனியர் தங்கள் குற்றத்தை உணராமையால், நைசியா சங்கத்தின் தீர்மானங்களை அவர்கள் விஷய மாய் மறுபடியும் ஊர்ஜிதம் செய்ததுமன்றி, இரண்டாம் ஆளாகிய சுதனைக் குறித்துப் பின்வரும் வார்த்தைகளைச் சேர்த் தார்கள்.

"அவர் மனிதராகிய நமக்காகவும், நமது ரக்ஷணியத்துக்காகவும், பரலோகத்தினின்று அவதாரமாகி, இஸ்பிரீத்துசாந்துவால் கன்னிமரியாயிடத்தில் கற்பமாகி, மனிதனுனர். மேலும் நமக்காக போஞ்சுப்பிலாத்தின் அதிகாரத்தில் சிலுவையில் அறையுண்டு, பாடுபட்டு, அடக்கப்பட்டார். வேதாகமப்படி மூன்றும் நாள் உத்தானமானுர். பரலோகத்துக்கு ஆரோகணமாகி, பிதாவின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிருர். சீவியர்களையும், மரித்தவர்களையும் நடுத்தீர்க்க திரும்பி வருவார்."

மூன்றும் ஆளைக் குறித்த விஷயமாய், "ஆண்டவரும் சீவியங்கொடுக்கிறவரும், பிதாசுதன் ஆகிய இருவரிடமிருந்து புறப்படுகிறவரும், பிதாவோடும், சுதனேடும், ஒன்றுய் ஆராதிக்கப்படுகிறவரும், தீர்க்கதரிசிகளைக்கொண்டு பேசியவருமாகிய இஸ்பிரீத்து சாந்துவையும் விசுவசிக்கிறேம்" என நிரூபித்தார்கள். ராயர் இத்தீர்மானங்களை ஏற்று ஓர் சட்டம் போல் ஆக்கியாபித்தார்.

இதில் கூடியவர்கள் கீழ்தேசத்தவர்களாயினும், அர்ச். தமாசுஸ் பாப்பு இவற்றை அங்கீகரித்துத் திருச்சபையில் ஏற்றுக்கொள்ள, இச்சங்கம் திருச்சபையின் இரண்டாவது பொதுச் சங்கம் ஆயிற்று.

# 2-ம். அத்தியாயம்.

## மிலேச்சர்கள் படையெழுச்சி. கி. பி. 395—456.

உட்பிரிவுகள்:—

பதித மதங்களும், அவற்றை மறுத்து ஜெயங்கொண்ட வேத சாஸ்திரிகளும்; மிலேச்சர்கள் படையெழுச்சி; அர்ச்சிய சிஷ்டவர்கள்.

### ரோமைநாட்டின் நிலைமை.

மகா தியோடோசியுஸ் கி. பி. 395ல் மரித்தார். அதற்குப் பின் ரோமைநாடு க்ஷீணதசை அடைந்தது. மிலேச்சரான மேல் காத்தியர், கீழ்காத்தியர், வந்தலர், பர்கண்டியர், பிராஞ்சுக்கர்ரர், சாக்சோனியர், எனப் பல சாதியார், ரோமை ராச்சியத்தின் வடக் கெல்லை முழுதும் அதனுள் பிரவேசிக்க சமயம் பார்த்துக் கொண் டிருந்தார்கள். நாட்டினுள்ளும் அவர்களே முக்கியமாய்ப் போர்ச் சேவகருமானார்கள். இதே காலத்தில் ரோமை நாடும் மேல் ரோமை நாடென்றும், கீழ்ரோமை நாடென்றும் பிரிவுண்டு, பின் ஒருகாலும் ஒன்று கூடவில்லை. அநேக வருஷங்களாய்க் கத்தோ லிக்கு தேசமாயிருந்தும், அந்நாட்டார் உண்மையில் கத்தோலிக்க ரன்றித் தங்கள் செல்வங்களாலும், அதிகார சம்பத்துக்களாலும் ஒழுக்கந் தவறியிருந்தார்கள். அநேக பிரசித்தி பெற்ற அர்ச்சிய சிஷ்டவர்கள் இருந்தும் இந்நாடு முற்றிலும் திருத்தப்படவில்லை. இக்காரணம்பற்றி இத்தேசம் மிகக் கேவல அந்தஸ்தில் இருந்தமை யால், சர்வேசுரன் புதிய சாதியார்களைக் கொண்டு, ரோமையரைத் தண்டிக்கவும் சீர்திருத்தவும் சித்தமானார்.

### தோனாத்தியரும் அர்ச். அகுஸ்தீனும்.

மூன்றும் நூற்றாண்டின் துவக்கத்தில் தோனாத்தியர் தோன் றினதும், அப்பிரிவினை கண்டிக்கப்பட்டதும் முன் அத்தியாயத்தில் கூறியிருக்கிறது.

அவர்கள் தண்டிக்கப்பட்டுக் கொஞ்சகாலம் பொறுத்து, மறுபடியும் முன்னிலும் அதிக குழப்பம் செய்தார்கள். ஆயுத பாணிகளாய் கோயில்களில் நுழைந்து பலிபீடங்களை இடித்துப் பூசைப் பாத்திரங்களையும் கொள்ளையிடுவார்கள். கிறிஸ்துவர்களைப் பிடித்து பலாத்காரமாய்த் தங்கள் ஞானஸ்நானத்தைக் கொடுப்பார்கள்.

இப்படி இவர்கள் கலகஞ் செய்து வருங்கால், ஆப்பிரிக்காவில் இப்போ பட்டணத்தில் அர்ச். அகுஸ்தீன் பேர்பெற்ற வேத சாஸ்திரியாய் விளங்கினர். இவர் கி. பி. 354ல் நுமிடியாவில் பிறந்து தமது அர்ச்சியசிஷ்ட தாயாரால் நன்கு வளர்த்தப்பட்டார். ஆனல் அஞ்ஞான நூல்களால் உலக நாட்டமுற்றுத் தம் சங்கீர்த்தனத்தில் (Confessions of St. Augustine) சொல்லியவாறே ஞானமின்றி இருள் மூண்டவரானர். இவரது தாயார் மிக விசனமுற்று, இவர் மனந்திரும்ப ஓயாமல் வேண்டிக் கொள்ளுவாள். இவர் ரோமையிலும், மில்லான் பட்டணத்திலும, இரண்டு வருஷம் உபாத்தியாயராய் மிகச்சிறப்புற்று இருக்குங்கால், அர்ச். அம்புரோசியாரது பிரசங்கங்களைக் கேட்கும் அதிர்ஷ்டம் நேர்ந்தது. சர்வேசுரன் அங்கே இவர்க்காகக் காத்திருந்தார் போன்று, திடீரெனத் தேவ இஷ்டப்பிரசாதத்தின் ஓர் கதிர் இவரை ஊடுருவ, இவர் உலகத்தையும் லௌகீக சாஸ்திரங்களையும் வெறுத்து, ஞானஸ்நானம் பெற்று கி. பி. 393ல் குருவும், 398ல் இப்போ பட்டணத்தின் மேற்றிராணியாருமானர்.

அதுமுதல் தோனத்தியரைத் திருச்சபையில் திருப்பிச் சேர்க்க மிகவும் பிரயாசைப்பட்டு அநேகரை மனந்திருப்பினர். ஆனல் வேறு அநேகர் அதிக பிடிவாதம் உள்ளவர்களாகி, இவரைக் கொல்ல ஏற்பாடு செய்தார்கள். கருணைக் கடலான சர்வேசுரன் இன்னும் அதிக உழைப்புக்காய் இவரை இக்கொடுமையினின்று தப்புவித்தார். கடைசியாய்க் கத்தோலிக்க மேற்றிராணிமார்கள் வேத குழப்பத்தை அடக்க ஓர் சங்கம் ஏற்படுத்த, கத்தோலிக்கர், தோனத்தியர் ஆகிய இருதிறத்து மேற்றிராணிமார்களும் கார்த்தேஜ் பட்டணத்தில் கூடினர்கள். ஒவ்வொரு கட்சியாரும்

தங்களில் ஏழுபேரைக்குறித்து, அவர்கள் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளச் சம்மதிக்க, அங்கிருந்த சுமார் 300 கத்தோலிக்க மேற்றிராணிமார்கள், தோனத்தியர் தங்கள் தப்பறையை விட்டுத் திரும்புவார்களாகில், தங்கள் மேற்றிராசனங்களை அவர்களுக்கு ஒப்புவிப்பதாய் வாக்களித்தார்கள். கத்தோலிக்கருடைய பிரதிநிதிகளில் முக்கியமான அர்ச். அகுஸ்தீன், பற்பல நியாயங்களால் தோனத்தியருடைய குற்றங்களை எடுத்துக் காட்டியதின் மேல், அநேகர் தப்பறையை உணர்ந்து மனந்திரும்பினார்கள். (கி. பி. 411.)

## அர்ச். கிறிசோஸ்தோமுஸ் முடிவு.

முன் அத்தியாயத்தில் விசேஷ அர்ச்சியசிஷ்டவர்களில் ஒருவராகவும்,* திருச்சபையின் ஓர் வேத சாஸ்திரியாகவும், இவரைக் குறித்துச் சொல்லியிருக்கிறது. இவர் கொன்ஸ்தாந்திநேப்பிலி பட்டணத்தின் அதிமேற்றிராணியாராகி, குருக்கள், விசுவாசிகள், இவர்களது ஒழுக்கங்களை மேன்மேலும் சீர்திருத்த முயன்று, அவர்கள் குற்றங்களை சற்றும் பின்வாங்காது கண்டித்து வருவார். இதினால் இவருக்கு அநேகர் விரோதிகளானார்கள். மாதர்களது ஒழுக்கமற்ற நடத்தையைப் பொதுவில் இவர் கண்டித்ததைப் பகைவர் ராணிக்கு அவளைக் குறித்ததாய்த் தெரிவித்துக் கோபமூட்டினார்கள். அவளோ அரசனுக்குக் கோபமூட்டி இவரைத் தூர தேசத்துக்குத் துரத்தினாள்.

ஜனங்கள் அதைக்கேட்டு மறுநாள் கோயில்களில் நுழைந்து மிகவாய் அழுதார்கள். அன்றியும் அன்று இரவில் பூகம்பம் உண்டாகி பட்டணமெங்கும் நடுங்கச் செய்ததால், ராணி பயந்து மறுநாளே இவரைத் திரும்பி வரும்படி நிருபம் எழுதினாள். இவ்விதமாய் சர்வேசுரனுடைய பலத்தால் இவர் திரும்பிவர, பகைவர் கொஞ்சகாலம் பயந்திருந்தார்கள்.

ஆயினும் இரண்டு மாதங்களின் பின் இவர் வேறு புதிய ஒழுங்கீனங்களைக் கண்டிக்க, ராணி கோபங்கொண்டு இவரை மறுபடியும் துரத்த ஏற்பாடு செய்தாள். ஆனால் அர்ச்சியசிஷ்டவர்,

"நான் சர்வேசுரனிடமிருந்து என் ஆளுகையைப் பெற்றமையால் உமது சேவகர் என்னைப் பலாத்காரமாய்க் கொண்டுபோனு லொழிய இவ்விடம் விட்டுப் பெயரேன்" என ராயனுக்கு மறு மொழி பகர்ந்தார். ராயன் கொடிய செய்கைக்குப் பின் வாங்கினு னில்லை. இச்செய்தி அர்ச். பாப்புவுக்குத் தெரியவே, அவர் கிறிஸ்துவர்களுக்கும், மேற்றிராணிமார்களுக்கும், இக்குரூரச் செயலைக் கண்டித்தும், அவர்களைத் தேற்றியும் நிருபம் எழுதினர். அர்ச்சிபசிஷ்டவர்க்கும் தேறுதலாக ஓர் கடிதம் எழுதிவிட்டு, மேல் ரோமை அரசனைக் கொண்டு ராயனுக்கும் எழுதும்படி செய் தார். ஆனுல் இந்நிருபம் கொண்டு வந்த மேற்றிராணிமார்களை ராணி சிறைப்படுத்தியதால், அர்ச்சியசிஷ்டவர்க்கு யாது நன்மை யும் உண்டாகாமல் பரதேசத்திலேயே மரித்தார். ராயனும் சற்றுப் பின் கி. பி. 408ல் மரித்தான். பின் வந்த சிறிய தியோடோசியுஸ் (கி.பி. 408-450) காலத்தில் கீழ்நாடுகளில் சமாதானம் வழங்கிற்று.

## பெலாசிய பதிதமதம்.

கீழ்நாட்டில் சமாதானம் ஏற்படவே மேல்நாட்டில் இங்கிலாந் தில் ஓர் தப்பறை தொடங்கியது. பெலாசியுஸ் என்னும் ஓர் குரு, "ஆதாம் ஏவாள் பாவம் நம்மைத் தொடர்வதில்லை. ஆகையால் ஞானஸ்நானத்தால் நீக்கப்படுதற்கு சென்மப்பாவம் இல்லை. இத் தேவத்திரவிய அநுமானத்தால் ஞான சீவியத்தின் முத்திரை மட்டும் பதிக்கப்படுகிறது. மனிதனுடைய சுயபுத்தி மழுங்காமல், ஆதாம் ஏவாளுக்கு அவர்கள் பாவம் செய்யுமுன் எப்படியிருந் ததோ அப்படியே இருக்கிறது. ஆகையினுல் தேவகற்பனைகளை முழுதும் அநுசரிக்கவும், சகல சோதனைகளையும் விலக்கவும், சாங்கோபாங்கத்தின் கொடுமுடியை அடையவும், சுபாவத்திற்கு மேற்பட்ட உதவி சற்றும் அவசியம் இன்றி, மனிதனது சுய இச்சையே போதும்" என்று கற்பித்தார். இவ்விதக் கொள்கை யால் திருச்சபை கற்பிக்கும் வரப்பிரசாதப் போதனையை அழித் ததுமன்றி, இரக்ஷணிய பரமரகசியத்தையே அடியோடு தொலைத்து விட்டார்.

மனிதனது இயற்கையான மனம் சென்மப்பாவத்தால் சற்றும் பழுதுபடாமலிருந்து, தேவகட்டளைகளைப் பூரணமாய் அநுசரிக்கவும், நித்திய பாக்கியமடையவும் வழிதேட அச்சுய புத்தியே போதுமாயிருந்தால், சர்வேசுரன் மனிதனுக்கவும் பாடு படவும் வேண்டுமோ? பரிச்சேதகம் வேண்டியதில்லை. ஆகையினால் இக்கொள்கை முற்றும் தப்பிதமானதாம்.

அர்ச். அகுஸ்தீன் இவரைக் கடைசி பரியந்தம் பின் தொடர்ந்து இவர் தப்பறையைக் கண்டித்து, தேவ வரப்பிரசாதம் விசுவாச சத்தியம் என்பதை ஸ்திரப்படுத்த, அவருக்கு 'தேவ வரப்பிரசாத சாஸ்திரி' (Doctor of grace) என்ற பட்டம் அளிக்கப்பட்டது.

அர்ச். அகுஸ்தீன் மறுப்பு யாதெனில், "ஆதாம் ஏவாள் பாவம் மனிதரைத் தொடர்வதால், தேவ இஷ்டப்பிரசாதம், சாகாவரம், முதலிய சுபாவத்துக்கு மேலானதும், சுபாவத்தில் அடங்காததுமான வரங்களை இழந்தவர்களாயும், சுபாவத்திலேயே ஊனமுள்ளவர்களாயும் மனிதர்கள் உலகில் பிறக்கிறபடியால், ஆசாபாசம் உள்ளவர்களாகவும், புத்தி மழுங்கினவர்களாயும், சுய இச்சை குன்றியவர்களாகவும் இருக்கின்றார்கள். ஆகையால் சுபாவத்துக்கு மேலான வரமாகிய தேவ வரப்பிரசாதமின்றி, சன்மார்க்க வேத சத்தியங்களை முற்றும் அறியவும், அச்சன்மார்க்க நெறியைப் பூரணமாய் அநுசரிக்கவும் மனிதரால் முடியாது. எல்லா மனிதரும் ஆதாமிடமாய்ப் பாவஞ் செய்தவர்களாகையால், எல்லா மனிதரும் சேசுநாதரால் இரக்ஷிக்கப்பட வேண்டியவர்களாயிருக்கிறோம். அவரது வரப்பிரசாதம் இல்லாமல் இரக்ஷணியமடையக்கூடிய யாதொரு புண்ணியத்தையும் நாம் செய்யமுடியாது, இரக்ஷணியம் அடையவும் முடியாது."

மேற்றிராணிமார்களின் சங்கங்கள் அர்ச். அகுஸ்தீன் சொல்லிய நியாயங்களையும், வியாக்கியானத்தையும் அங்கீகரித்தும், பெலாசியுஸைப் பின்பற்றினோர் தங்கள் தப்பறையில் ஊன்றி

நின்றார்கள். அர்ச். பாப்பும் மேற்றிராணிமார்களின் தீர்ப்பை அங்கீகரித்து பெலாசிய கொள்கையைப் பகிரங்கமாய்க் கண்டனம் செய்தார்.

ஆனால் இத்தப்பறை முற்றாய் ஒழிபவில்லை. இதே சமயத்தில் இக்கொள்கைக்கு முற்றும் விரோதமான மற்றொரு தப்பறை தொடங்கியது. அது என்னவெனில், "சர்வேசுரன் மனுஷன் பிறக்கு முன்னரே அவனுக்கு நித்திய பாக்கியமோ, அல்லது நித்திய ஆக்கினையோ ஏற்பாடு செய்கிறார்" என்பதாம். இக் கொள்கைப்படி, "மனிதன் மோக்ஷம் போவதும் நரகம் போவதும் அவனுடைய நடத்தை பற்றியல்ல; அவன் தன்னை இரக்ஷிக்கிற தற்கு தேவ வரப்பிரசாதத்தை எவ்விதத்திலும் உபயோகிக்க முடியாது. மனித பிரயாசை யாதுமின்றிச் சர்வேசுரனுடைய சித்தத்தினாலேயே, நித்திய பாக்கியமோ நித்திய நரகமோ கிடைக் கிறது" என்று பிதற்றினார்கள். இப்படியாய் சர்வேசுரன் சிலரை மோக்ஷத்துக்கும் சிலரை நரகத்துக்கும் குறிக்கிறதானால், மனிதன் என்ன புண்ணியம் செய்தும் பயனில்லை. இத்தப்பறை அநேக சங்கங்களில் கண்டனம் செய்யப்பட்டது (கி. பி. 471–475).

## நெஸ்டோரிய பதித மதம்.

இப்படி மேல் ரோமை நாடுகளில் தப்பறைகள் பரவுங்கால், நெஸ்டோரியுஸ் என்னும் ஓர் குருவால் கீழ்ரோமை நாடுகளில் வேறோர் தப்பறை தொடங்கியது. இந்நெஸ்டோரியுஸ் கொன்ஸ் தாந்திநோப்பிலி பட்டணத்தின் பிதாப்பிதாவாகியும் மகா கர்வங் கொண்டவர். கி. பி. 428ல் கர்த்தர் பிறந்த திருநாளன்று இவர் செய்த பிரசங்கத்தில் "கன்னிமரியாயை தேவமாதா என்று சொ ல்லுவது அஞ்ஞானிகள் தங்கள் தெய்வங்கட்குத் தாயுண்டு என்ப தற்குச் சமானம்" என்றார். கிறிஸ்துவர்களெல்லாம் இதைக் கேட்டு மகாவெறுப்புற்றும், இவர் பிடிவாதம் செய்து தன் கொள் கையே சரியென ஸ்தாபிக்க எண்ணித் தன் தப்பறையை இன்னும் பலப்படுத்தினார். இவர் சொல்லுவது என்னவெனில், "சேசுநாதரில் இரண்டு ஆட்களுண்டு. ஒருவர் வார்த்தையானவர், மற்றொருவர்

மனிதன். ஆகையால் மனிதனாகிய ஆளைப்பெற்ற கன்னி மரியம்மாள் கிறிஸ்துவினுடைய மாதாவே தவிர, தேவமாதா அல்ல.'' இக்கொள்கையால் சர்வேசுரன் மனிதனான சத்தியமே பொய்ப்படும். இன்னும் இவர் சொல்லுவது, "வார்த்தையானவர் சர்வேசுரனாயினும் கிறிஸ்துவானவர் சர்வேசுரன் அல்ல. ஆனால் சர்வேசுரனோடு விசேஷ விதமாய்க் கூடிய ஓர் மனிதன். ஆகையால் அக்கிறிஸ்துவின் தாயார் தேவமாதா அல்லள்'' என்பதாம்.

சர்வேசுரன் முந்திய தப்பறைகளைக் கண்டிக்க சாஸ்திரிகளை அளித்த வண்ணமே இத்தப்பறையையும் கண்டிக்க அலெக்சாந்திரியா பட்டணத்தின் பிதாப்பிதாவாகிய அர்ச். சிரில் என்பவரைத் தெரிந்தார். இவர் இத்தப்பறையைக் கண்டித்து நெஸ்டோரியுஸுக்கு எழுதியும் அவர் விட்டு விடாததால், அர்ச். செலஸ்தீன் பாப்புக்குத் தெரிவித்தார். அர்ச். பாப்பு ரோமையில் ஓர் சங்கம் கூட்டி, சர்வேசுரன் மனிதாவதாரம் எடுத்த சத்தியத்திற்கு விரோதமான இக்கொள்கையைக் கண்டித்துப் பின்னும் அலெக்சாந்திரியாவில் அர்ச். சிரில் அக்கிராசனத்தின் கீழ் மற்றொரு சங்கமும் கூட்டுவித்தார். அச்சங்கம் பன்னிரண்டு சாபங்களென வேத சத்தியத்தைப் பின்வருமாறு விளக்கிற்று. "யாராயினும் எம்மானுவேல் சர்வேசுரன் என்றும், ஆகையினால் மாமிசம் ஆக்கப்பட்ட வார்த்தையானவரை மனிதனாய்ப் பெற்ற பரிசுத்த கன்னிகை தேவமாதா என்றும், ஒப்புக்கொள்ளான் ஆயின், அவன் திருச்சபைக்குப் புறம்பாகக்கடவான். யாராயினும் பிதாவாகிய சர்வேசுரனிடமிருந்து புறப்படும் வார்த்தையானவர், மாமிசத்தோடு ஆள் தன்மையாக ஐக்கியப்பட்டு, தமது மாமிசத்துடன் கூடி ஒரே ஒரு கிறிஸ்துவாய் சர்வேசுரனும் மனிதனுமாய் இருக்கிறார், என்று விசுவசியாவிடில் அவன் திருச்சபைக்குப் புறம்பாகக்கடவான். வார்த்தையானவர் மாமிசமாக்கப்பட்டு நம்மைப்போல் மாமிசமும் இரத்தமும் கொண்டிருக்கிற அவர், தேவ சுபாவத்தில் பிதாவின் ஏக சுதனானகையால், அவரை சத்திய சர்வேசுரன் எனச் சொல்லாமல், சர்வேசுரனைத் தரித்திருக்கும் ஓர் மனிதன்

என யாராயினும் சொல்லத் துணிவானாகில் அவனும் திருச்சபைக்குப் புறம்பாகக்கடவான்.'' இவ்விதமாய் சேசுக்கிறிஸ்துநாதர் தேவ சுபாவம், மனித சுபாவம் ஆகிய இரண்டும் கூடிய ஒரே ஆளானதையால், அவரைப் பெற்ற பரிசுத்த கன்னிகை உண்மையாய் தேவமாதா என ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

## 3ம் பொதுச்சங்கம். எப்பெசுஸ். (கி.பி. 431.)

ஆயினும் நெஸ்டோரியர்கள் கீழ்ப்படியாமையால் எப்பெசுஸில் ஓர் பொதுச் சங்கம் கூடியது. இதில் அர்ச். பாப்புவின் பதிலாளியாய் அர்ச். சிரில் அக்கிராசனம் வகித்தார். சுமார் 200 மேற்றிராணிமார்கள் இங்கு கூடினார்கள். நெஸ்டோரியுஸ் இப்பட்டணத்துக்கு வந்திருந்தும் சங்கத்துக்குத் தன்னைக் காட்டச் சம்மதியாததால், இவர் எழுதிய விவாதங்களைச் சங்கத்தார் ஆராய்ந்த பிறகு எல்லோரும் ஒரே மனமாய், சுவிசேஷத்துக்கும் அப்போஸ்தலர் காலமுதல் வந்த உபதேச பரம்பரையான கொள்கைகட்கும் முற்றும் விரோதமான இத்தப்பறையை விசுவசிக்கிறவர்களையும், இப்பொய்யையும் கண்டித்ததும் அன்றி, நெஸ்டோரியுஸ் சங்கத்துக்கு வராததாலும், சங்கத்தின் தீர்ப்புக்குப் பணியாததாலும், மேற்றிராசன அந்தஸ்திலிருந்து நீக்கப்படுவதுடன், மேற்றிராணிமார் கூட்டங்களிலும் சேர்க்கப்படலாகாது எனவும் இரண்டு தீர்மானங்கள் செய்தார்கள்.

ஆனால் ராயருடைய பிரதிநிதி நெஸ்டோரியருக்கு அநுகூலமாயிருந்து, சங்கத்தின் தீர்ப்பை ராயருக்குக் கொண்டுபோவோரைத் தடுத்து, தீர்ப்புகளைத் தன் கட்சியாருக்கு அநுகூலமாய் மாற்றி எழுதியனுப்பினான். ஆயினும் சங்கத்தாரால் குறிக்கப்பட்டவர்களில் ஒருவர் தன்னை ஓர் பிச்சைக்காரன் போல் நடித்துக்கொண்டு, உண்மையான தீர்ப்புள்ள கடிதத்தைத் தன் ஊன்றுகோலினுள்ளே மறைத்து ராயருக்குத் தெரிவிக்க, அவர் உண்மையை அறிந்து நெஸ்டோரியுஸை தூரதேசத்துக்குத் துரத்தினார். கொஞ்சகாலம் சென்று நெஸ்டோரியுஸ் நிர்ப்பாக்கியமாய் மரித்தார்.

அப்பால் நாளடைவில் நெஸ்டோரிய கொள்கை க்ஷீணதசை அடைய, தற்காலம் சிலர் பாரசீகத்திலும், தென் இந்தியாவில் மலையாளத்திலும் இக்கொள்கையை அநுசரிக்கிறார்கள்.

அர்ச். செலஸ்தீன் பாப்பு சங்கம் முடிந்த மறு ஆண்டு மரித்தார். இவர் அர்ச். கன்னிகை தேவமாதா என்னும் சத்தியத்தை உலகோர் அறிந்து கொண்டாடும் வண்ணம் பிரியதத்த மந்திரமாகிய அர்ச். கபிரியேல் மங்களவாக்குடன் "அர்ச். மரியாயே சர்வேசுரனுடைய மாதாவே பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும்" என்று முடித்து நெஸ்டோரிய கொள்கையை அழித்தார்.

## யூட்டிக்கெஸ் பதிதமதம்.

அர்ச். மகா சிங்கராயர் பாப்பு (கி.பி.440-461) அர்ச். செலஸ்தீனுக்குப் பிறகு மிகப் பேர் பெற்றவர். இவர் காலத்தில் கீழ்நாட்டில் கொன்ஸ்தாந்திநோப்பிலி பட்டணத்துக்கு அருகில் மடாதிபதியான யூட்டிக்கெஸ் என்னும் ஓர் குரு "சேசுநாதர் ஒரே சுபாவமும், ஒரே ஆளும் ஆனவர். அச்சுபாவமும், ஆளும் தெய்வீகமானவை. மனுஷாவதாரத்துக்கு முன் இரண்டு சுபாவங்களிருந்தன, அதற்குப் பின் ஒரே சுபாவம் மாத்திரமுண்டு" எனப் போதித்தார். இப்படிக் கொண்டால் இரக்ஷணிய பரம ரகசியமே நாசமாகின்றது. எப்படியெனில் சேசுநாதர் சுவாமி மனிதன் என்ற முறையில் பாடுபட்டு, சர்வேசுரன் என்ற முறையில் பேறுபலன்களைச் சம்பாதித்தாலன்றி இரக்ஷணியம் நிறைவேறாது. இவரது சிநேகிதர்கள் இவர் குற்றத்தை எடுத்துக் காட்டியும் இவர் தப்பறையில் ஊன்றி நின்றார். பின் ஓர் சங்கம் கூட்டியும், இக்குரு சங்கத்துக்கும் பணியாததால் இவரை மடாதிபதி அந்தஸ்தினின்று தள்ளினார்கள். ஆனால் இவரைச் சேர்ந்தோர் ராயனுடைய அநுக்கிரகம் பெற்றுச் சங்கத்தின் தீர்மானத்தை அழித்து, கி. பி. 449ல் எப்பெசுஸ் பட்டணத்தில் ஓர் சங்கம் கூட்டுவித்தார்கள்.

## எப்பெசுஸ் கள்ளர் கூட்டம் கி. பி. 449.

இச்சங்கத்தைப்பற்றி அர்ச். மகாசிங்கராயருக்கு நல்ல அபிப்பிராயம் இல்லாததால் இதை நிறுத்திவிட ஆசித்திருந்தாரெனினும் அதுகூடவில்லை. சங்கம் நடைபெற்றதும் அவர் நினைத்தபடியே யாம். இதன் முக்கியஸ்தர் அலெக்சாந்திரியா பட்டணத்தின் பிதாப்பிதாவான தியோஸ்கோருஸ். இவர் யூட்டிக்கெஸ் கொள்கையைக் கொண்டவர். அர்ச். பாப்புவின் கடிதத்தை முதவில் வாசியாமல் அரசன் கடிதத்தை வாசித்ததும் அன்றி, திருச்சபை ஆசாரப்படி இன்றி, அரசனுடைய விருப்பப்பிரகாரம் சங்கத்தை நடத்தினர். இச்சங்கத்தார் யூட்டிக்கெஸைத் திரும்பவும் முன் அந்தஸ்துக்கு உயர்த்தியதும் அன்றி, கொன்ஸ்தாந்திநோப்பிலி மேற்றிராணியாரான அர்ச். பிலேபியனை நீக்கினர்கள். அவர் அர்ச். பாப்புவுக்கு அப்பீல் செய்ய விரும்புவதை அறிந்து, தியோஸ்கோருஸ் கோபத்தினல் தன்னை மறந்து, அவரைக் கன்னத்தில் அடித்துக் கீழேதள்ளி மிதித்தார். இதினலும் இதன் பின் நடந்த பல அக்கிரமமான சம்பவங்களாலும் இச்சங்கத்துக்குக் 'கள்ளர் கூட்டம்' எனப் பெயரிடப்பட்டது.

இவ்விதமாய் யூட்டிக்கியர் ஜெயம் அடைந்ததால் கத்தோலிக்க மேற்றிராணிமார்களைத் துரத்திப் பலவிதமாய்த் திருச்சபைக்கு இம்சை செய்ததும் தவிர, தியோஸ்கோருஸ் அர்ச். பாப்புவையே திருச்சபைக்குப் புறம்பு சாட்டவும் துணிந்தார். ஆனல் அர்ச். பாப்பு, ராயருக்கும் கிறிஸ்துவர்களுக்கும் நிருபம் அனுப்ப,கடைசியாய் ராயர் தான் ஏமாந்ததை உணர்ந்தார். உணர்ந்தும் தன் தப்பிதத்தைத் திருத்த சமயமின்றி சீக்கிரத்தில் மரித்தார். இவருக்குப் பின் வந்த ராயரும்,ராக்கினியும் கிறிஸ்துவர்களுக்குத் தீபம் போல் விளங்க, கி. பி. 451ல் சால்செடன் பட்டணத்தில் ஓர் பொதுச்சங்கம் கூட்டப்பட்டது.

## 4-ம் பொதுச் சங்கம், சால்செடன் (கி. பி. 451)

இது சரித்திரத்தில் மிகப் பேர்போன சம்பவங்களில் ஒன்று. எப்பெசுஸ் சங்கம் திருச்சபையையே அழிக்க முயன்றது முன்

சொல்லியவற்றால் விளங்கும். இதைச் சீக்கிரம் சீர்திருத்தி திருச்சபையின் ஒழுங்கை மறுபடியும் ஊர்ஜிதப் படுத்தாவிடில் பிரிவினைகளுண்டாகி திருச்சபைக்குப் பெருத்த நஷ்டம் நேரிட்டிருக்கும். ஆகையால் அர்ச். மகா சிங்கராயரும், மேல், கீழ் ரோமை அரசர்களும் முயற்சித்து இக்கூட்டம் கூட்ட, அர்ச். பாப்புவின் ஸ்தானதிபதியே இதில் அக்கிராசனம் வகித்தார்.

முதலில் தியோஸ்கோருளையும், அவர் கொள்கையைக் கொண்டோரையும் மறுத்து, தியோஸ்கோருளை மேற்றிராணிப் பட்டத்தினின்றும், குரு நிலைமையினின்றும் நீக்கினார்கள். பின் எப்பெசுஸ் கூட்டத்தின் தீர்மானங்களை அழித்து, நைசியாவின் தீர்மானங்களையும் கொன்ஸ்தாந்திநோப்பிலி தீர்மானங்களையும் ஊர்ஜிதப்படுத்தினார்கள். இன்னும் குழப்பக்காரர் எவ்விதத்திலும் குழப்பம் செய்யாதபடி, எல்லோரும் ஒரேமனமாய் பின்வருமாறு தீர்மானம் செய்தார்கள். "நமது கர்த்தராகிய ஒரே ஒரு சேசுக்கிறிஸ்துநாதரைக் கொண்டாட வேண்டுமென நாங்கள் எல்லோரும் அர்ச். பாப்புவைப் பின்பற்றி ஒரே மனமாகச் சொல்லுகிறோம். அவர் (சேசுக்கிறிஸ்துநாதர்) பூரணமான தேவசுபாவமும், பூரணமான மனித சுபாவமுங் கொண்டு, உண்மையான சர்வேசுரனும், உண்மையான மனிதனுமாய், அறிவுள்ள ஆத்துமமும், சரீரமும் கொண்டிருக்கிறார். அவர் தேவத்துவத்தில் பிதாவாகிய சர்வேசுரனுடன் ஒரே வஸ்துவாயும், மனிதத்துவத்தில் நம்மோடு ஒரே வஸ்துவாயும் இருக்கிறார். பாவம் ஒன்று தவிர மற்றெல்லா வகையிலும் நம்மைப்போல் இருக்கிறார். தேவத்துவத்தில் யுகங்கட்கு முன் (நித்தியத்தில்) பிதாவாகிய சர்வேசுரனிடமிருந்து ஜனித்தவர். மனிதத்துவத்தில் இந்தக் கடையுகத்தில், நமக்காகவும், நமது இரக்ஷணியத்துக்காகவும், தேவமாதாவாகும் கன்னி மரியாயிடம் பிறந்தார்."

"இன்னும் அவர் ஒரே சேசுநாதரும், ஒரே சுதனும், ஆண்டவருமாயிருக்கிறார். அவரிடத்தில் தேவசுபாவம், மனிதசுபாவம், ஆகிய இரண்டும் ஒன்றோடொன்று கலக்காமலும், மாறாமலும், பகுக்கப்படாமலும், பிரிவில்லாமலும், கூடியிருக்கப்பட்ட இரண்டு

சுபாவத்தில், ஒரே ஒரு சேசுநாதராய், ஏகசுதனாய், ஆண்டவருமாயிருக்கிறார். அவரிடத்தில் இந்த ஐக்கியத்தால் சுபாவங்களுக்குள்ள வித்தியாசம் கெடுவதில்லை. அச்சுபாவங்கள் ஒவ்வொன்றும் தனக்குச் சேர்ந்தவற்றில் சற்றும் குறையாமல் ஒரே ஒரு புருஷனிடத்தில் கூடுகின்றன. அதனால் சேசுக்கிறிஸ்துநாதர் இரண்டு ஆட்களாய்ப் பகுக்கப்படுகிறதின்றி, ஒரே ஒரு ஆண்டவராகவும், வார்த்தையானவராகவும், தேவனுடைய ஏகசுதனாகவுமிருக்கிறார்''

''ஆகையால் யாராயினும், எவ்வித அந்தஸ்துள்ளோர் எனினும், இதற்கு விரோதமாய்க் கருதவும், கற்பிக்கவும் கூடாது. அப்படிச்செய்வோர் மேற்றிராணிமார்களும், குருக்களுமாகில் அவ்வந்தஸ்திலிருந்து நீக்கப்படுவார்கள். சந்நியாசிகளும் விசுவாசிகளுமாகில் திருச்சபைக்குப் புறம்பாய்த் தள்ளப்படுவார்கள்.''

இவ்விதம் செய்தபிறகு, எல்லோரும் கையொப்பமிட்டார்கள். அப்பால் பதினைந்தாம் நாள் கூட்டத்தில், மேல் ரோமைத் தலைநகரமாகிய ரோமையின் மேற்றிராணியார் திருச்சபையின் அதிபதியாயிருப்பது போல, கீழ்ரோமையின் தலைநகரமாகிய கொன்ஸ்தாந்திநோப்பிளி மேற்றிராணியார் அர்ச். பாப்புவைப்போல் திருச்சபை அதிகாரத்துவம் இன்றியிருப்பினும், அவருடன் ஒத்த அந்தஸ்துள்ளவராய் இருக்கவேண்டும், எனக் கீழ் ரோமைநாட்டின் குருக்கள் விருப்பங் கொண்டார்கள். ஆனால் திருச்சபை அதிகாரிகளின் அந்தஸ்துகளும், அவர்களது உரிமைகளும் நைசியா சங்கத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தன. அத்தீர்மானப்படி கொன்ஸ்தாந்திநோப்பிளி மேற்றிராணியார், அந்தியோக்கியா, அலெக்சாந்திரியா பிதாப் பிதாக்களுக்குக் கீழ் வைக்கப்பட்டிருந்தார்.

* கீழ்ரோமை நாட்டாருடைய பிடிவாதத்தால் திருச்சபையில் ஒற்றுமை கெடும்போல் தோன்றியது. கீழ் ரோமை நாட்டரசனும்

---

* கொன்ஸ்தாந்திநோப்பிளி மேற்றிராணிமார்களும் இதற்காகப் பின்னால் திருச்சபையினின்று பிரிந்தார்கள். மறுபடியும் சேர்ந்தும் இக்கர்வம் அவர்களை விடாததால் மறுபடியும் பிரிந்து போய் இப்போது பிரிவினைக்காரராய் இருக்கிறார்கள்.

இவர்களுக்கு பிரியராயிருந்ததால், இச்சங்கத்தார் கொன்ஸ் தாந்திநோப்பிளி பட்டணத்து மேற்றிராணியாரை அர்ச். பாப்பு வுக்கு இரண்டாவதாய், அந்தியோக்கியா, அலெக்சாந்திரியா பிதாப் பிதாக்களுக்கு மேலாய் உயர்த்தினார்கள். ஆனால் அர்ச். பாப்புவின் ஸ்தானாதிபதிகள் இதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. அர்ச். பாப்புவும் மற்ற எல்லாத் தீர்மானங்களையும் ஏற்றுக்கொண்டு திருச்சபையில் ஸ்திரப்படுத்தினாரென்கிலும் இக்கடைசித் தீர்மானத்தை அங்கீ கரிக்கவில்லை. இதினால் குழப்பம் நேரிடும் போலிருந்தது. ஆயினும் கீழ்ரோமை ராயரும், ராக்கினியும் உத்தம கிறிஸ்துவர்கள் ஆன படியால், அவர்கள் அர்ச். பாப்புவின் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள திருச்சபையில் எங்கும் சமாதானம் உண்டாயிற்று.

## 2. மிலேச்சர்கள் படை எழுச்சி.

இவ்விதமாய்த் திருச்சபையில், முக்கியமாய்க் கீழ் நாடுகளில், தப்பறைகள் உண்டாகி முற்கூறிய சம்பவங்கள் நடந்தேறுங் காலத்தில், ரோமை நாட்டின் வடக்கெல்லை முழுதும் உள்ளே பிரவேசிக்கச் சமயம் பார்த்திருந்த மிலேச்சர்கள், மேல் ரோமை நாடு களில் புகுந்து ரோமையர் ராச்சியபாரத்தை அழித்தார்கள். ரோமை அதிபதிகள் இவர்களைத் தடுக்கவாவது, இவர்கள் ஜனங் களுக்கு விளைவிக்கும் குரூரங்களை அமர்த்தவாவது சற்றும் சக்தி யில்லாமலிருக்க, அர்ச். பாப்புவும், மேற்றிராணிமார்களுமே இந்நிர்ப் பாக்கிய ஜனங்களுக்கு உதவி புரிவோர் ஆனார்கள். மிலேச்சர்களது கொடுமைகளைத் திருச்சபையின் அதிகாரிகள் முற்றும் தடுக்கக் கூடாவிடினும், அவைகளின் கடுமையையாவது தணிப்பார்கள். கிறிஸ்துவர்களும் இவற்றையெல்லாம் உணர்ந்து திருச்சபை அதி காரிகளை மேலும் மேலும் கொண்டாடினார்கள். திருச்சபையும் பின்னர் மிலேச்சர்களை ஞான தீட்சையால் தனக்குள் உட்படுத்தி மேல்நாடுகளில் முன்னிலும் சீரான ஒழுக்கங்களை ஏற்படுத்தியது.

### அலரிக்.

மகா தியோடோசியுஸ் மரித்தபின் முதலில் ரோமை நாட்டி னுள் நுழைந்தவன் மேல்காத்திபருக்கு இறைவனான அலரிக்.

இவன் கி. பி. 402ல் படையெடுத்து வந்து ரோமையரால் முறியடிக்கப்பட்டு சிலகாலங் கழிந்து மறுபடியும் இத்தாலியில் நுழைந்தான். ஓர் சன்னியாசியைத் தவிர, இவனைத் தடுப்போர் யாருமில்லை. சந்நியாசியார் இவனைநோக்கி, "பூலோகத்தில் செய்யும் கொடுமைகட்காய் சர்வேசுரன் பரலோகத்தில் தண்டிப்பார்" எனச் சொல்ல, இவன் மறுமொழியாக "குருவே நான் என் இஷ்டப்படி செய்கிறேனில்லை, முன் நோக்கிச் சென்று ரோமையை அழிப்பாய் என்று என்காதில் ஓயாது ஓர் சப்தம் சப்திக்கின்றது. இக்காரணம் பற்றியே செல்லுகிறேன்" என்றனன். இதுரோமையைச் சீர்திருத்த வேண்டிச் சர்வேசுரன் செய்த வற்பாடுதான்.

அலரிக் ரோமைக் கொத்தளங்களை அடைந்ததும், ரோமையர் இடமுள்ள பொன், வெள்ளி, இன்னும் விலையுயர்ந்த பொருள்களையும், மிலேச்ச சாதி அடிமைகளையும் கேட்டான். ரோமையர், "அப்படியானல் எங்கட்கு என்னத்தை விட்டுவிட இஷ்டப்படுகிறீர்?" என வினவ, "உங்கள் உயிரைமட்டும்" என்றனன். இத்துடன் நின்று ரோமைக்குள் நுழையாது திரும்பினன்.

இரண்டு வருஷங்கழிந்து அர்ச். பாப்பு சண்டையை நிறுத்த முயற்சி தேடும் பொருட்டு ரோமை இறைவனிடஞ் சென்றிருக்கையில் அலரிக் மறுபடியும் வந்து ரோமையைத் தாக்கிப்பிடித்து மூன்று நாளளவும் சூறையாடினன். இத்துடன் தீயும் கொளுத்திவிட, வீடுகள் எரியுண்டு இடிந்து விழுவதும், ஜனங்களைப் போர்ச்சேவகர் செய்யும் வதைகளும், அவர்களிடம் கூக்குரலும், சாபங்களும், சகிக்கமுடியாதாயின. இதுவுமன்றிச் சர்வேசுரனும் ரோமையை அழிப்பார் போன்று கடும்புசல் கிளம்பி வீச, ஓர் பேரிடி இடித்து விழுந்து பல அக்கியானக் கோயில் கட்டடங்களைத் தரைமட்டம் ஆக்கினதுந் தவிர, கிறிஸ்து அரசர்கள் நகர அலங்காரத்தின் பொருட்டுச் சேர்த்து வைத்திருந்த அக்கியான விக்கிரகங்களையும் அழித்தது. ரோமையில் இவ்வித கொடுமைகள் நடக்கும் பொழுது சத்திய வேதக்கோயில்கள் மட்டும் தப்பின. எப்படியெனில், ஜனங்கள் அண்ட ஓர் இடமின்றி ஓடுங்கால்,

அலரிக் பார்த்து அர்ச். இராயப்பர் ஆலயமும், அர்ச். சின்னப்பர் ஆலயமும் புகலிடம் எனக்காட்டினான். மேலும் அர்ச். இரா யப்பர் ஆலயத்திலிருந்து சேவகர் கொண்டுவந்த பாத்திரங்களை எல்லாம் திரும்பக் கொடுத்ததுமன்றி, கன்னியாஸ்திரிகளைப் பார்த்து ஆச்சரியமுற்று அவர்களுக்கு யாது தீங்கும் நேரிடாதபடி பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்பட்ட இடங்களுக்குச் செல்லவும் கட்டளையிட்டான்.

## அட்டிலா.

இவர்களுக்குப் பின் அன்ஸ் என்னும் மங்கோலியர் தங்கள் தலை வனான அட்டிலாவின் கீழ் படையெடுத்து ரோமை நாட்டைத்தாக் கினார்கள். முதலில் அட்டிலா காலியாவைத் தாக்கி பாரீஸுக்குக் கீழுள்ள அநேக பட்டணங்களைப் பிடித்துச் சூறையாடிக் கொண்டு பாரீஸை நோக்கிச் சென்றனன். ஆனால் அர்ச். ஜெனிவீப் என்னும் ஓர் இடைச்சி வேண்டுகோளுக்கு சர்வேசுரன் இரங்க, அட்டிலா சேனையில் எதிர்பாராத ஓர் குழப்பம் உண்டாகி பாரீஸ் பட்டணம் தப்பிற்று. அட்டிலா ஆர்லீன்ஸ் பட்டணத்தைத் தாக்க, அதின் மேற்றிராணியார் ரோமையர் தளக்கர்த்தனுக்குச் சங்கதி தெரிவித் திருந்தும் அவன் வராததால்,ஜனங்களைக் கூட்டி சர்வேசுரனுடைய சகாயத்துக்காக வேண்டிக்கொண்டதின்மேல், பட்டணம் பிடிபடும் சமயத்தில் ரோமையர் தளக்கர்த்தன் வந்து அட்டிலாவைத் துரத் தினான். இப்படியாய் ஆர்லீன்ஸிலிருந்து துரத்தப்பட்டு கிழக்கே டிராயிஸ் நோக்கிச்சென்றான். அப்பட்டணத்தின் மேற்றிராணி யார் ஜனங்களை அழைத்து ஒருசந்தி பிடிக்கவும், செபதபம் செய் யவும் கட்டளையிட்டுத் தாமும் அட்டிலா வருமளவும் ஒன்றும் சாப்பிடாமலும், தூங்காமலும், செபத்திலும், தபத்திலுமிருந்து, அவன் வந்த சங்கதி அறிந்ததும், தம்முடைய மேற்றிராணி உடை யணிந்து தம்குருக்களுடன் திருச்சிலுவை முன் செல்ல, பின் நடந்து அவனிருக்குமிடம் சென்றார். சென்றதும் அவனை நோக்கி "நீ யார்?" என்று வினவ, அவன் "நான் கடவுளுடைய சாட்டை" என்றான். அர்ச்சியசிஷ்டவர், "அப்படியானால் கடவுள்

யாரைத்தண்டிக்க விரும்புகிறீரோ அவர்களை மட்டும் தண்டித்து அவருடையவற்றைப் பாதுகாப்பாய்'' என்றார். அட்டிலா இதைக் கேட்டதும் சர்வேசுரனால் ஏவப்பட்டு பட்டணத்தை விட்டுச் சென்றான்.

அடுத்த வருஷம் கி. பி. 452ல் அட்டிலா இத்தாலிக்குள் பிரவேசித்து அநேக பட்டணங்களைப் பிடித்து போ என்னும் ஆற்றங்கரையில் கூடாரம் அடித்தான். இங்கு தங்கிப் பின் ரோமையை நோக்கிச் செல்லக் கருதியிருந்தான். ரோமைச் சக்கரவர்த்தி கோழையாயிருந்ததால் ரோமையர் எல்லோரும் பயந்து, அட்டிலாவின் குரூரத்தினின்று தங்களை எப்படியாவது தப்புவிக்க அர்ச். மகா சிங்கராயர் பாப்புவைச் சரணமடைந்தார்கள்.

ரோமை தென்இத்தாலி, கிறிஸ்து மதம், இவைகட்கு நேரிடும் தீங்குகளை உணர்ந்து அர்ச். சிங்கராயர் சற்றும் பின்னிடாது அட்டிலாவிடம் போகத்துணிந்தார். கி. பி. 452ம் ஆண்டு ஜூன் 11ல் இவர் அநேக குருக்களுடன் புறப்பட்டுச்சென்று, தமது பாப்புடைகளை அணிந்து குருக்கள் புடைசூழ அட்டிலாவைக் கண்டார். இவர் அட்டிலாவைக் கேட்டதும், அவன் பதிலளித்ததும் அர்ச். பாப்புவின் தாழ்ச்சியால் உலகுக்கு அறிவிக்கப்படவில்லை. அட்டிலாவோ தான் விசுவசியாத ஓர் வேதத்தின் தலைவரால் ஏவப்பட்டு ரோமையைமட்டுமின்றி, இத்தாலி தேசத்தையும் விட்டுப் பெயர்ந்து தானியூப் நதியைக் கடந்து கிழக்கே சென்றான்.

இப்புதுமை விஷயமாய் சரித்திர சாஸ்திரிகள் சொல்வதாவது: அர்ச். பாப்பானவர் திரும்பினதும் இவன் சேனையாட்கள், "என் இவ்விதம் இப்பாப்புவை மதித்து இவர் சொன்னபடி செய்கிறீர்?'' என்று கேட்க, "என் முன் நின்ற மனிதனை நான் இப்படி மதித்தேனல்ல, ஆனால் இவர் பக்கத்தில் குருவின் உடையுணிந்து நரைமயிர் படிந்த ஓர் கிழவர், உருவிய வாளையேந்தி

கம்பீரமாய் பாப்பு கேட்பதெல்லாம் முற்றும் செய்யவேண்டு மென்று பயமுறுத்துகிற விதமாய் நின்றனர். அவருக்குப்பயந்து இப்படிச்செய்கிறேன்” என்று பதில் செப்பினன். இப்படி நின்றவர் அர்ச். இராயப்பர் தாமே. அடுத்த வருஷம் அட்டிலா மரித்தான்.

## ஜென்செரிக்.

வந்தலர் என்னும் சாதியார் தங்கள் அரசன் ஜென்செரிக் குடன் சென்று ஆப்பிரிக்காவைப் பிடித்தார்கள். இவர்கள் செய்த கொடுமைகளை எடுத்துச் சொல்ல முடியாது. இவர்கள் விசேஷ குரூரம் உள்ளவர்களாதலால், இப்படிப்பட்ட மிகக்கொடுமையான செயல்களுக்கு ‘வந்தலச்’ செயல்கள் எனப் பெயரிடப்பட்டது. இவர்கள் ஆப்பிரிக்காவில் தங்கள் குரூர ஆட்சியை நடத்தி கி. பி. 455ல் இத்தாலியைத் தாக்க வந்தார்கள். ரோமை அரசன் முதலி யோர் ஓடித்தப்பிக்க ஜென்செரிக் ரோமையை அடுத்தான்.

ரோமையர் இவனைத் தடுக்க யாது ஏற்பாடும் செய்யாததால் அர்ச். மகா சிங்கராயரே தமது முழு உடுப்பணிந்து குருக்கள் சூழ இவனிடம் சென்றார். முன்போல இத்தடவையும் இவர் முழுதும் ஜெயமடைந்து ரோமாபுரி தப்பிக்க சர்வேசுரன் சித்தமாகவில்லை.

ஜனங்களை மடிக்காமலும் தீக்கொளுத்தாமலும் இருக்க மட்டும் ஜென்செரிக் ஒத்துக் கொண்டானேயொழிய திரவியங்களைக் கொள்ளையிடா திருக்கச் சம்மதிக்கவில்லை. பதினன்கு நாட்களாய் ரோமையரைப் பலவாறு உபாதித்துக் கோயில்கள், அரண்மனைகள், வீடுகள் முதலிய எல்லா இடங்களிலுமுள்ள திரவியங்களைக் கொள்ளையடித்தான். எல்லாம் சூறையாடிய பின், சுற்றத்தார் பணங்கொடுத்து மீட்டுக் கொள்ளும்படி அறுபதினயிரம் பேரைச் சிறைப்படுத்தி ஆப்பிரிக்காவுக்குக் கொண்டு சென்றான்.

## மேல் ரோமை ராச்சிய முடிவு.

இவ்விதமாய் ரோமைநாடு க்ஷீணதசை யடைந்து வந்து, கடைசியாய் கி.பி. 476 ல் ரோமைச் சக்கரவர்த்தியும் துரத்தப்பட்டு, இத்தாலி ஓர் அன்னியனுடைய இராச்சியமாயிற்று. கி.பி. 493 ல் கீழ்காத்தியருக்கு இறைவனான தியோடோரிக் இத்தாலியைப் பிடித்து அரசனானான். இச்சமயத்திலேயே பிராஞ்சுக்காரர் காலியாவையும், மேல்காத்தியர் ஸ்பானியாவையும், வந்தலர் ஆப்ரிக்காவையும், ஆங்கில சாக்சோனியர் பிரித்தானியாவையும், பிடித்துக் கொள்ள, ரோமையர் ராச்சியபாரம் ஒழிந்துபோய் ஒவ்வொரு தேசத்திலும் தனித்தனி அரசாட்சி ஏற்பட்டது.

## அர்ச்சியசிஷ்டவர்களும், பாப்புக்களும்.

பதிதமதங்களாலும், மிலேச்சர்களின் படையெழுச்சிகளாலும் பலவாறு உபாதிக்கப்பட்ட இந்த ஐந்தாம் நூற்றாண்டில் அநேக அர்ச்சியசிஷ்டவர்கள் பல அந்தஸ்துகளிலும் தோன்றினார்கள். ராச சிம்மாசனத்தில் அர்ச். புல்கெரியாவும், அர்ச். இராயப்பர் சிம்மாசனத்தில் எல்லாப் பாப்புகளும், அநேக மேற்றிராணிமார்களும், வனாந்தரத்தில் சந்நியாசிகளும், பட்டணங்களில் குடும்பஸ்தர்களும், ஆகப்பல அர்ச்சியசிஷ்டவர்கள் இருந்தார்கள். முக்கியமான சிலரை மட்டும் இங்கு கூறுவேன்.

## அர்ச். குள்ள அருளப்பர்.

இவர் குள்ளராய் இருந்தமையால் இப்பெயரிடப்பட்டது. இவர் எகிப்து பாலைவனத்தில் ஒளிந்து ஓர் பரிசுத்த சந்நியாசியின் கீழ் இருந்தார். அச்சந்நியாசி இவரது கீழ்ப்படிதலைச் சோதிக்க விரும்பி, இவர் கையிலிருந்த வரண்ட ஓர் குச்சியை நிலத்தில் ஊன்றி, அது பழந்தரும் வரையில் தண்ணீர் வார்க்கக் கட்டளையிட்டார். இவர் அப்பணியைத் தாழ்மையாய் ஏற்று, நதி தூரத்திலிருந்தும் மூன்று வருஷகாலம் ஒன்றும் கவனியாது தண்ணீர் வார்த்து வந்தார். இக்கீழ்ப்படிதலுக்குச் சர்வேசுரன்

சம்பாவனை அளிக்க, அக்குச்சி வேர்ஊன்றிக் காய்த்தது. இக்கீழ்ப்படிதலின் பழத்தை சந்நியாசியார் பறித்துக் கோயிலுக்குக் கொண்டு வந்து, மற்ற சந்நியாசிகளைப் புசிக்கச் சொன்னார்.

அர்ச். அருளப்பர் சர்வேசுரனைப்பற்றிப் பேசும்போது அதில் முழுதும் ஆழ்ந்துபோய் பரவசம் ஆய்விடுவார். ஓர் சந்நியாசியார் இவரைக்கண்டு சற்றுநேரம் இவருடன் சம்பாஷிக்க வந்து, சர்வேசுரனுடைய மகத்துவத்தைப் பற்றிப் பேசுவதில் இருவரும் காலத்தைச் சற்றும் கவனியாமல் இராமுழுதும் பேசிக்கொண்டே இருக்கப் பொழுதுவிடிந்தது. பின் இருவரும் எழுந்து வந்தவர் திரும்பிப்போக; அர்ச். குள்ள அருளப்பர் சற்றுதூரம் வழியனுப்பச்சென்று, மோட்சத்தைப்பற்றிப் பேசத்தொடங்கி மத்தியானம் வரையில் அதிலேயே செலவழித்தார்கள். இத்தபோதனர்களின் பரவசமே பரவசம்!

## அர்ச். ஸ்தம்ப சிமெயோன்.

இக்காலத்தில் மிக வியப்படைந்த தபசி யாரெனில் அர்ச். சிமெயோன். இவருக்கு ஸ்தம்ப சிமெயோன் என்று பின்னால் பெயரளிக்கப்பட்டது இவர் ஓர் ஏழை இடையன் மகன். சிறு பிராயத்திலேயே தபத்திற்கும் கீழ்ப்படிதலுக்கும் மிகமிஞ்சின ஆசை கொண்டு தன்னைச் சுற்றிலுமுள்ள சந்நியாச மடங்களில் அநுஷ்டிக்கும் ஒறுத்தல்களிலும் அதிகமான ஒறுத்தல்களைப் பின் தொடரும் மடங்களைத் தேடிச் சென்றார். இப்படி இவர் சேர்ந்த ஓர் மடத்தில் இரண்டு நாளைக்கொருமுறை மட்டும் சாப்பிடுவார்கள். இவரோ ஒரு வாரத்துக்கொருமுறை மட்டும் சாப்பிடுவார். அடிவயிற்றைச் சுற்றிப் பனையோலைகளால் திரித்த ஓர் கயிற்றை இறுகக் கட்டிக்கொள்ளுவார். அது சதையில் ஆழ்ந்து காயமுண்டாக்கியதால், இவரது கடின தபம் பிறருக்கு விளங்கப்பட, இக்கயிற்றை எடுக்கக் கத்தியால் அறுக்கவேண்டி வந்தது. இதினால் பிராணனுக்கே தீங்கு வரும்போலிருந்தது. மடாதிபர் இதைக்கண்டு இக்கொடிய தபத்தால் மற்றவர்களுக்குக் கெடுதி வரக்கூடுமென்று பயந்து இவரை நீக்கினார்.

அப்பால் இவர் ஓர் மலைக்குகைக்குச் சென்று நமது திவ்ய கர்த்தர் செய்ததுபோலவே நாற்பது நாள் அன்னந்தண்ணீரின்றி தபசில் காலங்கழித்தார். தபசு காலத்துவக்கத்தில் நின்றுசெபித்து வந்தார்; பலவீனம் அதிகரித்து நிற்க முடியாதுபோக உட்கார்ந்து செபித்தார்; கடைசியில் இதுவும் முடியாமல் தரையில் படுத்துக் கொண்டு செபித்தார். இப்படி நாற்பது நாட்கள் கழிந்தன.

இக்கடுமையான தபங்களும் இவர் மனதுக்குத் திருப்திப்படவில்லை. மூன்று வருஷங் கடந்து ஓர் மலையுச்சி சென்று கற்களைச் சுற்றிலும் கூட்டி அதன் மத்தியில், மழை, பனி, வெய்யில், காற்று முதலிய எவற்றிற்கும் யாது பாதுகாப்புமின்றி வசித்தார். சிக்கிரம் இம்மலை மிகச்சிறப்புற்றோங்கியது. பல தேசங்களிலுமிருந்து கிறிஸ்துவர்கள் மட்டுமின்றி, அக்கியானிகளும் இவருடைய ஆசீர்வாதம் பெற வருவார்கள். இவர்கள் எல்லோருக்கும் நல்ல புத்திமதி சொல்லி நோயாளிகளையும் குணமாக்குவார்.

இவ்விதமாய்த் தன் ஏகாந்தம் கெடுதலின்மேல் மனஞ்சலித்து இதுகாறும் கேட்டிராத புதிய ஓர் சீவியத்தைத் தெரிந்தனர். கி. பி. 423ல் ஆறு முழ உயரமுள்ள ஓர் ஸ்தம்பம் எழுப்பிப் பதின்மூன்று வருஷகாலம் அதனுச்சியிலும், மறு பதின்மூன்று வருஷம் பன்னிரண்டு முழ உயரமான வேறொரு ஸ்தம்பத்தின் மேலும், அப்பால் இன்னும் பதின்மூன்று வருஷம் இருபத்திரண்டு முழ உயரமான இன்னொரு ஸ்தம்பத்தின் மேலும் காலம் கழித்தார். இதன் பிறகு இருபத்துநான்கு முழ உயரமுள்ள ஓர் ஸ்தம்பத்தின்மேல் தமது கடைசி இருபத்திரண்டு வருஷங்களையும் கழித்தார்.

ஸ்தம்பங்கள் ஒவ்வொன்றும் சுமார் $9\frac{1}{2}$ அடி சுற்றளவு உள்ளவையானதால், உச்சியில் ஓர் கிராதி அமைத்துப் படுக்க இடமின்றி சதா உட்கார்ந்திருந்து சோர்வுற்றபோது கிராதியின் மேல் சாய்ந்துகொள்ளுவார். அடிக்கடி முழந்தாளிலிருந்து அநேகநேரம் வானத்தை நோக்கியே செபித்துக் கொண்டிருப்பார். பிரதி தினமும் இருமுறை தம்மிடம் வருவோர்க்குச்

சத்தியம் செய்யாமை, நீதியனுசரித்தல், அநியாய வட்டி வாங்கா திருத்தல், அடிக்கடி கோயிலுக்குப் போதல், நமக்காகவும் பிறருக் காகவும் செபித்தல், முதலியவற்றைப் பிரசங்கிப்பார். இவரைக் கேட்டு மனந்திரும்பாதோர் இல்லையெனச் சொல்லலாம். அநேக ராஜாக்கள் இவருடைய புத்தியைக் கேட்டுத் தங்கட்காய் ஜெபிக் கவும் வேண்டிக்கொள்ளுவார்கள்.

இவர் இப்படி என்றும் கேட்டிராத மிகக் கொடிய தபம் செய் தலை அறிந்த அநேகர், தன்னைப் பெருமைப் படுத்தச் செய்வதோ வெனச் சந்தேகமுற்றனர். ஆகையால் இவரைச் சுற்றிலுமிருந்த மேற்றிராணிமார்கள் இவரைச் சோதிக்க ஓர் குருவை அனுப்பி னார்கள். அவர் சென்று "கீழிறங்கும்" எனக் கட்டளையிட, இவர் உடனே கீழ்ப்படிந்து இறங்கத்துவக்கவே, "அங்கேயே இரும், நீர் துரிதமாய்க் கீழ்ப்படிந்ததால், உமது விரதத்தின்படியே சர் வேசுரனுடைய சித்தத்தை நிறைவேற்றுவீர்" என்றார். தாழ்ச் சியும், கீழ்ப்படிதலும், தெய்வ பக்தியின் முக்கிய அடையாளங் களாம்!

## அர்ச். பாட்டிரிக்.

இப்படியாய் வனந்தர ரிஷிகள் திருச்சபைக்கு ரத்தினங்கள் போல் சிறந்து விளங்கி, பலர் மனந்திரும்பக் காரணமாயிருக்குங் கால், பட்டணங்களிலும், தேசங்களிலும், வேறு பலர் அஞ்ஞானி களை மனந்திருப்பித் திருச்சபையை விசாலித்துப் பெருமைப் படுத்தினார்கள். இவர்களில் முக்கியமானவர் அயர்லாந்தின் அப் போஸ்தலரான அர்ச். பாட்டிரிக். இவர் ஸ்காத்லாந்து தேசத்திற் பிறந்து இளமையிலேயே தன் சகோதிரியுடன் அடிமையாக்கப் பட்டு அயர்லாந்தின் மலைகளில் ஆடுமாடுகளை மேய்க்க நேர்ந்தது. இவ்விதம் ஆறு வருஷகாலம் இவ்வடிமைத்தனத்தில் இருக்கையில், அத்தேச பாஷையையும், ஜனங்களின் நடவடிக்கைகளையும் எளிதில் கற்றுக்கொண்டார்.

பின் சுபாதீனமடைந்தும் மறுபடியும் அடிமையானார். கடைசியில் பிராஞ்சு தேசத்தில் தன் சீவியத்தைத் தேவ ஊழியத்துக்குத் தத்தம் செய்யும் பாக்கியம் பெற்றார்.

இது முதல் தாம் முன்னிருந்த அயர்லாந்து தேசத்தை மனந்திருப்ப விசாரங் கொண்டார். ஆனால் அங்கு போகும் பாக்கியம் இவருக்குச் சிலகாலம் கிடைக்கவில்லை. கடைசியாய் அர்ச். பாப்பு இவருக்கு மேற்றிராணிப்பட்டம் அளித்து அனுப்புவித்தார்.

இவர் வேறு சில குருக்களுடன் சென்று திவ்விய வேதத்தைப் போதித்து, ஆங்காங்கு அநேகருக்கு ஞானதீட்சை அளித்து, அவர்களுக்கு மேற்றிராணிமார்களையும், குருக்களையும் ஏற்படுத்தினார். அயர்லாந்து முழுதும் சுற்றி அத்தேச முழுதும் சத்திய மதத்தைத் தழுவச் செய்யப் பாக்கியமும் பெற்றார். இவரது ஞானக்கனியான இத்தேசமும், அதன் ஜனங்களும், அது முதல் சற்றும் சத்தியமறை பிறழாது, பதித இங்கிலாந்தின் கீழ்ப்பட்டு பல நூற்றாண்டுகளாக வேதத்துக்காகச் சொல்லொண்ணாக் கொடுமைகளை அனுபவிக்க நேர்ந்தும், தங்கள் தேசத்தையும், சொத்துக்களையும் இழந்து தரித்திரர்களாகி லக்ஷக்கணக்கான பேர் பிறதேச வாசிகளாகியும், அயர்லாந்தார் தங்கட்கு நேரிட்ட தரித்திரத்தைப் பெருமையாய்க் கொண்டு சத்திய வேதத்துக்காய் நாளும் வருந்தியும், சத்தியம் தவறோம் என்று ஒரே உறுதியாயிருக்கிறார்கள். இதுவே அவர்களுடைய பெருமை! சர்வேசுரனின் மக்களாயிருக்கும் பாக்கியத்தினும் பாக்கியம் வேறுளதோ?

78180

மற்ற அந்நிய தேசப் போதகர்கள் இந்நூற்றாண்டில் ஐரோப்பாவின் மத்திய பாகங்களில் வேதம் போதித்து, கிழக்கில் தானியூப் நதிவரையிலும், மேற்கில் ரைன் நதிவரையிலும், திருச்சபையைப் பரப்பினார்கள்.

## வேத சாட்சிகள்.

இக்காலத்திலும், மிலேச்ச சாதியர்களால் பலர் வேதத்துக்குத் தலைகொடுத்தார்கள். இவர்களில் முக்கியமானவர் பாரசிகத்தில் வசித்த அர்ச். ஜேம்ஸ். இவர் அரண்மனையில் சிறந்த உத்தியோகத்திலிருந்து கோழைத்தனமாய் தம் வேலையைக் காப்பாற்ற எண்ணி வேதத்தைத் துறந்தார். அப்பால் அரசன் மரித்தபின்,இவர் சகோதிரரும், மனைவியும், "உமது ராயனது தயவுக்காய் சர்வேசுரனைப் புறக்கணித்தீரே, அந்த ராயன் இப்போது எங்கே? எல்லோரையும் போல் மரித்து நித்திய நரக ஆக்கினைக்கு உள்ளாக வில்லையோ? இப்போது அவன் வெறும் தூசி தானே? உமக்குச் சர்வேசுரன் விதிக்கும் நித்திய ஆக்கினையை இத்தூசி தடுக்குமோ? ஆகையால் இனி உமது குற்றத்தில் ஊன்றியிருப்பீராகில் உமது ராயன் நித்திய வேதனை அனுபவிப்பது போலவே உமக்கும் சர்வேசுரன் விதிப்பது உறுதியென அறியும். இது முதல் உமக்கும் எங்கட்கும் யாது சம்பந்தமும் வேண்டாம்" எனக்கடிந்து எழுதினர்கள். இவர் புத்தி தெளிந்து தம்முடைய நடத்தையை முற்றும் மாற்றி அரண்மனையை அணுகாமல் தாம் கத்தோலிக்கரென்று பகிரங்கப்படுத்தினர். அரசன் கோபமூண்டு நீடித்த சாவுக்கு இவரை உட்படுத்துவதாய்ப் பயமுறுத்தினன். இவர் பதிலாக "எவ்வித சாவாயினும் ஓர் தூக்கந்தானே" எனச் சொல்லியதின்மேல் இவருடைய கரங்கள் ஒவ்வொன்றும் அறுக்கப்படக் கட்டளையிட்டான். முதலில் இவரது வலதுகைப் பெருவிரலை அறுக்க, "கிறிஸ்து இரட்சகரே! இம்மரத்தின் கொம்பாகிய இதை ஒப்புக் கொள்ளும்" என்றனர். பின் ஆள்காட்டி விரலை அறுக்க, "என் இருதயம் சர்வேசுரனில் அக்களிக்கிறது, என் ஆத்துமம் எனக்கு இரக்ஷணியம் கிடைத்ததின்மேல் சந்தோஷமடைகிறது" என்றார். இப்படியாய் ஒவ்வொரு விரலையும் தனித்தனியாய்த் துண்டிக்க, இவர் சந்தோஷமிகுந்து சர்வேசுரனுக்குத் தோத்திரம் செய்து கொண்டு வந்தார். இவ்விதமாய் இவரது கைகால் விரல்கள் எல்லாம் அறுபட்ட பிறகு, தம் கொலைஞரை நோக்கி, "என் கிளைகளை வெட்டினீர்கள், இனி அடிமரமாகும்

சரீரத்தையும் தாக்கி விழுத்துங்கள்'' என்றார். அவர்கள் அப்படி யின்றி கால்களையும் கைகளையும் அறுத்து உடம்பை மட்டும் விட்டு விட, இன்னும் உயிர் இருந்தமையால் சர்வேசுரனை ஸ்தோத்திரம் செய்துகொண்டே இருந்தார். கடைசியில் ஒருவன் இவரது தலையைத்தாக்கி உடைக்கவே இச்சிறப்பான வேதசாட்சியம் கி.பி. 421 நவம்பர் 27ல் நிறைவேறிற்று.

## பாப்புக்கள்.

அர்ச். மகா சிங்கராயரின் பின் வந்த பாப்புகளும் தங்கள் பரிசுத்தத்தால் முந்தியவர்களைப் போன்றே விளங்கினார்கள். இவர்களில் விசேஷித்தவர் கி.பி. 492—496ல் திருச்சபையாண்ட அர்ச். ஜெலாசியுஸ். இவர் பட்டத்துக்கு வந்த இரண்டாம் வருஷம் ரோமையில் ஓர் சங்கம் கூட்டி திருச்சபையிற் பொதுவாகிய அநேக விஷயங்களை ஒழுங்கு செய்தார். அவைகளாவன:—ரோமை சிம்மாசனம் முதலாயும், அடுத்தபடியில் அலெக்சாந்திரியாவும், மூன்றாவதாய் அந்தியோக்கியாவும் வைக்கப்பட்டு, இதுவரைக்கும் நடந்த சங்கங்களில் நைசியா, அலெக்சாந்திரியா, எப்பெசுஸ், சால்செடன் ஆக நான்கும் திருச்சபையின் பொதுச்சங்கங்கள் என அங்கீகரிக்கப்பட்டன. கிறிஸ்துவர்கள் வாசிக்கக்கூடியவும், கூடாததுமான புத்தகங்களின் ஜாப்தா ஒன்று ஏற்படுத்தப் பட்டது. இன்னும் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் சுவிசேஷங்கள் எவையென்றும், திருச்சபை அங்கீகரிக்கும் ஞான சாஸ்திரிகள் யாரென்றும் தீர்மானிக்கப்பட்டது. அச்சாஸ்திரிகள் அர்ச். சிப்பிரியன், அர்ச். கிரெகோரி நாசியான்சன், அர்ச். பேசில், அர்ச். அத்தனாசியுஸ், அர்ச். சிரில், அர்ச். கிறிசொஸ்தோம் அரு ளப்பர், அர்ச். அம்புரோசியார், அர்ச். அகுஸ்தீன் அர்ச். ஜெரோம், அர்ச். பிராஸ்பெர், அர்ச். மகா சிங்கராயர் ஆகிய இவர்களாம்.

இன்னும் இவர் திவ்விய பூசைக்குப் பாடல்களும், ஜெபங் களும், செய்துள்ளார். இவரே அர்ச். தேவதாயாரின் சுத்திகரத் திருநாளை ஏற்படுத்தியவர். (பிப்ரவரி 2 தேதி)

---

## 3-ம். அத்தியாயம்.

---

## மிலேச்சர்கள் மனந்திரும்பல் (கி. பி. 496—522)

---

உட்பிரிவுகள்:—மிலேச்சர்கள் மனந்திரும்பல்; பதித மதங்களும், சங்கங்களும்; அர்ச்சியசிஷ்டவர்களும், பாப்புமாரும்.

### 1. மிலேச்சர்கள் மனந்திரும்பல்.

### ரோமை நாட்டின் நிலைமை.

ஐந்தாம் நூற்றுண்டின் இருதியில் கீழ் நாடுகளில் பிரிவினையும் பதிதமதங்களும் பரவியிருந்தன. மேனுடுகளில் குடியேறியவர்களில் மேல்காத்தியர், கீழ்காத்தியர், பர்கண்டியர், வந்தலர், முதலியோர் ஆரிய மதஸ்தர். காலியர்வில்குடியேறிய பிராஞ்சுக்காரரும், பிரித்தானியாவில் சேர்ந்த ஆங்கில சாக்சோனியரும் அஞ்ஞானிகள்.

### பிராஞ்சுக்காரர்.

இவர்களில் பிராஞ்சுக்காரர் அரசனுன கிலோவிஸ் கி. பி. 496ல் ஞானஸ்நானம் பெற பிரசைகளும் அவரைப் பின்தொடர்ந்தார்கள். அவர் கத்தோலிக்க ராச குமாரத்தியாகிய குலோத்தில்டாவை மணந்திருந்தார். காலியாதேச மேற்றிராணிமார்களால் ஏவப்பட்டு இம்மாது தன் புருஷனுக்கு சத்திய வேதத்தின் பாலைப் புகட்டி வந்தனள். ஆயினும் முதலில் சர்வேசுரன் இவளைச் சோதித்தார். கிலோவிஸ் ஞானஸ்நானம் கொடுத்துக் கொள்ள விரும்பிய குழந்தை இறந்தது; மற்றொரு குழந்தை கடின வியாதிப்பட்டது. ஆயினும் அரசி மனந்தளராமல் முன்னிலும் இருமடங்கு தன் புருஷனுக்காக சர்வேசுரனைப் பிரார்த்தித்து வந்தனள். சர்வேசுரனும் ஓர் புதுமையில் அவரை மனந்திருப்பினுர். எப்படியெனில், இச்சமயத்தில் அலெமானி என்னும் ஓர்

சாதியார் படைபெடுத்துவர, கிலோவிஸ் சென்று போர்தொடுத்து தோல்வி அடையுஞ் சமயத்தில் வேறொன்றுந் தோன்றுதவராய், "ஓ! சேசுக்கிறிஸ்துவே! என் மனைவியால் சர்வேசுரனுடைய சுத னென அழைக்கப்படுகிறவரே! துன்பப்படுகிறவர்களுக்கு ஆறுதல் அளிக்க வருகிறீர் எனச் சொல்லுகிறார்களே! நான் என் தெய்வங்களைக் கேட்டும் அவர்கள் எனக்கு உதவி செய்ய வராததால், அவர்களுக்கு அவ்வல்லமை கிடையாதென உறுதியாக நம்புகிறேன். ஆகையால் இப்போரில் ஜெயம் அளிப்பீராகில் உம்மை விசுவசித்து உமது பேரால் ஞானஸ்நானமும் பெறுவேன்" என்று பலமாய் ஓலமிட்டார்.

இவர் இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கையில் எதிரி அரசன் உயிர்மடிய, எதிரிகள் பின்வாங்கிச் சரண மடைந்தார்கள். சண்டை முடிந்து திரும்பி வந்து தாம் வெற்றியடைந்த விதத்தைத் தம் மனைவிக்குத் தெரிவித்து, கி. பி. 496ம் ஆண்டு சுவாமி பிறந்த திரு நாளிரவில் தமது சேனையாட்கள் மூவாயிரம் பேருடன் ரெயிம்ஸ் நகர ஆலயத்தில் ஞான தீட்சை பெற்றார். இதினால் பிற்காலத்திய பிராஞ்சு அரசர்கள் இவ்வாலயத்திலேயே முடி சூட்டப்பட்டார்கள். கிலோவிஸூம், அவரைச் சேர்ந்தோரும் தங்கள் விக்கிரகங்களை அழித்து மற்ற அக்கியானிகளையும் ஞானஸ்நானம் பெற ஏவியதால், கொஞ்ச காலத்தில் பிராஞ்சுக்காரர் முழுதும் கத்தோலிக்கர் ஆனார்கள்.

மேல் ரோமை நாடுகளில் குடியேறிய மிலேச்சர்களில் இவர்களே முதலில் மனந்திரும்பி, இவர்கள் குடியேறிய காலியா நாடு முழுதும் கத்தோலிக்க தேசமாயினபடியால், இப்பிராஞ்சு தேசம் திருச்சபையின் மூத்த பிள்ளையென்று அழைக்கப்பட்டது.

பிராஞ்சு அரசன் மனந்திரும்பிய சங்கதி எங்கும் பரம்பவே கத்தோலிக்கர் எல்லோரும் மிகக்களித்தார்கள். அர்ச். பாப்புவும் தமது சந்தோஷத்தைக் காட்டவும், அது முதல் பிராஞ்சு தேசத்தாரின் அலுவலைக் குறிக்கவும், கிலோவிஸூக்கு ஓர் நிருபம் அனுப்பினார். அது வருமாறு: "நாம் பட்டத்துக்கு வந்த சமயத்

தில் உமது ஞானஸ்நானம் நடந்தேறியதால் மிகக் களிபுறுகிறோம். சகல ஜனங்களும் அக்களிக்கும் இச்சமயம், மனிதர்களுக்குத் தந்தையாய் அவர்களைப் பிடிக்க வலை வீசும் அலுவலுள்ள நாம் சந்தோஷம் இன்றி இருக்கக் கூடுமோ? நமது சந்தோஷத்தை உமக்குத் தெரிவித்து, அதினால் நீர் நன்மையில் அதிகரித்து நமக்கு முழு ஆறுதலாய் இருக்கவும், சர்வேசுரனிடத்தில் உம்மைப் பெற்ற உமது தாயாகிய திருச்சபை உமது முன்னேற்றத்தில் களி கூறவும் விரும்புகிறோம். ஆகையினால் உமது தாயாகிய திருச்சபைக்கு ஆறுதலாகவும், ஓர் சிறந்த தூணாகவும் இருப்பீர். ஏனெனில் அநேகருடைய இருதயங்கள் தற்சமயம் குளிரடைந்ததால் தெய்வ சிநேகமில்லை. அதினால் அர்ச். இராயப்பரது படகு கடும் புசற்காற்றால் அலைக்கழிக்கப்படுகிறது. ஆயினும் இருளினின்று உம்மைப் பறித்துத் திருச்சபைக்குப் பராக்கிரமம் பொருந்திய ஓர் பாதுகாவலனைக் கொடுத்திருக்கும் சர்வேசுரனில் நம்பிக்கை வைத்து, நமது துன்பங்கள் இனி மாறுமென்று உறுதி கொள்ளுகிறோம்."

## பர்கண்டியர்.

கிலோவிஸ் மனந்திரும்பிய கொஞ்ச காலத்துக்குப்பின் பர்கண்டி அரசன் மனந்திரும்ப, அவன் ஜனங்களும் சத்திய வேதத்தைத் தழுவினார்கள்.

## மேல்காத்தியர்.

ஸ்பானிய தேசத்தில் குடியேறிய மேல்காத்தியர் ஆரிய மதஸ்தர். கி. பி. 580ல் இவர்கள் அரசனின் மூத்த குமாரன் சத்திய வேதத்தைத் தழுவ, அரசன் அவருக்கு மரண தண்டனை விதித்தான். ஆனால் இந்த வேத சாட்சியின் இரத்தத்தால் மேல்காத்தியர் மனந்திரும்ப நேர்ந்தது. இவ்வரசனின் இளைய மகனும் மனந்திரும்பிப் பட்டத்துக்கு வந்ததும் கத்தோலிக்காய் நடக்க, இதுமுதல் மேல்காத்தியர் கத்தோலிக்க மதத்தில் உட்பட்டார்கள்.

### லொம்பார்டியர்.

இத்தாலியைப் பிடித்த கீழ்காத்தியரும் ஆரியர்கள். இவர்கள் கீழ்ரோமை நாட்டரசனின் சேனையால் முறியடிக்கப்பட்டார்கள். இச்சமயத்திலேயே லொம்பார்டியர் என்னும் ஓர் புதிய சாதியார் இத்தாலியில் நுழைந்தார்கள். இவர்களும் 6ம் நூற்றாண்டின் இறுதியில் சத்திய வேதத்தைத் தழுவினார்கள்.

### ஆங்கில சாக்சோனியர்.

இவர்கள் ஜெர்மனியிலிருந்து வந்து பிரித்தானியாவில் குடியேறியதாக முன்னமே கூறப்பட்டிருக்கிறது. பிரித்தானியாவில் ஏழுராஜியங்களை ஸ்தாபித்து அவைகளுக்கெல்லாம் ஓர் அரசனை மேலாக ஏற்று நடந்தார்கள். 6ம் நூற்றாண்டின் கடைசியில் அவ்வரசன் இங்கிலாந்தின் தென் கீழ்ப்பாகமாகிய கென்ட் ஆண்ட எத்தெல்பெர்ட். அவர் கத்தோலிக்க பிராஞ்சு ராசகுமாரத்தி ஒருத்தியை மணந்திருந்தார். ஆகையால் கி. பி. 597ல் மகா கிரெகோரி என்னும் பாப்பு அர்ச். அகுஸ்தீனையும், அவருடன் வேறு போதகர்களையும், பிரித்தானியாவுக்கு அனுப்பினார். இராக்கினியின் உதவியால் அர்ச். அகுஸ்தீன் ராஜதானிப் பட்டணமாகிய கான்ட்டெர்பரியில் தங்க விடை பெற்றார். அப்பால் கி. பி. 598ல் சுவாமி பிறந்த திருநாளிரவில், அரசன் சுமார் பத்தாயிரத்துக்கு அதிகமான தம் பிரசைகளுடன் ஞானதீக்ஷை பெற்றார். அது முதல் இங்கிலாந்தில் வேதம் பரவி, சுமார் 80 வருஷத்துக்குள் தேசமுழுதும் சத்திய வேதத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

## 2. பதித மதங்களும், வேத சங்கங்களும்.

### கீழ்ரோமை நாட்டார் பிரிவினை.

கொன்ஸ்தாந்திநோப்பிலி பிதாப்பிதா அர்ச். பாப்புவுக்கு அடுத்த படியில் இருக்கவேண்டுமென ஆசித்து சக்கரவர்த்திகளும் அதற்கு உதவியாயிருந்ததால் அந்நாட்டில் குழப்பம் ஏற்பட்ட

தென்று முன் அத்தியாயத்தில் கூறியிருக்கிறேன். கி. பி. 498ல் அர்ச். அனஸ்தாசியுஸ் பாப்பு மரிக்க, அர்ச். சிம்மாக்குஸ் பட்டத்துக்கு வந்தார். கீழ்ரோமை நாட்டார் லாரென்ஸ் என்னும் மற்றொரு பாப்புவைத் தெரிந்து குழப்பம் செய்தார்கள். இவ்விதக் குழப்பம் இனிமேல் உண்டாகாதபடி ரோமையில் ஓர் சங்கம் கூடி மூன்று தீர்மானங்கள் செய்யப்பட்டன. "முதலாவது, யாரேனும் ஓர்குரு, அல்லது டீக்கன், அல்லது குருப்பட்டத்துக்கு குறிக்கப்பட்டவர், அர்ச். பாப்பு உயிரோடிருக்கும் போது, அவரது அநுமதியின்றி அவர் மரணத்துக்குப்பின் அப்பதவிக்கு வர எண்ணியிருக்கும் யாருக்காவது, எழுத்து மூலியமாவது, வாய் வார்த்தையினாலாவது தமது ஓட்டைக் கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்ததாகக் குற்றம் நிரூபிக்கப்பட்டால், அவர் குருப்பட்ட அந்தஸ்திலிருந்து நீக்கப்படுவார். இரண்டாவது, தம் மரணத்துக்குப் பின் வரும் பாப்பு விஷயமாய் யாது எற்பாடும் செய்யாமல் ஓர் பாப்பு சடுதியில் மரித்தால், குருக்கள் எல்லோரும் யாரைத் தெரிந்து கொள்ளுகிறார்களோ, அல்லது குருக்கள் வித்தியாசப்படில் எவரை அதிகம் பேர் குறிக்கிறார்களோ, அவரே பாப்பாவார். மூன்றாவது, இப்போது நடந்தது போல், ஓர் குழப்பம் நடத்த எற்பாடு செய்யப்படில், தான் அதில் சேர்ந்திருந்த போதிலும் அதை வெளிப்படுத்துகிறவர் தன் குற்றம் நீக்கப்படுவதுடன் பரிசளிக்கவும் படுவார்." ஐந்து வருஷங்கட்குப் பின் ரோமையில் சமாதானம் ஏற்பட்டது. ஆனால் கீழ்நாட்டில் சக்கரவர்த்தியான அனஸ்தாசியுஸ் மரணமட்டும் சமாதானம் கிடையாது. இக்கொடுங்கோலன், கொன்ஸ்தாந்திநோப்பிளி பிதாப்பிதாவை சால்செடன் பொதுச் சங்கம் தப்பிதம் செய்ததெனப் பிரசித்தம் செய்ய வற்புறுத்தி, அவர் அது செய்யாததால், அச்சங்கத் தீர்ப்பைப் பகிரங்கமாய்த் தீக்கொளுத்தியதுமன்றி, பிதாப்பிதாவைப் பரதேசத்துக்குத் துரத்தி, அநேக குருக்களையும் சிறையிலிட்டான். இவன் கி. பி. 518ல் மரிக்க, பின் வந்த பெரிய ஜஸ்டின் என்னும் ராயர் ஜனங்களது இஷ்டத்துக் கிணங்கித் திருச்சபைக்குக் கட்டுப்பட, கீழ் நாடுகளிலும் சமாதானம் ஏற்பட்டது.

## பதிதர் மறுபடியும் கலகம் செய்தல்.

சால்செடன் சங்கம் பூட்டிக்கிய தப்பறையைக் கண்டித்த விஷயம் முன் கூறப்பட்டது. ஆனால் திருச்சபையின் விரோதிகள் அச்சங்கத்தில் தப்பறை நடந்ததென்றும், அர்ச். பாப்பு அதன் தீர்மானங்களை அங்கீகரித்தமையால் அவரும் தப்பினர் என்றும் பிதற்றினார்கள். திருச்சபையின் ஓர் பொதுச் சங்கமாவது, அர்ச். பாப்புவாவது விசுவாச சத்தியங்களைப் பற்றியாவது, நல்லொழுக்கங்களைப் பற்றியாவது, தீர்மானம் செய்கையில், தப்பாத வரம் நமது திவ்விய கர்த்தர் அளித்திருக்கிறார் என்பது கத்தோலிக்க சத்தியம். ஆகையால், அர்ச். பாப்புவால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் சங்கம் தப்பறை செய்ததாகக் காட்டினால், திருச்சபையே பொய்யென்றும், அதற்குத் தவறாத வரம் இல்லையென்றும், மற்ற பொய் மதங்களைப் போலவே அதிலும் தப்பறைகள் உண்டாகுமென்றும், மற்ற மதங்கட்கும் அதற்கும் யாது வித்தியாசமும் இல்லையென்றும், ஸ்தாபிக்க வேண்டுமெனப் பதிதர் கருத்துக்கொண்டிருந்தார்கள்.

## மூன்று அத்தியாயங்கள்.

இக்காலத்தில் வேத விஷயங்களைக் குறித்தெழுதப்பட்ட 'மூன்று அத்தியாயங்கள்' எனப் பெயர்கொண்ட மூன்று பிரபந்தங்கள் இருந்தன. இவற்றில் சிற்சில இடங்களில் சில விசுவாச தப்பறைகள் இருந்தாலும், இவற்றை எழுதினோர் சற்றும் விசுவாசத்தில் குன்றியவரல்ல. சால்செடன் பொதுச்சங்கம் அவர்களைத் தள்ளாமல் அங்கீகரித்திருந்தது.

வேத விரோதிகள் இவற்றைக் கொண்டு திருச்சபைக்குத் துன்பம் செய்ய ஏற்பட்டு, கி. பி. 546ல் கீழ் நாடுகளின் ராயனுக்குத் திருச்சபைக்கு இடையூறு செய்வதில் மிக விருப்பங்கொண்ட ஜஸ்டினியனிடம் தெரிவிக்க, அவன் இம்மூன்று அத்தியாயங்களையும், அவற்றின் கர்த்தாக்களையும் பகிரங்கமாய்க் கண்டனம் செய்தான். ஆனால் இவ்வாறு கண்டனம் செய்யும் சுதந்தரம் திருச்

சபைக்கே உரியதாலும், இவற்றை எழுதினோர் திருச்சபைக்குப் படிந்திருந்ததாலும், பகைவரது நோக்கத்தை அறிந்த அர்ச். பாப்பு ராயன் தீர்மானத்தை எதிர்த்தார்.

ராயன் கோபமூண்டு பாப்புவைக் கொன்ஸ்தாந்தினோப்பிலிக்கு வரவழைத்து மூவத்தியாயங்களைக் கண்டனம் செய்ய வற்புறுத்தினன். பாப்பு "நீர் என்னைச் சிறைப்படுத்தியபோதிலும் அர்ச். இராயப்பரைச் சிறைப்படுத்த வல்லவரல்ல" எனப் பதிலுரைத்து ராயனுக்குக் கட்டுப்படவில்லை. அப்பால் கி. பி. 578ல் பாப்பு தமது தீர்ப்பைப் பகிரங்கம் செய்தார். அதில் மூன்று அத்தியாயங்களையும் கண்டனம் செய்தாரெனினும், அத்தீர்ப்பால் சால்செடன் பொதுச் சங்கத்திற்கு யாது பங்கமுமின்றி வரைந்திருந்தார். சால்செடன் சங்கத்தைத் தவறுக்க எண்ணியிருந்த எதிரிகளும் இத்தீர்ப்பால் திருப்திப்படவில்லை, மேல் ரோமை நாட்டு மேற்றிராணிமார்களும், பாப்பு சால்செடன் சங்கத்தைத் தவறுக்கினர் என்றும் நினைத்தார்கள்.

இதுகாரணம்பற்றி, ஓர் பொதுச்சங்கம் கூட்டிச் சமாதானம் நிலைநாட்ட, பாப்பு தீர்மானித்துச் சமதொகையாக மேல்ரோமை மேற்றிராணிமார்களையும் கீழ்ரோமை மேற்றிராணிமார்களையும் அச்சங்கத்துக்கு அழைத்திருந்தார். ஆயினும் விரோதிகள் அச்சங்கத்திற்கு வரச் சம்மதியாது மூன்று அத்தியாயங்களையும் அவற்றின் கர்த்தாக்களையும் கண்டனம் செய்யவேண்டுமெனப் பலாத்காரம் செய்தார்கள். அர்ச். பாப்பு அதற்குச் சம்மதியாததால், ராயன் தான் முன் செய்த தீர்ப்பை அமுலுக்குக் கொணர்ந்தான். அதைப் பாப்பு முன்போலவே தடுக்க, ராயன் கோபமீறி அவரைச் சிறைப்படுத்திக் கொண்டுவரத் தன் சேவகருக்குக் கட்டளையிட்டான்.

## 5ம் பொதுச்சங்கம்,
## கொன்ஸ்தாந்திநோப்பிலி கி. பி. 553.

அர்ச். பாப்பு தேவாலயத்தில் ஒளிந்தும், அவரை விடாமல் சேவகர் அங்கும் நுழைந்து கலகம் செய்கையில், ஜனங்கள்

கோபித்துத் தடுக்கமுயலவே, அவரைவிட்டு ஓடிப்போனார்கள். அப்பால் சுமார் எழு வருஷங்களின் பின் கொன்ஸ்தாந்திநோப்பிலில் ஓர் பொதுச்சங்கம் கூடிற்று. அதில் பாப்பு நியமனப்படி மேல்ரோமை மேற்றிராணிமார்கள் சரிபாதி இருக்கவில்லை. ஆயினும் அச்சங்கம் முதல் துவக்கிக் கடைசிமட்டும் விசுவாச தப்பறை யின்றியே நடந்தேறி, மூன்று அத்தியாயங்களைக் கண்டித்தாலும், சால்செடன் சங்கத்துக்கு யாது குறைவுமின்றியே தீர்ப்புச்செய்தது. இதுவே அர்ச். பாப்பு முன்செய்த தீர்ப்பு. ஆகையால் மேல்ரோமை மேற்றிராணிமார்கள் இத்தீர்ப்பை அறிந்து சமாதானம் உண்டாகும் வரையில் காத்திருந்து, பாப்பு கொன்ஸ்தாந்திநோப்பிலி சங்கத்தையும் அதன் தீர்மானத்தையும் அங்கிகரித்துத் திருச்சபையில் நிலை நாட்டினார்.

இப்பாப்பு தமது முன்னவர் உயிரோடிருக்கையில் அவருக்கு விரோதியாய்ப் பகைவரால் குறிக்கப்பட்டு, அவர் மரணத்துக்குப் பின் சமாதானத்தை விரும்பிய மேற்றிராணிமாரால் அங்கிகரிக்கப் பட்டுப் பாப்பாகியும், "நரக வாசல் அதை மேற்கொள்ளாது" என்ற நமது கர்த்தரின் திருவசனப்படி சத்தியத்துக்காய் வாதம் செய்து கடைசியில் ஜெயம் அடைந்தார். இச்சம்பவம், பாப்புமார் மனிதர்களாய் அவர்களைப்போல் பலவீனம் உள்ளவர்கள் எனினும், விசுவாச சத்தியங்களிலும், நல்லொழுக்க விஷயங்களிலும் தவராத வரமுடையவர்கள் என்பதற்கு ஓர் நிகரற்ற அத்தாட்சி.

## 3. அர்ச்சியசிஷ்டவர்களும், பாப்புக்களும். அர்ச். ஆசீர்வாதப்பர்.

இந்நூற்றாண்டில் மிலேச்சருடைய ஒழுங்கீனங்களும், வேத துப்பறைகளும், கலாபங்களும் மிகுந்திருந்தும், ஒவ்வொரு தேசத்திலும் பல அர்ச்சியசிஷ்டவர்கள் இருந்தார்கள். ஆனால் இக்காலத்தும், இதற்குப் பின்னும் திருச்சபைக்கு விசேஷ நன்மை செய்தவர் ஆசீர்வாதப்பர் சபையை ஸ்தாபித்த அர்ச். ஆசீர்வாதப்பர்.

இவர் கி. பி. 480ல் அம்பிரியாவில் பிறந்து சிறு வயதிலேயே கல்வி கற்க ரோமைக்கு அனுப்பப்பட்டார். அங்கு கூடியிருந்த பிள்ளைகளது ஒழுக்கமற்ற நடத்தையை வெறுத்துத் தன் செல்விக்தாயுடன் ரோமையைத் துறந்தார். அப்பால் தேவ சிநேகப் பெருக்கால் கடுமையான தபஞ்செய்யக் கருதி, அவளுக்கும் தெரியாமல் ஓர் குகையில் போய் ஒளிந்து கொண்டார். இப்படி மூன்று வருஷங்கழிய, இறுதியில் சில இடையர்கள் இவரைக் கண்டு அர்ச்சியசிஷ்டவரென அறிந்து இவருக்கு வேண்டுவன வற்றைக் கொண்டு வந்து கொடுப்பார்கள். இவரும் பதிலாக அவர்களுடைய ஆத்துமங்களைக் கவனித்து வந்ததின்மேல் அநேகர் தங்கள் நடத்தையை முற்றும் மாற்றினார்கள். இவ்வித மாய் இவர் கீர்த்தி பலவிடங்களிலும் பரவிற்று.

இதினால் பசாசு பொறாமைகொண்டு அர்ச். அந்தோனியாரைச் சோதித்தது போல்,இவரையும் சோதிக்க மனித ரூபமாய் இவரை அணுக, இவர் சிலுவை வரையவே ஓடிப்போயிற்று. பின் னொருகால் இவர் ரோமையில் கண்ட ஓர் ஆளை இவர் மனதில் கொண்டுவந்து கடின சோதனை செய்ததின்மேல் இவர் சற்றுத் தளர்ந்து தம்மிடம் விட்டுப்பெயர எண்ணினார். ஆயினும் அச் சமயத்தில் ஓர் தேவ வரப்பிரசாதக்கக் கதிர் இவரை ஊடுருவத் தெளிந்து அவ்விடமிருந்த முட்செடிகளின் மேல் படுத்துப் புரண்டு தேகம் எங்கும் காயமாகி இரத்தமயமானார். சாத்தானும் இவரை விட்டகன்றான்.

இப்படியிருக்க அநேகர் உலகத்தை வெறுத்து இவரை அடைந்தார்கள். இவரிருந்த இடத்துக் கருகில் ஓர் மடாதிபர் இறக்க,சந்நியாசிகள் எல்லோரும் இவரையே மடாதிபராகத் தெரிந் தார்கள். இவரும் தாழ்ச்சியால் அதற்கு இணங்காது பலகாலம் தடுத்தும், அவர்கள் விடாமல் விண்ணப்பித்துக் கொள்ளக் கடைசியில் சம்மதித்தார். ஆயினும் சீக்கிரத்தில் அவர்கள் இவருடைய கொடிய தவத்திற்குரிய ஏற்பாடுகளை அநுசரிக்க முடியாதவர் களாய் வெறுப்புறவும், சிலர் பாஷாணத்தால் இவரைக் கொல்லவும்

துணிந்தார்கள். எப்படியெனில், ஓர் நாள் பந்தி அமர்ந்த போது பாஷாணம் கரைத்த ரசம் நிறைந்த ஓர் பாத்திரத்தை முதலில் இவருக்குக் கொடுத்தார்கள். இவர் பானம் பண்ணுமுன் மந்திரித்த அளவிலே அப்பாத்திரம் புதுமையாய் உடைந்து ரசமெல்லாங் கொட்டுண்டதால், இவர் இரகசியம் அறிந்து, “சகோதரர்களே சர்வேசுரன் உங்களை மன்னிப்பாராக” எனச் சொல்லி மறுபடியும் தனிவாசமாயினர்.

## ஆசீர்வாதப்பர் சபை.

ஆனல் தெய்வ சித்தம் வேறாயிருந்தமையால், சீக்கிரத்தில் வேறு அநேகர் இவரை வந்தணுகினர்கள். இவர் சிலரைத் தம்மிடம் வைத்துக்கொண்டு மீதியுள்ளோரைப் பன்னிரண்டு மடங்களில் ஏற்பாடு செய்து, ஒவ்வோர் மடத்திற்கும் ஓர் மடாதிபரைக் குறித்துத் தமது பொதுக்காப்பில் வைத்திருந்தார்.

அங்கும் பசாசு இவரை விடவில்லை. அப்பக்கத்திலிருந்த ஓர் குரு இவரது கீர்த்திக்குப் பொறாமை கொண்டு இவரைத் தொலைக்கக் கருதி, ஒருநாள் பாஷாணம் தோய்ந்த ஓர் ரொட்டித் துண்டைத் தானமாக அனுப்பினர். அர்ச்சியசிஷ்டவர் முன்னமே எச்சரிக்கப்பட்டு அதை உண்ணவில்லை. பின் வேறு அநேக பிரயத்தனங்களை அக்குரு செய்ய, இவர் அவ்விடம் விட்டுத்தூரப் பயணம் செய்ய நேரிட்டது. அச்சங்கதியைக் கேட்ட குரு மிகச் சந்துஷ்டியடையவே சர்வேசுரனுடைய சாபத்தால் அவருடைய வீடு விழுந்து அவரைக் கொன்றது.

அர்ச்சியசிஷ்டவர் அவ்விஷயத்தை அறிந்தும் பின் செல்லாது சென்று காசினோ மலையின் உச்சி சேர்ந்தார். அங்கு அஞ்ஞான கோயில் ஒன்றும், அதற்குப் பக்கத்தில் ஓர் பெரிய தோட்டமும் இருந்தன. அஞ்ஞான உழவர்கள் அங்குவருவது வழக்கம். இவர் அவர்களை மனந்திருப்பி அக்கோயிலை இடித்து, ஓர் தேவாலயமும், ஓர் மடமும் கட்டுவித்தார்.

## ஆசீர்வாதப்பரின் ஒழுங்குகள்.

உலகம் எங்கும் பேர்போன இம்மடத்தில் தான் இவர் தமது சபை ஒழுங்குகளை எழுதிபது. இவ்வொழுங்குகளைப் பின்னால் மேல்போமை நாட்டின் எல்லா சந்நியாச சபைகளும் ஏற்றுக் கொண்டதும் தவிர, இவரால் ஏற்படுத்தப்பட்ட அர்ச். ஆசீர்வாதப்பர் சபை, பிற்காலம் அளவின்றிப் பெருகித் திருச்சபைக்கும், உலகத்திற்கும், கணக்கில்லாத நன்மைகளைச் செய்து கொண்டிருக்கிறது.

* இச்சபையோரில் 35 பாப்புக்களும்; 200 கர்தினல்களும்; 1165 அதிமேற்றிராணிமார்களும்; 5512 மேற்றிராணிமார்களும்; 55460 குருக்களும் தங்கள் அர்ச்சியசிஷ்டதனத்துக்குப் பேர் போனவர்களாயின், இச்சபையால் நேரிட்ட நன்மைகளை எடுத்துரைக்கவும் வேண்டுமோ?

## ஆசீர்வாதப்பர் மரணம்.

தம்முடைய மரணம் கிட்டி வந்ததை முன்னறிந்து தெரிவித்து, மரிக்கும் ஆறு நாட்களுக்குமுன் தமது கல்லறையை முஸ்தீப்பு செய்து, கி. பி. 593 மார்ச்சு 21ல் பாக்கியமாய் மரித்தார்.

## அர்ச். கொலம்பன்.

இக்காலத்தில், இன்னுமொரு அர்ச்சியசிஷ்டவர் மிகப் பேர் பெற்றவர். அவர் பெயர் கொலம்பன். அவர் கி. பி. 540ல் அயர்லாந்தில் பிறந்து சிறுவயதிலேயே சந்நியாசம் பூண்டு மிகக்கடின தபம்புரிந்து வந்தார். ஆயினும் உலகத்தை முற்றும் துறக்கும் பொருட்டுப் பரதேசத்துக்குப் போகக்கருதினர். அவர் இருந்த மடத்தின் அதிபர் அக்கருத்துக்கு முதலில் இணங்காவிடினும், பின்னர் அது சர்வேசுரனுடைய சித்தமென அறிந்து தூரதேசம் போக விடை அளித்தார். அப்பால் அர்ச். கொலம்பன் பன்னிரண்டு சந்நியாசிகளுடன் அயர்லாந்து விட்டுப்புறப்பட்டு பிராஞ்சு

* கி. பி. 1879ல் எடுக்கப்பட்ட கணக்கு.

தேசம் போய், வேத சாஸ்திரத்தைப் போதிக்கவும், சந்நியாச சபை ஒழுங்குகளைத் திருத்தமாய்க் கற்றுக்கொடுக்கவும், அஞ்ஞானிகளை மனந்திருப்பவும் கருத்துக்கொண்டார். அவரது மகிமை பரவ, பர்கண்டி அரசன் அவரை அழைத்துத் தன் தேசத்தில் எவ்விடத்திலென்கிலும் ஓர் மடம் ஸ்தாபிக்க உத்தரவளித்தான். அவ்வுத்தரவைப் பெற்று, அர்ச். கொலம்பன் கி.பி. 591ல் லூக்ஸில் என்னுமிடத்தில் ஓர் மடத்தை ஸ்தாபித்து, அதிலேயே தமது சந்நியாசிகள் அநுசரிக்க வேண்டிய ஒழுங்குகளை எழுதினர். அவ்வொழுங்குகள் அர்ச். ஆசீர்வாதப்பர் எழுதிய ஒழுங்குகளினும் மிகக் கடினமானவை. பிற்காலத்தில் அவரெழுதிய சபையொழுங்குகள், அர்ச். ஆசீர்வாதப்பர் சபை ஒழுங்குகளுடன் சேர்க்கப்பட்டு, ஐரோப்பாவின் மேற்கு தேசங்களெங்குமிருந்த சந்நியாச சபைகளுக்கெல்லாம் பொது ஒழுங்குகளாயின.

பர்கண்டி ராச குடும்பத்தில் நடந்து வந்த ஒழுங்கீனங்களைக் கண்டித்ததினிமித்தம் பின்னல் அத்தேசத்தினின்று வெளியேற்றப்பட்டு, அஞ்ஞானிகளை மனந்திருப்ப விருப்பங்கொண்டு ஆல்ப்ஸ் மலைதீரஞ்சென்றூர். அங்கே பலரை மனந்திருப்பிய பிறகு, இத்தாலி சென்று கி. பி. 615ல் பாக்கியமாய் மரித்தார்.

## பாப்புகள்.

இந்நூற்றூண்டின் பாப்புகளில் மிகப் பேர் பெற்றவர் அர்ச். மகா கிரெகோரி. இவர் ரோமையில் பெரிய வம்சத்தில் பிறந்து சர்க்கார் உத்தியோகமடைந்து பின் உலகத்தை வெறுத்து சந்நியாசியானர். பாப்புப் பட்டத்துக்குத் தெரிந்தெடுக்கப்பட்டுத் தாழ்ச்சியால் தாமிருந்த இடம் விட்டு அப்பினைன்ஸ் மலைக்கு ஓடிப் போனர். தேடிக் கொண்டுவரப்பட்டு தமது பேர் போன ஆட்சியால், ‘மகா’ என்ற அடைமொழி சேர்த்தழைக்கப்பட்டார். கிரெகோரியன் என்று அழைக்கப்படும் சங்கீதம் இவர் ஏற்படுத்தியதாம்.

# 4-ம். அத்தியாயம்.

## மகமதிய மதமும், ஏகசித்தக்கொள்கையும்

## கி. பி. 622—711.

உட்பிரிவுகள்:—

மகமதிய மதம்; ஏகசித்தக்கோள்கை.

மிலேச்சர்களுடைய படை எழுச்சி முடிந்து, அவர்களும், அவர்கள் போன்று ரோமை நாட்டின் வெளிப்புறம் இருந்தவர்களும், கத்தோலிக்கராகும் காலத்தில்,பசாசு இங்கு தன் உரிமையை இழந்ததற்குப் பதிலாய் வேறு நாடுகளில் தனி அரசு புரிய இச்சித்தது. சர்வேசுரனும் கிறிஸ்துவர்களுடைய அவவிசுவாசத்துக்காய் அவர்களைத் தண்டிக்க விரும்பி, அதன் எண்ணத்துக்கு இணங்கியதுபோன்று,கீழ்ரோமை நாடுகளில் வேத தப்பறைகளும்,பிரிவினைகளும் நிரம்ப, மேல்ரோமை நாட்டில் மகமதியர் படையெடுத்துக் கிறிஸ்துவர்களைத் துன்புறுத்தினார்கள்.

### மகமது மதம்.

இம்மதத்தை ஸ்தாபித்த மகமது, அபிரகாமுக்கு ஊழியக்காரியிடம் பிறந்த இஸ்மயேல் குலத்திலுதித்து, மெக்காவில் ஓர் யூதஸ்திரீக்கும் அஞ்ஞான அரபிக்கும் பிறந்தவன். இவன் சிறு வயதிலேயே தாய் தந்தையரை இழந்து தன் பாட்டனால் வளர்க்கப் பட்டுச் சற்றும் கல்வியின்றித் தன் பெயர் முதலாய் எழுதக்கூடாதவன். இவன் பாலியத்தில் மற்றவர்களுடன் கூடி வசிக்காமல் ஏகாந்தத்தை விரும்பியவன். என்னமோ கனவு காண்பவன் போல் தோன்றுவான். மேலும் மிகக் காமத்தீ குடிகொண்டவன். பாலியத்தில் மெக்காவில் தன்னிலும் அதிக செல்வமுள்ள ஓர் விதவையிடம் சேவகத்தில் அமர்ந்து பின் அவளைக் கலியாணம் முடித்தான். நாற்பது வயதில் தான் சம்மனசினால் ஏவப்பட்டதாய்ப் பிதற்றி வேதம் போதிக்கத் தலைப்பட்டான்.

## மகமதிய சகாப்தம்.

இவனைக் காமதூரன் என அறிந்தவர்கள், இவனைச் சிறைபிடிட எத்தனிக்க, கி. பி. 622ல் மெக்காவை விட்டு மெடினுவுக்கு ஓடிப்போனுன். இவ்வருஷமுதல் மகமதிப சகாப்தம் கணக்கிடப்படுகிறது.

## மதஸ்தாபனே.

இளமையிலிருந்து ஓர் விதக்காக்கை வலிப்புள்ளவனுகையால் தான் போதிக்குங்கால், இவ்வலிப்பு அர்ச். கபிரியேல் சம்மனசு தன்னிடம் வருவதால் நேரிடும் தன்னை அறியாத சந்தோஷம் எனப்பிதற்றுவான். இவன் போதித்த மதமோ, கிறிஸ்துமதம், யூதமதம், அஞ்ஞானமதம் ஆகிய மூன்றிலிருந்தும் எடுக்கப்பட்டு, கத்தோலிக்க சந்நியாசத்தை இழந்த ஓர் குருவால் எழுதப்பட்டது. இவைகள் அடங்கிய நூலுக்குக் கோரான் எனப் பெயர்.

போதிக்கும் போதகத்துக்கு அத்தாட்சியாய்ப் புதுமை செய்ய ஜனங்கள் கேட்கவே, "புதுமையால் அல்ல, கத்தியால் மட்டும் வேதம் போதிப்பேன்" என்றுன். இப்படியே தன் வேதம் பரவுவதற்கு, அநேக கொள்ளைக்காரரையும், திருடர்களையும் சேர்த்துக்கொண்டு, வழிப்பறி செய்து, மெக்காவைத் தாக்கிப் பிடித்து மகமதிய ஆட்சியை ஏற்படுத்தினுன். அப்பால் அரேபியாவின் பல சிறு தேசங்களையும் கைக்கொண்டு, இவனுக்குப்பின்னுல் கொஞ்ச காலத்தில் மகமதியர் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் கிறிஸ்து மதத்திற்குச் செய்த தீமைகளை எடுத்துரைக்க முடியாது.

## எராக்கிலியுஸ் ராயன்.

மகமதிய மதம் அரேபியாவில் போதிக்கப்பட்ட காலத்தில் எராக்கிலியுஸ் கீழ்ரோமை நாட்டின் அதிபதி. அச்சமயத்தில் காஸ்ரோஸ் என்னும் பாரசீக மன்னன், கி. பி. 614ல் ஜெருசலேமைப் பிடித்து அநேகமாயிரம் கிறிஸ்துவர்களைக் கழுத்தறிந்து, நமது

கர்த்தர் பாடுபட்ட சிலுவையையும் தன்னுடன் கொண்டு சென்றான். எராக்கிலியுஸ் முதலில் அவனால் பலமுறை தோல்வி அடைந்து சமாதானம் விரும்பிக் கேட்க, அவன் "நான் ரோமையர் சிலுவையில் அறையுண்டவனை விட்டு என் தேவனாகிய சூரியனை வணங்குமட்டும் சண்டையை ஒழிக்கேன்" என்று பதில் உரைத்தமையால், இவர் கோபங்கொண்டு கி. பி. 622ல். தம் படையுடன் யுத்தபாணியாய்ச் சென்று, பாரசீகரை அநேக சண்டைகளில் தோல்வி அடைவித்தார். காஸ்ரோஸ் மடிந்து அவன் மகன் சமாதானத்துக்காகச் சிலுவையையும், ரோமையரிடமிருந்து கைப்பற்றிய நாடுகளையும் திருப்பிக் கொடுத்தான். எராக்கிலியுஸ் கொன்ஸ்தாந்திநோப்பிலி சேர்ந்து, அப்பால் ராய பூபணியுடன் திருச்சிலுவையைத் தன் கைகளிலேந்தி ஜெருசலேமுக்குக் கொண்டு சென்று, நமது கர்த்தர் ஏறிச் சென்ற கபாலமலையின் உச்சியில் நாட்ட எண்ணினார். ஆனால் திரு மலையடிவாரம் அணுகினதும், தன்னைமேல் செல்லவிடாது ஏதோ மறைவான ஓர் தடையிருப்பதை உணர்ந்து, தன் ராய உடுப்புக்களைக் களைந்துவிட்டுப் பின் மலையுச்சி சென்று திருச்சிலுவையை நாட்டினார். இதுவே செப்டெம்பர் மாதம் 14ந் தேதி கொண்டாடப்படும் திருச்சிலுவை உயர்த்திய திருநாள்.

## மகமதிய மதப்பரம்பல்.

மகமதுக்குப்பின் வந்த அம்மதத் தலைவர்களுக்கு காலிபா எனப் பெயர். அவர்களில் இரண்டாம் ஓமார் ஆட்சி செய்த கி. பி. 637ல் ஜெருசலேம் மகமதியருக்கு உட்பட்டது. ஏராக்கிலியுஸ் மன்னன் இதைக்காப்பாற்ற முடியவில்லை. இதற்குப்பின் மகமதியர் 7ம் நூற்றாண்டின் இறுதியில் அரேபியா, சீரியா, பாரசீகம், பலஸ்தீன், எகிப்து முதல் ஆப்பிரிக்காவின் வடநாடுகள், எல்லாம் தங்கள் வசமாக்கினது மன்றி, அநேகவிசை கொன்ஸ்தாந்திநோப்பிலையும் தாக்கினார்கள். 8ம் நூற்றாண்டின் துவக்கத்தில் கி. பி. 711ல் ஸ்பானியாவில் நுழைந்து, வடபக்கத்தில் மலைப்பிரதேசம் தவிர மற்றெல்லாவற்றையும் தங்கட்குள் அடக்கிக் கொண்டார்கள்.

## ஏக சித்தக் கொள்கை.

மகமதிய மதம் பாம்பி சொல்லொண்ணுத் தீங்கிழைத்த காலத்திலேயே, யூட்டிக்கிய தப்பறை முன் கண்டிக்கப்பட்டு ஒழிந்திருந்தும், வேறுவிதமாய் மறுபடியும் எழும்பிற்று. யூட்டிக்கியர் நமது கர்த்தருக்கு ஒரு சுபாவமொழிய இரண்டு சுபாவமில்லை என்றார்கள். கி. பி. 610ல் கொன்ஸ்தாந்திநோப்பிலி பிதாப்பிதாவாயிருந்த செர்ஜியுஸ், நமது கர்த்தருக்கு ஒருசித்தம் ஒழிய, இரண்டு சித்தங்கள் இல்லை யெனப் போதித்தார். யூட்டிக்கிய தப்பறைக்கும் இதற்கும் வித்தியாசம் அதிகமில்லை. இவர் அலெக்சாந்திரியா, அந்தியோக்கியா, பிதாப்பிதாக்களைத் தம் வசம் சேர்த்துக்கொள்ளவே, ஜெருசலேம் பிதாப்பிதாவாகிய அர்ச். சுப்ரோனியுஸ் மட்டும் இதைக் கடிந்தனர்.

நமது கர்த்தருக்கு தேவ சுபாவம், மனுஷசுபாவம் ஆக இரண்டு சுபாவங்களும், தேவசித்தம், மனுஷசித்தம் ஆக இரண்டு சித்தங்களும் உண்டென்பதும், ஒன்றையொன்று உபாதிக்காமல் தனித்தனியாயுள்ளவை என்பதும் விசுவாச சத்தியம். இச்சத்தியத்தைக் குறித்து இதுமட்டும் யாது தப்பறையும், சந்தேகமும் இன்றி இருந்தமையால், இது வெளிப்படையாய்ப் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

இத்தப்பறையைக் கொண்டவர் அர்ச். பாப்பையும் ஏமாற்றினார். எல்லா மனிதருக்கும் இயல்பாயுள்ள, நன்மையை நாடும் சித்தமும், தின்மையை நாடும் சித்தமும், ஆகிய இரண்டு சித்தங்கள் நமது கர்த்தரிடத்தில் இல்லையென்று தாம் கொண்டிருப்பதாய்க் காட்டவே, அர்ச். பாப்பும், நியாயத்துடனே தின்மையை நாடும் சித்தம் நமது கர்த்தருக்கு இல்லாததால், இவர் சொல்லுவது சரியென ஒத்துக்கொண்டிருந்தார்.

## கான்ஸ்டன்ஸ் சட்டம்.

ஒனோரியுஸ் பாப்பு கி.பி.638ல் மரித்தபின் ஏக சித்தக் கொள்கையாருடன் கூடி அக்கொள்கையைக் கொண்ட ஓர் பாப்புவை

நியமிக்கக் கருதிய எராக்கிலியுஸ் ராயனுடைய விரோதத்தால் ஒன்றரை வருஷகாலம் ஒரு பாப்பும் குறிக்கப்படவில்லை. இம்மன்னனும், இம்மன்னனுக்குப் பின் வந்த இரண்டாம் கான்ஸ்டன்ஸ் ராயனும் முற்கூறிய கொள்கையை நிலை நாட்ட எத்தனித்துச் சட்டம்பிறப்பித்தார்கள். கான்ஸ்டன்ஸ் சட்டப்படிக்கு இக்கொள்கையை மறுத்தவர்கள் கடின தண்டனைக்கு உட்பட வேண்டியிருந்தது. இவ்விதமாய் உலக அரசர்கள் தங்களுக்குச் சேராத சத்திய விஷயங்களை நியமிக்கத் தொடங்கினார்கள்.

## அர்ச். மர்த்தீன் பாப்பு.

அப்பால் கி. பி. 649 முதல் 655 வரைக்கும் பாப்புவாயிருந்த அர்ச்.மர்த்தீன் ரோமையில் ஓர் சங்கம் கூட்டி, இக்கொள்கையையும், ராய சட்டங்களையும் கண்டித்தார். கான்ஸ்டன்ஸ் ராயன் கோபம் பொங்கி, அர்ச். பாப்புவைப் பிடித்துக் கொன்ஸ்தாந்திநோப்பிலுக்குக் கொண்டு வர ஓர் சேவகனை அனுப்பினான். அர்ச். மர்த்தீன் இவனைத்தடுக்க யாது பிரயாசையும் செய்யாமையால், சேவகன் அவரை ஒரு படகிலிட்டு மூன்று மாதங்களுக்குப் பின் கொன்ஸ்தாந்திநோப்பிலில் கொண்டு சேர்த்தான். அங்கே 83 நாள் சிறையிடப்பட்டு சரீர சவுக்கியம் மிகக்குன்றி இருக்கும் சமயம் பார்த்து இவரைப் பல கேள்விகள் கேட்டும், இவர் சற்றும் இணங்காமை கண்டு, கான்ஸ்டன்ஸ் இவரைக் கொலையாளிகளுக்குக் கையளித்தான். இக்கொலைஞர் அவருடைய உடுப்புகளைக் களைந்து தெருக்களின் வழியாய் நியாயஸ்தலத்துக்கு இழுத்துக்கொண்டு போய் சங்கிலியால் கட்டினார்கள். இப்படியாய் இவர் இழுத்துப்போகப்படுவதைக் கண்ட ஜனங்கள் எல்லோரும் திவ்விய கர்த்தரின் ஸ்தானாதிபதிக்குச் செய்யும் கொடுமைக்காய் மிக்க பரிதாபப்பட்டு அழுதார்கள். ஆயினும் கொலைஞர் இவரை இழுத்துக் கொண்டு வந்து, கைதிகளோடும், கொலையாளிகளோடும் சிறையிட்டுப் பின்னும் வேறோர் சிறைக்குக்கொண்டு போனார்கள். இங்கு அர்ச். மர்த்தீன் பலவித குரூரங்களுக்கு உட்பட்டு, மூன்று மாதம்

அச்சிறைப்பிலிருந்து, 655ம். ஆண்டு பெரிய வியாழக்கிழமை அதினின்றுநீக்கப்பட்டு கிரிமியா தேசத்துக்குத் துரத்தப்பட்டார்.

## 6-ம். பொதுச்சங்கம்.

## கொன்ஸ்தாந்திநோப்பிலி கி. பி. 680.

இரண்டு மாதங்கட்குப் பின் கான்ஸ்டன்ஸ் மரணமடைய, அவனுக்குப் பின்னால் சிம்மாசனம் ஏறிய கொன்ஸ்தாந்தீன் போகோநாத்துஸ், அக்காலத்திய அர்ச். அகாத்தோ பாப்புடன் கூடித் திருச்சபையில் சமாதானத்தை மறுபடியும் நிலைநாட்டக் கருதியதால், கி. பி. 680ல் கொன்ஸ்தாந்திநோப்பிலில் ஓர் பொதுச்சங்கம் கூடிற்று. அதில் அர்ச். பாப்புவின் இரண்டு ஸ்தானாதிபதிகள் அக்கிராசனம் வகித்தனர். நமது கர்த்தரின் இரண்டு சித்தங்களைக் குறித்து அர்ச். பாப்பு எழுதிய நிருபம் வாசித்து முடிந்ததும், அங்கு இருந்தவர்கள் எல்லோரும், "அகாத்தோ வாயின் வழியாய் அர்ச். இராயப்பர் கூறிவிட்டார்; அவருடன் கூடி நாமும் நமது கர்த்தருக்கு இரண்டு சுபாவங்களும், இரண்டு சித்தங்களும், தனித்தனியான செயல்களும், உண்டென நம்புகிறோம். இதை விசுவசியாதவர்கள் சாபத்துக்கு உள்ளாவார்கள்" என ஒருமித்துக் கூறினார்கள். சங்கத்தின் அலுவலெல்லாம் முடிந்த பின், தங்கள் தீர்மானத்துக்கு அத்தாக்ஷியாக 165 மேற்றிராணிமார்கள் கையொப்பமிட்டு அர்ச். பாப்புவுக்கு அனுப்ப, அவரும் அதை அங்கீகரித்துத் திருச்சபையில் அமுலுக்குக் கொண்டு வந்தார்.

ஆயினும் இத்தப்பறை சீக்கிரம் ஒழியவில்லை. இவருக்குப் பின் பட்டத்துக்கு வந்த இவர் மகன் மாறான கொள்கையை ஏற்றுக்கொண்டு, ஓர் சங்கம் கூட்டித் தன் கொள்கையே சரியெனத் தீர்மானித்து பாப்புவின் அங்கீகாரத்துக்கு கி. பி. 692ல் அனுப்பினான். அவர் அதற்கு இணங்காமையால், அவரைப் பிடித்துவர ஓர் சேவகனை அனுப்பினான். ஆனால் இச்சமயத்தில் ரோமையர் அர்ச். மார்த்தீனுக்கு நேர்ந்தவற்றை உணர்ந்து

ஒன்றாய்க்கிளம்பி ராயனுடைய சேவகனைக் கொலை செய்ய எத்தனித்தார்கள். அர்ச். பாப்புவால் பாதுகாக்கப்பட்டு, அச் சேவகன் கொன்ஸ்தாந்திநோப்பிலிக்குத் திரும்பிச் சென்று, "பாப்புகள் உம்முடைய அரசாட்சியை மதித்தாலும், ரோமையர் அதை மதிக்கிறார்களில்லை" என்று ராயனுக்கு அறிவித்தான். இப்படியாய் சமாதானமில்லாமலிருந்து, கி.பி. 713ல் பட்டத்துக்கு வந்த அனஸ்தாசியுஸ் ராயனுடைய நேர் விசுவாசத்தால் சமாதானம் ஏற்பட்டு ஏகசித்தக்கொள்கை தொலைந்தது.

## 5ம் அத்தியாயம்.

---

## கார்லோவிங்கியர் கி. பி. 711—800.

---

உட்பிரிவுகள்—:

கீழ் தேசதிருச்சபையும், விக்கிரக நிக்கிரகரும்; மேல்தேச திருச்சபையும், கார்லோவிங்கியரும்.

### 1. கீழ் தேச திருச்சபையும் விக்கிரக நிக்கிரகரும்.

### லெயோ.

ஏக சித்தக்கொள்கை தொலைந்ததும், எப்போதும் தப்பறைக் குட்பட்டுத் துன்பம் நிறைந்த கீழ் தேச திருச்சபையில் முன்னிலும் பலமான ஓர் தப்பறை உண்டாயிற்று. இதன் கர்த்தாவாகிய லெயோ ராயன் கி. பி. 711ல் சிம்மாசனம் ஏறி, முதலில் கொன்ஸ்தாந்திநோப்பிலைத் தாக்க வந்த அரபியரைத் துரத்திக் கௌரவமாய் ஆண்டானெனினும், பின் திருச்சபைக்கு விரோதியானான்.

இவன் இளமையிலே யூதர்களோடும், விசுவாசமற்ற கிறிஸ்துவர்களோடும் பழக்கங்கொண்டிருந்தமையால், ஒருநாள் ஓர் யூதன் நமது கர்த்தருடைய சிலுவைச் சுரூபத்தைத் தூஷித்து, "நீ ராயனானால் இச்சுரூபங்களை அழிக்காமல் விட்டிருப்பாயோ?" என்றனன். லெயோ, "நான் ஒரு சுரூபமும் இருக்கவிடேன்" எனச் செப்பியிருந்தான். அதை இப்போது உணர்ந்து, கி. பி. 726ல் கோயில்களிலும், வீடுகளிலும் இருக்கும் எவ்வித சுரூபங்களையும் உடைத்து நாசமாக்கக் கட்டளை பிறப்பித்தான். இச்சமயத்தில் கொன்ஸ்தாந்திநோப்பிலி பிதாப்பிதாவாகிய அர்ச். ஜெர்மானுஸ், ராயன் கட்டளைக்கு இணங்காமல், "கிறிஸ்துவர்கள் சுரூபங்களை ஆராதிக்கிறதில்லை, அவைகட்கு மரியாதை மட்டும் செய்கிறார்கள். ஏனெனில் அவைகள் சர்வேசுரனையும் அர்ச்சியசிஷ்டவர்களையும்

நினைப்பூட்டுகின்றன. மேலும் சுரூபங்களை அல்ல, அவைகள் நினைப்பூட்டும் சேசுநாதரைத் தோத்திரிக்கிறார்கள், அர்ச்சியசிஷ்டவர்களுக்கு வணக்கம் செய்கிறார்கள்,'' என ராயனுக்குச் சொல்ல, அவனும் இவருக்குப் பயந்து கொஞ்சகாலம் தன் கட்டளையை ஊர்ஜிதப்படுத்தவில்லை. அர்ச். பாப்புவும் இது விஷயமான வேத சத்தியத்தை விளக்கமாய்த் தெரிவித்தார்.

## வேத கலகம்.

ஆயினும் லெயோ தன்னைச் சற்றும் திருத்திக்கொண்டவனல்ல. பல நாள் அர்ச். ஜெர்மானுஸை நயத்திலும் பயத்திலும் தனக்கு இணங்கப் பிரயாசைப்பட்டும் வீணனது கண்டு, கடைசியில் அவரைத் தேசத்திற்கு வெளிப்படுத்தவும், சிரச்சேதம் செய்யவுங் கட்டளை இடுவதாய்ப் பயமுறுத்தினன். "சிம்மாசனம் ஏறுகையில் வேதத்துக்கு எவ்வித விரோதமுஞ் செய்வதில்லை என்ற உன்வாக்கு எங்கே" என அர்ச்சியசிஷ்டவர் கேட்க, ராயன் அவரைக் கன்னத்தில் அறைந்து, மந்திராலோசனை சங்கத்தாரால் பிதாப்பிதாவின் உரிமையினின்று நீக்கினன். "என் சரீரம் உனக்கு உட்படலாம், ஆனல் என் விசுவாசம் உன் சங்கத்துக்குக் கட்டுப்பட்டதல்ல" என்று அர்ச்சியசிஷ்டவர் மொழிய இவரைத் தேசத்திற்கு வெளிப்படுத்தித் தனக்கு இணங்கிய ஒருவரை இவர் ஸ்தானத்துக்கு உயர்த்தினன். பின் தன் சேவகர்களை ஏவிக் கோயில்களிலும், வீடுகளிலுமுள்ள சுரூபங்களைச் சின்ன பின்னமாய் உடைக்கக் கட்டளை இடவே, விக்கிரக நிக்கிரகர் எனத் தங்களைப் பிதற்றி இச்சேவகர் எங்குமுள்ள சுரூபங்களைத் தவிடு பொடியாக்கித் தங்களைத் தடுத்தவர்களையும் சற்றும் இரக்கமின்றிக் கொலை புரிந்தார்கள்.

அரண்மனையின் ஓர் வாயிலில் நமது கர்த்தர் பாடுபட்ட சுரூபமொன்று இருந்தது. ஜனங்கள் இதனிடத்தில் மிக்க பக்தி வைத்திருந்தார்கள். இதை உடைக்குங்கால் அநேக மாதுக்கள் சேவகரைத்தடுக்க,இவர்கள் எல்லோரையும்கொன்று, தாரைப்பூசி,அநேக சுரூபங்களைப் பிணங்கட்குமேல் அடுக்கி நெருப்பிட்டு எரித்தார்கள்.

ராயனது குரூரம் இத்துடன் நிற்கவில்லை. கொன்ஸ்தாந்தினேப்பிளில் உலகமெங்கும் பிரசித்திபெற்ற ஓர் புத்தகசாலை இருந்தது. இதில் சர்க்கார் அனுக்கிரகத்தின் கீழ் பேர் பெற்ற அநேக பண்டித சிரோமணிகளும், வேத சாஸ்திரிகளும் இருந்தார்கள். அவர்களை ராயன் தன் கட்டளைக்குக் கீழ்ப்படுத்த முயன்று தோல்வியடைந்து, * ஓமார் அலெக்சாந்திரியா புத்தகசாலையை எரித்தது போல், புத்தக சாலையையும் அதிலிருந்த கலை நிபுணர்கள் எல்லோரையும் ஒருங்கே சுட்டெரித்தான்.

## அர்ச். தமசீன் அருளப்பர்.

வேதகலகம் இப்படியிருக்கையில் தமாஸ்க்குஸ் பட்டணத்தில் உயர்ந்த வங்கிஷத்தில் பிறந்து சன்னியாசியாய்ச் சஞ்சரித்த அர்ச். தமசீன் அருளப்பர், சுரூபங்கட்குச் செய்யும் வணக்கம் சரியென மூன்று உபந்நியாசங்கள் எழுதினர். இவை கீழ் நாட்டில் மட்டுமின்றி மேனாடுகளிலும் பரவின. இதனை அறிந்த லெயோ ராயன் அவரைப்பழிவாங்க ஓர் கேவலமான ஏமாற்றஞ் செய்தான். அவர் எழுத்துப்போல் எழுதக்கூடிய ஒருவனைக் கூப்பிட்டு, தமாஸ்குஸ் மேல் படையெடுத்து வந்தால் அதன் கதவுகளைத் திறந்துவிடுவதாய் அர்ச். தமசீன் அருளப்பர் தனக்குக் கடிதம் எழுதினது போல் எழுதச் செய்து, அக்கடிதத்தை தமாஸ்குஸ் ஆண்ட மகமதிய காலிபாவுக்கு அனுப்பினன். காலிபா உடனே அர்ச். அருளப்பரைப் பிடித்து வலது கரத்தை அறுத்துவிட, அவர் நமது தேவதாயின் ஓர் சுரூபத்தின்முன் மன்றாடிய அளவில் அறுப்புண்ட கரத்தை மறுபடியும் புதுமையாய்ப்பெறவே, காலிபா பயந்து அவரை முந்திய அந்தஸ்திலேயே விட்டுவிட்டான்.

## இத்தாலியில் துன்பம்.

கீழ் நாடுகள் எல்லாம் ராயனுடைய கட்டளையை அனுசரித்ததென்கிலும், இத்தாலி ஜனங்கள் இதைக்கடிந்து, ராயனது

---

* ஓமார் அலெக்சாந்திரியா புத்தக சாலையைமட்டும் எரித்தான்.

கவர்னர் சுரூபங்களை உடைக்க முயன்றதைத் தடுத்து விட்டார்கள். பின் கிறிஸ்துநாதருடையவும், அர்ச்சியசிஷ்டவர்களுடையவும் சுரூபங்களை நிக்கிரகஞ் செய்யும் ராயன் *தன் விக்கிரகங்களை இத்தாலிக்கு அனுப்பினன். ரோமையர் அவ்விக்கிரகங்களை யெல்லாம் கீழேதள்ளிக் காலால் மிதித்து அவமதித்தார்கள்.

## மேல்ரோமை நாடு கீழ்ரோமை நாட்டினின்று பிரிதல்.

கீழ்ரோமை அரசர்கள் மேல்ரோமை நாட்டைக்கவனியாது விட்டுவிட, கி பி. 5ம் நூற்றுண்டின் துவக்கமுதல் இத்தாலி தேசம் பலமுறை படையெடுக்கப்பட்டு, கி.பி. 476ல் மேல்ரோமை ராயரும் துரத்தப்பட்டு, இராச்சியபாரம் அழிந்த விஷயம் முன் கூறப்பட்டது. அதுமுதல் இத்தாலி அன்னியருக்குட்பட்டுப் போயிற்று. ஆயினும் ரோமையருக்குச் சிற்சில பாகங்கள் சொந்தமாயிருந்ததாலும், அவர்கள் அன்னிய ராசனுக்குக் கீழிருக்க விருப்பமின்றி இருந்ததாலும், கீழ்ரோமை ராயரைச் சக்கரவர்த்தியாகவுற் அக்கொண்டார்கள். அதுமுதல் கீழ்ரோமை ராயரின் கவர்னர் ராவெனுவில் தங்கி, ரோமையருக்குச் சொந்தமான பாகங்களை ஆண்டுவந்தார். எனினும் மிகக்கொடிய செய்கைகளைச் செய்த, மேல்காத்தியர், கீழ் காத்தியர், அன்ஸ், வந்தலர், லொம்பார்டியர், முதலிய மிலேச்சர்கள், இத்தாலியைப் பின்னும் பின்னும் தாக்கிய காலங்களில் கீழ்ரோமை கவர்னர் சற்றும் பலமின்றியிருந்தமையால், பாப்பைத் தவிர ரோமையருக்கு உதவி புரிவோர் வேறு யாருமில்லை.

இக்காலத்தில் கீழ்ரோமை நாட்டின் சம்பந்தத்தால் எவ்விதத்தினும் ரோமையருக்குத் தீங்குகளே விளைந்தனவொழிய, நன்மையொன்றும் உண்டாகவில்லை. ஆகையால் ரோமையர் கீழ்ரோமை ராயரை மறந்து, சகல விஷயங்களிலும் பாப்புவையே அரசராய்ப் பாவித்து வரநேர்ந்தது. விக்கிரக நிக்கிரக கட்டளைக்கு

* தேசங்களில் பிரசித்தி பெற்றவர்களுடைய விக்கிரகங்களைப் பகிரங்கமான இடங்களில் வைப்பது வழக்கம்.

ரோமையர் விரோதஞ் செய்து, ராச விக்கிரகங்களைத் தள்ளிக் காலால் மிதித்து ராயனுக்கு விரோதமாய் எழுந்த இச்சமயத்தில், வேண்டுமாயின் பாப்பு சுலபமாய்த் தம்மை ரோமையருக்கு அரசனெனப் பகிரங்கம் செய்திருக்கலாம். ஆனால் பாப்புகள் லௌகிகப் பெருமையின்மேல் சற்றும் விசாரமின்றி ராயனுக்குச் செலுத்தும் மதிப்பைச் செலுத்திக் கொண்டே வந்து, கடைசியாய் ரோமையரால் வற்புறுத்தப்பட்டு, அவ்வந்தஸ்தைப் பகிரங்கமாய் ஏற்றுக் கொண்டார்கள். ஏனெனில் ரோமையரைப் பாதுகாக்க யாருமின்றி, அக்கடமைகளைத் தாங்களே பலகாலம் நடத்திவந்தார்கள். ஆயினும் சார்ல்மேன் (கி. பி. 774) காலமட்டும், கீழ்ரோமை அரசர்களும், லொம்பார்டி அரசர்களும், பாப்புவின் இகலோக ஆட்சியை அங்கீகரியாது, திரும்பத்திரும்ப ரோமையரைத் தங்கட்குள் அடக்க முயற்சித்தார்கள்.

கி.பி. 729ல் இரண்டாம் கிரெகோரி பாப்பு, லெயோ ராயனுக்கு தப்பிதத்தைத் திருத்தும்படி எழுதியும் அவன் இணங்காது, இவருக்கு விரோதமாய் லொம்பார்டியருக்கு ராயனான லுயிட்பிராண்டுடன், ஓர் உடன்படிக்கை செய்தான். மகா சிங்கராயர் அட்டிலாவிடம் சென்றது போல், கிரெகோரி லொம்பார்டியர் அரசனைப் போய்ப் பார்க்க, அவன் அவர் காலடிகளில் விழுந்து, தன் சேனையை ரோமை நாட்டில் எவ்வித சேதமுஞ் செய்யாது அப்புறப் படுத்தியது மன்றி, அவரைப் பிடித்துக் கொன்ஸ்தாந்திநோப்பிளிக்கு அனுப்பவாவது, கொலைபுரியவாவது, செய்த சதியாலோசனைக்கு இணங்கவில்லை. இப்படியாய் ரோமை ராச்சியத்தில் துன்ப மொழிந்தது.

## கொன்ஸ்தாந்தீன் கப்ரோனிமுஸ்.

கி. பி. 741ல் லெயோ ராயன் நிர்ப்பாக்கியனாய் மரிக்க, அவன் மகன் கொன்ஸ்தாந்தீன் கப்ரோனிமுஸ் சிம்மாசன மேறினான். இவன் சர்வ அக்கிரமங்களும் சொரூபமெடுத்தது போன்றவன். கிரேக் சரித்திரர்கள் இவன் கிறிஸ்துவனுமல்ல, யூதனுமல்ல, அக்கியானியுமல்ல வென்று எழுதியிருக்கிறார்கள்.

இவன் சிம்மாசனம் ஏறிய பின் ஓர் ராசகலகம் ஏற்பட, அதில் சம்பந்தப்பட்ட ஜனங்கள் எல்லோரையும் கத்திக் கிரையாக்கினன். பிளேக் தொடங்கி அநேகர் மடிந்தார்கள். மரித்தவர்களுடைய பணங்காசுகளைத் தேடிக்கொள்ளை கொண்டானன்றி, அவ்வியாதியைத் தொலைக்கச் சற்றும் முயற்சித்தவனல்ல. அதே சமயத்தில் ராச்சியம் எங்கும் கிறிஸ்துவர்களுக்குப் பலவிதமாய்த் துன்பம் செய்து, கன்னியர் சந்நியாசிகளைப் பார்க்க முதலாய் இஷ்டமின்றி, அவர்களை முற்றும் நாசப்படுத்த முயன்றான். இவனது குரூரச் செய்கைகளும், கிறிஸ்துவர்களை உபாதிக்கச் செய்த ஏற்பாடுகளும், அஞ்ஞான ரோமையர் முதலாய்ச் செய்யவில்லையாதலால் இவன் செய்கைகள் எழுதத் தக்கவையன்று.

ஆயினும் பின்வரும் ஓர் சம்பவத்தைமட்டும் இங்கு குறிப்பேன். இக்காலத்தில் நிக்கொமெதியாவில் முடியப்பர் என்று ஓர் பரிசுத்த மடாதிபர் இருந்தார். இவர் மிகப் பிரசித்தி பெற்றவர். இவரைத் தன் பக்கமிழுக்க எண்ணித் தன் முன் கொண்டுவந்து, “மடையா! சேசுக்கிறிஸ்துவுடைய சுரூபத்தைக் காலால் மிதித்தாலும், அவரை அவமரியாதை செய்யாமல் இருக்கலாமென்பதை நீ அறியாயோ?” என்று கேட்டான். அவர் உடனே ராயபிம்பம் பதித்திருந்த ஓர் நாணயத்தைக் காட்டித் தரையிலிட்டுக் காலால் மிதித்து, “ராயனே நான் உமக்குச் செய்யும் மரியாதை சற்றும் குறைவின்றி உமது பிம்பமுள்ள நாணயத்தை மிதிக்கலாமே?” என்று பதிலுரைத்தார். அப்போது சேவகர் அவர் மேல் விழுந்து அடித்தார்கள். அவர்களை நோக்கி, “உலக ராசனுடைய பிம்பத்தை மிதித்தது பிசகானல், பரலோக ராசனின் சுரூபத்தைத் தீக்கொளுத்தல் அதைவிடப் பன்மடங்கு பிசகல்லோ?” என்றார். ஓர் பதிலும் சொல்ல முடியாமல் அவரைச் சிறைச்சாலைக்கு இழுத்துச் சென்று கொன்றார்கள். இவ்விதமாய் ரோமை நாடெங்கும் இக்கொடுமை பாவி சுமார் ஐம்பது வருஷம் வரையில் குழப்பம் நடந்து வந்தது.

## 7-ம். பொதுச்சங்கம், நைசியா (கி. பி. 787)

கி. பி. 775ல் இவன் பிளேக்கால் மடிய, இவன் மகன் பட்டத்துக்கு வந்து தகப்பனைப் பின்தொடர்ந்தான். ஆயினும் கி. பி. 780ல் இவனும் மடிந்தான். இவன் சிறுபிள்ளைக்குப் பதிலாய்த் தேசம் ஆண்ட ஐரீன் அரசியின் நேர்விசுவாசத்தால் கீழ் ரோமை நாட்டில் இதுமுதல் சமாதானம் ஏற்பட்டது. ஐரீன் பாப்புக்கு எழுத அவரும் இணங்கிச் சுரூபங்களைப் பற்றிய தப்பறையைத் தீர்க்க நைசியாவில் ஓர் பொதுச்சங்கம் கூட்டுவித்தார்.

அர்ச். பாப்புவின் ஸ்தானாதிபதி அக்கிராசனத்தின் கீழ் 377 மேற்றிராணிமார்கள் கூடினார்கள். இவர்கள் செய்த தீர்மானம் வருமாறு: "இவ்விஷயத்தைத் தீரயோசித்து சேசுக்கிறிஸ்து நாதருடையவும், அர்ச். கன்னிமரியாயுடையவும், சம்மனசுக்களுடையவும், அர்ச்சியசிஷ்டவர்களுடையவும், சுரூபங்களைக் கோயில்களிலும், ஜெபக்கூடங்களிலும், வீடுகளிலும், மறுபடியும் வைக்க வேண்டுமெனத் தீர்மானிக்கிறோம். சர்வேசுரனுக்குச் சேர்ந்த விசேஷ ஆராதனையைச் செலுத்தாமல், வணக்கமும், மரியாதையும் சுரூபங்கட்குச் செலுத்தவேண்டும். ஏனெனில் சுரூபங்களை வணங்குகிறவன் அவை யாரைக்குறிக்கின்றனவோ, அவர்களையும் வணங்குகிறான். இதுவே வேதபாரகர்களாலும், உபதேச பரம்பரையிலும் கொண்டாடப்பட்டு வரும் வேத சத்தியம்." இத்தீர்மானத்துக்குப்பின் கீழ்நாடுகளில் குழப்பம் அடங்கிற்று.

## 2. மேனாட்டுத் திருச்சபையும், கார்லோவிங்கியரும்.

மேனாட்டில் குடியேறிய மிலேச்சர்கள் புதுக் கிறிஸ்துவர்கள் ஆனபடியால், அந்நாட்டார் வேத விஷயங்களில் கிரீக்கரைப் போலின்றி, நாளுக்குநாள் கிறிஸ்து நாகரீகத்தில் விர்த்தியடைய, அஞ்ஞான ஜனங்களும் பலர் திருச்சபையில் உட்பட்டார்கள்.

## அர்ச். பொனிபாசியார்.

இந்நூற்ருண்டில் மேல் ரோமை நாடுகளுக்கு வடக்கில் இருந்த ஜெர்மனியரைச் சத்திய வேதத்துக்குக் கொண்டுவந்து ஜெர்மனியின் அப்போஸ்தலரெனப் பேர்பெற்று விளங்கிய அர்ச். பொனிபாசியார் இங்கிலாந்தில் பிறந்தவர். இவர் ஜெர்மனியின் எப்பக்கங்களிலும் சுற்றித்திரிந்து கோயில்களையும் குருக்களையும் விர்த்திசெய்து, அதிமேற்றிராணியாருமாகி, அதைவிட்டு முன்போல் வேதம் போதிக்கச் சென்று கி.பி. 755ல் வேதசாட்சி முடிபெற்ருர்.

## 3ம். கிரெகோரி.

இப்படி வேத போர்தகர்கள் அஞ்ஞான தேசங்களைச் சத்தியமதத்துக்குக் கொண்டுவருங் காலத்தில் மிகப் பேர்பெற்ற பாப்புமார்கள் ஒருவர் பின் ஒருவராய்த் தோன்றினர்கள். அர்ச். 2-ம் கிரெகோரி, லெயோ ராயனுடன் போராடிய விபரம் முன் கூறப்பட்டது. இவருக்குப் பின் வந்த 3-ம் கிரெகோரி (கி.பி. 731-741) காலத்தில் பிராஞ்சுக்காரர் அரசியலை நடத்திய சார்ல்ஸ் மார்ட்டெல் ஸ்பானிய ராச்சியத்தைக் கைப்பற்றிக்கொண்டு பிராஞ்சிலும் நுழைந்து கிறிஸ்துவன் என்னும் பெயரையே ஒழிப்போமெனக் கர்வம் பாராட்டிய அரபி மகமதியரைத் துரத்தினர்.

## கார்லோவிங்கியரும், இத்தாலியும்.

2-ம் கிரெகோரி பாப்புக்கு லொம்பார்டி அரசன் இணங்கி ரோமையைத் தாக்காமல் விட்ட விஷயம் முன் கூறப்பட்டது. ஆயினும் லுயிட்பிராண்டு பின்னல் ரோமையைத்தாக்கினன், ஆனதுபற்றி, கொன்ஸ்தாந்திநோப்பிலி ராயரால் கைநெகிழப்பட்டு, லொம்பார்டி அரசனுக்குப் பயந்து, அர்ச். பாப்பு பிராஞ்சின் அரசனது உதவியைத் தேடினர். அவர் இத்தாலிக்கு வராவிடினும், அவருக்குப்பயந்து லொம்பார்டி அரசன் ரோமையரைத் துன்பப்படுத்தாமல் பின் வாங்கினன். ஆயினும் கி. பி. 753ல் மறுபடியும் லொம்பார்டியர் ரோமையைத் தாக்கினர்கள்.

அப்போது பாப்புவாயிருந்த 3-ம் முடியப்பர் பிராஞ்சின் அரசனாகிய குள்ள பெப்பினை உதவி கேட்க, அவர் வந்து லொம்பார்டியரை முறியடித்து, அவர்கள் கொள்ளை கொண்ட திருச்சபை சொத்துக்களையெல்லாம் திருப்பிக் கொடுக்கும்படி செய்தார்.

## பாப்புவின் லௌகிக ஆட்சி பகிரங்கப்படல்.

இச்சமயத்தில் கீழ்ரோமை ராயனின் ஸ்தானாதிபதிகள் லொம்பார்டியரிடமிருந்து ஜெயித்த நாடுகளைத் தங்கட்கு விட்டு விடவேண்டுமென வற்புறுத்த, பெப்பின் அதற்கு இணங்காமல், இத்தாலியருடைய சம்மதப்படிக்குத் திருச்சபையின் சொத்துக்களையும், அத்துடன் வேறு நாடுகளையும் திருச்சபைக்கு ஒப்புவித்தார். இப்படியாய் அர்ச். பாப்புவின் லௌகிக ஆட்சி பகிரங்கமாயிற்று. ஆயினும் ரோமைப் பட்டணமும் அதைச் சார்ந்த நாடும் முன்னமேயே கொன்ஸ்தாந்தீன் காலமுதல் திருச்சபையின் உரிமையில் இருந்தனவாதலால், அர்ச். பாப்புவின் லௌகிக அரசியல் இப்போதுதான் துவக்கியதெனக் கருதலாகாது.

அபஜெயமடைந்த லொம்பார்டியர் மறுபடியும் ரோமையைத் தாக்க ஏற்பாடு செய்தார்கள். அச்சமயம் பாப்புவாய் மிகச்சிறந்து விளங்கிய அதிரையன், கி. பி. 768ல் பிராஞ்சு அரசன் சார்ல்மேனிடம் உதவிகேட்க, அவர் லொம்பார்டியரைத் தோற்பித்து அவர்கள் ராச்சியபாரத்தையும் ஒழித்து, முன்னிலும் அதிக நாடுகளைத் திருச்சபைக்குக் கையளித்தார். (கி. பி. 774)

## சார்ல்மேன் சக்கரவர்த்தி.

இக்காலத்தில் சார்ல்மேன் இத்தாலி, பிராஞ்சு, ஸ்பானியா, பஜர்மனி முதலிய மேல்ரோமை நாடுகளை யெல்லாம் தமது இராச்சியமாக்கிக்கொண்டு, முற்காலத்திய ரோமை சக்கரவர்த்திகளைப் போல் ஆண்டு வந்தார். அவர் இவ்விதம் மேல் ரோமை நாடுகளுக்கெல்லாம் அதிபதியாயும், திருச்சபைக்குச் சிறந்த தூணாகவும் இருந்ததாலும், திருச்சபையைப் பாதுகாக்கப்பராக்கிரம

முள்ள ஓர் அரசன் வேண்டியிருந்ததாலும், அர்ச். 3-ம் சிங்கராயர் பாப்பு சார்ல்மேனுக்குச் சக்கரவர்த்தி மகிடம் சூட்டி, அழிந்து போன மேல்ரோமை ஸாம்ராஜ்ஜியத்தை மறுபடியும் புதுப்பிக்கக் கருதினர். சார்ல்மேனும் அதற்கு இணங்கியதால், கி. பி. 800ல் சுவாமி பிறந்த திருநாளில் சார்ல்மேன் அர்ச். இராயப்பர் தேவாலயத்தில் பூசைகாணும் சமயத்தில், அர்ச். பாப்பு அவருக்கு முடி சூட்டினர். அச்சமயம் ரோமையர் எல்லோரும், "சர்வேசுரனுடைய கரத்தால் முடி சூட்டப்பட்ட செசார் சார்ல்ஸ் அகுஸ்துஸ் ராயருக்குத் தீர்க்காயுசும், வெற்றியும் உண்டாக" வென்று ஆர்ப்பரித்து அவரைச் சக்கரவர்த்தியாய் ஏற்றுக்கொண்டார்கள். சார்ல்மேனும் அதற்கு இணங்கி, அன்றுமுதல் தம்மைத் திருச்சபையைக் காப்பவரென்றும், எல்லா விஷயங்களிலும் அர்ச். பாப்புவின் உதவியாள் என்றும் சொல்லிக் கொண்டார். இவரும் இவரைப் பின் தொடர்ந்த பிராஞ்சு அரசர்களும் கார்லோவிங்கியர் என்று அழைக்கப் பட்டார்கள்.

இவ்விதமாய் ஐரோப்பாவில் மறுபடியும் மேல்ரோமை ராச்சியம் புதுப்பிக்கப்பட்டுத் திருரோமை ஸாம்ராச்சியம் எனப் பெயரிடப் பட்டது. இதில் மதக் காரியங்களில் அர்ச். பாப்பும், லௌகீக காரியங்களில் அவருக் குட்பட்டு, செசார் சக்கரவர்த்தியும் ஆட்சி செய்தார்கள். மற்ற அரசர்களெல்லாம் இதுமுதல் செசார் சக்கரவர்த்திக்கு உட்பட்டவர்களாய் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

# மூன்றாம் பாகம்.

---

## கிறிஸ்து நாட்டு ஸ்தாபகம் கி. பி. 800—1095.

---

## 1-ம். அத்தியாயம்.

## திருரோமை ஸாம்ராச்சியம் கி. பி. 800—912.

---

உட்பிரிவுகள்.

கீழ்தேச திருச்சபை; மேல் தேச திருச்சபை.

### 1. கீழ்தேச திருச்சபை, போசியுஸ் தப்பறை.

முன் அதிகாரத்தில் கீழ்ரோமை நாடுகளில் ஐரீன் அரசி காலத்தில் விக்கிரக நிக்கிரக தப்பறை யொழிந்த விதம் கூறியிருக்கிறேன். ஆயினும் கி. பி. 842ல் தான் இத்தப்பறை முற்றும் ஒழிந்து, கீழ்தேசத்தில் பூரண சமாதானம் ஏற்பட்டது.

### போசியுஸ் தப்பறை கி. பி. 857—886.

ஆயினும் இச்சமாதானம் நீடிக்கவில்லை. கி. பி. 845ல் அர்ச். இஞ்ஞாசியார் கொன்ஸ்தாந்திநோப்பிலி, பிதாப்பிதாவானார். விசுவாச சத்தியங்களிலும், நல்லொழுக்கங்களிலும், இவர் காட்டிய ஊக்கத்தால், குடியனான மிக்கேல் ராயனுக்கும், அவன் மாமன் பார்டாஸுக்கும் விரோதியானார்.

பார்டாஸ் துஷ்ட நடத்தைக் காரனாயினும், ஓர் நாள் தைரியமாய்ச் சற்பிரசாதம் அருந்தத் தலைப்பட்டான். அர்ச்சியசிஷ்டவர் அவனுக்குச் சற்பிரசாதம் கொடுக்கவில்லை. அவன் கோபங்

கொண்டு அரசனுக்குத் துர்ப்போதனை போதித்து, இஞ்ஞாசியாருக்கு உதவியான ராயன் தாயைப் பலாத்காரமாய் ஓர் கன்னியாஸ்திரீ மடத்திலிட்டு, அவரை உபாதிக்க ஏற்பாடு செய்தான். ராக்கினியின் முடியை வெட்டும்படி கட்டளையிட, அர்ச்சியசிஷ்டவர் அவ்வநியாயத்திற்குச் சம்மதியாததால், அவரை ஒரு சந்நியாச மடத்தில் வைத்து, பிதாப்பிதா அந்தஸ்தினின்று நீக்க முயற்சித்தான்.

இக்காலத்தில் கல்வி கேள்வியில் தேர்ந்து பிரசித்திபெற்ற போசியுஸ், கொன்ஸ்தாந்திநோப்பிலில் இருந்தான். இவன் மிக்க வஞ்சக நெஞ்சுள்ளவன்; ஆட்டுத்தோலைப் போர்த்து அடுபுலித் தொழில் செய்பவன்; பேச்சில் பரம ஞானியும், செய்கையில் சாத்தானுமானவன். மேலும் பார்டாஸுக்குச் சுற்றத்தான் ஆனதால் அவனுக்குத் தகுந்த மனிதன்.

ஆகையால், மேற்றிராணிமார்கள் எல்லோரையும் தந்திரமாய் வசப்படுத்தி, அர்ச். இஞ்ஞாசியாருக்குப் பதிலாய் இவனைப் பிதாப்பிதாவாக்க, பார்டாஸ் கருத்துக்கொண்டான். அர்ச் இஞ்ஞாசியார் மேல் குற்றம் சாட்டுவதில்லை என்றும், அவருடைய அனுமதியின்றி நடப்பதில்லை என்றும், போசியுஸ் ஒத்துக்கொள்ள, மேற்றிராணிமார்கள் இவனை அர்ச். இஞ்ஞாசியாருக்குப் பதிலாய் பிதாப்பிதா வாக்கினார்கள். உலக மனிதனான இவனுக்கு ஆறு நாளுக்குள், ஏழு பட்டங்களும், ஏழா நாள் மேற்றிராணிப் பட்டமும் கொடுக்கப்பட்டது.

தான் செய்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும் எண்ணம் போசியுஸுக்குச் சற்றும் இல்லாமையால், சீக்கிரத்தில் அர்ச். இஞ்ஞாசியாரைக் குரூரமாய் நடத்த ஆரம்பித்தான். தனக்குச் சேர்ந்த மேற்றிராணிமார்களைக் கூட்டி, அர்ச்சியசிஷ்டவரைப் பிதாப்பிதா அந்தஸ்தில் நின்று நீக்கி, ஓர் தீவுக்குத் துரத்தினான். இவ்விஷயம் எங்கும் பரவவே, அர்ச். பாப்பு உண்மையை அறியாவண்ணம், தான் விருப்பமின்றிக் கட்டாயமாய்ப் பிதாப்பிதா

அந்தஸ்துக்கு இழுத்து வரப்பட்டதாயும், அர்ச். இஞ்ஞாசியார் சுய சம்மதத்தோடே தன் அலுவலை விட்டு நீங்கி ஓர் மடத்தில் இருப்பதாயும், பொய்யை எழுதினன். அர்ச். பாப்பு இவற்றை நம்பாமல், தம் ஸ்தானுதிபதிகளை அனுப்பி, அவர்களால் உண்மையை அறிய எத்தனித்தார்.

போசியுஸ் வஞ்சகத்தில் நிபுணனானதால், சரித்திரத்தில் மற்றெங்கும் காணக்கிடையாத ஒப்பற்ற விதமான ஓர் ஏமாற்றஞ் செய்தான். ஸ்தானுதிபதிகள் வந்ததும், அர்ச். இஞ்ஞாசியாருக்குச் சேர்ந்தவர்களுடன் கூடாமலும், பேசாமலும், இருக்க வேண்டிய ஏற்பாடுசெய்தான். இவர்கள் இருக்குமிடம், போகுமிடம் எங்கும் ஆட்கள் சுற்றிலும் இருக்கச் செய்து, இவர்களைச் சிறையிலிட்டுக் கொலை செய்வதாயும் பயமுறுத்தித் தன் வசமாக்கினன். அப்பால் 328 மேற்றிராணிமார்களைக் கூட்டி, அர்ச். இஞ்ஞாசியாரைப் பலாத்காரமாய் அங்கு இழுத்து வந்து சேர்த்தான். ராயனும் மற்ற அதிகாரிகளுடன் வந்து, அர்ச்.இஞ்ஞாசியாரைப் பிதாப்பிதா வேலையை ராஜீநாமா கொடுக்கும்படி கட்டளையிட்டான். அர்ச்சியசிஸ்டவர் தாம் பாப்புக்கு அப்பீல் செய்வதாய்ச் சொல்ல, ராயன் ஸ்தானுதிபதிகளைக் காட்டினன். இவர்களும் கோழைத்தனமாய் அவர்களுடன் கூடிவிடப் பொய்ச் சாட்சியங்களைக் கொண்டு, அவரை மேற்றிராணி அந்தஸ்தினின்று நீக்கினர்கள்.

எனினும் இதினல் போசியுஸுக்கு முற்றும் திருப்தி ஏற்படவில்லை. ஏனெனில், துன்பப்படுகிறவர்களைப் பேணி, அவர்களுக்குச் செய்யப்படும் குரூரங்களைத் தண்டிக்கும் பாப்பு, எவ்விதத்திலும் உண்மையை அறிவாரானதால் பயமுற்றிருந்தான். ஆகையால் பாப்பை ஏமாற்ற எப்படியாவது ஓர் ராஜீநாமா அர்ச்சியசிஸ்டவரிடம் வாங்க வேண்டியிருந்தது. இதற்கு அவர் உடன்படாதது கண்டு அவரை ஒரு கல்லறையில் அடைத்து, சில கொலைஞரை அனுப்பி, எவ்விதமாவது ராஜீநாமா வாங்கும்படி ஏவினன். அவர்கள் இவரைக் கன்னத்திலறைந்து குளிர் காலத்தில் உடுப்புக்களைக் களைந்து, சலவைக்கல்லின்மேல் கிடத்தி இழுத்து, எட்டு

நாள் அன்னபானமின்றி நிற்க வைத்தார்கள். பின் கல்லறைக் கட்டடத்தின் மேல் உட்காரவைத்து, கால்களில் பெருங் கற்களைக் கட்டித் தொங்கவிட்டு, ஓர் இரவு முழுதும் உபாதித்து, மறுநாள் உயிர் பிரிந்ததுபோன்ற இவரைத் தூக்கித் தரையின் மேலெறிந்து, கரத்தைப் பிடித்துக் கடுதாசியில் ஒரு சிலுவையை வரைந்து போசியுஸுக்குக் கொண்டுபோனார்கள். இதில் "இஞ்ஞாசியாராகிய நான் பிதாப்பிதா அந்தஸ்துக்கு உரியனல்லன்; ஏனெனில் ஒழுங்கீனமாய் நான் இந்த அந்தஸ்துக்குக் குறிக்கப்பட்டேன்." எனப் போசியுஸ் எழுதி ராயனுக்கு அனுப்ப, அவனும் இது சரியான ராஜீநாமா என ஏற்றுக்கொண்டான். அப்பால், இவர் ராஜீநாமா கொடுத்தது உண்மையென்று ஜனங்களை ஏமாற்றத் தம் தாயார் அரண்மனையில் போயிருக்க, இவருக்குஉத்தரவு கொடுத்தாகள். அர்ச். இஞ்ஞாசியார் சங்கதிகளை முற்றும் பாப்புக்குத் தெரிவித்தார். ஆனால் போசியுஸ் இதை எதிர் பார்த்திருந்ததினால் இதற்கு முன்னமேயே பாப்புவின் ஸ்தானாதிபதிகளை, ராயனுடைய கடிதங்களுடனும், அர்ச். இஞ்ஞாசியார் கொடுத்ததாக ஏமாற்றிய ராஜீநாமாவின் நகலுடனும் அனுப்பிவிட்டான்.

ஸ்தானாதிபதிகள் போசியுஸைப் புகழ்ந்து அர்ச். பாப்பு உண்மையை அறியா வண்ணம் நடந்தும்,சர்வேசுரன் அதிக காலம் அவரை ஏமாந்து இருக்க விடவில்லை. ஸ்தானாதிபதிகள் வந்த சற்றுக்காலத்துக்குப் பின், அர்ச். இஞ்ஞாசியார் கடிதம் ஒன்றை ஓர் குருவானவர் கொண்டுவந்தார். அதில் தமக்குச் செய்த தீமைகளை எல்லாம் அர்ச்சியசிஷ்டவர் எழுதித் தம்மைப் பாதுகாக்கும்படி மன்றாடியிருந்தார். அநேக மேற்றிராணிமார்களும், குருக்களும் அதில் கையொப்பம் இட்டிருந்தார்கள்.

இப்படியிருக்கத் தான் செய்த ஏற்பாடுகளினால் தப்பித்துக் கொள்வேனென எண்ணியிருந்த போசியுஸ், அர்ச். இஞ்ஞாசியாரே கோயிலில் பகிரங்கமாய் ராஜீநாமாவை வாசிக்க வேண்டுமென ராயனைக் கேட்டுக்கொண்டான். கி. பி. 861-மே 25ல் திடீரெனச் சேவகர் அர்ச்சியசிஷ்டவர் வீட்டை முற்றுகை

யிட்டனர். இவர் உண்மையை அறிந்து, அடிமைபோல் தம்மை உடுத்தி, தோளில் ஓர் நீண்ட குச்சி தாங்கி, அதன் இருநுனி களிலும், கூடைகளைத் தொங்கவிட்டு, வேலைக்காரன் போல் வெளிக்கிளம்பி, சேவகர் அறியாது மார்மோரா கடல் தீவுகளுக்கு ஓடிப்போனார். மலைக்குகைகளிலும், பாலைகளிலும், தங்கிக் கிறிஸ்துவர்களுடைய உதவியால் பிழைத்தும், சில சமயங் களில் பிச்சை யிரந்தும், தீவுதீவாய் மறைந்துகொண்டிருந் தார். ராயன் முதலியோர் இவரை எங்கும் தேடும்படி ஆட்களை ஏவிக், கண்டவிடத்தில் வெட்டிக் கொல்லும்படி கட்டளையிட் டார்கள். ஆனால் மாறுபாடுள்ள உடுப்புக்களினாலும், அநுபவித்த குரூரங்களினால் உருமாறியிருந்த காரணம் பற்றியும், பல தடவை களில் சேவகர் இவரைப் பார்த்தும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இவர் இவ்விதமிருக்க, நாற்பது நாட்களாய் கொன்ஸ்தாந்தி நோப்பிலில், பயங்கரமான பூகம்பம் உண்டாயிற்று. இது சர்வேசு ரனுடைய கோபாக்கினை யென்று ஜனங்கள் ராயனையும், பார்டா ஸையும் இகழ, இவர்கள் அர்ச்சியசிஷ்டவர் பயமின்றிப் பட் டணத்தில் வந்திருக்கலாம் என ஆக்கியாபித்தார்கள். அவர் திரும்பி வந்து தம்மைப் பார்டாஸுக்குக்காட்டினார். அவன் ஜனங் களுக்குப் பயந்து இவருக்கு ஒரு தீங்கும் விளைக்கவில்லை.

இதே சமயத்தில் போசியுஸ் எதிர்பாராத இன்னொரு தொல் லையும் உண்டாயிற்று. அர்ச். பாப்பு இதற்குள் உண்மை முழுதும் அறிந்து, கி.பி. 863ல் ரோமையில் ஓர் சங்கம் கூட்டுவித்தார். இச் சங்கம் கொன்ஸ்தாந்திநோப்பிலி இரண்டு சங்கங்களின் தீர்மானங் களை ரத்து செய்து, பாப்புவின் ஸ்தானாதிபதிகளைத் திருச்சபைக் குப் புறம்பாக்கி, அர்ச். இஞ்ஞாசியாருடைய ஜீவிய காலத்தில் அவ ரை நீக்கிப் பற்பல ஏமாற்றங்களால் தன்னைப் பிதாப்பிதாவாக்கிய போசியுஸைக் குருத்துவ அந்தஸ்தினின்று நீக்கி, அர்ச். இஞ்ஞாசி யாரே கொன்ஸ்தாந்திநோப்பிலி பிதாப்பிதா என ஊர்ஜிதம் செய் தது. உடனே இந்தத் தீர்மானங்களை ராயனுக்கும் போசியுஸுக் கும் பாப்பு தெரிவித்தார். ஆனால் போசியுஸ் பாப்புவின் கடிதத்தை

மறைத்து, வேறோர் கடிதம் எழுதி, அதில் பாப்பு தன்னை அங்கீகரித்துக் கொண்டதாய் ராயனுக்கு எழுதி அனுப்பினான். குடியனான ராயன் இதை அறியாதிருந்தான். ஆயினும் சீக்கிரத்தில் ஜனங்கள் உண்மையைத் தெரிந்து கொண்டார்கள்.

இவ்விதம் உண்மை வெளிப்பட, போசியுஸ் தன் ஏற்பாடுகளெல்லாம் வீணானது கண்டு, தனக்கு வரவிருக்கும் கடின தண்டனைகளுக்குத் தப்பிக்க ஓர் சூழ்ச்சி செய்தான். அதென்னவெனில் மேல்ரோமை நாட்டார் விசுவாச தப்பறை உள்ளோர்களென்று கீழ்ரோமை நாட்டின் மேற்றிராணிமாருக்கு ஓர் நிருபமெழுதி, மேல் ரோமை நாட்டார் அனுசரிக்கும் சனிக்கிழமை ஒருசந்தியும், குருக்களின் சந்நியாசமும் தப்பறைகளென்றும், இவற்றைப் பார்க்கிலும், அவர்கள் திவ்விய இஸ்பிரீத்து சாந்து வானவர் பிதாவினிடத்திலிருந்து வருகிறவர் என்று சொல்லாமல், பிதாவிலும், சுதனிலும் இருந்து வருகிறவர் என்று கொள்ளுவது மிகவும் பெருத்த தப்பறை எனவும் வரைந்திருந்தான்.

## திவ்விய இஸ்பிரீத்து சாந்து.

திவ்விய இஸ்பிரீத்து சாந்துவைக் குறித்து முதலில் விசுவாச சத்தியம் பிதாவினின்று வருபவர் என்றே இருந்தது. பின்னால் மேல்ரோமை நாட்டில் எங்கும் பிதாவிலும், சுதனிலும் இருந்து வருகிறவர் என்றே கொள்ளப்பட்டது. மூன்றும் லெயோ பாப்பு இதைக் கடிந்திருந்தார். ஆயினும் 'சுதனிலுமிருந்து' என்ற இச் சேர்க்கையால் வீண் வாக்குவாதங்கள் நேரிடும் என எண்ணி இருந்தாரே யொழிய, இது தப்பறை யென அவர் கொள்ளவில்லை. போசியுஸ் இது காலமட்டும் சுதனிடமிருந்தும் என்ற இச்சேர்க்கையைத் தானும் அனுசரித்திருந்தும் இப்போது மட்டும் குற்றம் எனப் பாராட்டத் துவக்கினான்.

## 8-ம் பொதுச்சங்கம், கொன்ஸ்தாந்திநேப்பிலி

கி. பி. 869.

அர்ச். பாப்பு தம் தீர்மானத்தை வற்புறுத்துவது கண்டு, ஜனங்களைத் தன் வசப்படுத்தக் கருதி, திருச்சபையின் ஓர் சங்கம் கூடி, பாப்புவைவ்யே நீக்கிவிட்டதாய், அதனுடைய தீர்ப்புகளென்று முழுப்பொய்யை எழுதிப் போசியுஸ் பகிரங்கம் செய்தான். இப் பொய்கள் உலகத்தை ஏமாற்றிப் பின்னால் கீழ் தேசங்கள் திருச் சபையினின்று பிரிந்து பிரிவினையில் புகுவதற்குக் காரணங்களா யின.

## போசியுஸ் தப்பறை முடிவு.

ஆனால் சர்வேசுரன் இவனுடைய ஏமாற்றத்தைச் சீக்கிரம் தண்டித்தார். குடியன் மிக்கேல் ராயனது தூண்டுதலால் பார் டாஸ் கொல்லப்பட்டான். மிக்கேலும் கி. பி, 867ல் கொல்லப்பட, பேசில் சிம்மாசன மேறினர். இவர் போசியுஸைத் துரத்தி, அர்ச். இஞ்ஞாசியாரை மறுபடியும் பிதாப்பிதா வாக்க, அவர் அர்ச். பாப்புக்கு எழுதிக் கொன்ஸ்தாந்திநோப்பிலில் ஓர் பொதுச் சங்கம் கூட்டுவித்தார். இச்சங்கத்தில் அர்ச். பாப்புவின் ஸ்தானாதி பதிகள் அக்கிராசனம் வகித்தார்கள். போசியுஸ் இங்கு கொண்டு வரப்பட்டுக் கேட்ட கேள்விகட்குப் பதிலளிக்காது மவுனங்காட்டித் தான் அநியாயமாய் நடத்தப் படுவது போல் பாசாங்கு செய்தான். விடை பகரவேண்டிய கேள்விகளுக்கு, நமது கர்த்தர் தம்மை விசாரித்தவர்களுக்குச் செப்பிய விடைகளைச் சொன்னன். ஆகவே இவனை இகழ்ந்து, இவனுடன் சேர்ந்தவர்களையும் திருச்சபைக்குப் புறம்பு செய்தார்கள். அர்ச். பாப்பு இத்தீர்மானங்களை அங்கீ கரித்து ஊர்ஜிதப் படுத்தினர். கி. பி. 886ல் நேர்ந்த இவன் மரணமுதல், இவனால் எழும்பிய குழப்பம் அற்றுப்போயிற்று.

### சிலாவியரும், பல்கேரியரும் மனந்திரும்பல்.

முற்கூறிய குழப்பம் நடந்து வருங் காலத்தில் கீழ்ரோமை நாட்டார் தானியூப் நதி தீரத்திலிருந்த சிலாவியரையும் பல்கேரியரையும் மனந் திருப்பினார்கள். இவ்வலுவலில் விசேஷமாய் உழைத்தவர்கள் அர்ச். சிரிலும், அவர் சகோதிரருமான அர்ச். மெத்தாடியுஸும். இவர்களும், இவர்களைத் தொடர்ந்தவர்களும் ஐரோப்பாவில், மத்திய பாகத்திலும், கீழ்மத்திய பாகங்களிலும் உழைத்துத் திருச்சபையை ஸ்தாபித்தார்கள்.

## 2. மேல்ரோமைத் திருச்சபை.

கீழ்ரோமைத் திருச்சபை சிலாவியரையும் பல்கேரியரையும் மனந்திருப்புங்கால், மேல்ரோமைச் சபை, ஐரோப்பாவில் டென்மார்க், ஜெர்மனி, சுவீடன் முதலிய வடநாடுகளைத் திருச்சபைக்குக் கொண்டு வந்தது.

### ஸ்பானியாவில் வேதகலகம்.

மிலேச்சர்கள் இவ்விதம் மனந்திரும்புவதில் சந்தோஷங் கொண்ட திருச்சபைக்கு ஸ்பானியாவில் வேத கலகத்தால் மிக விசன முண்டாயிற்று. அங்கு மகமதியர் திருச்சபையை அழிக்கக் கங்கணங் கட்டிக்கொண்டு, அநேகம் பேரைச் சிறைப்படுத்தி உபாதித்து மடித்ததால், அநேகம் புண்ணிய வான்கள் வேத சாட்சிகள் ஆனார்கள். இவர்களில் மிகப் பேர் போனவர் அர்ச். யுலாஜியுஸ். இவர் கார்டோவாவின் மேற்றிராணியாராக விளங்குங்கால், மகமதிய மதத்திலிருந்து சத்திய மதத்துக்குத் திரும்பிய லியோக்கிரிட்டா என்னும் ஓர் கன்னிகையைக் காப்பின் பொருட்டுத் தம் சிநேகிதரிடம் ஒப்பித்திருந்தார். இம்மாதுடைய பெற்றோர்கள் கடைசியாய் இவளைத் தேடிப் பிடித்து, நியாயாதிபதியிடம் இவளையும் மேற்றிராணியாரையும் கொண்டு போனார்கள். "இவளைப் பெற்றோரிடமிருந்து எப்படி நீர் நீக்கலாம்" என்று நீதிபதி கேட்க, அவர், "சர்வேசுரனுக்குச் செய்யும் ஊழியம் மற்ற

காரியங்களுக்கு மேலானதென்றும், மகமது ஏமாற்றக்காரன் என்றும்'' சொன்னார். நீதிபதி கோபமூண்டு அடித்துக் கொல்லுவதாய்ப் பயமுறுத்த, "உன் அடிகளால் பயனுண்டாகாது; ஏனெனில் அவைகள் என் மதத்தை விட்டுவிடச் செய்யமாட்டா'' என்றார். அதிபதி இவரைக் காலிபாவிடம் அனுப்பினன். அங்கு வேதத்தை மறுத்து உயிர் தப்பிக்கும்படி ஒருவன் சொல்ல, "விசுவாசிகளுக்கு வாக்களிக்கப் பட்ட நன்மைகளை அறிந்திருந்தால், நீ உடனே இவ்வுலக நன்மைகளையெல்லாம் விட்டு விடுவாய்'' எனப் பதிலுரைத்து, கிறிஸ்துமதத்தின் உண்மையை ஸ்திரப்படுத்தத் தொடங்கிய வளவில், காலிவா இவரைத் தடுத்துக் கொலை செய்யக் கட்டளையிட்டான். இவருக்குப்பின் அர்ச். லியோக்கிரிட்டா நூறு நாட்சென்று வேதசாட்சி முடி பெற்றனள்.

## திருரோமை ஸாம்ராச்சியம்.

அர்ச். லெயோ பாப்பும், சார்ல்மேன் ராயரும் ஸ்தாபித்த இந்த ராச்சியத்தால் அதிக நன்மையுண்டாயிற்று. மகமதியர் ஸ்பானியாவுக்குள் நிறுத்தப்பட்டு, வட நாடுகளில் சத்தியவேதம் போதிக்கப்பட்டது. ஆனல் சார்ல்மேனுக்குப் பிறகு அப்பெரிய ராச்சியபாரத்தைக் கொண்டு நடத்துவோர் இல்லாமையால், கி. பி. 855ல் ராச்சியம் பிரிவுண்டு, கார்லோவிங்கியர் ஜெர்மனி அரசியலை இழந்து விட்டனர்.

## பாப்புகள்.

அர்ச். லெயோவுக்குப் பின் அநேகம் மிகப் பிரசித்தி பெற்ற பாப்புமார்கள் வந்தார்கள். அர்ச். 1-ம் பாஸ்கல் (கி. பி. 817-824) காலத்தில் டென்மார்க், சுவீடன், ராச்சியங்கள் திருச்சபையில் சேர்ந்தன. இவர் காலத்தில் தான் கர்தினல் என்ற பட்டம் ரோமை நகரின் குருக்களில் முக்கியமானவர்களுக்கு முதலில் கொடுக்கப்பட்டது. அக்காலத்தில் கர்தினல் மார்கள் மிகச் சொற்பப்பேரே. 13-ம் நூற்றாண்டின் இறுதியில் 7 பேரும், 1330ல் 20 பேரும்,16-ம் நூற்றாண்டில் 10-ம் லெயோ காலத்தில் 65 பேரும்

பின்னல் 70 பேரும் ஆனார்கள். கடைசியாய் இஸ்ரயேலித்தாரின் 70 தலைவர்களைப் போல், 70 கர்தினல்கள் மட்டும் இருக்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

அர்ச். 4-ம் லெயோ (கி.பி.847—855) ஆண்ட காலத்தில்,மகமதியர் திரும்பத் திரும்ப இத்தாலியைத் தாக்கினார்கள். இவர் ரோமையைச்சுற்றி கோட்டை கொத்தளங்களைக் கட்டி, மகமதியரை முறியடித்தார். அர்ச். 1-ம் நிக்கொலாஸ் (கி. பி. 858—867). காலத்தில் தான் போசியுஸ் தப்பறை கண்டிக்கப் பட்டதும், பல்கேரியர் மனந்திரும்பியதும். இவர் கி. பி. 860ல் தமது உலக ஆட்சியின் அடையாளமாகத் தமது பாப்பு முடியில், ஓர் தங்க முடியை வைக்கும்படி ஏற்பாடு செய்தார். கி. பி. 1300-ல், 8-ம் பொனிபேஸ் இன்னுமொரு தங்கமுடியைச் சேர்த்தினர். கி. பி. 1365-ல் 5-ம் அர்பன் மூன்றாவது முடியைச் சேர்த்தார். அது துவக்கி அர்ச். பாப்புவின் முடியில் மூன்று தங்க முடிகளுண்டு.

இம்முடிகள் அர்ச். பாப்புவின் வைதீக ஆட்சியையும், அவரது லௌகீக ஆட்சியையும், அவர் அரசர்களுக்கெல்லாம் அரசன் என்பதையும் குறிக்கின்றன.

## நார்மானியர் மனந்திரும்பல்.

9-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் வடபாக மிருந்த நார்மானியர், பல்கேரியர், அங்கேரியர், முதலியோர் ரோமை நாடுகளுக்குள் நுழைந்தார்கள். 5-ம் நூற்றாண்டில் வந்த மிலேச்சரைச் சீர்திருத்தியது போல், திருச்சபை இவர்களையும் சீர்திருத்தியது. அங்கேரியர் 10-ம் நூற்றாண்டு வரையிலும் சுவிசேஷ வெளிச்சத்தைத் தடுத்தார்கள். பல்கேரியர் மனந்திரும்பின விதம் முன் கூறியிருக்கிறது.

வடதேசங்களில் இருந்த நார்மானியர், 9-ம் நூற்றாண்டில் இங்கிலாந்து, பிராஞ்சு தேசங்களைக் கொள்ளை யடித்துப் பின்னல் அவற்றில் குடியேறினார்கள். இங்கிலாந்தில் சற்றேறக்குறைய

முழு நாட்டையும் தங்கள் வசமாக்கித் திருச்சபையை அழித்தார்கள். ஆயினும் கி. பி. 876ல் ஆல்விரடு அரசன் அவர்களைத் தோற்றுவித்து மனந்திரும்பச் செய்தார். பிரான்சின் வடமேற்குப் பாகங்களை எல்லாம் வேறு நார்மானியர் தங்கள் வசமாக்கிப் பாரீஸ் பட்டணத்தைப் பலமுறை தாக்கினார்கள். கடைசியாய் கி. பி. 855ல் சமாதான மேற்பட்டு நார்மானியர் பிரான்சின் வடமேற்குப் பாகமாகிய நார்மண்டியைப் பெற்றுத் திருச்சபையில் உட்பட்டார்கள்.

# 2-ம். அத்தியாயம்.

## இரும்புக்காலம். கி. பி. 912—1002

உட்பிரிவுகள்:—

போது வர்த்தமானம்; அர்ச்சியசிஷ்டவர்களும்,
சந்நியாசிகளும்.

### 1. பொது வர்த்தமானம்.

பத்தாம் நூற்றுண்டு மிகவும் துர் அதிர்ஷ்டமுள்ளது. இக்காலத்தில் கிறிஸ்து நாடெங்கும் ஒழுங்கீனம் பரவிப் புதிதாய் ஏற்பட்ட தேசங்களில் ஒவ்வொன்றிலும் உட்கலகங்கள் எழும்பியதுமின்றி, வடநாடுகளிலிருந்த மிலேச்சர்களும் இத்தேசங்களில் நுழைந்து, சென்ற விடமெல்லாம் தீக்கொளுத்தி அழித்தார்கள். இச்சமயத்திலேயே, கிழக்கிலும்,மேற்கிலும் மகமதியரும் நுழைந்ததால், கிறிஸ்து தேசம் எங்கும் சீர்குலைந்து போயிற்று. லௌகீக விஷயங்களில் ஒழுங்கீனம் ஏற்பட்டதுபோலவே, நல்லொழுக்கமும் கெட்டுப்போயிற்று. இதனுல் இக்காலம் இரும்புக்காலம், அல்லது, பயனில்லாக் காலம் என அழைக்கப்படும்.

ஆயினும் இது முற்றும் பயனில்லாக் காலமல்ல. வடக்கில் ஜெர்மனி சக்கரவர்த்தி மகா ஓட்டோ ராயன் லௌகீக காரியங்களைத்திரும்பவும் நிலைநாட்ட,பாப்புமார்கள் விசுவாசிகளின் ஒழுக்கங்களைச் சீர்ப்படுத்தித் தாங்களும் அர்ச். இராயப்பரின் ஸ்தானத்துக்குரிய ஒழுக்கங்களை அனுஷ்டித்தார்கள். மேலும் இக்காலத்திலேயே ஐரோப்பாவிலிருந்த மிலேச்ச சாதியார் எல்லோரும் விசுவாசத்தைப் பெற்ருர்கள்.

## தீய பாப்புகள்.

கி. பி. 896 முதல் பாப்புகளுக்கு அநேக துர் அதிர்ஷ்டங்கள் நேரிட்டன. எப்படியெனில் திருச்சபையைப் பாதுகார்த்த சார்ல் மேனுடைய ஸாம்ராச்சியம் ஒழிந்ததால், இத்தாலியில் கலகம் எழும்பி அர்ச். பாப்புவின் அரசியல் நிலைகுலைந்து, பாப்பைக் குறிப்பதிலும் ஒழுங்கீனம் புகுந்தது. முதலில் டஸ்கனி குறுநில மன்னர்கள் ரோமையில் தங்கி, அர்ச். பாப்புவின் அரசியலுக்கு விரோதமாய்க் கலகமெழுப்பினார்கள். பின்னர் ஜெர்மனி சக்கரவர்த்தியாகித் திருச்சபையைப் பாதுகாக்கும் சுதந்தரம் பெற்ற மகா ஒட்டோ ராயன், திருச்சபையைக் காப்பதற்குப் பதிலாய், அர்ச். பாப்பைத்தனக்குள் அடக்கித் தன் பலத்தை அதிகரிக்க எத்தனித்தான்.

இக்காரணங்களால், ரோமையில் பல துர்ச் சம்பவங்கள் நடந்தேறின. பிற்காலத்தில் திருச்சபை விரோதிகள் இவற்றைக் கையாடித் திருச்சபைக்கு அவமானம் வருவிக்க முயன்றனர். ஆயினும் இக்காலத்திய முப்பத்தேழு பாப்புமார்களில் சுமார் நான்கு, அல்லது, ஐந்துபேர் மாத்திரம் சற்று ஒழுக்க மற்றவர்கள், அவர்களும் சொற்பகாலம் மட்டும் ஆண்டவர்கள். தவிரவும், அவர்கள் சுயநலத்தைக் கருதிய அரசர்களாலும், அவர்கள் பிரசைகளாலும் பாப்பு நிலைமைக்குக் குறிக்கப் பட்டவர்கள். வேறு அநேகம் பாப்புகள் இத்துன்பமான காலத்திலும், தங்கள் உன்னத அந்தஸ்துக்குரிய ஒழுக்கங்களை அநுஷ்டித்தார்க ளென்பது உண்மை. பின்னும், ஒரு பாப்பாவது விசுவாச சத்தியத்தைப் போதித்ததில் சற்றும் தவறினதில்லை. ஆகையினால் இக்காலத்திய துர்நடத்தைகள், "கற்பாறையின் மேல் கட்டிய திருச்சபையை நரக வாசல் மேற்கொள்ளாது" என்று நமது கர்த்தர் கொடுத்த வாக்குத் தத்தத்துக்கு அறிகுறிகளாம். எப்படியெனில், துர் நடத்தைகள் மனித பலவீனத்தை மட்டும் குறிக்கின்றனவேயொழிய, சத்திய மதத்திற்கு எக்குறையும் உண்டு பண்ணுவதில்லை.

## சக்கரவர்த்திகள்.

ரோமையில் நடந்த துர்ச் சம்பவங்களுக்கு ஜெர்மனி சக்கரவர்த்திகளே விசேஷ காரணம். ஏனெனில், இந்நூற்றூண்டில் கார்லோவிங்கியர் ராச்சியபாரம் ஒழிந்து போக, ஜெர்மனி தேசத்தரசர்கள் முன்வந்தார்கள். இவர்களில் மகா ஒட்டோ ராயன் இத்தாலியைத் தனக்குச் சுதந்தரப்படுத்தி, கி. பி. 962ல் அர்ச். பாப்புவால் முடிசூட்டப்பட, சார்ல்மேன் ஏற்படுத்திய கிறிஸ்து ராச்சிய பாரம் மறுபடியும் நிலை நாட்டப்பட்டது.

ஆனால் இந்த ராயன் தன் அரசியலைப் பலப்படுத்த மட்டும் கருத்துக்கொண்டு, அர்ச். பாப்புக்கு உதவி புரியும் எண்ணம் சற்றுமின்றி, அவரைத் தனக்குள் அடக்கிக் கொள்ளப் பிரயத்தனம் செய்தான். கி. பி. 963ல் தனக்கு முடிசூட்டிய பாப்பை நீக்கி, விரோதியான ஓர் பாப்பை இவன் ஏற்படுத்த, ரோமையர் அவரை அங்கீகரிக்க வில்லை. பின் நேர்மையான பாப்பு மரித்ததும், ரோமையர் 5-ம் ஆசீர்வாதப்பரைக் குறித்தார்கள். அரசன் ரோமையைத் தாக்கித் தன் பாப்பையே ஊர்ஜிதப்படுத்தினன். அப்பால் இப்பாப்பும், ரோமையரும், அரசனுக்குப் பயந்து, பாப்பைக் குறிக்கவும், மேற்றிராணிமார்களுக்கு உத்தியோகம் அளிக்கவும் அவனுக்குச் சுதந்தரத்தைக் கொடுத்தார்கள். இவ்விதமாய்த் திருச்சபை அதிகாரம், ராயன் அதிகாரத்துக்கு உட்படுத்தப்பட்டது. ஆகையால் பின் வந்த பாப்புமார்கள் திருச்சபையை. மறுபடியும் அதன் சுதந்தரத்துக்குத் திரும்பக் கொண்டுவரப் பலவிதமாய்ப் பிரயாசை எடுத்துக்கொள்ள நேர்ந்தது.

## 2-ம் சில்வேஸ்திரி பாப்பு.

5-ம் ஆசீர்வாதப்பர் கி. பி. 999ல் மரித்தார். அவருக்குப் பின் 2-ம் சில்வேஸ்திரி பாப்பானர். இவர் காலத்தில் கிறிஸ்து சகாப்தத்தின் முதல் ஆயிரம் வருஷம் முடிந்தது. இவ்வருஷத்தில் பல விடங்களிலும், ஜனங்கள் உலகம் முடியப் போவதாய்ப் பயந்து, நன்மையை நாடும் சிந்தனை உள்ளவர்கள் ஆனார்கள்.

இதையறிந்து, அர்ச். பாப்பு உலக முழுவதிற்கும் ஓர் ஜூபிலி ஏற்பாடு செய்து, அர்ச். இராயப்பர் கல்லறையைச் சந்திக்கிறவர்களுக்கு அநேக பலன்களை அளித்தார்.

இக்காலத்தில் உத்தரிக்கிற ஆத்துமாக்களின் திருநாள் சகல அர்ச்சியசிஷ்டவர்கள் திருநாளுக்குப் பின் குறிக்கப்பட்டது. (நவம்பர் 2–தேதி)

## அஞ்ஞானிகள் மனந்திரும்பல்.

பத்தாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே பிராஞ்சில் குடியேறிய நார்மானியர் மனந்திரும்பிய விஷயம் முன் கூறப்பட்டது. இந்நூற்றாண்டில் பிரனீஸ் மலை மேலிருக்கும் பாஸ்க்கு சாதியாரும், போல் சாதியாரும், ருஷியர்களும், அங்கேரியரும் மனந் திரும்பினார்கள்.

## 2. அர்ச்சியசிஷ்டவர்களும், சந்நியாசிகளும்.

இந்நூற்றாண்டில் அநேக ராசர்களும், ராக்கினிகளும், மேற்றிராணிமார், குருக்களும் அர்ச்சியசிஷ்டவர்களாய் விளங்கப் பாப்புமார்களிலும் அநேகர் ஒழுக்கத்துக்கு விளக்காய் இருந்தமையால், இந்நூற்றாண்டின் ஒழுங்கீனங்களினால் திருச்சபைக்கு யாது குறைவும் ஏற்பட நியாயமில்லை. ராச அந்தஸ்தில், பொஹேமியாவில் அர்ச். வின்செஸ்லாஸும், இங்கிலாந்தில் அர்ச். எட்வார்டும் பிராஞ்சில், அர்ச். ராபெர்ட்டும், ருஷியாவில், அர்ச். லாடிமிரும், அங்கேரியில், அர்ச். முடியப்பரும், ஜெர்மனியில் அர்ச். மர்கரீத் தம்மாளும் இன்னும் பல அர்ச்சியசிஷ்டவர்களும் விளங்கினார்கள்.

## கிளூனி மடம்.

அர்ச். ஆசீர்வாதப்பர் சபையைச் சேர்ந்த அநேக சந்நியாச மடங்கள் இந்நூற்றாண்டில் ஏற்பட்டு, நல்லொழுக்கம், அர்ச்சிய சிஷ்டதனம் முதலிய வற்றில் பேர் பெற்றிருந்தன. இவைகளில் எல்லாம் கிளூனியின் மடம் விசேஷ சிறப்புற்றது. இதிலிருந்த

சந்நியாசிகள் புண்ணிய சாங்கோபாங்க நடத்தையிலும், ஏழைகளுக்கு உதவி செய்வதிலும், கிறிஸ்துப் பிள்ளைகளுக்குப் போதிப்பதிலும், மற்ற மடங்களி லிருந்த சந்நியாசிகளைப் பார்க்கிலும் விசேஷித்து விளங்கினார்கள். ஆனதுபற்றிப் பிராஞ்சு, இங்கிலாந்து, ஜெர்மனி முதலிய மேனாடுகளிலெல்லாம் இவர்களது உதவியால் பல புதிய மடங்கள் ஏற்பட்டன.

## கான்ட்டெர்பரி அர்ச். டன்ஸ்ட்டன்.

இக்காலத்தில் டன்ஸ்ட்டன் இங்கிலாந்து தேசத்தில் கான்ட்டெர்பரியல் அதிமேற்றிராணியாரா யிருந்தார். இவர் தேசமெங்கும் சுற்றிச்சுற்றி விசுவாசிகளுக்குப் போதித்துச் சீர்திருத்தம் செய்ததுமன்றி, சந்நியாச மடங்களையும், சந்நியாசிகளையும் நல்லொழுக்கத்துக்கு விளக்கா யிருக்கும்படி தூண்டி வருவார். இப்படியிருக்கையில் ஓர் சமயம் நல்லொழுக்கத்தை நிலைநாட்ட, இவர் எட்கார் அரசனையும் தண்டிக்க நேர்ந்தது. அரசன் மோகபாவஞ் செய்ததால், அர்ச்சியசிஷ்டவர் நாத்தன் தீர்க்கதரிசி தாவீது ராஜாவிடஞ் சென்றது போல் ராயரிடஞ் சென்று, "நீர் சர்வேசுரனுக்குக் குற்றஞ் செய்திருக்கிறீர்" என்று சொல்ல, ராயர் பச்சாத்தாபப் பட்டு, "ஆம் ஆண்டவரே, என் குற்றத்துக்குத் தண்டனை நீரே விதியும்" என மன்றாடினார். அர்ச்சியசிஷ்டவர் ராயனை நோக்கி, "நீர் ஏழு வருஷமளவும் உமது முடியணியாமல், வாரத்துக் கிருமுறை ஒருசந்தி பிடித்துத் தான தர்மம் செய்யவேண்டும்" எனக் கட்டளை கொடுத்தார். அரசனும் அப்படியே நடந்துவர, கி. பி. 973ல், மேற்றிராணிமார், பிரபுக்கள், முன்னிலையில் டன்ஸ்ட்டன் மருபடியும் அவருக்கு முடி சூட்டினார். அரசர்களும், மேற்றிராணிமார்களும் நடந்து வந்த இவ்வித நடக்கையே கிறிஸ்து நாகரீகத்துக்கு வழியாயிற்று.

## லாத்ருவ்ஸ், அர்ச். சின்னப்பர்.

கீழ் தேசத்திலும் கலகந் தீர்ந்த பின் அர்ச்சியசிஷ்டவர்கள் தோன்றினார்கள். இவர்களில் லாத்ருஸ் அர்ச். சின்னப்பர்

விசேஷமானவர். இவர் மேன்மையான வம்சத்திற் பிறந்து சந்நியாசியாகி, லாத்ருஸ் மலையில் ஓர் மடத்தில் சேர்ந்து, கடினமான தவ ஒறுத்தல்களைச் செய்தார். நாள்முழுதும் செபித்துக் கீழே படுக்காமல் ஓர் மரத்திலேயோ, கல்லிலேயோ சாய்ந்து சற்றுத் தூங்குவார். இதுவும் திருப்திப் படாமல் பின் ஓர் குகையிற் புகுந்து பல நாளளவும் அன்ன ஆகாரமின்றிக் காலங்கழித்தார். அநேகர் இவரைப் பின்பற்ற, ஓர் மடத்தை ஸ்தாபித்து, இப்படிப் பன்னிரண்டு வருடங் கழிந்தன. அப்பால் இன்னும் அதிகமான ஏகாந்தத்தை விரும்பிச் சாமோஸ் தீவுக்குச் சென்று ஓர் குகையில் வசிக்க, அங்கும் பலபேர் இவரை அணுகினார்கள். லாத்ருஸ் மலையிலிருந்த இவர் சீஷர்கள் மறுபடியும் வந்து தங்களை நடத்த வேண்டிக் கொண்டதின் மேல் திரும்பி வந்து, அநேக ராசாக்களுக்கும் மேற்றிராணிமார்களுக்கும், பாப்புகளுக்கும் ஆழ்ந்த ஆலோசனை சொல்லி உதவி வந்தார். தனக்கிருந்த எல்லாவற்றையும் ஏழைகட்குக் கொடுத்துவிட்டு, ஓர் சமயத்தில் அப்படிக் கொடுக்க ஒன்றுமில்லாமல் தம்மை அடிமையாய் விற்று அவர்களுக்கு உதவி செய்யவும் துணிந்தார். இவர் கி. பி. 956ல் பாக்கியமாய் மரித்தார்.

---

# 3ம். அத்தியாயம்.

---

## திருச்சபையும், திருரோமை ஸாம்ராச்சியமும்.

கி. பி. 1002—1095.

---

உட்பிரிவுகள்:—

திருச்சபையும், திருரோமை ஸாம்ராச்சியமும்; கீழ்தேச நாட்டுப்பிரிவும், தப்பறையும்.

### 1. திருச்சபையும், திருரோமை ஸாம்ராச்சியமும்.

### பட்டாபிஷேக தகராறு.

(Quarrel of Investitures.)

முன் அதிகாரத்தில், பிராஞ்சு கார்லோவிங்கியர் ஸாம்ராச்சியம் ஒழிந்ததும், ஜெர்மனி ஸாம்ராச்சியம் ஏற்பட்டதும், மகா ஓட்டோ ராயன் திருச்சபையைப் பாதுகாப்பதின்றி, அதையும், அர்ச். பாப்பையும் தனக்குக் கீழ்ப்படுத்தச் செய்த முயற்சிகளும், திருச்சபையின் பல அதிகாரிகளைக் குறிக்கும் சுதந்தரத்தை ராயன் கைப்பற்றியதும், அதினால் திருச்சபையில் பல துர்ச்சம்பவங்கள் நிகழ்ந்ததும், பின் வந்த பாப்புமார்கள் அவற்றையெல்லாம் தொலைத்துத் திருச்சபையைச் சுயாதீனத்திற்குக் கொண்டுவர வேண்டியிருந்ததும் கூறியிருக்கிறேன்.

இவ்வதிகாரத்தில் தேச மன்னர்களுக்கு உட்பட்டிருந்த திருச்சபை மீண்டும் சுயாதீன மடைந்த விவரங் கூறுவேன்.

### 2-ம். என்ரி சக்கரவர்த்தி.

11-ம் நூற்றுண்டின் துவக்கத்தில் அர்ச். இரண்டாம் என்ரி திருரோமை ராச்சியத்திற்கு ராயனுனர். இவர் விரோதிகளால்

ரோமையினின்று துரத்தப்பட்ட அர்ச். பாப்பை மறுபடியும் ரோமைக்குக் கொண்டுவந்தது மன்றி, எல்லா வகைகளிலும் திருச்சபைக்கு ஓர் தூணாயினர்.

கி. பி. 1024ல் 3-ம் என்ரி ராயர் சிம்மாசனம் ஏறினர். இவர் அர்ச். பாப்பைக் குறிக்கும் உரிமையைக் கையாடி, கி. பி. 1049ல் அர்ச். 9-ம் லெயோ பாப்பைக் குறித்தார். ஆயினும் உரிமையில்லாத இச்சுதந்தரத்தைக் கைப்பற்றி யிருந்தும், இதைச் சரியான வண்ணமே உபயோகித்தார். ஏனெனில் அர்ச். லெயோ பட்டத்துக்கு வந்ததும், திருச்சபை சம்பந்தமான விஷயங்களைச் சீர்திருத்தத் துவக்கினர்.

## தேவ யுத்த நிறுத்தம்.

இந்த ராயருடைய அரசாட்சி மற்றொரு விஷயத்திலும் கீர்த்தி பெற்றது. மிலேச்சர்கள் கி. பி. 5-ம் நூற்றாண்டில் ரோமை ராச்சியத்தில் நுழைந்து அதைத் தங்கட்கு உட்படுத்திய முதல், ரோமை ராச்சியம் பற்பல தேசங்களாகவும், தேசங்களும் பற்பல சிற்றரசாட்சிகளாகவும் பிரிவுண்டு, எங்கும் சமாதான மின்றிக் குழப்பங்களும், போர்களும் நிரம்பியதால் திருச்சபைக்கு எவ்விடங்களிலும் துன்பமுண்டாயிற்று. அரசர்கள், குறுமன்னர்கள், பிரபுக்கள் சண்டை யிட்டுக் கொண்டிருக்கையில், தேசங்களில் வேளாண்மை குறைந்து, வியாபாரமும் குன்றி,சாமான்ய ஜனங்கள் மிகவருந்தித் திருச்சபையை நோக்கி சமாதானம்! சமாதானம்! என ஓலமிட்டார்கள். அநேக சங்கங்களில் தேச அரசர்கள் சமாதான ஏற்பாடுகளும் செய்தார்கள். ஆயினும் எக்காலத்திலும் சமாதானத் தேவனின் ராச்சியமாகிய திருச்சபை அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து, உலக அரசர்களும் அவற்றைக் கைக்கொண்டா லொழிய, தேசங்களில் சமாதானம் ஏற்படுதல் அசாத்தியம். எப்படியெனில் லெளகிக ராச்சிய பாரத்தை எதிர்பாராத திருச்சபை, அதே நோக்கமாய் அதற்காகப் போரிடும் மன்னர்களையும், தேசங்களையும், ஒரே நடுவு நிலைமையில் நிறுத்திக் கட்டுப்

படுத்தக் கூடியது. ஆகையால் திருச்சபை மத்தியஸ்த மின்றி லௌகீக மன்னர்கள் செய்யும் சமாதான ஏற்பாடுகள் நீடித்திருக்கிறதில்லை.

முன்கூறியபடி தேசங்களெங்கும் பிரசைகள் சமாதானத்தை விரும்பி ஓலமிடத் திருச்சபை சண்டையை முற்றும் ஒழிக்காவிடினும், சண்டைக் காலத்தையாவது குறைத்தது. இதற்கு "தேவ யுத்த நிறுத்தம்" எனப் பெயர். முதலில் இச்சமாதானம் வாரத்தில் சனி முதல் திங்கள் வரைக்கும் ஏற்பட்டிருந்து, பின்னால் புதன் முதல் திங்கள் வரைக்கும் பரவியது. இத்துடன் தபசுகாலமும், சதுர்காலமும் கூட்டப்பட்டன. ஆகவே ஒரு வருஷத்தில் சுமார் பாதிகாலம் சண்டை ஒழிந்திருந்தது. இக்காலங்களில் இவ்வேற்பாட்டை மீறிச் சண்டை செய்வோர்கள் திருச்சபைக்குப் புறம்பாக்கப் பட்டார்கள். இச்சமாதானம் முதலில் பிராஞ்சு தேசத்தில் தொடங்கிப் பின்னால் மேல்ரோமை நாடெங்கும் அநுசரிக்கப்பட்டது.

## பாப்புகள்.

அர்ச். லெயோ திருச்சபையில் சீர்திருத்தம் துவக்கியதை முன் கூறியிருக்கிறேன். கி.பி. 1058ல் சிம்மாசன மேறிய 2-ம் நிக்கொலாஸ் பாப்பு காலத்தில் பின்வரும் சட்டம் பிறப்பிக்கப் பட்டது. "கர்த்தினல்கள் மட்டும் அர்ச். பாப்புவைக் குறிக்கும் சுதந்தரம் உடையவர்கள். அர்ச். பாப்பு ரோமைக் குருக்களில் ஒருவராய் இருக்கவேண்டும். அப்படி ரோமைக் குருக்களில் தகுந்தவர் இல்லாதிருந்தால் மட்டும் அயலான குருக்களில் ஒருவர் குறிக்கப் படலாம். கர்தினல்கள் தங்கள் இஷ்டப்படி ஒருவரைக் குறித்தற்கு ரோமையில் விக்கினங்கள் ஏற்படில், வேறு இடத்தில் போய் ஏற்பாடு செய்யலாம். கர்தினல்கள் குறித்தவரைத் தவிர வேறு எவ்விதத்திலும் ஒருவர் குறிக்கப்படில் அவர் பாப்பல்ல." இத்தீர்மானங்களால் திருச்சபை சுயாதீனம் பெற்றது. ஆயினும் அர்ச். பாப்பைத் தவிர மேற்றிராணிமார்கள் மற்ற அப்போஸ்

தலர்களுக்குப் பதிலாய்த் திருச்சபையைப் பாப்புக்கு உட்பட்டு ஆண்டு வருவதால், அவர்களும் திருச்சபையால் குறிக்கப்பட்டவர்களாகவே இருக்கவேண்டும். அப்படியின்றி, அநேக மேற்றிராணிமார்கள் தங்கள் தேசத்து அரசர்களால் குறிக்கப்பட்டு அவர்களுக்கு உட்பட்டு நடக்க நேர்ந்ததில் பல தின்மைகள் விளைந்தன. இவ்விஷயமாயும் சீர்திருத்தங்கள் ஏற்பட்டாலொழிய திருச்சபையில் முற்றும் சுயாதீனம் உண்டாகாது.

## 7-ம் கிரெகோரியுஸ், பட்டங் கொடுத்தல் விவாதம்.

இச்சீர்திருத்தத்தை ஏற்படுத்தியவர் அர்ச். 7-ம் கிரெகோரியுஸ். இவர் கி. பி. 1073 ல் பாப்புவானார். 9-ம். லெயோ முதல் வந்த பாப்புமார்களின் ஆலோசனைக் காரராய் இருந்தமையால், இவர் திருச்சபை ஆட்சி சீர்திருத்தமே முக்கிய நோக்கமாய்க் கொண்டிருந்தார்.

மேற்றிராணிமார்களைக் குறித்து, அவர்களது அந்தஸ்தின் சுதந்தரங்களையும், ஆட்சியின் சின்னங்களையும் அவர்களுக்கு அளித்தல் திருச்சபைக்கே உரிமையாயினும், தேசராசாக்கள் இப்படி நியமனம் செய்யும் உரிமையைப் பலாத்காரமாய்க் கைப்பற்றி இருந்தது முன் கூறப்பட்டது. இப்படி ஒருவரை அவருடைய அந்தஸ்துக்கு ஏற்படுத்துவதற்குப் "பதவி யளித்தல்" (உத்தியோகமளித்தல்) என்று சொல்லப் பட்டது. ஒவ்வொரு மேற்றிராணியாரும், பெரிய மடாதிபதியும் திருச்சபை ஆளுகை மட்டும் இன்றித் தேசங்களில் குறுநிலமன்னராயு மிருந்தனர். ஆகவே அவர்களுக்கு வைதீக ஆட்சியுடன் லௌகீக ஆட்சியு மிருந்தது.

மோதிரமும், செங்கோலும் திருச்சபையிலுள்ள அதிகாரத்துக்கும், பட்டாக்கத்தி லௌகீக அதிகாரத்துக்கும் அறிகுறிகளாம். தேசமன்னர்கள் இவை எல்லாவற்றையும் தாங்களே அளிக்கத் தலைப்பட்டார்கள். இதினால் மேற்றிராணிமார்கள் வைதீக

ஆட்சியிலும் தேச மன்னர்களுக்கு உட்பட்டார்கள். இப்படிக் குறிக்கப் பட்டவர்களில் அநேகர் அவ்வந்தஸ்துக்குச் சற்றும் பொருந்தியவர்களல்ல. ஆகையினுல் இவ்விஷயமாயும் சீர்திருத்தம் அத்தியாவசிய மாயிற்று.

ஆகவே இதை நீக்க அர்ச். 7-ம் கிரெகோரியுஸ் கி. பி. 1074 ல் ரோமையில் ஓர் சங்கம் கூட்டுவித்தார். இதில் மேற்றிராணிமார்கள் தேச அரசர்களால் நியமிக்கிப்படல் தப்பறையென்றும், அப்படி நியமிக்கப் பட்டவர்களை விசுவாசிகள் அங்கீகரிக்கக் கூடாதென்றும் தீர்மானம் செய்யப்பட்டது. பிராஞ்சு அரசரும், 4-ம் என்ரி சக்கரவர்த்தியும் இதற்கு இணங்கினுர்கள். ஆயினும் என்ரி பின்னர் விரோதித்தார்.

இதினுல் கி. பி. 1075ல் மறுபடியும் ரோமையில் ஓர் சங்கம் கூடிற்று. இதில், "யாதாமொருவன் திருச்சபையில் மேற்றிராணி, மடாதிபதி, குரு ஆகிய எவ்வித பதவியையாவது லௌகீகனிடம் (Layman) பெற்றுல், அவனை அப்பதவியினின்று நீக்குவதுடன், அப்படி நியமிக்கும் லௌகீகரும் திருச்சபைக்குப் புறம்பாக்கப் படுவார்கள்" எனத் தீர்மானிக்கப்பட்டது. இதுவுமன்றி நியாயமாய்த் திருச்சபை அங்கீகாரப்படி குறிக்கப்படும் மேற்றிராணிமார்களுங் கூட, மேற்றிராணிப் பட்டம் பெறுமுன் தேச ஆட்சியின் சின்னங்களை அரசரிடம் பெறக்கூடாது எனவும் வற்புறுத்தப் பட்டது.

எல்லாத் தேச மன்னர்களும் இதை அநுசரித்தும், என்ரி மட்டும் அநுசரிக்கவில்லை. ஆகையால் திருச்சபைக்குப் புறம் பாக்கப் பட்டார்.

உடனே இவருடைய பிரசைகள் இவரைத் துறந்தார்கள். இது கண்டு இவர் அர்ச். பாப்புவிடம் சென்று அவர் தண்டனைக்கு உட்பட்டு மூன்று நாளளவும் சாய சின்னங்கள் அணியாதிருந்து பொறுத்தல் பெற்றுர்.

எனினும், துன்பம் நீங்கியதும் மறுபடியும் என்ரி விரோதித்தார். ஆகவே ஜெர்மனி சிற்றரசர்கள் இவரை நீக்கி, வேறு ராயரை ஏற்படுத்தினார்கள். அர்ச். பாப்பு முதலில் இதற்கு விரோதமாயிருந்து பின்னர் அங்கீகரித்தார். ஆகையால் என்ரி கோபம் பொங்கி அர்ச். பாப்புக்கு விரோதிகளான மேற்றிராணிமார்களைக் கூட்டி, அவரைப் பாப்பு அந்தஸ்தினின்று நீக்கி, வேறொருவரைப் பாப்பெனப் பிரசுரஞ் செய்வித்து, ஓர் பெரிய சேனையுடன் இத்தாலியில் நுழைந்து, ரோமையைத் தாக்கினார்.

மூன்று வருஷமளவும் முற்றுகையை நடத்தி கி. பி. 1084ல் ரோமையைக் கைக்கொண்டார். ஆனால் முன்னமேயே அர்ச். பாப்பு வேற்றிடம் சென்று, இத்தாலியின் தென்பாகத்திலிருந்த நார்மானியர் உதவியைப் பெற்றிருந்தார். நார்மானியர் ரோமைப் பக்கத்தில் வந்ததும், என்ரி அதை விட்டுப் பின்னிட, பாப்பு மறுபடியும் ரோமையைப் பெற்றார். ஆயினும் அங்கு என்ரியுடைய கூட்டத்தார் இருந்தமையால், அவர் ரோமையில் தங்காமல் நார்மானியர் உடனேயே சென்று கி. பி. 1085ல் பரதேசத்தில் மரித்தார்.

இவர் மரணத்துக்கு முன் கிறிஸ்து தேசங்களெங்கும் அரசர்கள் ரோமைச் சங்கத்தின் சீர்திருத்தங்களை ஏற்றுக் கொண்டார்கள். ஜெர்மனியில் மட்டும் அச்சீர்திருத்தங்கள் நிலைநாட்டப் படவில்லை.

கி. பி. 1106ல் என்ரி மரிக்க, அவர் மகன் 5ம் என்ரி பட்டத்துக்கு வந்தார். அவர் பட்டத்துக்கு வருங்கால் எல்லாச் சீர்திருத்தங்களையும் அநுசரிப்பதாய் வாக்களித்துப் பின்னர் விரோதம் செய்தார்.

## தகராறு முடிவு.

இப்படியாய்த் திருச்சபைக்கும், ரோமைச் சக்கரவர்த்திக்கும் விரோதம் நடந்து, கடைசியாய் கி. பி. 1122ல் சமாதானம் ஏற்பட்டது. ஜெர்மனி சிற்றரசர்களால் வற்புறுத்தப்பட்டு என்ரி

வோர்மஸ் பட்டணத்தில் அர்ச். பாப்புடன் பின்வரும் உடன் படிக்கையைச் செய்தார். "மேற்றிராணிமார்களுக்கு மோதிரமும், செங்கோலும் அளிக்கும் சுதந்தரத்தை ராயர் திருச்சபைக்கு விட்டுவிடுவது மன்றித் தேசத்தின் எல்லாத் தேவாலயங்களிலும் மேற்றிராணிமார்கள் குறிக்கப்படுவதும், பட்டம் அளிக்கப்படுவதும், திருச்சபை சட்டங்களின்படியே சுயாதீனமாய் நடத்தப் படவேண்டும். ஆனால் ஜெர்மனி தேசத்தில் மட்டும் மேற்றிராணி மார்கள் ராயர் முன்னிலையில் எவ்வித பலாத்காரமும் இன்றித் திருச் சபை ஒழுங்கின்படி தேர்ந்தெடுக்கப்பட்டுப் பட்டத்துக்குப் பின் ராயரிடம் லௌகீக ஆட்சியின் சின்னத்தைப் பெறவேண்டும்." கி. பி. 1123ல் ரோமையில் கூடிய 9-ம் பொதுச் சங்கம் இவ்வுடன் படிக்கையை அங்கீகரித்தது. இவ்விதமாய்த் திருச்சபையின் சுதந் தரங்கள் பாதுகாக்கப் பட்டன.

## 2. கீழ்தேச நாட்டுப் பிரிவும், தப்பறையும்.

### கிரீக்கர் தப்பறை கி. பி. 1054.

முற்கூறியபடி மேல்ரோமைத் திருச்சபை புதுச்சீவியம் பெற்று ஒழுகுங்கால் கீழ்ரோமைத் திருச்சபை க்ஷீணதசை அடைந்தது. அத்துடன் கீழ்ரோமை நாடும் பலக்குறை வடைந் தது. கிரீக் மேற்றிராணிமார்கள் உலகப் பற்றுள்ளவர்களாகி தேவத்திரவிய அநுமானங்களை முதலாய்த் திரவியஞ் சேகரிக்கும் வழிகளாக்கினார்கள். கொன்ஸ்தாந்திநோப்பிலி பிதாப்பிதா அலெக் சிஸ் லஞ்சத்துக்காய்க் கொலைஞனை மிக்கேல் அரசனுக்கு முடி சூட்டினார். இவர் மரணத்துக்குப்பின் இரண்டாயிரத் தைந்நூறு பவுன் நிறையுள்ள தங்கம் இவர் மாளிகையில் எடுக்கப்பட்டது. இவருக்குப் பின் பிதாப் பிதாவான மிக்கேல், இவரினும் மிகக் கேவலமானவர்.

எவ்விதமெனில், புளிக்க வைக்காத அப்பத்தைப் பூசைப் பலிக்கு உபயோகித்தல், தபசுகாலச் சனிக்கிழமைகளில் ஒருசந்தி யிருத்தல், தபசுகாலத்தில் அல்லேலூயா பாடாதிருத்தல், கழுத்

தைத்திருகி இரத்தஞ் சிந்தாமல் கொல்லப்பட்ட மிருகத்தின் மாமிசத்தைப் புசித்தல், முதலிய இவைகள் தப்பறைகளெனவும், இவற்றைச் செய்கிற மேல்ரோமைச் சபையார் தப்பறையுள்ளோர் எனவும் இவர் பகிரங்கம் செய்தார்.

மேல்ரோமைச் சபையார் இவற்றைக் காரணங்களின்றி அநுசரிக்கவில்லை. நமது திவ்விய கர்த்தர் இராப்போசனத்தில் புளிக்காத அப்பத்தை உபயோகித்தார். ஏனெனில், அக்காலம் பாஸ்கா காலமாகையால், மோசேசு சட்டப்படி புளிக்காத அப்பத்தையே உபயோகிக்க வேண்டியிருந்தது. ஆகவே திருச்சபையில் இந்த உபயோகம் சற்றுந் தப்பறையின்றி நியாயமானதாம். மேலும் புளித்த அப்பத்தைக் கீழ்தேச சபைகள் உபயோகிப்பதைத் திருச்சபை ஒருபோதும் தடங்கல் செய்ததுமில்லை.

சனிக்கிழமை மற்ற நாட்களிலும் விசேஷித்த நாள் அல்லாததால், அந்நாளில் ஒருசந்தி பிடித்தல் தப்பறை அல்லவென, மேல்ரோமைச் சபையார் சொன்னார்கள். இவர் யூதருக்கு முக்கியமான நாளில் ஒருசந்தி பிடிக்கிறதால் அவர்கள் யூதகொள்கையைப் பின்பற்றியவர்கள் எனச் சாற்றினர். அவர்களோ கீழ்ரோமை நாட்டார் யூதர்களைப்போல் கத்தியாலறுத்துக் கொல்லப்பட்ட மாமிசம் தவிர மற்ற மாமிசத்தை உண்ணுதலால், அவர்களே யூதகொள்கை உள்ளோர்கள் என்றார்கள்.

தபசுகாலத்தில் மனிதர் பாவங்களுக்கு மனஸ்தாபப்பட்டுத் துக்கமாயிருக்குங் காலமாகையால் சந்தோஷமாகச் சர்வேசுரனைப் பெருமையாய்ப் போற்றும் அல்லேலூயா பாடுவதில்லை.

கீழ்தேசத்தார் இவ்விதமான குருட்டு விவாதங்களைக் கொண்டும், மேனாட்டுக்குருக்கள் தாடியின்றி யிருந்த காரணம் பற்றியும், பிரிவினை செய்தது மிக ஆச்சரியமே!

அர்ச். 9-ம் லெயோ மிக்கேலுக்கு நீண்ட ஓர் நிருபம் எழுதி, ரோமையர் அனுசரிக்கும் அநுஷ்டானங்களுக்குத் தகுந்த

நியாயங்கள் காட்டிய பிறகு, "சேசுக்கிறிஸ்துவுக்காய் நாமிருவரும் ஒரே சரீரமும், ஒரே மனதும் உடையோரா யிருப்போம். ஏனெனில் திருச்சபையானது கிறிஸ்துவின் சரீரமாயிருக்க, நாம் அதன் உறுப்புகளாயிருக்கிறோம். மனுஷ சரீரத்தில் ஓர் உறுப்புக்கு நேர்ந்த துன்பத்துக்கு மற்ற உறுப்புகளும் துன்பம் உறுகின்றன. அவைகள் ஒன்றை யொன்று பொறுமையால் விரோதிக்கிறதில்லை. ஆகையால் நாமும் பொறுமையால் கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையைப் பிரிக்கா திருப்போமாக. நாமோ உங்களுக்கு வரும் கீர்த்தி நமதென்றும், உங்கட்குண்டாகும் அபகீர்த்தியும் நம்முடையதென்றும் பாவிக்கிறோம். இப்படித் திருச்சபை சரீரத்தின் ஒற்றுமையை உணரா திருப்பீராகில், நீர் அச்சரீரத்தில் இனி உயிருடன் இருக்காமல் பட்டுப்போன ஓர் மரக் கொம்பைப் போல் அதினின்று நீங்கவேண்டும். நீர் திருச்சபை சரீரத்தில் இல்லாதிருந்தால், நீர் யாரென்றும், எங்கிருக்கிறீர் என்றும் சற்று யோசித்துப் பாரும். நீர் கொடியினின்று அறுபட்ட ஓர் திராட்சைக் கிளைபோல் பிரிக்கப்பட்டு, அதைப்போல் வரண்டு, காய்ந்து நெருப்புக் கிரையாக வேண்டும். சர்வேசுரனுடைய மிதமிஞ்சிய இரக்கம் இப்படிப்பட்ட தின்மையினின்று உம்மைத் தப்புவிக்கக் கடவது!" என எழுதி எப்படியும் பிரிவினையைத் தடுக்க முயன்றார்.

ஆனால் மிக்கேலோ நியாயத்துக்கு ஒப்பவில்லை. ஆகையால் பாப்புவின் ஸ்தானாதிபதிகள் கி. பி. 1054ல் அவரைப் பிதாப்பிதா அந்தஸ்தினின்று நீக்கினார்கள். அவர் பொய்க் கடிதங்களால் ஜெருசலேம், அந்தியோக்கியா, அலெக்சாந்திரியா பிதாப்பிதாக்களையும், பாப்புக்குக் கீழ்ப்படியாமலிருக்க ஏற்பாடு செய்ய, கிரீக்கரும் அவருக்கு உதவி புரிந்தார்கள். கடைசியாய் ராயர் உண்மையை அறிந்து மிக்கேலை மார்மோரா தீவுக்குத் துரத்த அவர் அங்கேயே மரித்தார். எனினும் கீழ்த்தேசங்கள் திருச்சபையினின்று பிரிந்து போவதற்கு, இப்போதே அதன் வேர்கள் திருச்சபையினின்று ஒருவாறு அறுக்கப்பட்டுப் போயின. கீழ்தேசம்

இன்னும் பாப்புடன் ஒருவாறான சம்பந்தத்துடன் இருந்ததென்கிலும், இதுமுதல் பிரிவினை துவக்கிக் கடைசியாய் நிலைபெற்றுப் போயிற்று.

இதினால் மேல்ரோமை ராச்சியங்கள், கீழ்ரோமை ராச்சியங்களுடன் சம்பந்தமின்றிப் போக, அரபியரும், துருக்கரும் கீழ்ரோமை ராச்சியத்தைத் தங்களுக்குள் அடக்கிக் கொள்ள நேர்ந்தது. பாப்புகள் மேல் ரோமை நாட்டில் நுழைந்த அரபியரையும், துருக்கரையும், அந்நாட்டாரைத் தூண்டித் துறத்திய வண்ணம், கீழ்ரோமை நாட்டாருடைய பிரிவினையால், அந்நாட்டைக் காப்பாற்ற முடியாமற் போயிற்று.

# நான்காம் பாகம்.

## சிலுவை யுத்தங்கள் கி. பி. 1095—1303.

### 1ம். அத்தியாயம்.

### முதல் சிலுவை யுத்தங்கள். கி. பி. 1095—1204.

உட்பிரிவுகள்:—

சிலுவை யுத்தங்கள்; திருச்சபையாட்சி விஷயங்கள்.

### 1. சிலுவை யுத்தங்கள்.

### முதல் சிலுவை யுத்தம் கி. பி. 1095.

தொன்று தொட்டு கிறிஸ்துவர்கள் நமது திவ்விய கர்த்தர் பிறந்து வளர்ந்த பலஸ்தீன் தேசத்திற்கும், விசேஷமாய் அவர் பாடுபட்டு மரித்து அடக்கமான ஜெருசலேம் பட்டணத்துக்கும் யாத்திரை போவது வழக்கம். கி. பி. 7-ம் நூற்றாண்டில் ஜெருசலேம் முதலிய நாடுகள் மகமதிய *அரபியருக்குட்பட்ட விஷயம் முன் கூறியிருக்கிறேன். அது முதல் இந்நாடுகள் †துருக்கருக்கு உட்படும் காலம் வரையில் யாத்திரைகள் கஷ்டமாயின. துருக்கர் வந்தபின் இக்கஷ்டங்கள் மேலும் மேலும் அதிகரித்ததால் யாத்திரிகள் பலவாறு துன்பம் அடைந்தது மன்றி, அநேகமாய் உயிருக்கு முதலாய் மோசம் நேர்ந்தது. சுதேச கிறிஸ்துவர்களோ வெளில் அடிமைகளைப் போல் பாவிக்கப்பட்டார்கள்.

---

*2ம் பாகம், 4ம் அத்தியாயம்.

†துருக்கர் ஆசியாவின் வடபாகத்திலுள்ள துருக்கிஸ்தானத்தைச் சேர்ந்த மங்கோலியர். இவர்கள் 8-ம் நூற்றாண்டில் மகமதியராகி அரபி மகமதியரின் கீழ் சேவகத்திலமர்ந்து, கி. பி. 11-ம் நூற்றாண்டில் அரபியர் ஆட்சியை நீக்கினார்கள்.

பிராஞ்சு தேசத்தில் அமியென்ஸ் மேற்றிராசனத்தைச் சேர்ந்த இராயப்பர் என்றும் ஓர் குரு, தமது யாத்திரையில் தாம் அனுபவித்தது, பார்த்தது, கேட்டது முதலிய யாத்திரிகளின் பல துன்பங்களையும் அர்ச். பாப்புக்கு எடுத்துக் கூறி, கிறிஸ்து மதத்தினுடைய ஜென்ம நாடாகிய பலஸ்தீனையும், இன்னும் மற்ற கிறிஸ்து நாடுகளையும், துருக்கர் குரூர ஆளுகையினின்று மீட்க ஏற்பாடு செய்யவேண்டுமென வேண்டிக் கொண்டார்.

அப்பால் 2-ம் அர்பன் பாப்பு கி. பி. 1095ல் பிராஞ்சிலேயே ஓர் கூட்டம் கூட்டுவித்தார். இக்கூட்டத்தார் மேற்கூறிய குருவானவரால் சங்கதிகளை அறிந்து துருக்கரிடமிருந்து இந்நாடுகளை மீட்பது தேவ சித்தம் எனத் தீர்மானித்தார்கள். அப்பால் கிறிஸ்து நாடெங்கும் பலர் பலஸ்தீன் நாட்டுக்குச் சண்டைக்குப் போவதாய்ச் சம்மதித்துத் தாங்கள் செய்யப்போகும் வேதப்போருக்கு அறிகுறியாக ஒவ்வொருவரும் ஓர் சிவப்புச் சிலுவையை வலது கரத்தில் அணிந்து கொண்டார்கள். இதன் காரணமாய் இவர்களுக்குச் 'சிலுவை யுத்தக்காரர்' என்றும், யுத்தங்கட்குச் 'சிலுவை யுத்தங்கள்' என்றும் பெயராயின.

கிறிஸ்து சேனைகள் பலஸ்தீனைத் தாக்கி கி.பி.1099ல் ஜெருசலேமைப் பிடித்தார்கள். துருக்கர் பின்னிடைந்ததும், கிறிஸ்துவர்கள் எல்லோரும் குதிரைகளை விட்டிறங்கி, *பாதரட்சைகளைக் களைந்து தங்கள் மார்புகளைத் தட்டிக்கொண்டு, நமது கர்த்தரால் அர்ச்சிக்கப்பட்ட இடங்களெல்லாம் தரிசித்தார்கள்.

---

* இம்மாதிரியாகவே கிறிஸ்து சேனைகள் எப்போதும் செய்து வந்ததாய்த் தெரிய வருகிறது. கி. பி. 1918ம் வருஷம் துருக்கருக்கும், ஐக்கிய சேனைக்கும் சண்டை முடிந்து, ஜெருசலேம் பிடிபட்டபோது, ஐக்கிய சேனைகளின் தலைவராகிய லார்டு ஆலென்பி தமது சேனைகளுடன் பாதரட்சை யின்றி ஜெருசலேமுக்குள் நடந்து சென்றார்.

எட்டு நாளுக்குப் பிறகு இந்நாட்டுக்கு ஓர் கிறிஸ்து அரசனைக் குறித்தார்கள். இவர் நமது திவ்விய கர்த்தர் முண்முடி சுமந்த விடத்தில், தாம் பொன்முடி அணிதல் சரியல்லவென்று, முடி சூட்டிக் கொள்ளவில்லை.

## போர்புரியும் சந்நியாச சபைகள்.

முதல் சிலுவை யுத்தத்தில் ஜெருசலேம் பிடிபட்டது மட்டுமின்றி, பின்னால் ஐரோப்பா துருக்கருக்கு உட்படாது அவர்களுடன் விசேஷ போர் புரிந்து மேல் ரோமை நாடுகளைக் காப்பாற்றிய அநேக போர்புரியும் சந்நியாச சபைகளும் ஏற்பட்டன. முதலில் இச்சந்நியாசிகள் யாத்திரிகளில் வியாதிஸ்தருக்கு உதவி புரிபவர்களாகிப் பின்னால் தங்கள் தாயாகிய திருச்சபைக்குப் போர் புரியும் வீரரானார்கள். கி. பி. 1110ல் துவக்கி, 1121ல் அங்கீகாரம் பெற்ற அர்ச். அருளப்பர் போர்வீரர்கள் (Knights of St. John) கிறிஸ்து ராச்சியம் நீடித்த வரையில் பலஸ்தீனிலிருந்து, பின்னர், சைப்பிரஸ் தீவிலும், அப்பால் மால்ட்டா தீவிலும் தங்கி, மகமதியரை மேனாடுகளில் நுழையாது தடுத்தார்கள். இவ்விதமாய் வேறு போர் புரியும் சந்நியாச சபைகள் ஸ்பெயின் தேசத்தில் ஏற்பட்டு, மகமதியரை முற்றிலும் துரத்தின. இவர்கள் திருச்சபையின் மற்ற சந்நியாச சபைகளிற் போலவே, தரித்திரம், கற்பு, கீழ்ப்படிதல் முதலிய வார்த்தைப் பாடுகளுடண், திருச்சபைக்காகப் போர்புரியும் வார்த்தைப் பாடும் கொடுத்து வந்தார்கள்.

## இரண்டாம் சிலுவை யுத்தம் கி. பி. 1147.

## ஜெருசலேம் கிறிஸ்து தேசம்.

துருக்கர் திரும்பத் திரும்பக் கிறிஸ்து தேசத்தைத் தாக்கியபடியால், அதை அவர்களுக்கு உட்படாமற் காக்க இரண்டாம் யுத்தம் துவக்கிற்று. பிராஞ்சு அரசனும், ஜெர்மனி ராயனும், பெரிய சேனையுடன் சண்டைக்குச் சென்றார்கள். ஆனால் இப்பெரிய சேனை போர் வீரருடைய கத்தோலிக்க ரல்லாத நடத்தையாலோ, அல்லது கிரீக்கருடைய ஏமாற்றத்தினாலேயோ அநேகமாய் மடிந்தது.

இதுகாரணமாய் கிறிஸ்து தேசத்திற்கு முன்னிலும் அதிக துன்பம் நேர்ந்தது. கிறிஸ்து தேச சேனை கி. பி. 1187ல் தோற்றுப் போக, துருக்கருக்கு ராயனான சலடின் ஜெருசலேமை முற்றுகை யிட்டுப் பிடித்தான்.

## மூன்றும் சிலுவை யுத்தம்.

ஐரோப்பா முழுதும் இத்துர்ச் செய்தி பரவ, கிறிஸ்துவர்கள் ஒரே மனதாய் இன்னொரு சிலுவை யுத்தத்திற்கு எழுந்தார்கள். இவர்கள் கி. பி. 1191ல் ஏக்கர் பட்டணத்தைப் பிடித்தார்கள். ஜெருசலேமுக்குச் சென்று துருக்கரைத் துரத்தப் போதுமான சேனை இருந்தும், அரசர்கள் ஒருவரோ டொருவர் விரோதப்பட்டதினால் அது கைகூடவில்லை.

## நான்காம் சிலுவை யுத்தம்,

கி. பி. 1204ல் துவக்கிய நான்காம் சிலுவை யுத்தச் சேனை பலஸ்தீன் நாடு செல்லவில்லை. இவர்கள் கொன்ஸ்தாந்திநோப்பிலி ராய குமாரனுக்கு விரோதியான அவன் சிற்றப்பனுடன் போராடி ராய குமாரனுக்கு முடிசூட்டி, அவ்விதமாய்க் கீழ்ரோமை நாட்டின் சபையை மேல்ரோமைச் சபையுடன் கூட்டிப் பிரிவினையைத் தீர்க்க அந்த ராயகுமாரன் அளித்த வாக்கை ஏற்று அங்கு சென்றார்கள். அங்கே ராயகுமாரன் பட்டத்துக்கு வந்த சிலநாளுக்குப் பின் கொல்லப்பட, தாங்களே கொன்ஸ்தாந்திநோப்பிலைக் கைக்கொண்டார்கள். இப்படி கிரீக்கர் ராச்சியபாரம் நீங்கி, லத்தீன் ராச்சியபாரம் சுமார் 57 வருஷம் இங்கு நிலைகொண்டது. ஆனால் கொன்ஸ்தாந்திநோப்பிலி பிடிபடும் போது, இவர்கள் காட்டிய குரூரங்களால் கிரீக்கர் முன்னிலும் பன்மடங்குக்கு அதிகமாய் மேனாட்டாரை விரோதிக்க லானார்கள். இதுவே கீழ்நாட்டுப் பிரிவினை நீடித்ததற்கு முக்கிய காரணம்.

## 2. திருச்சபை ஆட்சி விஷயங்கள்.

திருச்சபைக்கும் தேச மன்னர்களுக்கும் நடந்த உத்தியோக மளித்தல் விவகார முடிந்து, ஜெர்மனி ராயனும், அர்ச். பாப்பும் செய்த வோர்ம்ஸ் உடன்படிக்கை முன் கூறப்பட்டது.

## 10-ம், பொதுச்சங்கம், ரோமை கி. பி. 1123.

இவ்வுடன்படிக்கையை 9-ம் பொதுச்சங்கம் (கி. பி. 1113) அங்கீகரித்த விஷயமும் கூறப்பட்டிருக்கிறது. கி. பி. 1239ல் திருச்சபையின் 10-ம் பொதுச்சங்கம் மறுபடியும் ரோமையிலேயே கூடிற்று. இதில் திருச்சபை ஆட்சியில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டது மன்றி, "திருச்சபைக்கு இகலோக சொத்துக்கள் ஒன்றும் பொருந்தியிருக்க நியாயமில்லை" என்னும் ஓர் தப்பறை யும் கடியப்பட்டது.

இக்காலமெல்லாம் திருச்சபையின் ஏற்பாடுகளை அனுசரியாது சிற்சில அரசர்கள், குறுநில மன்னர்கள் திருச்சபையின் ஏற்பாட் டிற்கு விரோதமாய்ப் பாப்புகளையும், மேற்றிராணிமார்களையும், குறித்துவந்த விஷயம் முன் கூறப்பட்டிருக்கிறது. அப்படியே 4-ம் அலெக்சாந்தர் பாப்புக்கு விரோதமாய் அநேக பொய்ப் பாப்புகள் தோன்றினார்கள்.

## 11ம். பொதுச்சங்கம், ரோமை கி. பி. 1179.

அவர்களெல்லாம் ஒருவர் பின் ஒருவராய்த் தொலையக் கடைசியாய், கி.பி. 1179ல் ஷை 4-ம் அலெக்சாந்தர் 11-ம் பொதுச் சங்கம் கூட்டுவித்தார். இதில் திருச்சபை ஆட்சி விஷயமாய் அநேக சட்டங்கள் ஏற்படுத்தப் பட்டன. முப்பது வயதுக்கு முன் ஒருவரும் மேற்றிராணிப் பட்டம் பெறலாகாது என்ற சட்டம் இச்சங்கத்தில் ஏற்பட்டது. * ஆல்பிசென்சியருடைய கொள்கை முற்றும் கடியப்பட்டது.

---

* அடுத்த அதிகாரத்திற் பார்க்க.

# 2-ம். அத்தியாயம்.

## கடைசிச் சிலுவை யுத்தங்கள் கி. பி. 1204—1303.

உட்பிரிவுகள்:—

சிலுவையுத்தங்கள்; அந்நிய தேச போதகம்; துறவற சபைகள்; பாப்புகள்.

## 1. சிலுவையுத்தங்கள்.

### ஆல்பிசென்சியர்.

13-ம் நூற்றாண்டில் இத்தப்பறைக் கூட்டத்தார் பிராஞ்சின் தென்பாகங்களில் பரவித் தேவத்திரவிய அனுமானங்களையும், நம் கர்த்தரின் உத்தானத்தையும் தள்ளிக் கலியாணம் சாத்தானால் ஏற்படுத்தப் பட்டதென்றும் பிதற்றிக் குடும்பங்களையும், வேதத்தையும் கடைசியாய் ஜனங்களையும் அழிக்க முன் வந்தார்கள். இவர்கள் ரோமையிற் கூடிய 11-ம் பொதுச் சங்கத்தில் கடியப்பட்டிருந்தும், தூலூஸை ஆண்ட குறுமன்னனால் உற்சாகப் படுத்தப்பட்டுப் பிராஞ்சில் தெற்குப் பாகமெல்லாம் பரவினார்கள். பாப்புகள் இவர்களைத் திரும்பிச் சேர்க்கப் பிரசங்கிகளை அனுப்பியும், அவர்கள் பிரயாசை வீணாயிற்று. இப்போது தான் அர்ச். தோமினிக் செபமாலைப் பக்தியை ஏற்படுத்தியது.

சமாதான ஏற்பாடுகள் எல்லாம் அழிவுற்றுத் தப்பறை நாளுக்கு நாள் பரவ, 3-ம் இன்னொசெண்டு பாப்பு இவர்களுக்கு விரோதமாய் ஓர் சிலுவை யுத்தந் தொடங்கினார். இந்த யுத்தத்தில் இவர்கள் முற்றுந் தோற்றுப்போய்த் தப்பறையும் ஒழிந்தது.

## ஸ்பெயின் சிலுவையுத்தங்கள்.

ஸ்பெயின் தேசத்தில் நுழைந்து அதன் பலபாகங்ளேக் கைக்கொண்டு ஆண்டுவந்த மகமதியருடன் ஸ்பானியர் எப்போதும் போர் புரிந்து கொண்டே வந்தார்கள். இவர்கள் ஜெயமடைய, காஸ்டைல் என்ற ராச்சியபாரம் கிறிஸ்துவர்களுக்குக் கிடைத்தது. அப்பால் அரகன், நவார், போர்த்துக்கல், ராச்சிய பாரங்களும் கிறிஸ்துவர்களுக்குக் கிடைக்க, கி. பி. 1250க்குள் ஸ்பெயினில் மகமதிய ராச்சியபாரம் முற்றிலும் நீக்கப்பட்டது.

## ஐந்தாம், ஆரும், ஏழாம், சிலுவை யுத்தங்கள்.

5-ம் சிலுவையுத்தம், அங்கேரி தேச ராயனுல் கி. பி. 1221ல் நடத்தப்பட்டுத் திரும்பவும் துருக்கருக்கு உட்பட்ட திருச்சிலுவையைப் பெற்றது.

6-ம் யுத்தம் ஜெர்மனி 2-ம் பிரெடெரிக் ராயனுல் நடத்தப்பட்டது. இதினுல் அதிக நன்மை உண்டாகவில்லே. இம்மன்னன் யுத்தத்திற்குச் செல்லுவதாய் வாக்களித்து, வெகுகாலம் அதை அனுசரிக்காமையால், திருச்சபையினின்று விலக்கப்பட்டான். பின்னர் கி. பி. 1228ல் அர்ச். பாப்பு யுத்தத்திற்குச் செல்ல வேண்டாமெனத் தடுத்திருந்தும் சென்றனன். திருச்சபைக்குப் புறம்பாக்கப் பட்ட இம்மன்னனேக் கீழ்தேசக் கிறிஸ்துவர்கள் சற்றும் அங்கீகரிக்க வில்லே. கிறிஸ்து மன்னனுகிய இவன் எகிப்தைச் சுலபமாய்ப் பிடித்துப் பலஸ்தீன் முதலிய கிறிஸ்து நாடுகளேச் சுதந்தர மாக்குவதற்குப் பதிலாய்த் திருச்சபையுடன் பிணங்கி அதன் விரோதிகளுடன் இணங்கினுன்.

கி. பி. 1229ல் எகிப்து ராசனுடன் ஓர் உடன்படிக்கை செய்து, அந்தியோக்கியா, டிரிப்போலி முதலிய நாடுகளே அவனுக்கு விட்டுவிட்டு, ஜெருசலேம், நசரேத், பெத்திலகேம் முதலிய நாடுகளேத் தான் அடைந்து ஜெருசலேமுக்குச் சென்றுன். அங்கே கிறிஸ்துவர்கள் இவனே விரோதித்ததால் தானே தனக்கு முடி சூட்டிக்கொண்டு திரும்பினுன்.

7-ம் யுத்தம் பேர்போன பிராஞ்சு ராயர் அர்ச். 9-ம் லூயி ஸால் நடத்தப்பட்டது. (கி.பி.1248—1254) திருநாடு எகிப்துக்குச் சேர்ந் திருந்தமையால், இவர் முதலில் நீலநதி முகத்துவாரத்தில் இறங்கி. எகிப்துக்குள் நுழைந்து ஜெயம் அடைந்து சென்றார். ஆனால் இவர் தம்பி இவரது உத்தரவை மீறி, கி. பி. 1249ல் மான் சூராவில் எகிப்தியருடன் யுத்தம் தொடுத்து அபஜெய மடையப் பிராஞ்சின் முக்கிய சேனையும் நாசப்பட்டதால், இவர் பின்னிட நேர்ந்தது. இத்துடன் பஞ்சமும், தொத்து வியாதியும் தொடர, சேனை முற்றும் நசிவுண்டு, இவரும் கைதியாக்கப் பட்டார். சிறை யில் இவர் காட்டிய அதி உன்னத புண்ணிய முயற்சிகளால், ஓர் வருஷத்தில் சுயாதீனம் பெற்று, பலஸ்தீன் நாடு சென்று, கிறிஸ்து வர்களுக்கு இன்னும் சுயமாய் இருந்த இடங்களில் கோட்டை கொத்தளங்களைக் கட்டி முடித்தும், துருக்கரால் அடிமை ஆக்கப் பட்டோரில் அநேகரை மீட்டுக் கொண்டும் கி. பி. 1254ல் பிராஞ்சு சேர்ந்தார்.

## எட்டாம் சிலுவையுத்தம் கி. பி. 1270.

அர்ச். லூயிஸ் ராயர் திரும்பிவந்த பின்னர் கிறிஸ்துவர்களுக்கு இருந்த சிற்சில பட்டணங்களையும் மகமதியர் பிடித்துக் கொண்டு, அவர்களை மிகக் குரூரமாய் நடத்தினதினால், கி. பி. 1270ல், இவர் மறுபடியும் யுத்தம் தொடங்கின ரெனினும், தூனீசை ஆண்ட மகமதிய சிற்றரசனால் ஏமாற்றப்பட்டு, இவர் பலஸ்தீன் நாடு செல்ல வில்லை. இம்மகமதியன் தான் கிறிஸ்து மதத்தைத் தழுவுவதா யும், தானும் கூடி பலஸ்தீனுக்குச் செல்லுவதாயும் தெரிவிக்க, இவர் தூனீசுக்குச் சென்றார். அங்கே மகமதியனுடைய ஏமாற் றத்தை அறிந்து, தூனீசுக்கு முற்றிகையிட, அதிக உஷ்ணத்தி னாலும், கெட்ட தண்ணீராலும் இவர் சேனையில் கொடிய பிளேக் துவக்கி பாதிசேனை மடிந்து, இவரும் வியாதிப்பட்டார். இச்சம யத்தில் தம்முடைய அர்ச்சியசிஷ்ட தனத்தை மிக விசேஷமாய்க் காட்டினார். எப்படியெனில், மரணம் வருவதை அறிந்து, தம்மைச் சாம்பலின் மேல் கிடத்தும்படி வேண்டிக்கொண்டு, சாம்பலில்

படுத்துத் தமது கரங்களைச் சிலுவை அடையாளமாய் மார்பில் சாற்றி, மோக்ஷத்தைப் பார்த்த வண்ணமாய், "சுவாமி! நான் உமது வீட்டில் நுழைந்து, உமது கோயிலை வணங்கி, உமது திரு நாமத்தைப் புகழ்வேன்" என்ற சங்கீதத்தை உச்சரித்துக்கொண்டு மரித்தார்.

அநேக புதுமைகளைச் செய்தமையால் இவர் மரித்த இருபதாம் வருஷம் இவருக்கு அர்ச்சியசிஷ்ட முடி அளிக்கப்பட்டது.

## சிலுவை யுத்தங்களைப் பற்றிய தீர்மானம்.

சிலுவை யுத்தங்கள் தங்களது முக்கிய நோக்கத்தை நிறைவேற்றவில்லை என்பது தெரிந்த விஷயமே. ஆயினும் அவை நியாயமானவைகளாம். எனெனில் அவை கீழ்நாட்டுக் கிறிஸ்துவர்களை மகமதியர் அடிமையினின்று நீக்கவும், ஐரோப்பா கண்டத்தை அவர்கட்கு உட்படாது காப்பாற்றவும் ஏற்பட்டவைகள். பெரும்பான்மையான யுத்தங்கள் யுத்த வீரரது கிறிஸ்துவரல்லாத நடத்தையாலும், கிரீக்கரது துரோகத்தாலுமே பிரதிகூலமாய் முடிந்தன. ஜெருசலேம் முதலிய நாடுகள் கிறிஸ்துவர்களுக்கு உட்படாவிடினும், ஐரோப்பா மகமதியருக்கு உட்படாததற்கு சிலுவை யுத்தங்களே முக்கிய காரணங்கள். இவைகளாலேயே கீழ் ரோமை ராச்சியம் கி. பி. 1453 வரையில் துருக்கருக்கு உட்படாது காப்பாற்றப்பட்டது. பின்னால் கிரீக்கரது பிரிவினையே காரணமாகி, அவர்கள் துருக்கருக்கு உட்பட்டுப் பல நூற்றாண்டுகளாய் மிகக் குரூரமாய் நடத்தப்பட்டுத் துருக்கருக்கு விரோதமாய் பலதடவைகளில் கிளம்பி முறியடிக்கப்பட்டு, அப்படி நேர்ந்த ஒவ்வோர் தடவையும் குரூரங்கள் அதிகரிக்கப்பட்டுச் சொல்லொண்ணா உபாதைகளை அனுபவித்து, கிரீக்கர், பல்கேரியர், சிலாவியர், ருமேனியர் முதலியோர் மேனாட்டார் உதவியால் கி. பி. 19-ம் நூற்றாண்டில் சுயாதீனம் பெற்றார்களெனினும், அநேக கிறிஸ்து தேசங்கள் இன்னும் அடிமை நீங்காது துன்பக் கடலில் மூழ்கியிருக்கின்றன.

மேனாடுகளில் அவவிசுவாசம் பரம்பியதாலும், ராச்சிய அரசாங்கத்தார் கத்தோலிக்க நடத்தையைக் கைப்பற்றி நடவாத குறையாலும், கி. பி. 1914ல் துவக்கி முடிந்த யுத்தத்தில் துருக்கர் முற்றிலும் தோல்வியடைய, ஐக்கிய கட்சியார் கிறிஸ்துவர்களுக்குச் சுயாதீனம் அளிப்பதாய் வாக்களித்திருந்தும், பரம்பரையாய்க் கீழ்தேசக் கிறிஸ்துவர்களைப் பாதுகாக்கும் சுதந்தரமுள்ள பிராஞ்சு தேச கவர்ன்மெண்டே முதலில் சுயநலம் பாராட்டித் துருக்கருக்கு அனுகூலமானதின் காரணமாய்,இவர்கள் வாக்குத்தத்தம் அழிந்து, அனேக கிறிஸ்துவர்கள், ஐயோ பரிதாபம்! இன்னும் துருக்க அரசாட்சியின் கீழிருக்க நேரிட்டிருக்கிறது. இதுவே ஐரோப்பா தேசங்களில் லௌகீக ஆட்சி செய்பவர்கள் கத்தோலிக்கர் அல்லர் என்பதற்கு ஓர் முக்கிய உதாரணம்.

பிராஞ்சு அரசாங்கத்தார் 'கீழ்தேசக் கிறிஸ்துவர்களைப் பாதுகாப்போர்' என்னும் சுதந்தரம் படைத்திருந்தும், தற்காலத்திய பிரிமேஸன் அரசாட்சி அவ்வுத்தியோகத்தை நடத்தச் சற்றும் பிரயத்தனம் செய்யாமையால், அச்சுதந்தரம் இன்னும் திருச்சபையால் நீக்கப்படாவிடினும், இவர்கள் அதை இழந்து விட்டார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

## 2. அந்நிய தேச போதகம்.

வேதத்தைக் காப்பாற்றச் சிலுவை யுத்தங்கள் ஏற்பட்டது போல, அதை அந்நிய நாட்டில் ஸ்தாபிக்க வேத போதகர்களும் கிளம்பினார்கள். டார்ட்டார்கள், மங்கோலியர், ஆகிய இரண்டு சாதியார்கள் 13-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் பகிரங்கமாய்த் தோன்றினார்கள். இவர்கள் பின்னால் செங்கிஸ்க்கான் (கி. பி. 1203—1227) அசரனால் சேர்க்கப்பட்டு, வட ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் மிக்க சேதமுண்டாக்கினார்கள். ஆனால் பல முறை கிறிஸ்து வேத போதகர்கள் இவர்களைத்தடுத்து இவர்களுடன் சீனாதேசம் வரையில் சென்றார்கள். கி.பி. 1246ல் இவர்களுக்கு

ஓர் அரசனைக் குறிக்கக் கூடிய பெரிய சங்கத்தில் இரண்டு பிராஞ்சிஸ்கு சபைக் குருக்கள் அர்ச். பாப்புவின் ஸ்தானாதிபதிகளாய் இருந்தார்கள்.

ஐரோப்பாவின் குழப்பத்தால் இவர்களைத் தோல்வி அடையச் செய்து திருச்சபைக்குக் கொண்டுவர முடியாதது கண்ட பாப்புகள், வேத போதகரால் இவர்களைத் திருத்தி அவ்விதமாய் உலகிற்கு நன்மை உண்டு பண்ண முயன்றார்கள். மங்கோலியர் ஓர்கால் கிறிஸ்துவர்களாய் இருந்ததால் தற்போது அதற்கு விக்கினம் செய்யார்கள் எனக் கருதப் பட்டது. அப்படியே அநேக சிற்றரசர்கள் வேதத்தைக் கைப்பற்ற, மங்கோலியர் ராசதானியிலும் ஓர் கோயில் கட்டப்பட்டது.

கி. பி. 1279ல் மங்கோலியர் ராயன் சீனாவைக் கைப்பற்ற, இவன் ராச்சியபாரம் ஐரோப்பாவில் அங்கோரியாவின் கிழக்கு எல்லையிலிருந்து சீனாக்கடல் வரைக்கும் பரவியது. இந்த ராயன் கிறிஸ்து மதத்தைப் போதிக்க யாதொரு விக்கினமும் செய்யாததால் ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுவரை வேதம் போதிக்கப்பட்டுக் கோடிக் கணக்கான பேர்கள் மனந்திரும்பினார்கள். இப்படியாய் ஆசியா முழுதும் வேதத்திற்கு உட்பட்டிருக்கலாம். ஆனால் ஐரோப்பியருக்குள் தோன்றிய கலகங்களும், மேனாட்டு வேதத் தப்பறைகளும், கடைசியாய்ப் புரோட்டெஸ்டாண்டு மதமும் விக்கினங்களாகினதால் சந்தோஷமாய் எதிர்பார்த்திருந்த இம்முடிவு கைகூட வில்லை.

## 3. துறவற சந்நியாச சபைகள்.

13-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் அர்ச். தமதிரித்துவ சபை, பிராஞ்சிஸ்கு சபை, தோமினிக் சபை ஆகிய இம்மூன்று சந்நியாச சபைகள் ஏற்பட்டன.

## அர்ச். தமதிரித்துவ சபை.

அர்ச். தமதிரித்துவ சபையை ஏற்படுத்தியவர் அர்ச். மாத்தா அருளப்பர். இவர் ஓர் ஏகாந்தியுடன் கூடி யோசித்துத் துருக்கருக்கு அடிமைப் பட்டவர்களை மீட்கும் விசேஷ கருத்துக் கொண்டு, 3ம் இன்னோசெண்டு பாப்புவின் அங்கீகாரம் பெற்றுத் தம் சபையை ஸ்தாபித்தார். இச்சபையின் முக்கிய கருத்து யாதெனில், இவர்கள் வருமானம், மூன்றாய்ப் பிரிக்கப்பட்டு ஒரு பாகம் சந்நியாசிகள் படிப்பிற்கும், மற்றொரு பாகம் தரும விஷயங்கட்கும், மூன்றாவது பாகம் அடிமைகளை மீட்பதற்கும் செலவாக வேண்டியதாம்.

## பிராஞ்சிஸ்கு சபை.

இச்சபையை ஸ்தாபித்த அர்ச். பிராஞ்சிஸ்கு கி. பி. 1182ல் அசிசியில் மேலான வம்சத்தில் பிறந்து, சிறுவ முதல் ஏழைகளிடத்தில் அன்புள்ளவராய் வளர்ந்தார். ஓர் நாள் இவர் கோயிலில் இருக்கையில் "தங்கம், வெள்ளி, பணம், ஒன்றும் வைத்திருக்க வேண்டாம்; ஒரே அங்கி போதும்; பாதரட்சையும் கைக்குச்சியும் அவசியமில்லை" என்னும் சுவிசேஷ வாக்கியத்தைக் கேட்டு வீடு சென்று, தமக்கிருந்தவற்றை ஏழைகட்குக் கொடுத்துப் பாதரட்சையையும், கைக்குச்சியையும் துறந்து, ஏழையைப் போலுடுத்தி, இடையில் ஓர் கயிற்றைக் கட்டிக் கொண்டு,வெளியேறிக் கேட்போர் ஆச்சரிய மடையும்படி தபத்தைப் பிரசங்கித்தார். சீக்கிரத்தில் அநேகர் இவரைப் பின்பற்றினார்கள். அவர்களும் இவருடைய தருமங்களையும், தபத்தையும் நுணுநுணுக்கமாய் அனுசரித்ததால், அர்ச். பிராஞ்சிஸ்கு அவர்களைப் பல விடங்கட்கும் பிரசங்கிக்க அனுப்பித் தாமும் வேத சாட்சி முடியை ஆசித்து எகிப்துக்குச் சென்றார். ஆனால் அங்குள்ள அஞ்ஞானிகள் இவரை மேம்படுத்தியதால் இத்தாலிக்குத் திரும்பித் தமது சந்நியாச சபையை நடத்தி வந்து கி.பி. 1226ல் மரணித்தார்.

இச்சபை இவரது சீவிய காலத்திலேயே மிகப் பிரசித்தி அடைய, இவர் மரிக்குமுன் சுமார் 10,000 சந்நியாசிகள் இருந்தார்கள். இவரது மிகுந்த தேவ சிநேகத்தின் காரணமாக இவருக்குச் 'செராபிக்' (பத்திச்சுவாலகர்) என்னும் காரணப்பெயர் வழங்கலாயிற்று. நமது கர்த்தரும் இவர் மேலுள்ள தமது நிகரில்லா அன்பை உலகம் அறியுமாறு காட்டச் சித்தமாகி, ஓர் நாள் இவர் இரக்ஷகரது பாடுகளைத் தியானித்துப் பரவசமா யிருக்கையில், இவரது சரீரத்தில் தமது ஐந்து காயங்களையும் பதிப்பித்தார். இதனால் இவருக்கு ஐந்து காய வரம்பெற்ற பிராஞ்சிஸ்கு என்றும் பெயர்.

இவரது பரிசுத்தம் மிகவே, ஆதாம், ஏவாள் பரிசுத்த அந்தஸ்தை இழக்காமல் இருந்தால், இயற்கைப் பொருள்கள் மேல் என்ன அதிகாரம் செலுத்தி இருப்பார்களோ, அதே அதிகாரத்தை உடையவரானார்.

இவர் அதிகாலையில் மரங்கள் நிறைந்த தோப்பில் செபிக்கும் போது, பறவைகள் கூடிப் பாட ஆரம்பிக்கத் தமது செபத்திற்கு விக்கினமாய் இருக்கும் பக்ஷத்தில் அப்பறவைகளை ஆசீர்வதித்துப் "போங்கள்" என்ற மாத்திரத்தில் அவைகள் அவ்விடம் விட்டுப் பெயர்ந்து போம்.

பிராஞ்சிஸ்கு சந்நியாச சபையைப் போல கன்னியாஸ்திரீ சபையும் ஏற்பட்டது. இது பிராஞ்சிஸ்கு 2-ம் சபை. இதில் *மூன்றாம் சபை உலக அந்தஸ்தில் இருப்பவர்களுக் கென்று ஏற்பட்டது.

## தோமினிக் சபை.

இதை ஸ்தாபித்த அர்ச். சாமிநாதர் ஸ்பெயின் தேசத்தில் உயர்ந்த வம்சத்தில் கி. பி. 1170ல் பிறந்தார். சிறுவம் துவக்கி ஆத்தும இரட்சணிய விருப்பமுள்ளவ ராகி, அத்தேசத்தில் வேதத்

* பிராஞ்சிஸ்கு மூன்றாம் சபையைப் பற்றி அறிய விரும்புவோர் பங்குக் குருவிடம் அறிந்து கொள்ளலாம்.

தப்பறையைக் கொண்ட ஆல்பிசென்சியரை மனந்திருப்ப விசேஷ கருத்துக் கொண்டிருந்ததால், அநேகர் இவரைப் பின்பற்றினார்கள்.

அர்ச். பிராஞ்சிஸ்கு சபையைப் போலவே இச்சபையும் பரம்ப, கி. பி. 1221ல் இவர் மரிக்கு முன் அறுபது சந்நியாச மடங்களிருந்தன. இவரே அர்ச். தேவமாதாவின் பிரிய மாலையாகிய செபமாலையை உபயோகத்துக்குக் கொண்டு வந்தவர். தோமினிக் சபையிலும் 2-ம், 3-ம் சபைகள் உண்டு.

கர்மேல்சபை, அகுஸ்தீன் சபை ஆகிய இதர சந்நியாச சபைகளும் இக்காலத்தில் ஏற்படுத்தப் பட்டன.

## கர்மேல் சபை.

பலகாலமாய் சில சந்நியாசிகள் பலஸ்தீன் தேசத்திலுள்ள கர்மேல் மலையில் கூடி வாழ்ந் திருந்தார்கள். இவர்கள் கி. பி. 1209ல், ஜெருசலேம் பிதாப்பிதாவிடம் தங்கள் ஒழுங்குகளைப் பெற்றுத் துருக்கர் குரூரத்தால் ஐரோப்பா சென்று பரவினார்கள்.

## அகுஸ்தீன் சபை.

முன்னைய சந்நியாச சபைகளைப் போலவே அர்ச். அகுஸ்தீன் சபையும் ஏற்பட்டது.

இச்சந்நியாசிகள் எல்லோரும் தரித்திர வார்த்தைப்பாடு கொடுத்து விசுவாசிகளது தருமத்தைக் கொண்டே சீவிக்கிறார்கள்.

## 3 பாப்புகள்.

## இன்னோசெண்டு கி. பி. 1198—1216.

இக்காலத்தில் பாப்புவாயிருந்த 3-ம் இன்னோசெண்டு மிகப் பிரசித்தி பெற்றவர். ஸ்பெயின் தேசத்தில் மகமதியர் துரத்தப் பட்டது, ஆல்பிசென்சியர் தப்பறை ஒழிந்தது, திருச்சபை

ஆட்சியில் அநேக சீர்திருத்தங்கள் ஏற்பட்டது, பல சந்நியாச சபைகள் ஸ்தாபகமானது, முதலிய பல வைபவங்களாலும் திருப்தி கொண்ட இவர், திருச்சபையின் ஓர் பொதுச்சங்கமும் கூட்டுவித்தார். இச்சங்கம் கி. பி. 1215ல் ரோமையிற் கூடியது.

## 12-ம் பொதுச்சங்கம், ரோமை கி. பி. 1215.

இதில் மேல் தேசங்களினின்றும், கீழ் தேசங்களினின்றும் சுமார் 412 மேற்றிராணிமார்கள் கூடினார்கள். அர்ச். பாப்புவே இதில் அக்கிராசனம் வகித்தார். வேத சத்தியங்கள், நல்லொழுக்கம், நடத்தை முதலியவை விசேஷமாய்க் கவனிக்கப்பட்டு, ஆல்பிசென்சியருடைய தப்பறையும் கடியப்பட்டது. வருஷத்துக்கு ஒரு தடவையாகிலும் தபசுகாலத்தில் பாவசங்கீர்த்தனம் செய்து திவ்விய நற்கருணை உட்கொள்ள வேண்டுமென்றும், கலியாணத்திற்கு நான்காம் கால் உட்பட விக்கினம் உண்டென்றும், இன்னும் வேறு அனேக தீர்மானங்களும் செய்யப்பட்டன.

இவருக்குப்பின் வந்த பாப்புகள் ஜெர்மனி 2-ம் பிரெடெரிக் ராயனுடன் நீடித்த போர் புரிய நேர்ந்தது. இன்னோசெண்டுடைய சீஷனாயினும், அவரிடம் பெற்ற நன்மைகளுக்கெல்லாம், பிரெடெரிக் செய்த பதில் அஞ்ஞானமும், திருச்சபையினிடத்துப் பகையுமாம். இன்னோசெண்டு பாப்பு கி. பி. 1216ல் மரித்தார். அவருக்குப் பின் ஒனோரியுஸ் பாப்பு கி. பி. 1216 முதல் 1227 வரையில் ஆண்டார். அப்பால் பேர்போன அர்ச். 9-ம் கிரெகோரியுஸ் 1227 முதல் 1241 வரையில் பாப்பானார்.

இவர் 80 வயதில் பாப்பாயினும், தமது உன்னத பதவியை வெகு கம்பீரமாய் நடத்தி வந்தார். பிரெடெரிக் ராயன் சிலுவை யுத்தத்திற்குப் போவதாய் வாக்களித்து ஏமாற்றியதால், அவனைப் பலமுறை தூண்டியும் வீணானது கண்டு அவனைத் திருச்சபையினின்று தள்ளினார். அதற்குப் பின் அர்ச். பாப்புவின் அநுமதியின்றி, அவருக்கு விரோதமாய் அம்மன்னன் யுத்தத்திற்குச் சென்ற விபரம் முன் கூறப்பட்டிருக்கிறது.

இவன் பலஸ்தீனிலிருந்து திரும்பி வந்ததும் இத்தாலியிலும், ஜெர்மனியிலும் தான் இழந்த நாடுகளைத் திரும்பவும் கைப்பற்ற, அர்ச். பாப்புடன் சமாதான மாயினன். ஆயினும் தன் காரியம் நிறைவேறியதும் முன்போலவே நடக்கத் துவக்கினன். அநேக மேற்றிராணிமார்களையும்,மடாதிபதிகளையும், திருச்சபை சட்டத்துக்கு விரோதமாய்த் தானே ஏற்படுத்தினன். அர்ச். பாப்பு கடைசியாய் கி. பி.1239ல் மறுபடியும் இவனைத் திருச்சபைக்குப் புறம்பாக்கினர்.இவன் பதிலாக உலக விஷயங்களிலும், வேத விஷயங்களிலும்தனக்கு மேல் யாரும் இல்லையென்றும்,தான் ஒருவருக்கும் கட்டுப்பட வேண்டியதில்லை யென்றும் ஓர் சட்டத்தைப் பகிரங்கம் செய்தான்.

இதுவுமன்றி, அர்ச். பாப்பு ரோமையிற் கூட்டுவித்த பொதுச் சங்கத்துக்குப் பிராஞ்சு, இங்கிலாந்து தேசங்களின் மேற்றிராணிமார்களையும் வராது தடுத்தான்.

கிரெகோரியுஸ் கி. பி. 1241ல் மரித்தபின் பிரெடெரிக் ராயன் முன்னிலும் அதிக விரோதம் காட்டியமையால்,கி.பி. 1243ல் பாப்புவாகிய 4-ம் இன்னொசெண்டு ரோமையை விட்டு லையான்ஸ் பட்டணத்தில் வசிக்க நேர்ந்தது. அப்பால் திருச்சபையின் ஓர் பொதுச்சங்கம் அப்பட்டணத்தில் கூட்டப்பட்டது.

## 13-ம். பொதுச்சங்கம், லையான்ஸ் கி. பி. 1245.

இதில் 140 மேற்றிராணிமார்களும், பலதேசக் கிறிஸ்து ராஜப் பிரதிநிதிகளும் கூடினர்கள். பிரெடெரிக் ராயன் சங்கத்துக்கு அழைக்கப்பட்டும், அவன் வருகைக்காக சங்கம் அநேக நாள் தள்ளி வைக்கப்பட்டும் வரவில்லை. கடைசியாய் அர்ச். பாப்பு தம் கையில் எரியும் மெழுகுவத்தியை ஏந்திச் சங்கத்தில் தோன்ற,ஒவ்வொரு மேற்றிராணியாரும் ஒவ்வோர் மெழுகு வத்தியைக் கையில் கொண்டார்கள். அப்பால், பாப்பு பின்வரும் தீர்ப்பை விளம்பரஞ் செய்தார். "கர்தினல்கள், மேற்றிராணிமார்கள் முதலியோருடன்

தீர்க்க ஆலோசித்துப் பிரெடெரிக் ராயனைக் கத்தோலிக்க சபையினின்று நீக்குகிறோம். அந்த ராயனுக்குக் கீழ்ப்படிய வாக்குக் கொடுத்தவர்கள் எல்லோரையும் அவ்வாக்குத் தத்தத்தினின்று விடுவிக்கிறோம்; அப்போஸ்தொலிக்கு அதிகாரத்தால் யாவரும் அந்த ராயனை ஜெர்மனி ராயனாக வாவது, சிசிலி அரசனென்றாவது கொள்ளலாகாதெனக் கட்டளை இடுகிறோம்; இனிமேல் யார் அவனுக்கு எவ்வித உதவி செய்யினும், அவர்கள் திருச்சபைக்குப் புறம்பாவார்கள்; ராயனைக் குறிக்கும் அந்தஸ்துள்ளோர்கள் தாமதமின்றி ஜெர்மனி ராச்சியத்திற்கு வேறு ஓர் ராயனைக் குறிக்கக் கடவார்கள்; சிசிலிக்கு நாமே ஓர் அரசனைக் குறிப்போம்.” இத்தீர்மானம் சொல்லி முடிந்ததும் எல்லோரும் மெழுகு வத்திகளை அணைத்தார்கள்.

விசுவாச மிழந்த பிரெடெரிக் ராயன் இவற்றை அறிந்து, யுத்தத்தால் அன்றித் தன்னை ஒருவரும் தன் நிலைமையினின்று அசைக்க முடியாதெனக் கதறி யுத்தத்திற்கு முயற்சி செய்தான். அவனுக்குப் பதிலாய்க் குறிக்கப்பட்ட அரசன் ஒரே வருஷத்தில் மரணிக்க, அவன் செய்ய விருந்த கொடும்போர் துடங்கவில்லை.

பிரெடெரிக் எவ்விதத்திலும் பாப்பைச் சிறைப்படுத்த முயன்று, தோற்றுப்போய்க் கடைசியாய் கி. பி. 1250ல் நிர்ப்பாக்கியனாய்ச் செத்தான். சாகுமுன் தன் மகனைக் கூப்பிட்டு கத்தோலிக்குத் திருச்சபையினின்று பலாத்காரமாய்ப் பறித்துத் தான் அநுபவித்து வந்த சுதந்தரங்களை மறுபடியும் அதற்குத் திரும்பக் கொடுத்துவிட வேண்டுமெனக் கற்பித்தான். ஆயினும் சர்வேசுரன் சாபத்தால் வெகு சீக்கிரத்தில் ராச்சியபாரம் இவன் குடும்பத்தினின்று நீங்கியது.

4-ம் இன்னொசெண்டு கி. பி. 1254ல் மரித்தார். 4-ம் அர்பன் கி. பி. 1261ல் பாப்புவானார். இவர் திவ்ய நற்கருணைத் திருநாளை ஸ்தாபித்து, அர்ச். திரித்துவத்தின் திருநாளுக்குப் பின் வரும் வியாழக்கிழமையைக் குறித்தார்.

இவருக்குப்பின் 4-ம் கிளமெண்டு பாப்பாகி, அவர் மரித்து மூன்று வருஷமளவும் கர்தினல்களுக்குள் ஏற்பட்ட தகராறுகளால் பாப்பு குறிக்கப்படவில்லை. அப்பால் 10-ம் கிரெகோரி கி. பி. 1271ல் பாப்பாகி, கி. பி. 1274ல் ஓர் பொதுச்சங்கம் கூட்டுவித்தார்.

## 14-ம் பொதுச்சங்கம், லையான்ஸ் கி. பி. 1274.

இதில் 500 மேற்றிராணிமார்களும், பிராஞ்சு அரசனும், ஜெர்மனி, இங்கிலாந்து, இன்னும் இதர கிறிஸ்து நாடுகளின் ராஜப் பிரதிநிதிகளும் கூடினார்கள். அர்ச். லூயிஸ் ராசர் தூனீசில் சற்று முன்னே மரிக்க, மறுபடியும் ஓர் சிலுவை யுத்தத்திற்கு ஆயத்தம் செய்யவும், பிரிவினை கொண்ட கீழ்ரோமை நாட்டுச் சபையை மறுபடியும் திருச்சபையில் சேர்க்கவும், ஒழுக்கம் முதலிய சீர்திருத்தங்களைச் செய்யவும் கூடிய இச்சங்கத்தில், முதலில் அர்ச். பாப்பு சிலுவை யுத்தத்துக்குக் கிறிஸ்துவர்களைத் தூண்டினார். ஆனால் மிகச் சொற்பப் பேர்கள் மட்டும் அதற்கு உடன்பட்டார்களாதலால், கொஞ்சகாலத்துக் குள்ளாக பலஸ்தீனில் கிறிஸ்துவர்களுக்கு இருந்த எல்லா இடங்களும் மகமதியருக்குட்பட்டன.

கொன்ஸ்தாந்திநோப்பிலி ராயன் தனது ஸ்தானாதிபதிகளை அனுப்பிப் பிரிவினையைத் தீர்க்க வேண்டிக்கொண்டதால், அர்ச். ராயப்பர், சின்னப்பர் திருநாளன்று, அர்ச். பாப்பு சங்கத்தில் கூடிய எல்லோர் முன்னிலையிலும் திவ்விய பலிபூசை செய்தார். அப்பூசையில் சுவிசேஷமும், நிருபமும், லத்தீன், கிரீக் இரண்டு பாஷைகளிலும் வாசிக்கப்பட்டதுமன்றி, விசுவாச மந்திரமும் (credo) இரண்டு பாஷைகளிலும் பாடப்பட்டது. அச்சமயம், "பிதாவினிடத்திலிருந்தும், சுதனிடத்திலிருந்தும் புறப்படுகிறவர்" என்னும் திவ்விய ஸ்பிரீத்து சாந்துவைக் குறிக்கும் சத்தியத்தை கிரீக்கர் மூன்று தரம் சொன்னார்கள்.

கொன்ஸ்தாந்திநோப்பிலி ராயருடையவும், பிதாப்பிதாவுடையவும் கடிதங்களைக் கொடுத்து, ஸ்தானாதிபதிகளின் தலைவர், "என்

பேராலும் என் எஜமான் பேராலும் நாங்கள் கொண்டிருந்த தப்பறையை விட்டுவிடுகிறேன்; உண்மையான கத்தோலிக்க விசுவாச சத்தியத்தை என் மனப் பூர்வமாய் விசுவசித்து வாக்கால் சொல்லுகிறேன்; இதை எப்போதும் உண்மையாய்க் கைப்பற்றுவேன்; ஒருபோதும் தள்ளிவிடேன்; ரோமை மேற்றிராணியாரே திருச்சபையின் தலைவரென்று ஒத்துக்கொண்டு அவருக்குக் கீழ்ப்படிவேன்; இவற்றையெல்லாம் நுணுநுணுக்கமாய் அனுசரிப்பதாக என் ஆத்துமத்தின் பேராலும், என் எஜமான் ஆத்துமத்தின் பேராலும் சத்தியஞ் செய்கிறேன்'' எனப் பகிரங்கமாய்ச் சொன்னார். இச்சத்தியத்தால் பிரிவினை நீங்கியதால் அர்ச். பாப்பு கண்களில் ஆனந்த பாஷ்பம் பொழிய "தேதெயும்'' என்ற தோத்திரப் பாட்டைத் துவக்கிப் பாடினார். அப்பால் ஒழுங்கு முதலிய விஷயங்களில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன.

## பாப்பு தேர்தலைக்குறித்த ஒழுங்குகள்.

சங்கத்தில் நடக்கவேண்டியவை நடந்தேறியபின் அர்ச். பாப்பு, பாப்பைக் குறிப்பதில் அநேகந்தடவை பலவருடங்களாய்த் தாமதம் ஏற்பட்டதால் திருச்சபைக்கு விளைந்த கெடுதிகளை அறிந்து இச்சங்கத்திற்கும், கர்தினால்மார்களுக்கும், பின்வரும் பாப்பு தேர்தல் முறையை எழுதி அருளினார்.

"பாப்பு மரித்தபின் பட்டணத்திலிருக்கும் கர்தினால்கள் வெளியில் இருப்போருக்காய் எட்டுநாட்கள் மட்டும் காத்திருந்து, அப்பால் தாமதமின்றிப் பாப்பின் அரண்மனையில் கூடவேண்டும். ஒவ்வொருவரும் தமது விசேஷ அவசியத்துக்காக ஒரு குருவையோ, வேறு ஓர் மனிதனையோ கூட்டிக்கொள்ளலாம். கர்தினால்கள் எல்லோரும் ஒரே அறையில் இருக்கவேண்டும்; அவ்வறையின் திறப்புகள் பூராக அடைக்கப்பட்டு, ஒருவரும் உள்ளே பிரவேசியாமலும், வெளியே வராமலும், இருக்க வேண்டியது. யாரும் கர்தினால்களைப் பார்க்கவும் தனித்து ஒருவருடன் பேசவும்கூடாது. அப்படி அறையினுள் பிரவேசிப்பவர் கர்தினால்கள் எல்லோருடைய

விருப்பத்துடன், பாப்பைக் குறிக்கும் ஒரே அலுவல் விஷயமாய் மட்டும் செல்லலாம். ஒருவரும் கர்தினல்களுக்குக் கடிதமாவது, ஏவற்காரராவது அனுப்பலாகாது. அப்படிச் செய்வோர்கள் திருச்சபைக்குப் புறம்பாக்கப் படவேண்டும். கர்தினல்கள் இருக்கும் அறைக்கு ஆள் நுழையக்கூடாத ஓர் திறப்பு போஜனம் கொடுக்க மட்டும் அமைந்திருக்க வேண்டும். ஷை அறைக்குள் சென்ற மூன்று நாளுக்குள் திருச்சபைக்கு ஓர் தலைவர் குறிக்கப் படாவிடில், பின் ஐந்து நாட்களுக்குப் பிரதிதினமும் காலையிலிருந்து இரவுமட்டும் ஒரே போஜனமும்; அப்பால் வெறும் அப்பமும், தண்ணீரும், கொஞ்சங் திராக்ஷ ரசமுமே, பாப்பு குறிக்கப்படு மட்டும் கர்தினல்களுக்குக் கொடுக்கப் படவேண்டும். அவர்கள் பாப்பைக் குறிக்கும் ஓர் விஷயந்தவிர வேறு எக்காரியத்திலும் விசேஷ அவசியமின்றிப் பிரவேசிக்கலாகாது. பட்டணத்திலிருக்கும் எக்கர்தினலும் அறையில் பிரவேசியாமல் இருந்தால், அல்லது அறையினின்று கஷ்டமான வியாதியின் நிமித்த மின்றி வெளிச் சென்ருல் அவரைச் சேர்க்காமலே காரியம் நடத்தப்படவேண்டும். ஆயினும், வியாதியால் சேராமலிருந்து சொஸ்த மடைந்தோரும், வெளியிடங்களி னின்று தாமதமாய் வருவோரும், அர்ச். பாப்பு குறிக்கப்படுமுன் வந்து சேர்ந்து கொள்ளலாம். அர்ச். பாப்பு தம் இருப்பிடம் நீங்கி வேறிடத்தில் மரிக்க நேர்ந்தால், கர்தினல்கள் அவர் மரித்த மேற்றிராசன இருப்பிடத்துக்குச் செல்லவேண்டும். அவ்விடம் திருச்சபைக்குப் புறம்பாகவோ, கலகமுள்ளதாகவோ இருந்தால், அதற்கு அடுத்த பட்டணத்திற் கூடவேண்டும். அங்கு மேற்குறித்த மாதிரியாகவே, மேற்றிராணியார் அரண்மனையிலாவது, அல்லது அதற்காகக் குறிக்கப்படும் வேறு இடத்திலாவது ஏற்பாடு செய்யவேண்டும். அவ்விடத்தின் அதிகாரி மேற்கூறிய ஏற்பாட்டைத் தழுவியே நடக்கவேண்டும். இல்லாவிடில் திருச்சபைக்குப் புறம்பாகும் சாபம் அவனைச் சேரும். ஓர் பாப்பு மரித்ததும் கர்தினல்கள் முன்கூறிய ஏற்பாட்டை அனுசரிப்போமென சத்தியஞ் செய்யவேண்டும்."

இவ்வேற்பாடு சிற்சில மாற்றங்களுடன் இன்னும் அனுசரிக்கப்பட்டு வருவதால், அர்ச். பாப்பைக் குறிக்கும் விஷயத்தில் எவ்வித குறையுமின்றி யோக்கியமே நிலை பெறுமாறு, திருச்சபை எம்மாத்திரம் கண்ணுங் கருத்துமாயிருக்கிறதென நாம் அறியலாம்.

## மற்ற பாப்புகள்.

10-ம் கிரெகோரி 1276ல் மரித்தார். அவருக்குப் பின் சில பாப்புகள் வந்தார்கள். 4-ம் நிக்கொலாஸ் ஆண்ட கி. பி. 1291ல் நசரேத்திலிருந்த நமது தேவதாயின் திருவீடு இருந்தபடியே அவ்விடம் விட்டு மாறி, முதலில் டால்மேசியாவிலும், பின் அன்கோனவுக்குப் பக்கத்திலுள்ள ரெக்கனதியிலும், கடைசியாய் இத்தாலியில் லோரேத்திலும் தங்கியது. தற்காலம் லோரேத் ஓர் சிறந்த யாத்திரை ஸ்தலமென்பது உலகமே அறிந்த விஷயம்.

கி.பி.1292ல் நிக்கொலாஸ் மரித்து,சுமார் 27-மாதம் வரை பாப்பு குறிக்கப்படாமல், கடைசியில் வயோதிகரான அர்ச். கிளமெண்டு குறிக்கப்பட்டார். இவர் அர்ச்சியசிஷ்டவராயினும் திருச்சபை அதிகாரத்தைக் கொண்டு செலுத்தும் சக்தி அற்றிருந்தமையால், கி.பி.1294ல் கர்தினல்களைக்கூட்டி ராஜீநாமாக் கொடுத்தார். ஆனல் இவ்விதமாய் ஓர் பாப்பு தம் பதவியை ராஜீநாமாக் கொடுக்கவும், அதைக் கர்தினல்கள் அங்கீகரிக்கவும் கூடுமென்று ஓர் சட்டம் இவர் பிறப்பித்த பின்னர் மட்டும், கர்தினல்கள் ராஜீநாமாவை ஏற்று, 8-ம் பொனிபேஸ் பாப்பைக் குறித்தார்கள்.

இவர் மத்தியகாலத்துப் பாப்புகளில் சிறந்து விளங்கியோரில் ஒருவர். இவர் பட்டத்துக்கு வந்ததும் பிராஞ்சு 9-ம் லூயிஸ் ராசாவுக்கு அர்ச்சியசிஷ்ட பட்டமும், கி. பி. 1300ம் ஆண்டின் ஜூபிலியும் ஆகிய இரண்டு வைபவங்கள் நிறைவேறின.

தொன்றுதொட்டு ஒவ்வொரு நூற்றாண்டின் துவக்கத்திலும் கிறிஸ்துவர்கள் ரோமைக்குத் திருயாத்திரையாய்ச் சென்று, அங்கு

அர்ச். ராயப்பர், சின்னப்பர் கல்லறையைச் சந்திப்பார்கள். அச் சமயத்தில் விசுவாசிகட்குப் பல ஞானப்பலன்களை அளிப்பது வழக்கம். 8-ம் பொனிபேஸ் இதை ஒழுங்கு செய்து இதற்கு "ஜுபிலி" என்ற பெயரும் இட்டார்.

இவ்வைபவங்கள் நடந்தேறிய பின்னர் இவருக்குக் கஸ்தி நேரிட்டது. பிராஞ்சை ஆண்ட பிலிப்பு, அர்ச். லூயிஸ் ராயரின் பௌத்திரனாயினும், திருச்சபைக்கு எவ்விதத்திலும், ஜெர்மனி பிரெடெரிக் ராயனைப்போலத் துன்பம் செய்து வந்தான்.

ஆகையால் பாப்பு ரோமையினின்று துரத்தப்பட்டுத் தம் ஜென்ம பட்டணத்தில் தங்கியிருந்து, ஓர்கால் பிலிப்பால் சிறை யிடவும் பட்டுத் தம் பட்டணத்தாரால் பின்னர் சிறையினின்று விடுபட்டு ரோமை சென்று கி. பி. 1303ல் மரித்தார்.

இவரைத் துன்புறுத்திய ராசன் சர்வேசுரனால் தண்டிக்கப் பட்டான். அவன் அரண்மனையிலேயே கற்புக்கு விரோதமான துர்க்காரியங்கள் நடந்தது கண்டு, அவர்களைக் குரூரமாய்த் தண்டித்த பிறகு, அதே விசாரமாய் கி. பி. 1314ல் அவன் மரிக்க, அவன் மக்கள் மூவர் ஒருவன் பின் ஒருவனாய்ப் பட்டத்துக்கு வந்து, கடைசியாய் 1328ல் அக்குடும்பத்தைச் சாராது சுதந்தரம் அற்றிருந்த வலாய் பிலிப்பு பட்டத்துக்கு வந்தார்.

இப்படியே கிறிஸ்து அரசர்கள் திருச்சபைக்குத் துணையாய் இருப்பதற்குப் பதிலாய் அதைத் துன்பப்படுத்திய பல தடவைக ளில் சர்வேசுரனுடைய சாபம் அவர்கள் மேலும், அவர்கள் மக்கள், குடும்பங்களின் மேலும் இறங்கி, அவர்கள் ராச்சியபாரமும் ஒழிந்ததற்குச் சரித்திரத்தில் அநேக அத்தாட்சிகள் காணலாம்.

# ஐந்தாம் பாகம்.

---

## அஞ்ஞான கல்வி யெழுச்சி கி. பி. 1303—1517.

---

## 1-ம் அத்தியாயம்.

---

### அவிஞன் பாப்புகள் கி. பி. 1303—1378.

உட்பிரிவுகள்:—

அவிஞன் பாப்புகள்; அர்ச்சியசிஷ்டவர்கள்.

### 1. அவிஞன் பாப்புகள், பொது வர்த்தமானம்.

ஐந்தாம் பாகம் கி. பி. 1303ல் நிகழ்ந்த பொனிபேஸ் மரணத்திலிருந்து, லுத்தர் கலகம் (கி. பி. 1517) வரையிலும் இரண்டு நூற்றாண்டுகள் அடங்கியது. இக்காலத்தின் முக்கிய தன்மை, கிறிஸ்து ஜனங்களின் ஒழுக்கக் குறைவும், கிறிஸ்து நாட்டின் க்ஷீணதசையுமாம். சார்ல்மேனும், திருச்சபையும் ஸ்தய பித்த திருரோமை ஸாம்ராச்சியத்துக்குப் பதில், பற்பல வேறு கிறிஸ்து தேசங்களும், தனித்தனியான தேச ஜனங்களும் ஏற்பட்டன. இக்காலத்தில் வந்த பாப்புகள் ரோமையை விட்டு அவிஞனில் தங்கி வசித்ததால் பாப்புகளின் இகலோக ஆட்சி குன்றிக் கிறிஸ்து ஜனங்களுள் பிரிவினையும் ஏற்பட்டு, வேதத் தப்பறைகளும் திரும்பவும் தோன்றின. சன்னியாச சபைகளும் முதலில் கொண்டிருந்த மேலான வைராக்கியமும், நல்லொழுக்கமும் குறைந்து ஒழுக்க வீனங்களுக் குட்பட்டன. கிறிஸ்து தேசங்களிலும் திருச்சபையின் பாஷையான லத்தீனுக்குப் பதிலாய்த் தேச பாஷைகள் தோன்றின. இக்காலத்தில் கல்வி அபி

விருத்தி யாயினும், அது அஞ்ஞான கிரீக்கர் கல்வியை மறுபடியும் கற்பதாம். இக்காரணங்கள் பற்றி கிறிஸ்து நாடு மதவிஷயத்தி லும், ஒழுக்கத்திலும் குறைவு அடைந்தது.

இக்காலத்தில் பல அரசர்களும், சிற்றரசர்களும், தங்கள், தங்கள் பலத்தை அதிகரிக்க முயன்றதாலும், ஜனங்களும் ஒழுக்கக் குறை வடைந்ததாலும், ஜெர்மனி அரசியல் குன்றி, இத்தாலியில் சர்வ குழப்பங்களும், யுத்தங்களும் தோன்றித் திருச்சபை நாடுகளில் கலக முண்டாகி, அர்ச். பாப்புவின் சுதந்தரத்துக்கு இடையூறு ஏற்பட்டதால், பாப்புமார் ரோமையிலிருந்து கொண்டு திருச்சபை யைச் சுயாதீனமாய் ஆள முடியவில்லை.

8-ம் பொனிபேஸூக்குப் பின் வந்த பாப்பு கி. பி. 1305ல் மரிக்க, அப்பால் பாப்பான 5-ம் கிளமெண்டு, பிராஞ்சுக் காரராத லால் கி. பி. 1309ல் அவிஞன் பட்டணம் சென்று தங்கினர். இதற்குப் "புது பாபிலோனிய சிறை" எனப் பெயர்.

## 15-ம் பொதுச்சங்கம், வியென் கி.பி. 1311.

இவர் காலத்தின் முக்கிய சம்பவம் இப்பொதுச் சங்கமாம். இதில் சிலுவை யுத்தங்களில் நன்கு உழைத்துப் பிற்காலத்தில் ஒழுக்கக் குறைவுபட்ட டெம்ப்லர் யுத்தசபை நீக்கப்பட்டது. பிராஞ்சிஸ்கு சபையிலும் சிற்சில ஒழுக்கக் குறைவுகள் கடியப் பட்டன. மேனாடுகளில் எபிரே, அரபி, முதலிய கீழ்தேச பாஷை கள் கல்விச் சாலைகளில் கற்பிக்கப்படத் தீர்மானிக்கப்பட்டது.

இவருக்குப் பிந்திய 22-ம் அருளப்பர் (கி. பி. 1316—1334) பிரிவினைப் பட்ட ஜெர்மனி ராயனுடன் வழக்காடி அவனுடைய தப்பறையான எண்ணங்களையும், அவனுக்கு உதவியாய்க் கிளம்பின பிராஞ்சிஸ்கு சபையின் ஓர் பிரிவையும் கடிந்தார். இவருக்குப்பின் 12-ம் ஆசீர்வாதப்பர் பட்டத்துக்கு வந்து கி. பி. 1342 வரையில் ஆண்டார்.

இரத்த பாந்தத்தைச் சற்றும் கவனியாத இவர், தம் சுற்றத்தாருக்கு எவ்வித உதவியும் செய்ததில்லை. "ஓர் பாப்பு மெல்கிசெதேக்கைப் போல் தாயும், தகப்பனும் வம்சமுமின்றி இருக்க வேண்டும்" என்று இவர் பலமுறை சொல்லி வருவார். திருச்சபை அதிகாரத்தில் சேர்ந்த உத்தியோகங்கட்குத் தகுந்தவ ரன்றி வேறு ஒருவரையும் இவர் குறிக்கவில்லை. "தக்க அந்தஸ்தில் லாத ஒருவரை ஓர் உத்தியோகத்துக்குக் குறிப்பதினும் அவ்வுத்தி யோகம் காலியாயிருப்பதே நலம் என்பார்.

## ரோமைக்குழப்பம்.

இவருக்குப்பின் 6-ம் கிளமெண்டு பாப்புவானார். ரோமையி லும், திருச்சபை நாடுகளிலும் குழப்பம் வரம்பு கடந்து எழும்பிய தால், யோக்கியர் வசிக்க முடியவில்லை. ஆகையால் ஜனங்கள் அப் பட்டணம் விட்டு ஓடிப்போக ரோமை பாலைவனம் போல் காணப் பட்டது. தெருக்கள் எங்கும் குழப்பக்காரரின் சண்டையால் இடிபட்ட வீடுகள், கோட்டை கொத்தளங்களின் மண் முதலிய நிரம்பிக் கிடந்தன. கோயில்களில் எல்லாம் பலிபீடங்கள் நொறுக் கப்பட்டன. எங்கும் திருடர்கள், வழிப்பறி செய்பவர்கள், கொலைக் காரர், இன்னும் எவ்வித தீங்கு செய்பவர்கள் ஆகிய இவர்களே நிறைந்திருந்தார்கள். ரோமைப் பிரபுக்கள் இதே சமயமென்று சுரூபங்களையும், பெரிய மாளிகைகளின் சித்திரத்தூண்களையும் அவற்றின் ஜோடிப்புக் கென்று வைத்திருந்த அழகிய பல சாமான் களையும் கவர்ந்தார்கள்.

இப்படி ரோமை பாழாக்கப் பட்டதைப் பொறுக்கல் ஆற்றாத ரோமையர், பாப்பை இழந்த குறைவால் நேர்ந்த தின்மைகளை உணர்ந்து, 6-ம் கிளமெண்டை ரோமைக்கு வரவேண்டுமென வேண்டிக்கொள்ளச் சிலரைத் தெரிந்து அனுப்பினார்கள்.

## ரியென்சி.

இவர்களில் ஏழைத் தச்சனுக்குப் பிறந்து கல்வி கேள்விகளில் தேர்ந்த ரியென்சி என்பவன் ஒருவன். இவன் ரோமையின் பா

ழான நிலைமையைக் கண்ணீர் வடித்துக் கொண்டு எடுத்துக் காட்டி, அர்ச். பாப்பை ரோமை கவர்னராக வரும்படி கேட்டான். அர்ச். பாப்பு அதற்கு உடன்படாமல் காலம் வரும்போது தாம் ரோமை வருவதாய்ப் பதிலளித்து அனுப்பி விட்டார். ரியென்சி மற்றொரு தாமும் வந்தான். அப்போதும் அர்ச். பாப்பு சம்மதிக்கவில்லை. ரியென்சி அஞ்ஞான ரோமையர் சரித்திர சாஸ்திரங்களைக் கற்றவனுதலால் பாப்பை வெளிக்கு மட்டும் அரசனுகக் கொண்டு, உண்மையில் தானே தன் போதக சாமர்த்தியத்தால் ஆட்சி பெற வேண்டுமென எண்ணங் கொண்டிருந்தான்.

அப்பால், ரோமையரைக் கூட்டித் தன் பிரசங்க சாமர்த்தியத்தால் தன்னை எல்லோருக்கும் மேலாக உயர்த்திக் கொண்டு,ஒழுங்கு செய்யத் தலைப்பட்டான். கலகக்காரரைத் துரத்தி, வேறு பட்டணங்களையும் கைக்கொண்டு, இத்தாலி முழுவதையும் கூட்டிக் குடியரசு ஏற்படுத்த எண்ணிக் கொண்டிருந்தான்.

ஆனல் தன் ஜெயத்தால் பூரித்து ஒருவரையும் மதியாமல் நடக்க, அநேகம் பிரபுக்கள் இவனுக்கு விரோதமாய்க் கிளம்பியதால், பிரேகு பட்டணத்துக்கு ஓடி, ஜெர்மனி ராயனிடம் அடைக்கலம் புக, அவர் இவனை அர்ச். பாப்புக்கு ஒப்புவிக்கவே, அவர் இவனைச் சிறைப் படுத்தினர்.

6-ம் கிளமெண்டு கி.பி. 1352ல் மரிக்க, 6-ம் இன்னேசெண்டு பாப்பானர். இவர் காஸ்டையில் தேசத்து அரசனின் மந்திரியாகி, ராஜ தந்திரங்களிலும், யுத்தம் நடத்துவதிலும், கீர்த்தி வாய்ந்திருந்த அல்போர்னோஸ் என்பவரைத் தெரிந்து, அவரைக் கர்தினலாக்கி ரோமைக்கு அனுப்பினர். அவரே அர்ச். பாப்புவின் லௌகீக அதிகாரத்தை இத்தாலியில் மறுபடியும் நிலைநாட்டியவர்.

## பாப்பு ரோமைக்குத் திரும்பிச் சேரல்.

ரோமையர் ரியென்சியின் மேல் மறுபடியும் விருப்பங் கொள்வதை அறிந்து, அவனை அனுப்பி விடும்படியாய் இக்கர்தினல்

அர்ச். பாப்பைத் தூண்டி, "அவன் தலையில் தானே மண்போட்டுக் கொள்ளுவது நிச்சயம்" என்று காட்டினார். ரியென்சி ரோமை சேர்ந்து மூன்று மாதகாலத்தில் கொல்லப் பட்டான். இக்காலத்தில் இக்கர்தினல் திருச்சபை அதிகாரத்துக்கு விரோதமாயிருந்த பலரையும் தோற்பித்து, அவர்களுடன் உடன்படிக்கைகள் செய்ததால், கி. பி. 1361ல் திருச்சபை நாடு முழுவதும் அர்ச். பாப்புவின் அதிகாரத்துக்குக் கொண்டு வரப்பட்டு, கி. பி. 1367ல் 5-ம் அர்பன் ரோமைக்குத் திரும்பிவரத் திருச்சபை நாடெங்கும் ஓர் நீடித்த பயங்கரமான கனவினின்று எழும்புவதாய்த் தோன்றியது.

ஆயினும் ரோமையில் மறுபடியும் கலகம் ஏற்பட, இவர் திரும்பவும் அவிஞன் போக நேர்ந்தது. கி. பி. 1370ல் 11-ம் கிரெகோரி ரோமை வந்து சேர்ந்தார். இவரும் தூரத்தப்படக் கடைசியாய் 6-ம் அர்பன் கி. பி. 1378ல் ரோமை வந்து தங்கினார். ஆனால் இப்போது பிரிவினை ஏற்பட்டுத் திருச்சபையில் இரண்டு பாப்புகள் தோன்றினார்கள்.

## 2. அர்ச்சியசிஷ்டவர்கள்

அவிஞன் பாப்புகளில் அநேகர் புண்ணியங்களில் விளங்கியது போல், விசுவாசிகளிலும் அநேகர் அர்ச்சியசிஷ்டவர்களாய் இருந்தார்கள். இவர்களில் மிகப் பிரசத்தி பெற்றவர் சியெனாவில் பிறந்த கத்தரீனம்மாள்.

### சியெனா கத்தரீனம்மாள்.

இம்மாது ஏழை அந்தஸ்தில் பிறந்து தனக்கு ஒன்றும் தெரியக் கூடாத இளமையிலேயே தன்னைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்து, 6-ம் பிராயத்தில் ஊரைவிட்டு ஓர் தனிக் குகைக்கு ஓடிப்போனாள். பின் அது சர்வேசுரன் சித்தம் அல்லவெனத் தெரிந்து வீடு சென்று 7-ம் பிராயத்தில் தான் எப்போதும் கன்னிகையாய் இருப்பேன் என்னும் வாக்குக் கொடுத்தாள். ஓர் நாள் சர்வேசுரன் அவளுக்குத் தோன்றித் தமது நிகரற்ற பெருமைகளைக் காட்டினார்.

அதுமுதல் உலகத்தை முற்றும் வெறுத்துச் சில வருஷங்கட்குப் பின் முடியை வெட்டிக் கொண்டு அர்ச். தோமினிக் சபையில் உட்பட்டாள். இந்தம்மாள் அதிகம் கல்வி கற்கவில்லை. ஆயினும் திவ்விய இஸ்பிரீத்து சாந்துவின் வரங்களால் நிரப்பப்பட்டுப் பேர்போன வேத சாஸ்திரிகளும் ஆச்சரியப் படும்படியாய் ஞானத்தில் விளங்கினுள்.

இந்தம்மாளின் சீவியம் மிகப் பயங்கரமானது. மாமிசம், திராட்சை ரசம், போஜனம், முதலிய வற்றைத் துறந்து, பின்னர் மரக்கறி முதலியவையும் விட்டுவிட்டு, விசேஷமாய் மோக்ஷ மன்னுவையே போசனமாக அருந்தி வருவாள். பல தடவைகளில் விபூதித் திருநாள் முதல், இஸ்பிரீத்து சாந்துவின் திருநாள் மட்டும் மோக்ஷ அப்பத்தைத் தவிர வேறு ஒன்றும் சாப்பிடமாட்டாள்.

தமது சரீரத்தை ஒடுக்க ஓர் மயிர்ச் சட்டையை அணிந்து ஓர் நாளைக்கெல்லாம் இரண்டு மணி நேரம் மட்டும் தரையில் படுத்துத் தூங்குவாள். இவளது முக்கிய நோக்கமெல்லாம் சமாதானமாம். அநேக சமயங்களில் பகையாளிகளைச் சமாதானப் படுத்துதலில் அர்ச். பாப்புகள் இந்தம்மாளைத் தெரிந்து கொண்டார்கள்.

இவள் சீவிய காலத்திலேயே இவளது புண்ணியங்களின் பிரக்கியாதி பரவ, அநேக வியாதியஸ்தரும், பேய்பிடித்தவர்களும் வந்து சொஸ்த மடைந்து போவார்கள். கடைசியாய் கி.பி. 1380ல் சர்வேசுரன் தமது அடியாளுக்கு மோக்ஷமுடி அளிக்கச் சித்தமானுர்.

இக்காலத்தில் சுவீடன் தேசத்தில் அர்ச். கத்தரீன், போர்த்துக்கல்லில் அர்ச்.எலிசபெத்,இன்னும் பல அர்ச்சியசிஷ்டவர்களும் விளங்கினுர்கள். மேலும் இக்காலத்தில் 39 சந்நியாச சபைகள் புதிதாய் ஏற்பட்டன.

# 2-ம் அத்தியாயம்.

---

## மேனுட்டுப் பெரும்பிரிவினை கி. பி. 1378—1449.

---

உட்பிரிவுகள்:—

பிரிவினைகள்; தப்பறைகள்; அர்ச்சியசிஷ்டவர்கள்.

### 1. பிரிவினைகள்: காரணங்கள்.

சென்ற அத்தியாயத்தில் 11-ம் கிரெகோரி பாப்பு மரித்தபின் 6-ம் அர்பன் பட்டத்துக்கு வந்து ரோமையில் தங்கினுர் எனினும் மேனுட்டுப் பிரிவினை ஏற்பட்டதென்று சொல்லியிருக்கிறேன்.

அர்ச். பாப்புகள் ரோமையை விட்டு வெளியில் இருக்க நேர்ந்ததே இப்பிரிவினைக்கு முக்கிய காரணம். அவர்கள் அவ்விதம் விசேஷ காரணங்களின்றி இருக்கவில்லை என்பது நாம் அறிந்த விஷயமே. அக்காலத்தில் பாப்புகள் முக்கியமாய் அதிக தொகையுள்ள பிராஞ்சுக்காரரைக் கர்தினுல்களாய்க் குறித்தது வேறு ஒரு காரணம். ஏனெனில் 11-ம் கிரெகோரி பாப்பு மரித்த பின்னர், பிராஞ்சுக்காரர் ஒருவரைப் பாப்பு ஆக்கினுல், அவர் தங்கள் தேசத்திற்கு வந்து அவிஞனில் வசிப்பார், எனப்பிராஞ்சு கர்தினுல்கள் கருத்துக் கொண்டார்கள். இத்தாலி கர்தினுல்கள் ஓர் இத்தாலியரைக் குறிக்க விரும்பினுர்கள். "பாப்பு ரோமையில் தங்காமையினுல் ஏற்பட்ட குறைகளைக் கண்டு பயந்த ரோமையர், ரோமையர் ஒருவர் பாப்பாவதே நலம் என எதிர்பார்த்தனர். கடைசியாய் கி. பி. 1368ல் ஓர் இத்தாலியர் குறிக்கப்பட்டு அவர் 6-ம் அர்பன் எனப் பட்டத்துக்கு வந்தார். அவிஞனில் தங்கியிருந்த ஆறு பிராஞ்சுக் கர்தினுல்கள் இதை அங்கீகரிக்க, அர்பன் பட்டத்துக்கு வந்து நான்கு மாதம் ஒரே பாப்பு திருச்சபையை ஆண்டுவந்தார்.

ஆனால் அர்பன் நன்கு கற்றுப் பக்தி உடையவராய்த் திருச்சபையில் தோன்றிய குறைவுகள் எல்லாம் சீர்திருத்த ஊக்கம் உடையவராயினும் அவற்றைச் சுலபமாய்த் திருத்துதற்குப் போதுமான தந்திரமுள்ளவர் அல்ல. இவர் பெருமை பாராட்டி புறத்தியாரை மதிப்பின்றி நடத்தத் துவக்கினார். அர்ச். சியெனா கத்திரீனம்மாள் கோபத்தை அடக்கித் தாழ்ச்சியைக் கைப்பற்றப் பல முறை இவரை ஏவியும், இவர் கேளாதிருந்தார். கர்தினால்களை முதலாய் விசேஷ கண்டிப்பாய் நடத்தத் துவக்கினார். ஆகையால் பிராஞ்சு கர்தினால்கள் குழப்பக் காலத்தில் நடந்தேறிய இவரது நியமனம் சரியோ, சரியல்லவோ எனச் சந்தேகித்து, 6-ம் அர்பன் உண்மையான பாப்பு அல்லவென்று பிரசுரப்படுத்தி, 7-ம் கிளெமெண்டு எனப் பட்டம் வகித்துக் கொண்ட வேறொருவரைக் குறித்தார்கள்.

## இரண்டு கட்சிகள்.

இதினால் கிறிஸ்து நாடுகளில் கட்சி ஏற்பட்டது. பிராஞ்சு, ஸ்பெயின், போர்த்துக்கல், ஸ்காத்லாந்து, நேப்பில்ஸ், கிளெமெண்டுக்கும், மற்ற நாடுகள் அர்பனுக்கும் கட்டுப் பட்டன. இருவரும் கர்தினால்களாலேயே குறிக்கப் பட்டிருந்தமையால், விசுவாசிகள் எவரை அங்கீகரித்தாலும் அவர்கள் தப்பிப் போகவில்லை. கர்தினால்களே இதற்குக் காரணம். ஆனால் இப்பிரிவினை திருச்சபையினின்று நீங்கிய பிரிவினை அல்ல. எல்லாக் கிறிஸ்துவர்களும், எங்கும் அர்ச். இராயப்பர் கட்டுக் குட்பட்டே, அவர் பதிலாளியைப் பாப்புவாய் அங்கீகரித்தார்கள். அவர் அர்பனோ, கிளெமெண்டோ என்பது மட்டுமே வித்தியாசம் இருந்தது. வேறு எவ் விஷயமாயும் அலங்கோலை இருக்க வில்லை. அக்காலத்தில் கட்சி பிரதிகட்சி இருந்தமையால் விளங்கா விடினும், பிற்காலத்திய சரித்திரர்கள் அர்பனே நியாயமான பாப்பென அங்கீகரித்தார்கள்.

## பீசா சங்கம்.

கட்சி நாளுக்கு நாள் மும்முரப்பட்டு ஒவ்வோர் பாப்பு மரித்தபின் அவரவரைச் சேர்ந்த கர்தினால்கள் ஓர் பதிலாளியைக்

குறித்ததினால், இக்கட்சி அதிக காலம் நீடித்தது. இப்பிரிவினையை நீக்கும் பொருட்டுப் பீசாவில் ஓர் மகா சங்கம் கூடிற்று. ஆயினும் பாப்புவால் கூட்டப் பட்டா லொழிய எச்சங்கமும் திருச்சபையின் பொதுச் சங்கமாகாது. இதில் அநேக கர்தினால்கள், மேற்றிராணிமார்கள், மடாதிபதிகள், வேத சாஸ்திரிகள், பலதேச ஸ்தானாதிபதிகள் முதலியோர் கூடி, இரண்டு பாப்புகளையும் நீக்கி வேறொருவரைக் குறித்தார்கள். ஆனால் இச்சங்கம் சரியான சங்கம் இல்லாத குறைவால், இரு பாப்புகளும் செய்த தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளாததால், மூன்று பாப்புகள் ஒரே சமயத்தில் இருந்தார்கள்.

## கான்ஸ்டன்ஸ் சங்கம் கி. பி. 1414.

குழப்பம் இப்படியே நீடிக்கக் கடைசியாய் கி. பி. 1414ல் கான்ஸ்டன்சில் ஓர் பெரிய சங்கம் மறுபடியும் கூட்டப்பட்டது. இதில் 22 கர்தினால்கள், 112 மேற்றிராணிமார்கள், 124 மடாதிபதிகள், 180 குருக்கள், 1600க்கு மேலான விசுவாசிகள் கூடினார்கள். எல்லோரும் ஒரே மனப்பட்டு மூன்று பாப்புகளும் தங்கள் இஷ்டப்படியே நீங்க வேண்டு மென்றும், அப்பால் வேறொருவர் குறிக்கப்பட வேண்டு மென்றும் தீர்மானித்தார்கள். மூவரில் நியாயமான 6-ம் அர்பனைப் பின் தொடர்ந்து வந்த 12-ம் கிரெகோரி, திருச்சபையின் சமாதானத்துக்காகத் தாம் அந்தஸ்தினின்று நீங்குவதாயும், அதற்கு முன் தம்மை நியாயமான பாப்புவாய் அங்கீகரிக்க வேண்டு மென்றும் தெரிவித்தார். மற்ற இரண்டு பேரும் அந்தஸ்தினின்று நீங்கச் சம்மதியாததால் அவர்களை நீக்கி, கிரெகோரியுஸ் பாப்பைச் சங்கத்தார் அங்கீகரித்தார்கள். இவர் அர்பனைத் தொடர்ந்தவர் ஆதலால் இவரே சரியான பாப்பு.

இவரை அங்கீகரித்ததின் மேல், இவர் தமது உத்தரவின்றிக் கூடிய இச்சங்கத்தை அங்கீகரித்துத் தாமும் ராஜீநாமாக் கொடுத்தார். ஆகையால் இச்சங்கம் திருச்சபையின் பொதுச்சங்கம் ஆயிற்று. கர்தினால்கள் கி. பி. 1417ல் மார்ட்டின் என்பவரைப் பாப்புவாய்க் குறிக்கத் திருச்சபையில் 38 வருஷம் நீடித்திருந்த பிரிவினை ஒழிந்தது.

## கடைசிப் பிரிவினைகள்.

ஆனால் இப்படி ஏற்பட்ட சமாதானம் நீடிக்கவில்லை. மார்ட்டின் மரித்து வேறு ஓர் பாப்பு குறிக்கப்பட்ட நாளில் பேசில் பட்டணத்தில் ஓர் சங்கம் கூடிற்று. இச்சங்கம் பொஹீமியாவில் தோன்றிய ஓர் வேத தப்பறையைக் கண்டிக்க ஏற்படுத்தப்பட்டுச் சில நாள் வரையிலும் சரியாயிருந்து, பின் தானும் தப்பறைக் குட்பட்டு அர்ச். பாப்புவால் பெருசாவில் கூட்டப்பட்ட திருச்சபை பொதுச் சங்கத்துக்கு விரோதமாய்க் கிளம்பி, வேறு ஓர் பாப்பையும் குறித்தது. இப்பிரிவு கி. பி. 1438ல் துவக்கி கி.பி. 1449ல் பிரிவினைப்பாப்பு ரோமைப் பாப்புக்கு உட்படத் தீர்ந்து, கடைசியாய் நீடித்த சமாதானம் ஏற்பட்டது.

## 16ம் பொதுச் சங்கம், பிளோரென்ஸ்.

பெருராவில் கூடிய சங்கம் பிளேக் வியாதியால், பிளோரென்ஸுக்கு மாற்றப் பட்டது. இச்சங்கம் கிரீக்கர், ஆர்மேனியர், முதலிய பிரிவினைக் காரரைத் திருச்சபையில் திரும்பவும் சேர்த்திற்று. ஆயினும் இச்சேர்க்கை நீடிக்க வில்லை.

## 2. வேத தப்பறைகள். விக்லிப் தப்பறை.

இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்டு சர்வ கலாசாலையில் வேத சாஸ்திரங்கற்ற விக்லிப் சில தப்பறைகளை அனுசரித்துப் பிரசங்கித்தான். இவன் குருக்களுக்கும், மேற்றிராணிமார்களுக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை யென்றும், சுவிசேஷம் ஒன்றே விசுவாசத்துக்குப் போதும் என்றும், இன்னும் மற்ற பல தப்பறைகளையும் பிரசங்கித்துப் பின்னால் ஏற்பட்ட புரோட்டெஸ்டாண்டு பதிதர்களுக்கு முன்னோடியானான். கி. பி. 1382ல் லண்டனில் கூடிய சங்கம் இவற்றைக் கடிந்தது.

## ஜான் உஸ் தப்பறை.

பொஹீமியா தேசத்தில் இக்காலத்தில் வின்செஸ்லாஸ் ராயன் ஆண்டு வந்தான். இந்த ராயன் மிகக் குடியனும் கொடுங்கோலனுமானவன். இவனுடைய கொடுங்கோல் இவனது இராக்கினியையும் விடவில்லை. இவன் புண்ணிய வதியான தன் மனைவியின் மேல் சந்தேகித்து, நெப்பொமுசென் அருளப்பர் என்னும் அவளது ஆத்தும குருவை அழைத்து, அவள் பாவ சங்கீர்த்தனத்தை வெளியிடக் கட்டளை செய்தான். இக்குருவானவர் அதற்குச் சம்மதியாததால் அவரை ஆற்றில் தள்ளிக் கொன்றான். இப்படியாய் இக்குருவானவர் கி.பி. 1383ல் பாவ சங்கீர்த்தன இரகசியத்துக்கு வேத சாட்சியானர். இந்த ராயன் இங்கிலாந்தில் ஏற்பட்ட தப்பறையைத் தழுவிப ஜான் உஸ் என்னும் ஓர் குருவுக்குக் காது கொடுத்தான். இத்தப்பறை கான்ஸ்டன்ஸில் கி. பி. 1415ல் கூடிய பொதுச் சங்கத்தில் முழுதும் கடியப் பட்டது.

## 17ம் பொதுச்சங்கம். கான்ஸ்டன்ஸ் கி. பி. 1415.

பொஹீமியாவில் தப்பறைக்குக் காரணமாகிய ஜான் உஸ், ஜெரோம், இவர்கள் கான்ஸ்டன்ஸ் சங்கத்துக்குச் சம்மன் பண்ணப்பட்டார்கள். இச்சங்கம் இவர்களுடைய தப்பறைகளைக் கடிய, பின்னர் தேச சட்டப்படிக்கு இவர்கள் நெருப்பிலிட்டுச் சுடப்பட்டார்கள்.

அக்காலத்தில் வேத தப்பறை உள்ளோர்கள் தேச விரோதிகளாய்ப் பாராட்டப் பட்டதினால், ஒவ்வொரு தேசத்திலும் அவர்களைத் தீயில் இட்டுக் கொல்லவேணும் எனத்தேச சட்டம் ஏற்பட்டிருந்தது. ஆகையால் திருச்சபை தப்பறை உள்ளோன் என யாரைக் கடிந்ததோ, அவனைத் தேச சர்க்கார் தங்கள் நீதிப்படி தீச்சுடுவது வழக்கம். இதினால் திருச்சபைக்கு யாது குறைவும் ஏற்பட நியாயமில்லை.

## 3. அர்ச்சியசிஷ்டவர்கள்.

இக்காலத்தில் முந்திய நூற்றாண்டுகளில் போலவே அநேக அர்ச்சியசிஷ்டவர்கள் இருந்தார்கள். இவர்களில் மிகச் சிறந்து விளங்கியவர்கள் அர்ச். லக்செம்பூர்க் இராயப்பரும், அர்ச். பெரேர் வின்செண்டும்.

### அர்ச். லக்செம்பூர்க் இராயப்பர்.

அர்ச். இராயப்பர் ராஜ வம்சத்தில் பிறந்து, சிறுவந் துவக்கி மிகப் பக்தி உள்ளவரானார். பாரீஸ் சர்வ கலாசாலையில் வாசிக்கும் போது தம்முடன் இருந்தவர்களுக் கெல்லாம் கீழ்ப்படிதல், பக்தி முதலிய புண்ணியங்களில் நன்மாதிரிகையாய் விளங்கினார். 7-ம் கிளெமெண்டு இவரைப் பதினேழு பிராயத்தில் கர்தினாலாக்கித் தம்மோடு கூடவே வைத்திருந்தார் எனில், இவரது மேம்பாட்டைச் சொல்லவும் வேண்டுமோ? இவர் தமது சரீரத்தை மிகக் கடுமையாய் வதைத்து வந்தார். மயிர்ச் சட்டையை அணிந்து, அடிக்கடி ஒருசந்தி பிடித்து இரவில் வெகு நேரம் செபித்துக் கடுந்தபசு செய்வார். சர்வேசுரன் சீக்கிரத்தில் அழைக்கச் சித்தமானதை அறிந்து, பிரதிதினமும் இரண்டு முறை பாவப் பொறுத்தல் பெற்றுக் கடைசி நேரத்தில் சிலுவையைக் கையில் பிடித்து, "சுவாமி! உமது கரங்களில் என் ஆத்துமத்தை ஒப்புக் கொடுக்கிறேன்" எனச் சொல்லி மரித்தார்.

### அர்ச். வின்செண்டு.

அர்ச். வின்செண்டு ஸ்பெயின் தேசத்தில் பிறந்து 17-ம் பிராயத்தில் தோமினிக் சபையில் சேர்ந்து சீக்கிரத்தில் பேர்போன சாஸ்திரியும், பிரசங்கியுமானார்.

இவர் அவிஞன் பாப்புக்கு உட்பட்டுப் பலவிடங்களிலுஞ் சென்று பிரசங்கித்துக் கிறிஸ்துவர்களை மனந்திருப்புவதே அலுவலா யிருந்தார். அக்காரியத்துக்குச் சர்வேசுரனுடைய விசேஷ வரமும் இவருக்கு இருந்தது. முதலில் திருச்சபையில் ஏற்பட்ட

கட்சியை நீக்கப் பிரயத்தனப் பட்டுக் கைகூடாமல், பின் பிரசங்கம் செய்யும் தமது சொந்த அலுவலையே நடத்தி வந்தார். அவிஞன் பாப்பு இவரை மேற்றிராணியாராகவும், கர்தினாலாகவும் குறிக்கக் கருதியிருந்தும், இவர் அதற்கு சம்மதியாது அப்போஸ்தொலிக்கு வேத போதகர் என்று மட்டும் அழைக்கும்படி வேண்டிக் கொண்டார். அப்பால் இவர் அவிஞனிலிருந்து ஸ்பெயின், பிராஞ்சு, ஜெர்மனி, இங்கிலாந்து, ஸ்காத்லாந்து, அயர்லாந்து, முதலிய தேசங்களெங்கும் சென்று முதல் நூற்றாண்டுகளில் தோன்றிய வேத போதகரைப் போலவே விளங்கிக் கடைசியாய்ப் பிராஞ்சு வந்து சேர்ந்தார்.

இவ்வளவு சரீரப் பிரயாசையுடன் மிகக் கடுமையான சீவியமும் சீவித்தார். இவர் மாமிசத்தை முற்றும் தள்ளி, ஞாயிறு தவிர எல்லா நாட்களிலும் ஒருசந்தி பிடித்துப் புதன், வெள்ளிக் கிழமைகளில் அப்பமும் தண்ணீரும் மட்டும் அருந்தி, வைக்கோல் மேல் படுத்துத் தூங்குவார். தினமும் கோயிலில் பிரசங்சித்த பிறகு ஒவ்வொரு நாளும் அதிக நேரம் பாவ சங்கீர்த்தனம் கொடுப்பதில் கழிப்பார். கிறிஸ்துவர்களைத் தூண்டி ஏழைகட்குத் தர்மம் செய்யப் பண்ணுவார். தனக்கு மட்டும் ஒன்றும் பெற்றுக் கொள்ளார்.

இவருடைய நாமம் பிரக்கியாதி பெற, மற்ற பாப்புக்கு உட்பட்ட இடங்களில் முதலாய் மகா மேம்பாடுடன் அழைக்கப் பட்டார். திருச்சபையின் பிரிவினையைத் தொலைக்க விசேஷ பிரயாசை எடுத்து கான்ஸ்டன்ஸ் சங்கத்தின் தீர்மானத்தையும், மார்ட்டின் பாப்பையும் அங்கீகரித்தார். கடைசியாய்த் தமது 62-ம் வயதில் கி. பி. 1419ல் பாக்கியமான மரணம் அடைந்தார்.

## கிறிஸ்துநாதர் அநுசாரம்.

இக்காலத்தில் தான் சுவிசேஷத்துக்கு இரண்டாவதாய்ச் சொல்லக் கூடியதும், மனிதன் கையால் எழுதிய நூல்களில் எல்லாம் உன்னத மானதுமான "கிறிஸ்துநாதர் அநுசாரம்" என்னும்

நூல் தோமாஸ் அக்கெம்பிஸ் என்ற குருவால் எழுதப்பட்டது. பழைய காலத்தில் மிகப் பிரசித்தி பெற்ற ஒழுக்க நூலாசிரியர்கள் யாரும் இவருக் கிணையல்லர். இந்நூல் எல்லாப் பாஷைகளிலும் மொழி பெயர்க்கப் பட்டுப் பற்பல அந்தஸ்துள்ள எல்லா ஜனங்களும் வாசித்து வருகிறார்கள். மனிதனுக்கு நேரிடும் சங்கடங்கள் ஒவ்வொன்றுக்கும் விசேஷ ஆறுதல்களை வருவிக்கும் இந்நூல் ஒன்றே 14-ம் நூற்றாண்டின் கௌரவத்தைக் காப்பாற்றப் போதுமானது.

---

# 3-ம் அத்தியாயம்.

---

## அஞ்ஞான கல்வி எழுச்சி கி. பி. 1439—1517.

---

உட்பிரிவுகள்:—

பொதுவர்த்தமானங்கள்; பாப்புகளும், அர்ச்சியசிஷ்டவர்களும்.

### 1. பொது வர்த்தமானங்கள்.

### துருக்கர் கொன்ஸ்தாந்திநேப்பிலைப் பிடித்தல் கி. பி. 1453.

பிளோரென்சில் கி. பி. 1439ல் கூடிய பொதுச்சங்கத்தில் கிரீக்கர் மறுபடியும் திருச்சபையுடன் ஒற்றுமைப் பட்ட விஷயம் முன் கூறப்பட்டது. இவ்வொற்றுமையும் லையான்ஸ் சங்கத்தின் ஒற்றுமை அழிந்தது போலவே நிலைக்க வில்லை. கொன்ஸ்தாந்திநேப்பிலி பிதாப்பிதாவும், மேற்றிராணிமார்களும், சங்கத்தினின்று திரும்பி வந்ததும்,கிரீக்க குருக்களும், ஜனங்களும் விரோதித்ததால் இவர்களும் பின் வாங்கினார்கள்.

இக்கிரீக்கர் திரும்பத் திரும்பச் செய்த பிரிவினைகளுக்கெல்லாம் சர்வேசுரன் சீக்கிரத்தில் பலமான தண்டனை விதிக்கச் சித்தமானார். சின்ன ஆசியாவிலிருந்த துருக்கர் கொன்ஸ்தாந்திநேப்பிலை முற்றுகையிட்டு, கி. பி. 1453ல் பிடிக்க கிரீக்கர் ராச்சியபாரம் முற்றும் ஒழிந்தது. அர்ச். இராயப்பரின் பதிலாளியான பாப்பைத் திருச்சபையின் அதிகாரியென ஒத்துக்கொள்ள மாட்டோம் என்ற கிரீக்கர், ஐயோ! துருக்கருக்கு அடிமைப் பட்டுக் குரூரமாய் நடத்தப் படுகிறார்கள்.

இப்படிக் கிரீக்கர் ராச்சியம் ஒழிந்த காலத்தில் விசுவாசத்தில் ஊன்றியிருந்த மேனுட்டாருக்குச் சர்வேசுரன் விசேஷ உதவி புரிந்தார். ஸ்பெயின் தேசத்தார் பலகாலம் மகமதியருடன் சிலுவையுத்தம் நடத்தி வந்தது, நாம் முன் அறிந்த விஷயம். ஆயினும் மகமதியர் முற்றும் துரத்தப் படாமல் தெற்குப் பாகத்தில் கிரனடா ராச்சியத்தில் ஆண்டு வந்தார்கள். கிறீஸ்து சேனைகள் அதைத் தாக்கி கி. பி. 1492ல் பிடிக்க, மகமதிய ஆட்சி இத் தேசத்தில் முற்றும் ஒழிந்தது.

## அமெரிக்கா கண்டு பிடிக்கப் படல்.

இத்துடன் ஸ்பானியருக்கு இன்னொரு மகத்தான பலாபலனும் கிடைத்தது. கிரனடா பிடிபட்டதும், ஜெனேவாவில் பிறந்த கொலம்பஸ் மாலுமி சத்திய வேதத்தைப் புற நாடுகளில் பரப்பவும், ஐரோப்பாவில் நுழைந்த துருக்கரை ஆசியாவின் கிழக்குப் பாகத்திலிருந்து தாக்கி முறியடிக்கவும் எண்ணம் கொண்டு, காஸ்டையில் தேசத்தை ஆண்டு வந்த இசபெல்லா ராக்கினியிடம் தன் கருத்துகளை வெளிப்படுத்தினர். வேதம் பரம்புதல் விஷயமாய் மகா ஊக்கங் கொண்ட அந்த ராக்கினி, அதை ஏற்று இவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய, கி. பி. 1492ல் லிஸ்பன் பட்டணம் விட்டு மேற்காய் இந்தியாவுக்கு வரக் கருதி யாத்திரை சென்ற இவர், அமெரிக்கா கண்டத்தைக் கண்டு பிடித்தார். இப்படியாய் ஸ்பானியருக்கு ஓர் பிரமாண்டமான புது இராச்சியத்தையும், கிரீக்கரின் பிரிவினையாலும், பின் நேர்ந்த புரோட்டெஸ்டாண்டு பதிதப் பிரிவினையாலும் குறைவுபட்ட திருச்சபைக்குப் பலகோடி புதிய கிறிஸ்துவர்களையும் சர்வேசுரன் அளித்தார்.

சர்வேசுரனுடைய இராச்சிய பாரத்தை முதல் எண்ணமாய்க் கொண்டிருந்த கொலம்பஸ் தாம் கரையை அணுகியதும், கப்பலை விட்டு முதலில் இறங்கித் தம்முடைய ஆட்கள் புடைசூழத் தரையில் குப்புறவிழுந்து, முத்திசெய்து, சர்வேசுரனுக்குத் தோத்திரஞ் செய்தபின் எழுந்து, அவ்விடத்தில் ஓர் சிலுவையை நாட்டி, அப் பூமிக்குப் "பரிசுத்த இரட்சகர்,"என்னும் நமது திவ்ய இரட்சகரின்

பெயரிட்டார். அக்காலத்தில் ஐரோப்பாவுக்கும், ஆசியாவுக்கும் இடையில் அமெரிக்கா கண்டம் இருப்பதாய் ஒருவரும் அறிந்த தில்லை யாதலால், இவர் இந்தியாவின் கீழ்க் கோடிக்குப் போவதாய் உத்தேசித் திருந்தார். இதுகாரணம் பற்றித் தாம் சேர்ந்த விடம் இந்தியாவின் கீழ்ப்பாகமென்று நினைத்ததால் அங்குள்ள ஜனங் கட்கு இந்தியர் எனப் பெயரிட்டார். தற்காலம் இவர்களைச் சிவப்பு இந்தியர், என்றும், அமெரிக்கா இந்தியர், என்றும் சொல்லு கிறோம்.

இவர் திரும்பி வரும்போது சில இந்தியரை ஸ்பெயின் தே சத்திற்குக் கொண்டுவர, அவர்களுக்கு வேதம் கற்றுக் கொடுத்து ராசனும், ராக்கினியும் ஞானப் பெற்றோராயிருந்து ஞானஸ்நானம் கொடுத்தார்கள். இவர்கள் ஞானஸ்நானம் பெற்ற கொஞ்ச நாட் களின் பின், இவர்களுடன் பன்னிரண்டு வேத போதகர் அமெரிக் காவுக்குச் சென்றார்கள். ஸ்பெயின் அரசாட்சி வேதப் பரம்புதலை விசேஷ கருத்தாய்க் கொண்டு இருந்தமையால், அவர்கள் கவர்ன ருக்குக் கீழ்க் குறித்த உத்தரவு விதிக்கப்பட்டது.

"இந்தியர்களை அடிமைகளாய்ப் பாவிக்காமல் சுயாதீனம் உள்ளவர்களாய்ப் பாவிக்க வேண்டும். அவர்களை நீதி நெறியில் ஆண்டு சத்திய வேதத்தில் சேர்க்க வேண்டும்; அப்படி அவர்கள் உட்படாதபடி நேரிடக் கூடிய குரூரம் ஒன்றும் செய்யலாகாது."

பின் கி. பி. 1502ல் வேறு வேத போதகர்களும் அமெரிக்கா வுக்குச் செல்ல, சீக்கிரத்தில் அநேகம் பேர் மனந் திரும்பினார்கள். பின்னால் ஸ்பானியர் தேசங்களைப் பிடிக்கப் பிடிக்கத் தங்களது முதன்மையான கருத்தை மறந்து, அமெரிக்கரைச் சகோதரர் போல் பாவியாது அடிமைகளைப்போல் ஆளத் தொடங்கினார்கள். திருச்சபை இதைப் பலவாறு கடிந்த தென்கிலும், ஸ்பானியர் ஆட்சியை முற்றும் சீர்திருத்த முடியவில்லை. ஆயினும் தற்காலம் அமெரிக்கா கண்டங்களில் ஸ்பானியர், போர்த்துக்கேசியர் இருவ ருக்கும் உட்பட்டிருந்த நாடுகளில் மட்டுமே அமெரிக்க இந்தியர் கள் பெருந்தொகையாய் வசிக்கிறார்கள். பதிதருக்கு உட்பட்ட

வடநாடுகளிலோ வென்றால், இச்சனங்கள் அநேகமாய் அழிக்கப் பட்டதால், சிற்சில இடங்களில் மட்டும் தனித்தனியே இருக்கிறார்கள்.

## போர்த்துக்கேசியர் கண்டு பிடித்தவை.

ஸ்பானியரைப் போலவே போர்த்துக் கேசியரும் பலகாலம் மகமதியருடன் சிலுவை யுத்தங்கள் நடத்தி, 12-ம் நூற்றாண்டிலேயே ஆப்பிரிக்காவின் வடமேற்கி லுள்ள தீவுகளைக் கண்டு பிடித்து, அவ்வழியாய் அக்கண்டத்தின் மேற்குப் பாகத்தில் சுவிசேஷம் பரம்ப ஏது வானார்கள். பின்னர் கி. பி. 1498ல் வாஸ்கோடி காமா ஆப்பிரிக்காவின் தெற்குக் கோடியிலுள்ள நன்னம்பிக்கை முனையைத் தாண்டி இந்தியாவுக்குக் கடல் மார்க்கமாய்ச் செல்லும் ஓர் வழியைக் கண்டுபிடிக்க, அப்பால் சுவிசேஷ போதகர்கள் இந்தியாவுக்கு வந்து பிரசங்கித்து அநேகாயிரம் பேரைத் திருப்பிய பின், சீனா, ஜப்பான் முதலிய நாடுகளிலும் வேதம் போதித்தார்கள்.

## அச்சியந்திரம்.

இப்புதிய சம்பவங்கள் மட்டு மின்றி, இந்நூற்றாண்டில் வேறு ஓர் நூதன சம்பவமும் ஏற்பட்டது. அச்சிடும் யந்திரம் கண்டு பிடிக்கப்பட்டு கி. பி. 1457ல் முதல் புத்தகம் வெளியிடப் பட்டது இப்புதிய சம்பவத்தால் உலகுக்கு அதிக நன்மை உண்டானதென்றாலும், நர சுபாவம் தின்மையையே நாடிச் செல்லுவதால், நன்மை பயக்கும் இந்த யந்திரம் நன்மையினும் பன்மடங்கு தின்மைக்கு உபயோகப் படுத்தப் பட்டது.

## அஞ்ஞான கல்வி எழுச்சி.

கொன்ஸ்தாந்திநோப்பிளி துருக்கருக்கு உட்பட்ட பின் கிரீக்கர் குரூரமாய் நடத்தப் பட்டதாலும், கிரீக் உபாத்திமார்களது பிழைப்புக் கெட்டதாலும், கிரீக் கல்விமான்கள், சாஸ்திரிகள்,

சிற்பிகள் முதலியோர் வெளியேறி மேனாடுகட்குச் சென்று, அங்கு அஞ்ஞான கிரீக்கரது கல்வி, சாஸ்திரம் முதலியவற்றைக் கற்றுக் கொடுக்க லானார்கள். பண்டைக்கால ரோமையரும், கிரீக்கரும் ஒரே விதமான கல்வி நாகரீகம் அடைந்து இருந்தார்களெனினும்,மேல் ரோமை நாடு மிலேச்சருக்கு உட்பட்ட பின்னர், அம்மிலேச்சர்கள் முன்னிருந்த கல்வி, சாஸ்திரம், முதலிய நாகரீக சின்னங்களை அழித்து விட்டார்கள். ஆயினும மடங்களிலும் கல்விச்சாலைகளிலும், முன்னிருந்த கல்வி, சாஸ்திரம், முதலியவை குருக்களாலும், சந்நியாசிகளாலும் கருதப்பட்டு, நாளுக்கு நாள் கல்வியும், நாகரீகமும் விர்த்தி ஆகிக்கொண்டே வந்தன. மிலேச்சர்கள் இவற்றைப் பாராட்ட வில்லை.

இவர்கள் மேனாடுகளில் குடியேறிய பின்னர், 'பியூடலிசம்' **(Feudalism)** எனச் சொல்லப்பட்ட ஓர் தேச நிலைமை எங்கும் ஏற்பட்டது. இதன்படி ஒவ்வொரு தேசமும் பல பாகங்களாய்ப் பகுக்கப்பட்டு, ஓர் பொது அரசனுக்கு உட்பட்டுப் பல குறு நில மன்னர்கள், பற்பல அந்தஸ்துகளிலும் தோன்றினார்கள். இவர்களில் ஒவ்வொருவரும் தங்கட்கு நேர் மேலாயிருந்த ஓர் பிரபுவையோ, குறுநில மன்னரையோ அங்கீகரித்து, அவருக்கு உண்மையாய் ஊழியம் செய்யச் சத்தியம் கொடுத்துப் போர்களில் உதவி புரிந்து வருவார்கள். இப்படிப்பட்ட ஏற்பாட்டால் தேச அரசனுக்கு நேர்கீழிருந்த குறுநில மன்னர்கள் மட்டும் அரசனுக்குக் கடமைப் பட்டிருந்தார்களொழிய, குறுநில மன்னருக்குக் கீழ் இருந்தவர்கள் அரசனுக்கு எவ்வித கடமையும் உள்ளவர்கள் அல்ல. இவ்விதமே குறுநில மன்னர்களின் கீழ் பல ஆட்சி அந்தஸ்துக்களும் இருந்தன. ஒவ்வோர் குறுநில மன்னனும், கீழான பிரபுவும் தனக்கு உட்பட்டவர்களை அரசனைப் போல் ஆண்டு நடத்தி வந்ததால், பல சமயங்களில் சிற்றரசர்கள் தேசத்தின் பொது அரசனுக்கே விரோதமாய்க் கிளம்பிப் போர் புரிவார்கள். தாங்களும் ஒருவர் ஒருவருடன் சண்டை இடுவார்கள்.

இப்படி ஓர் தேசத்தினுள் பற்பல சிறிய தேசங்கள் ஏற்பட்டதின் காரணமாகத் தொலையாத உட்கலகங்கள் ஓயாமல் எழுந்து, மன்னர்களும், பிரபுக்களும், சதா சண்டையிடுவோர் ஆனார்கள். திருச்சபை இச்சண்டைகளை முற்றிலும் நிறுத்தக் கூடாமை பொருட்டே, 'தேவ யுத்த நிறுத்தம்' என்ற ஏற்பாட்டைச் செய்தது. ஆயினும் உள் நாட்டுப் போர்கள் நீங்கவில்லை.

இவ்விதமாய்ச் சதா சண்டை யிடுவோர்கள் தங்கட்கு அத்தியாவசியமான யுத்தக் கல்வியை மட்டும் கருதினார்களொழிய, மடங்களிலும்,கல்விச் சாலைகளிலும், பேர்போன பிளோரென்ஸ், பாரீஸ், ஆக்ஸ்போர்டு முதலிய சர்வ கலாசாலைகளிலும், திருச்சபைக் குருக்களால் நடந்தேறிய கல்வி கற்றார்களில்லை.

அப்பால் கி.பி. 15-ம் நூற்றாண்டில் ஒவ்வொரு தேசத்திலும் இவர்களது ஓயாப் போரால் விளைந்து வந்த தீமைகளை நீக்கிச் சமாதானத்தை நிலைநாட்டும் பொருட்டு, அரசர்களும், பிரசைகளும் முன் வந்து, இவர்களை முறியடித்து உட்கலகங்களைத் தொலைத்து அரசர்களே தேச முழுமையும் ஒழுங்காய் ஆளத்தொடங்கினார்கள். இக்காரணம் பற்றித் தேசங்களில் உயர்ந்த அந்தஸ்து உள்ளவர்கள் இது முதல் போர்புரிதலை விட்டு நீங்கிச் சமாதான வழிகளில் பிரவேசிக்க நேர்ந்தது. இச்சமயத்தில் தான் அஞ்ஞான கல்வி எழுச்சி ஏற்பட்டது.

கிரீக்கர் கொண்டு வந்த இந்த அஞ்ஞான கல்வியைப் புதிய கல்வி எனக் கருதி, மேனாட்டார் அக்கல்வி, சாஸ்திரம் முதலியவற்றைக் கற்கத் தொடங்கி, அஞ்ஞான நூல்களை வாசிக்க, எங்கும் அவ விசுவாசமும், ஒழுக்கக் குறைவுகளும் தோன்றின. இவை முதலில் இத்தாலியில் தோன்றி, ஓர் கொள்ளை நோய் போல் பல தேசங்களிலும் சடுதியில் பரவியதால், திருச்சபையின் குரலொளி வீண் குரலொளியாயிற்று. இக்கல்வி புதுக்கிறிஸ்துவர்களை முன்னிருந்த நிலைமையினின்று தாழ்வடையச் செய்திருந்தும், இதற்குக் 'கல்வி யெழுச்சி' அல்லது 'புதுக்கல்வி' என்ற பெயரிட்டு அழைத்தார்கள்.

## 2. பாப்புகளும், அர்ச்சியசிஷ்டவர்களும்.

மேனாட்டுப் பிரிவினைகள் நீங்கிய பின் திருச்சபையை நடத்திய இப்பாப்புகள், மேனாடுகளைத் துருக்கருக் குட்படாமல் காக்கவும், தேச ராசாக்களுக்குள் சமாதானம் நிலை நாட்டவும், இத்தாலியரை ஒற்றுமைப் படுத்தவும் பிரயாசைப் பட்டார்கள். கி. பி. 1492ல் 6-ம் அலெக்சாந்தர் பட்டத்துக்கு வந்தார். விரோதிகள் இவரைத் தீய நடத்தை உள்ளவரெனப் பலவாறு இகழ்ந்து, திருச்சபையையும் கேவலப் படுத்த முயற்சித்தார்கள். இவர் பாப்புவான பின் திருச்சபையையும், திருச்சபை நாட்டையும் வெகு சிராய் ஆண்டு நடத்தியவர். மேலும் இவர் ஒரு நாளில் இரண்டு மணி நேரத்துக்கு மேல் தூங்காமல், போஜனத்தை ஒறுத்து, ஏழைகட்கு இரங்கிக் கடன் பட்டோருடைய கடன்களைக் கொடுத்து மீட்டு நன்மையே வழிபாடாய்க் கொண்டு நடந்துள்ளார். ஆகையால் விரோதிகள் வீண் அபத்தப் பொய்களைக் கொண்டே இவரைக் கேவலப் படுத்தப் பார்த்தார்கள்.

இவருக்கு விரோதமாய் சிற்சில குற்றங்கள் நிரூபிக்கப் பட்டதென்கிலும், அவை இவர் பட்டத்துக்கு வருமுன்னர் நிகழ்ந்தவையே. ஆகையால் இவரது குற்றங்கள் பாப்புகள் வேத சத்தியங்களைப் போதிப்பதிலும், ஒழுக்க ஏற்பாடுகளிலும் தவறாத வரம் உள்ளவர்கள் என்பதற்கு முன் 3-ம் பாகம் 2-ம் அத்தியாயத்தில் கூறியபடியே அத்தாட்சிகளாம்.

இக்காலத்தில் பிரான்சிஸ்கு சபையைச் சேர்ந்து ஜெர்மனி, போலாந்து, அங்கேரி முதலிய நாடுகளில் போதித்துப் பேர் பெற்றிலங்கிய அர்ச். டி. கப்பிஸ்ட்ரான் அருளப்பரும், பொலோஞ கத்தரீனம்மாளும், சாக்ஸனி குறுநில மன்னரான அர்ச். அமதேயுஸூம், சிறியோர் என்ற சந்நியாச சபையை ஏற்படுத்திய அர்ச். பாலா பிராஞ்சிஸ்கும் அர்ச்சியசிஷ்டவர்களாய் விளங்கினார்கள்.

## சிறியோர் (The Minims.)

இதை ஏற்படுத்திய அர்ச். பிராஞ்சிஸ்கு 3-ம் பிராயத்தில் பிராஞ்சிஸ்கு சபையில் உட்பட்டு 15-ம் வயதில் மடம் விட்டு ஏகாந்தியாகிப் பழைய காலத்து வனவாசிகளைப்போல் ஓர் குகையில் தங்கி, தர்மமாய்க் கிடைத்த போசனத்தையோ வனத்தில் கிடைக்கும் கனி கிழங்குகளையோ புசித்துக் கடின தபம் செய்து வந்தார். இது கண்ட அநேகர் இவரைப் பின் தொடர, அவர்களை ஒரு சபையாகக் கூட்டி, அவர்கள் யாவருக்கும் தாழ்ந்தவர்க ளென்று தங்களைக் கருதும்படியாய்ச் 'சிறியோர்' என்னும் பெயரிட்டார்.

இவர் அவர்களுக்கு நியமித்த முக்கிய நோக்கங்கள் என்னவெனில், கிறிஸ்துவர்கள் இருதயங்கள் தேவ சிநேகமின்றி வறட்சி அடைந்ததால் மறுபடியும் அவர்களிடத்தில் தேவ சிநேகத்தை எழுப்புதல், கிறிஸ்துவர்கள் தபசு காலத்தில் முதலாய்ச் சற்றும் ஒறுத்தல், உபவாசம் இன்றி நடப்பதால், அதற்குப் பரிகாரமாகக் கால மெல்லாம் தபசு காலம் போல் அனுசரித்தல், ஆகிய இவையாம். ஆகையால் மற்ற சபைகளைப் போல் கற்பு, தரித்திரம், கீழ்ப்படிதல் ஆகிய மூன்று வார்த்தைப் பாடுகளுடன், இவர்கள் கால மெல்லாம் தபசுகாலம் போல் அனுசரிக்கும் வார்த்தைப் பாடும் கொடுக்கிறார்கள்.

இவர் கி. பி. 1507ல் மரித்தார். இச்சபை சீக்கிரத்தில் ஐரோப்பா முழுதும் பரவியது மின்றி, இந்தியாவிலும் எட்டியது.

# ஆரும் பாகம்.

## புரோட்டெஸ்டாண்டு பதிதமதம் கி. பி. 1517–1789.

## 1-ம். அத்தியாயம்.

## புரோட்டெஸ்டாண்டு பதிதமதம் கி. பி. 1517–1595.

உட்பிரிவுகள்:—

பதிதமதவெழுச்சி; கத்தோலிக்க சீர்திருத்தங்கள்.

### 1. பதித மாற்றம்: நியாயங்கள்,

திருச்சபை சரித்திரம் எங்கும் அர்ச். பாப்புகள் கிறிஸ்துவர்களின் ஒழுங்கீனங்களை அப்போதைக் கப்போது கண்டித்து அவைகளைத் திருத்த வேண்டிய ஏற்பாடுகள் செய்து வந்தார்களென்று வாசிக்கிறோம். ஆனால் ஒழுங்கீனங்கள் அதிகரித்து வெகுமாய்ப் பரவிய 13-ம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இவர்கள் குரலொலி வீண் குரலொலியாயிற்று. பிராஞ்சு தேச ராசன் பிலிப்பும், ஜெர்மனி ராயனும் இக்குரலொலியைச் சற்றும் கேட்கவில்லை. பாப்புகள் அவிஞனில் அதிககாலம் தங்கியதால் அவர்களுடைய பலமும் குறைந்தது. அப்பால் துவக்கிய பிரிவினை ஒழுங்கீனங்கள் அதிகரிக்கக் காரணமாயிற்று. பிரிவினை நீங்கியதும் பாப்புகள் செய்த சீர்திருத்தங்களை அரசர்கள் விரோதிக்கத் துடங்கினர். இவ்விதமாய் எல்லாம் கலகத்துக்கே வழியாயின.

அஞ்ஞான கல்வியும், அதினால் விளைந்த அவவிசுவாசமும், ஒழுங்கீனங்களும், பலபக்கமும் பரவ, ஐரோப்பா முழுதும்

ஒரே அளவான நாகரீகம் அடைந்திருந்த காரணம் பற்றி, அச்சியந் திரம் அவைகளை எல்லா விடங்களிலும் சுளுவாய்ப் பரப்பியதால், எங்கும் திருச்சபையின் கட்டுக்கு விரோதமாய்க் கலகமே எழும் பக் காரணமாகி, அக்கலகத்துக்கு ஓர் சமயம் மட்டும் வேண்டி யிருந்தது. அச்சமயமும் கி. பி. 1517ல் கலகக்காரருக்குக் கிடைத் தது. எப்படியெனில் 10-ம் சிங்கராயர் பாப்பு துருக்கருக்கு விரோதமாய் ஒரு சிலுவை யுத்தம் நடத்தவும், ரோமையில் அர்ச். இராயப்பர் தேவாலயத்தை முடிக்கவும் கருத்துக் கொண்டு, இச் சமயத்தில் கிறிஸ்து நாடெங்கும் திருப் பேறுபலன்களை அளித்தார்.

இதைக் காரணமாகக் கொண்டு கலகத்துக்குச் சமயம் பார்த் திருந்தவர்கள் வெளிக் கிளம்பினார்கள்.

## லூத்தர்.

ஆரிய மதத்திற்குப் பிறகு தோன்றிய தப்பறைகளில் எல்லாம் விசேஷமான இப்பதித தப்பறையின் காரண கர்த்தா ஜெர்மனி தேசத்தில் அகுஸ்தீன் சபையைச் சேர்ந்த மார்ட்டின் லூத்தர். இவர் முதலில் பலன்களைப் பிரசங்கித்ததில் அலங்கோலைகள் ஏற் பட்டதால், அவைகளைக் கண்டிக்கத் தொடங்கிப் பின்னால் பலன் களே தப்பறை யென்று சொல்லி, நாளுக்கு நாள் தப்பறையை நாடி, உத்தரிக்கிற ஸ்தலம் இல்லையென்றும், பாவசங்கீர்த்தனம் கூடாதென்றும், பாப்பு திருச்சபையின் தலைவர் அல்லவென்றும், சன்னியாச சபைகளின் வார்த்தைப் பாடுகள் அநுசரிக்க முடியா தன வென்றும், இன்னும் பலவித தப்பறைகளைப் போதித்து, இந்தத் தப்பறைகளுக்குச் சீர்திருத்தங்கள் எனவும் பெயரிட்டார்.

விசுவாசிகள் எக்காலத்திலும் புண்ணிய முயற்சிகள் செய்ய வேண்டுமென்று திருச்சபை தூண்டி, அப்புண்ணிய முயற்சிகளுக் குப் பலன்களை அளிப்பது வழக்கம். நமது கர்த்தர் பாடுபட்டு மரித்து அளவில்லாப் பலன்களை நமக்குச் சம்பாதித்தார். பின்னர் கணக்கில்லாத அர்ச்சியசிஷ்டவர்கள் தங்கள் புண்ணிய வாழ்க் கையால் எவ்வளவோ பலன்களை அடைந்திருக்கிறார்கள். இவைகள்

திருச்சபையின் பொக்கிஷங்களாய் இருக்கிற படியால் கிறிஸ்துவர் களுடைய புண்ணிய முயற்சிகளுக்குத் திருச்சபை இப்பொக்கிஷத் திலிருந்து பலன்களை அளிக்கிறது. இப்பொக்கிஷம் நமது கர்த்தரின் பலன்களைக் கொண்டிருப்பதால், எக்காலத்தும் முடி யாது. இப்பலன்களைப் பரிபூரணபலன்கள் எனவும், மண்டலம், வருஷம், நாள், பலன்கள் எனவும் அளிப்பது வழக்கம். பரிபூரண பலன் என்றால், இப்பலனைப் பெறுவோர் பாவங்கள் பாவ சங்கீர்த் தனத்தில் மன்னிக்கப் பட்டிருந்தால், இப்பாவங்கட்கு வரவிருக் கும் உத்தரிக்கிற ஸ்தலத்தின் அநித்திய ஆக்கினையை முற்றும் நீக்குவது. ஒருவன் பரிபூரண பலனைப் பெற்று மரித்தால், உத் தரிக்கிற ஸ்தலத்தின் வேதனையின்றி மோக்ஷத்துக்குப் போவான். வேறு பலன்கள் என்னவெனில், ஆதி திருச்சபையில் விசுவாசி களுடைய பகிரங்கமான குற்றங்களுக்குப் பாவப் பொறுத்தலின் பின் பகிரங்கமான தண்டனை விதிக்கப்படுவது வழக்கம். நூறு நாள் பலன் என்றால் அக்காலத்தில் நூறு நாட்களுக்கு அனுபவிக்க வேண்டிய தண்டனையை நீக்கும் பலனும். ஆகையால் விசுவாசிகள் தங்கள் புண்ணிய முயற்சிகளால் இப்பலன்களைப் பெற்றுத் தங்களுக்கோ, உத்தரிக்கும் ஸ்தலத்தில் வேதனைப்படும் ஆத்துமங் களுக்கோ, உலகத்திலிருக்கும் மற்றவர்களுக்கோ உபயோகிக்க லாம். மனிதர் எல்லோரும் பாவிகளானதால் இப்பலன்களை அடையப் பிரயாசைப் படுவதே நலம்.

இக்காரணம் பற்றித் திருச்சபை சொற்பப் புண்ணிய முயற்சி களுக்கும் ஏராளமான பலன்களை அளிக்கிறது. ஆனால் இப்பலன் களை அடைவதற்குப் பல நிபந்தனைகள் உண்டு. பரிபூரண பலன் அடைய வேண்டுமானால், தக்க பாவ சங்கீர்த்தனம் செய்து பரி சுத்த அந்தஸ்திலிருந்து, திவ்விய நற்கருணை அருந்திக் கோயிலைச் சந்தித்து அர்ச். பாப்புவின் கருத்துகளுக்காய் வேண்டிக்கொள்ள வேண்டும். வேறுவித தானதர்மம் முதலிய புண்ணியங்களும் செய்யவேண்டும். இப்படித் தான தர்மங்கள் கோயில்களுக்கும், குருக்கள், சந்நியாசிகள், கன்னியர்கள் மடங்களுக்கும், ஏழை களுக்கும் செய்யலாமாகையால், லூத்தர் காலத்தில் பாப்பானவர்

அளித்த பலன்களைப் பிரசங்கிப்போர், கிறிஸ்துவர்களை அர்ச். இராயப்பர் தேவாலயத்துக்குத் தர்மம் கொடுக்கத் தூண்டினார்கள். பலன்களை அடைவதற்குத் தான தர்மம் முக்கிய நிபந்தனைகள் அல்ல. பரிசுத்த அந்தஸ்தே முக்கியம். தான தர்மம் செய்யக் கூடாதவர்கள் வேறு வித செபதபம் முதலிய புண்ணிய முயற்சிகளைச் செய்யலாம்.

சில பிரசங்கிகள் தப்பிதமான எண்ணம் கொண்டிருந் திருக்கலாம்; சில விசுவாசிகளும் கோயிலுக்குப் பணம் கொடுத்தால் பலன்களை அடையலாம் என நினைத்திருக்கலாம். ஆனால் அது அவர்கள் குற்றமேயொழிய திருச்சபையின் குற்றமல்ல. மேலும் ஒவ்வொரு மனிதனும் செய்யும் செபம், தானம், தர்மம் முதலிய புண்ணிய முயற்சிகளை அளவெடுக்கிறவர் சர்வேசுரனே யாதலால், விசுவாசிகள் எப்போதும் கிடைக்கக் கூடிய இப்பலன்களை எம் முயற்சியாலும் அடையப் பிரயாசைப் படுவதே புத்தி.

லுத்தர் நல்ல படிப்பாளியாய் இருந்தும், திருச்சபையின் உண்மைக் கருத்தை அறிந்திருந்தும், கலகத்துக்கு வழி பார்த்துக் கொண்டிருந்தவர் ஆகையால், இதைச் சாக்காய்க் கொண்டு திருச்சபை பலன்களை விற்கிறது எனப் பிதற்றிக் கலகத்தை எழுப்பிப் பின்னும், பின்னும் தப்பறைகளைப் போதித்தார்.

லெயோ பாப்பு ஓர் உத்தரவில் லுத்தர் கோட்பாடுகளை எல்லாம் தப்பிதம் எனக் கண்டித்தார். இவ்வுத்தரவை கி. பி. 1520ல் லுத்தர் விட்டென்பர்க் பட்டணத்தில் பகிரங்கமாய்த் தீக்கொளுத்தினார். அப்பால் திருச்சபையினின்று பிரிந்தால் தனக்குப் போதுமான உதவி வேண்டியிருந்ததை அறிந்து அதற்கு வழி தேடினார்.

ஐரோப்பாவின் வட நாடுகள் எல்லாம் மிகக் குளிர்ச்சியானவை. இந்நாடுகளில் வருஷத்தில் வெப்ப காலத்தில் மட்டும் ஒரு வேளாண்மை செய்யக்கூடும். மேலும் பால்ட்டிக் கடலைச் சுற்றிலுமுள்ள பூமி மணல் தரையானது. இது பலவிடங்களில் கடல்

மட்டத்துக்குத் தாழ்ந்தும் இருக்கிறது. இத்தகைய பூமியில் வசிப்போர் சாமான்னியர்களும், ஏழைகளுமாய் இருக்கவேண்டியதே நியாயம். அக்காலத்தில் இந்நாடுகளில் வசித்தோர் பயிர்த் தொழில் ஒன்றையே செய்து வந்ததால், இவர்கள் பெரும்பாலும் ஏழைகளே. இக்காரணம் பற்றி ஜெர்மனி தேசத்தின் வடபாகத்திலிருந்த ஜனங்களில் பெருந்தொகையானோர், வேறு தேசங்களில் சேவகத்தில் அமர்வதும், இதர யுத்தங்களில் சம்பளத்துக்காகச் சண்டையிடுவதும் வழக்கம். இவர்கள் பல கூட்டங்களாகப் பிரிவுண்டு, அநேக சிற்றரசர்களாலும், பிரபுக்களாலும் ஆண்டு வரப் பட்டார்கள்.

இச்சிற்றரசர்கள் மற்றத் தேச அரசர்களைப் போலின்றி ஏழைகளாய் இருந்தார்கள். இப்படிப் பட்டோரிடம் லுத்தர் சென்று, திருச்சபைக்கு உட்பட்ட கோயில்கள், மடங்கள், இன்னும் பல சொத்துக்களையும், தாங்களே அபகரித்துக் கொள்ளலாமென்று காட்ட, பணத்தாசை கொண்ட இவர்கள் இதுவே சமயமென்று லுத்தருடன் கூடிக்கொண்டார்கள். அக்காலத்தில் இந்நாட்டில் பல சன்னியாச மடங்கள் இருந்தன. வேளாண்மைக்கு உதவாத பூமிகளைச் சன்னியாசிகள் திருத்திச் செழிப்பிக்க, அநேக மடங்கள் பூஸ்திதி உள்ளவைகள் ஆயின. லுத்தருடன் கூடிய சிற்றரசர்கள் கோயில்களையும், சந்நியாச மடங்களையும் தாக்கி அவற்றின் சொத்துக்கள் எல்லாவற்றையும் பறி கொண்டார்கள்.

பின்னர் லுத்தர் தப்பறையில் எவ்வளவு தூரம் சென்றுரெனில், ஒருவனுக்கு இரண்டு பெண்சாதிகளை விவாகம் செய்து கொள்ள உத்தரவளித்தார். தானும் குருவாயிருந்தும் ஓர் கன்னியாஸ்திரீயை மணந்து கொண்டார். தேவத்திரவிய அநுமானங்களில், ஞானஸ்நானம், திவ்விய நற்கருணை, பாவசங்கீர்த்தனமில்லாத பச்சாத்தாபம், ஆகிய இம்மூன்றை மட்டும் அங்கீகரித்தார். திவ்விய பூசைப் பலியில் அப்பமும், ரசமும் நமது கர்த்தரின் சரீரமாகவும், இரத்தமாகவும் மாறுகிறதென்னும் சத்திய கொள்கையை மாற்றி, அப்பமும், ரசமும் மாறுதிருக்க, சேசுநாதர் சுவாமி அங்கு இருக்கிறுர் எனப் போதித்தார். இவர் ஒன்றிலும் நிலைகொள்ளாது

நாளுக்கு நாள் செய்த கோமாளங்களை அறியும் போது, இப்படிப் பட்டவரை எவ்விதம் ஜனங்கள் பின் தொடர்ந்தார்களென்று வியப்பு உண்டாகிறது! ஆனால் உலகத்தில் பொருளாசையும், ஆசா பாசங்களும் மனிதரை எம்மாத்திரம் மாற்றக் கூடுமென அறிந்தவர்களுக்கு இதில் எவ்வித ஆச்சரியமுமில்லை. முப்பது வெள்ளிக் காசுக்கு யூதாஸ் தன் கர்த்தரை விற்றிருந்தால், பொருளாசையால் ஜெர்மனி சிற்றரசர்கள் லுத்தரைப் பின் தொடர்வதில் என்ன வியப்பு?

லுத்தர் பதிதக்கொள்கை ஜெர்மனியிலிருந்து, நார்வே, சுவீடன், டென்மார்க், உவர்லாந்து முதலிய வட நாடுகளெங்கும் அரசர்கள் கட்டாயத்தால் பரவிற்று.

## சுவிங்கிலி.

சுவிங்கிலி சுவிசெர்லாந்து தேசத்தின் ஒரு பகுதியைத் தப்பறைக் குட்படுத்தினான்.

## * இங்கிலாந்தில் பதிதமதம்.

பின்னால் இங்கிலாந்திலும் பதிதமதம் ஸ்தாபிக்கப் பட்டது. மற்றதேசங்களில் போலவே இதற்கும் அரசனே காரணமாகினான். 8-ம் என்ரி நல்ல படிப்பாளியாகையால், துவக்கத்தில் லுத்தரை எதிர்த்து அவருக்கு விரோதமாய்த் தேவத்திரவிய அநுமானங்களைக் குறித்து ஓர் புத்தகம் எழுதினான். லெயோ பாப்பு இவனை மெச்சி "விசுவாசகாவலன்" என ஓர் பட்டமும் அளித்தார். ஆனால் இம்மன்னன் கொஞ்சக் காலத்தில் தன் இராக்கினியின் தோழியான அன்னி பொலீன் மேல் மோக ஆசை கொள்ள,

---

* இவற்றை விளக்கமாய் அறிய விரும்புவோர் லண்டன் கத்தோலிக்க சத்தியாபிமானி சபையின் (The Catholic Truth Society of London) "கிரான்மெரும், அன்னி பொலீனும்" என்ற பிரபந்தத்தையும், புரோட்டெஸ்டாண்டு சீர்திருத்தச் சரித்திரம் (History of the Protestant Reformation) என்ற உவில்லியம் காபெர்ட் நூலையும் வாசிக்க.

அவளும் உடன்பட்டு, வைப்பாட்டி யின்றி ராக்கினியாக விரும்பிய தால், அவளைக் கலியாணம் செய்ய வழிபார்த்தான். பெண்சாதி இருக்கையில் வேறு கலியாணம் செய்ய முடியாது என்பதை இவன் அறிந்திருந்தும், தன் அண்ணன் விதவையாகிய கத்தரீனைக் கலியாணம் முடித்துக் கொண்டது செல்லாத கலியாண மெனவும், அதுமுதல் தான் விபசாரியாய் நடந்து வந்ததாகவும் பிதற்றினான். அர்ச். பாப்பு திருச்சபை உத்தரவின்படி நடந்த கலியாணம் நியாயமான தெனச் சொல்லியும், தான் ராசனானபடியால் திருச்சபை தன் விஷயமாய்ச் சர்வேசுரனுடைய கட்டை மாற்றும் எனக் கருதினான். ஆனால் புருஷன் பெண்சாதி என்ற இருவரில் யாரேனும் ஒருவர் மரித்தாலன்றி மறு கலியாணம் செய்ய முடியாது. அப்படியிருந்தும் சாஸ்திரியாகி சுய பக்ஷமுள்ள தோமாஸ் கிரான்மெர் என்னும் ஓர் குரு, முதல் மனைவியைத் தள்ளிவிட்டு வேறொருத்தியைக் கலியாணம் செய்து கொள்ளலாமென்று என்ரிக்கு ரகசியமாய்த் தெரிவிக்க, இவன் அர்ச். பாப்பு இரண்டாங் கலியாணத்துக்கு உத்தரவு கொடார் என்று அறிந்து, கான்ட்டெர்பரி அதிமேற்றிராணியார் மரித்ததும், மேற்கூறிய கிரான்மெரை இங்கிலாந்தின் முதன்மை மேற்றிராணியா ராக்கி, அவரால் கலியாண உத்தரவு பெற ஏற்பாடு செய்தான்.

கிரான்மெர் உண்மையில் லுத்தர் கொள்கையைப் பின்பற்றியவர். வெளிக்கு மட்டும் கத்தோலிக்க குருவாய்ப் பாராட்டி, ஜெர்மனிக்குச் சென்று அங்கு ஒருத்தியை இரகசியமாய்க் கலியாணம் செய்து கொண்டார். கலியாண அந்தஸ்துள்ளவன் குருவாய் இருக்கலாகா தெனினும், தன் கலியாணத்தை ரகசியமாய் வைத்துக்கொண்டு, ஏமாற்றமாய்ப் பாப்பிடம் உத்தரவு பெற்று, இங்கிலாந்து தேசத்துக்கு அதிமேற்றிராணியாராக கி. பி. 1533, மார்ச்சு 30ல் பட்டம் பெற்றுக் கொண்டார். ஆனால் அப்பட்டத்துக்கு வேண்டிய அந்தஸ்தில் இல்லாதபடியால் இவர் அதிமேற்றிராணியாரு மல்ல, குருவுமல்ல, சாதாரண மனிதனேயாம்.

மேலும் மேற்றிராணிப் பட்டத்துக்கு முன் 'பாப்புக்குக் கட்டுப் பட்டிருப்பேன்' எனப் பட்டம் பெறும்போது சொல்லும் சத்தியத்தைப் பின் அநுசரிக்க மாட்டேன் என்று ராசனுக்குச் சத்தியமும் செய்திருந்தார். ஆகையால் இவர் பட்டம் பெறுஞ் சமயத்தில் அர்ச். பாப்புக்குக் கட்டுப் பட்டிருப்பேன் எனச் சொல்லியது வெறும் பொய். இப்படி மனம் பொருந்தப் பொய்யைச் சொல்லிப் பெற்ற பட்டம் எவ்விதம் பட்டமாகும்? ஆகையால் கிரான்மெரைத் தொடர்ந்து வந்த இங்கிலாந்தின் மேற்றிராணிமார்களும், குருக்களும், குருத்துவம் பெற்றவர்களல்ல.

7-ம் கிளமெண்டு பாப்பு என்ரி விருப்பப்படி செய்யாமல், என்ரியும், கத்தரீனும் திருச்சபையின் சட்டப்படி முதற்கால் கலியாணத்துக்கு உத்தரவு பெற்றுப் புருஷன் பெண்சாதி ஆனதால், அவர்கள் கலியாணம் சரியான கலியாணம் என வற்புறுத்தினர். ஆகையால் கிரான்மெர் அதிமேற்றிராணியாரான பன்னிரண்டு நாட்களுக் குள்ளாக, அதாவது எப்பிரில் 11ல், என்ரிக்கும் கத்தரீனுக்கும், உள்ள விவகாரத்தை விசாரணை செய்வதற்கு ஏற்பாடாயிற்று. முதலிலிருந்து கிரான்மெரை அங்கீகரியாததாலும், கிரான்மெரும், அரசனும் கொண்டிருந்த அநியாயக் கருத்துகளை அறிந்திருந்ததாலும், கத்தரீன் இராக்கினி கிரான்மெர் கச்சேரிக்குப் போகவுமில்லை, தமக்காகப் பரிந்து பேச ஓர் வக்கீலைத் தெரிந்து கொள்ளவு மில்லை. கிரான்மெரும் அமர்ந்திருந்து கி.பி. 1533 மே 23ல், 'துவக்கத்திலிருந்து என்ரியும், கத்தரீனும் திருச்சபை சட்டப்படி நியாயமான கலியாணம் செய்யப் படாதிருந்ததால், அக்கலியாணம் சரியான கலியாணம் அல்லவென்றும், அதேமாதம் 28ல் என்ரியும், அன்னி பொலீனும் சரியான கலியாணம் முடித்திருப்பதாயும்' தீர்ப்புச் செய்தார். என்ரி முதல் கால் சம்பந்தமுள்ள தன் அண்ணன் விதவையாகிய கத்தரீனம்மாளைக் கலியாணம் முடித்ததே இத்தீர்ப்புக்குக் காரணமாய்க் கிரான்மெர் காட்டினர். ஆயினும் திருச்சபை தான் ஏற்படுத்திய சட்டங்களைத் தக்க நியாயங்களின் நிமித்தம் நீக்கச் சுதந்தரம் உள்ளதாதலால், திருச்சபையின் உத்தரவின்படியே நடந்தேறிய

இக்கலியாணம், தவறின்றிச் சரியானதாம். ஆகவே கிரான்மெருடைய நியாயம் வீண் சாக்குப்போக்கு நியாயமேயாம்.

இப்படிக் கிரான்மெருடைய தவறான கொள்கைப்படி கத்தரீன் என்றியுடைய நியாயமான மனைவி அல்லவெனக் கொண்டாலும், என்றி இத்தீர்ப்பைப் பெற்ற 5 மாதங்கட்கு முன் அன்னி பொலீனை இரகசியமாய் கி. பி. * 1533 ஜனவரி 25ல் கலியாணம் செய்திருந்ததால், இவ்வைந்து மாத காலமெல்லாம், கிரான்மெர் கொள்கைப் படிக்கும் என்றிக்கு இரண்டு மனைவிகள் இருந்திருக்கிறார்கள்.

மேலும் அன்னி பொலீன் அதே வருஷம் செப்டம்பர் 7ல் எலிசபெத் தென்னும் ஓர் குமாரத்தியைப் பெற்றாள். ஆகவே கிரான்மெர் தீர்ப்புச் செய்த மே 28க்குப் பிறகு இராக்கினியான அன்னி பொலீன் மூன்று மாத காலத்தில் தாயானாள். இப்படிப் பிறந்த குழந்தை கிரான்மெருடைய தப்பறையான கொள்கைப் படிக்கும், கலியாணத்தால் ஏற்பட்ட தின்றி, விபசாரத்தில் கர்ப்பமான குழந்தை எனவே பாராட்டப் படவேண்டும்.

இனி இரண்டாம் மனைவியைத் தள்ளித் திருச்சபைக்குப் பணிந்தா லொழிய, என்றி கத்தோலிக்க கிறிஸ்துவனாய் இருப்பது முடியாத காரியம். ஆகையால் அர்ச். பாப்பு இவனைத் திருச்சபைக்கு விலக்க மாக்கினார். அப்பால் கி. பி. 1535ல் தானே இங்கிலாந்தில் திருச்சபைக்குத் தலைவன் என்றும், அர்ச்.பாப்பைத் தலைவராய் அங்கீகரிப்பதில்லை என்றும், என்றி சட்டம் பகிரங்கம் செய்வித்தான். இப்படி மோகியாகிய இவன் சற்றும் நாணமின்றித் தன்தேச திருச்சபைக்குத் தலைவன் என்றதை, மந்திரிகள்,

---

* எலிசபெத்து 8 மாதத்துக்குள் பிறந்ததால் இத்தேதி நவம்பர் 1532க்குப் பின்னால் மாற்றப்பட்டது. ஆயினும் கிரான்மெரே 1533, ஜனவரியில் மட்டும் இரகசிய கலியாணம் நடந்ததாய் ஒத்துக்கொண்டிருக்கிறார்.

பிரபுக்கள் முதலியோர் தங்களுக்குக் கிடைக்க விருக்கும் திருச்சபை சொத்துக்களுக்காய்ச் சுலபமாய் ஏற்றுக் கொண்டார்கள்.

அப்பால், இதற்கு விரோதமாய் அர்ச். பாப்பே திருச்சபைத் தலைவர் என்பதை வற்புறுத்திய முதல் மந்திரியாகிய முத்திப்பேறு பெற்ற ஸர் தோமாஸ் மூரையும், கர்தினல் பிசெரையும் தலை வெட்டி விட்டு, சந்நியாச மடங்களை எல்லாம் அழித்துத் திருச்சபை சொத்துக்களைக் கொள்ளை யடித்தான்.

ஆயினும் கடைசி பரியந்தம் என்ரி தன்னைக் கத்தோலிக்கன் எனப் பிதற்றி புரோட்டெஸ்டாண்டு மதத்தோரைத் தலைவெட்டி அம்மதம் இங்கிலாந்தில் பரவாமல் தடுக்கப் பிரயாசைப் பட்டான். ஆகையால் இம்மன்னன் ஏற்படுத்திய மதம் கத்தோலிக்க மதமுமல்ல, புரோட்டெஸ்டாண்டு மதமுமல்ல. ஆயினும் கத்தோலிக்க மதத்தினின்று பிரிந்ததால், இங்கிலாந்து ஒன்றில் கத்தோலிக்க மதத்துக்குத் திரும்பவேண்டும், அல்லது பதித மதத்துக்கு உட்படவேண்டும். அப்படியின்றி என்ரி ஆற்றில் ஒருகாலும், சேற்றில் ஒருகாலுமாய் நின்ற இந்நிலைமை நீடிக்கக் கூடியதன்று.

என்ரியைத் தவிர பிரிவினைக்குக் காரணமா யிருந்த கிரான்மெர் முதலியோர் இரகசியத்தில் பதிதக்கொள்கை உள்ளவர்கள். ஆகையால் கி. பி. 1547ல் என்ரி மரித்ததும், இவர்கள் இங்கிலாந்தில் பதித மதத்தை ஸ்தாபித்தார்கள். கி. பி. 1553ல் சிம்மாசனமேறிய கத்தரீனம்மாளின் குமாரத்தியாகிய மேரி ராக்கினி இங்கிலாந்தை மறுபடியும் திருச்சபையுடன் சேர்த்தினுள். ஆயினும் அவளுக்குப் பின் வந்த அன்னி பொலீன் மகளான எலிசபெத்து ராக்கினி மறுபடியும் பதித மதத்தை ஸ்தாபித்ததால், அவள் காலத்திலும் அவளுக்குப் பின்னுல் பதினேழாம் நூற்றாண்டு முழுமையும் கத்தோலிக்கரில் பல்லாயிரம் பேர் வேதத்துக்காய்ப் பலவாறு துன்புறுத்தப் பட்டதுந் தவிர, பல நூற்றுக் கணக்கான பேர் வேத சாட்சிகளாய்க் கழுமரங்களிலும், சிறைச் சாலைகளிலும், மாண்டார்கள். அக்காலமுதல் பல குரூர சட்டங்களை ஏற்படுத்தி

இங்கிலாந்து தேசத்தில் கத்தோலிக்கர் யாரும் நிலையா திருக்கும்படி செய்தார்கள். ஆயினும் அநேகம் கத்தோலிக்கர் இரகசியமாய் வேதத்தில் ஊன்றி நின்றதால், ஐரோப்பாவிலிருந்து குருக்கள் வந்து மறைவான சீவியம் சீவித்து உதவி புரிந்து வந்தார்கள். கடைசியாய் கி. பி. 1829ல் கத்தோலிக்கருக்கு விரோதமாய் ஏற்பட்ட சட்டங்கள் நீக்கப்பட்டு, அது முதல் கத்தோலிக்க மதம் மறுபடியும் பகிரங்கமாயிற்று. இங்கிலாந்து சபையும் தன் குற்றத்தை உணர்ந்து திருச்சபையுடன் இப்பொழுது திரும்பவும் சேர்வதற்கு முயற்சிகளும் செய்து வருகிறது. மேலும் அதிகமான பேர் பதித மதத்தினின்று வருடந்தோறும் மனந் திரும்புவதால், கொஞ்ச காலத்துக்குள் இத்தேசம் முழுதும் கத்தோலிக்க தேசம் ஆகிவிடும் என எதிர் பார்க்கப் படுகிறது.

## கால்வின்.

லுத்தருக்குப் பின் பதிதப் போதகரில் எல்லாம் விசேஷமானவன் கால்வின். இவன் கி. பி. 1509ல் பிறந்து, தன் கெட்ட நடத்தையால் தேசத்தினின்று துரத்தப் பட்டான். அப்பால் வேத போதகனெனப் பிதற்றி, லுத்தர் தப்பறைகளுடன் நில்லாமல், "சர்வேசுரன் மனிதனை உண்டாக்கி அவன் குற்றத்துக் கன்றித் தமது சந்தோஷத்துக் காகவே அவனுக்கு ஆக்கினை இடுகிறார்" என இந்துக்கள் தங்கள் கடவுளுக்குத் திரு விளையாடல்களைப் போதிப்பது போல் பிரசங்கித்தான். மேலும் சற்றேறக்குறைய எல்லாத் தேவத்திரவிய அநுமானங்களையும் தள்ளிவிட்டுப் பாப்பு, மேற்றிராணிமார், குருக்கள், யாவரும் இருக்கலாகா தெனவும், திருச்சபையில் நடந்து வரும் எல்லாச் சடங்குகளும் வீண் காலப் போக்கென்றும் பிரசங்கித்துக் கடைசியாய் ஜெனீவாவில் தங்கித் தன் மதத்தை ஸ்தாபித்தான்.

திருச்சபை கற்பிக்கும் கற்பனைகளுக்கு விரோதமாய்க் கிளம்பின இவன், தனக்கு உட்பட்டோர் தான் சொல்லும் விதமே நடக்க வேண்டுமென வற்புறுத்தித் தன் கற்பனைகளுக்கு விரோதமான ஓர் மனிதனைத் தீக்கொளுத்தினான்.

இப்பதிதமதம் பிராஞ்சு தேசத்தின் தென்பாகத்தில் பரவித் தேச கலகத்துக்கும், உள்நாட்டுப் போர்களுக்கும் காரணமாகி நூற்றுக் கணக்கான மரணங்கள் சம்பவித்தன.

## 2. கத்தோலிக்க சீர்திருத்தம்.

பதிதமதம் 'சீர்திருத்தம்' என ஏற்பட்டுச் சீர்திருத்தமின்றி ஒவ்வொரு தேசத்திலும் கலகத்தை மூட்டி மனிதரது ஒழுக்கங்களை முற்றும் தொலைத்தது. கத்தோலிக்க திருச்சபை ஒன்றே சீர்திருத்தங்களைச் செய்ய வல்லமை உள்ள தாகையால் அர்ச். பாப்புகள் ரோமையிலும்,பின்னால் டிரென்ட்டிலும் (திரிதெந்திலும்) சங்கங்கள் கூட்டிச் சீர்திருத்தங்களைச் செய்து, அவற்றின்படி கிறிஸ்துவர்கள் நடக்க வேண்டிய ஏற்பாடுகளும் செய்தார்கள்.

### பாப்புகள்.

10-ம் லெயோ காலத்தில் லுத்தர் தப்பறை துவக்கியது. அவருக்குப் பின் வந்த பாப்புகள் பதித மதத்தை ஒழிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள். இவர்களில் கி. பி. 1559ல் பட்டம் பெற்ற 4-ம் பத்திநாதர் டிரென்ட்டு பொதுச் சங்கத்தை நடத்தி, அதின் தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவந்தார்.

இவருக்குப் பின் வந்த 5-ம் பத்திநாதர் மிகவும் பிரசித்தி பெற்றவர். இவர் மேனாடுகளைத் தாக்க எழும்பிய துருக்கருக்கு விரோதமாய் ஓர் சிலுவை யுத்தம் தொடங்கினர். கிறிஸ்துவர்களின் கடற்சேனையும், துருக்கரின் சேனையும் லெப்பான்ட்டோ குடாவில் சந்தித்துத் துருக்கர் சேனை அதிகமாயினும் முறியடிக்கப்பட்டது. இது நமது தேவதாயின் செபமாலையின் உதவியால் அடைந்த வெற்றி. இவ்வெற்றிச் சமாச்சாரம் ரோமைக்கு எட்டப் பலநாள் பிடித்திருக்கும் எனினும், வெற்றியான அந்நாள் மாலைப் பொழுதில் அர்ச்.பாப்பு தன் பலகணியைத் திறந்து, சற்று நேரம் பரவசமாகிச் சந்தோஷ முகத்துடன் எழுந்து தம்மைச் சுற்றிலும் இருந்தவர்களை நோக்கி, "கிறிஸ்து சேனை வெற்றி

அடைந்தது, ஆகையால் சர்வேசுரனுக்கு ஸ்தோத்திரம் செய்வோமாக" என்றார். இக்காரணம் பற்றியே தேவமாதா பிரார்த்தனையில் "கிறிஸ்துவர்களுடைய சகாயமே" என்ற மன்றாட்டுக் கூட்டப்பட்டுத் திருச் செபமாலையின் திருநாளும் அக்டோபர் முதல் ஞாயிற்றுக்கிழமை ஸ்தாபிக்கப்பட்டது.

## சேசு சபை.

பதித மதத் தப்பறைகளை எதிர்த்தழித்து இக்காலத்தில் திருச்சபைக்கு விசேஷமாய் உழைத்தது சேசு சபை. இச்சபை கி. பி. 1534ல் அர்ச். இஞ்ஞாசியாரால் ஸ்தாபிக்கப்பட்டு, கி. பி. 1540ல் பாப்புவின் அங்கீகாரம் பெற்றது. இச்சபையோர் முக்கியமாய்க் கல்வி கற்றுக் கொடுப்பதிலும், போதகத்திலும், தப்பறைகளை எதிர்ப்பதிலும், அந்நிய தேச மனந்திருப்பலிலும் விசேஷமாய் விளங்கினார்கள்.

ஸ்பெயின் தேசத்தாரான அர்ச். இஞ்ஞாசியார் முதலில் போர்ச் சேவகனாயிருந்து காயம்பட்டுப் பின் உலகத்தைத் துறந்தார். பின்னால் பாரீஸ் பட்டணம் சென்று, தம்மைப் போல் ஊக்கமுள்ள சிலரைத் தம்முடன் சேர்த்தார். இவர்களில் இந்து தேசத்து அப்போஸ்தலராகிய அர்ச். பிராஞ்சிஸ்கு சவேரியார் விசேஷமானவர். இவர்கள் மற்ற சபையோர்களைப் போலவே, கற்பு, கீழ்ப்படிதல், தரித்திரம் ஆகிய இம்மூன்று வார்த்தைப் பாடுகளுடன், அர்ச்.பாப்புக்கும், அதிசிரேஷ்டருக்கும் மாறாத கீழ்ப்படிதல் வார்த்தைப்பாடும் கொடுக்கிறார்கள். பதிதர் இக்கடைசி வார்த்தைப் பாட்டை எளனஞ் செய்து, ஒரு சேசுசபைக் குரு தன் சிரேஷ்டர் பாவம் செய்யக் கட்டளை இட்டாலும் கீழ்ப்படிய வேண்டும் என்பார்கள். இவ்விஷயமாய் அர்ச். இஞ்ஞாசியாரே "பாவமில்லாத வழிகளில் எல்லாம் என் சுயாதீனப்படி இல்லாமல், என் சிரேஷ்டர் இஷ்டப்படியே செய்வேன்" எனச் சொல்லியிருக்கிறார்.

அர்ச். இஞ்ஞாசியார் காலத்திலேயே இச்சபை அதிகம் பரவ, இவர்கள் ஐரோப்பாவில் ஸ்பெயின், பிராஞ்சு, இத்தாலி, ஆஸ்டிரியா, பவேரியாவிலும், இந்தியா, ஜப்பான், பிரசில் முதலிய புறநாடுகளிலும் வேத போதகராய்த் தோன்றினர்கள்.

## அந்நியதேச போதகம்.

இப்படிப் பதித மதத்தால் நேர்ந்த சேதத்தைத் திருச்சபை அந்நிய நாட்டுப் போதகத்தால் நிவர்த்தி செய்தது. பிராஞ்சிஸ்கு சவேரியார் நவார் தேசத்தில் பெரிய வமிசத்தில் பிறந்து, பாரீஸ் சர்வ கலாசாலையில் பேர் பெற்ற போதகராய் உலக கீர்த்தியை நாடி நடந்து வந்தார். கி. பி. 1534ல் அர்ச். இஞ்ஞாசியாரால் மனந்திரும்பிச் சேசு சபையில் உட்பட்டு இந்தியாவுக்கு வந்து கடற்கரை யோரங்களில் லக்ஷக் கணக்கான ஜனங்களை மனந்திருப்பினர். ஆதிகாலத்தில் அப்போஸ்தலர்கள் பெற்ற வரங்களைப் பெற்று இவர் செய்த புதுமைகளால் இந்தியாவில் திருச்சபையை ஸ்தாபித்தபின், சீனு, ஜப்பான் தேசங்களிலும் பிரசங்கித்து அங்கும் கணக்கில்லாத ஜனங்களை மனந்திருப்பினர்.

## 18-ம் பொதுச்சங்கம் டிரெண்ட்டு கி. பி. 1545—1563.

பதிதமத கர்த்தாக்கள் தேசங்களில் தோன்றிய ஒழுக்கக் குறைவுகளைக் காரணங்களாய்ப் பிதற்றியமையால், முதலிலிருந்து அர்ச். பாப்புகள் சீர்திருத்தங்களைச் செய்யப் பல ஏற்பாடுகளைக் கையாடி வந்தார்கள்.

பழைய மந்திராலோசனை சபைகள் சீர்திருத்தப் பட்டதுமின்றி, புதிய மந்திராலோசனை சபைகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. கிறிஸ்துவர்கள் பல புஸ்தகங்களையும் வாசிப்பதால் ஆத்துமக் கேடு அடையக் காரணமாவது பற்றி, அப்படிப் பட்ட புத்தகங்களை விலக்குவதற்கு ஓர் மந்திராலோசனை சபை ஏற்படுத்தப்பட்டது.

கடைசியாய் 3-ம் சின்னப்பர் கி. பி. 1545ல் டிரென்ட்டில் ஓர் பொதுச்சங்கம் கூட்டுவித்தார். இச்சங்கம் பிளேக்கால் கி. பி.

1546ல் பொலோஞவுக்கு மாற்றப்பட்டு, கி. பி. 1551ல் மறுபடியும் டிரென்ட்டில் கூடி, கி. பி. 1552ல் லுத்தர் கட்சியாரால் சிதறடிக்கப் பட்டுக் கடைசியாய் கி.பி.1562ல் கூடிற்று. இச்சங்கத்தின் தீர்மானங் களாலும், இதில் செய்த ஏற்பாடுகளாலும் பதிதர் கொட்டம் அடங்கியது.

இச்சங்கத்தில் 11 கர்தினல்களும், 25 அதிமேற்றிராணிமார் களும், 168 மேற்றிராணிமார்களும், மடாதிபதிகளும் இருந்தார் கள். அர்ச் பாப்புவின் ஸ்தானதிபதிகள் நான்கு பேரும், கத்தோ லிக்க தேசங்களின் ஸ்தானதிபதிகளு மிருந்தனர்.

பதிதர்கள் விசுவாச சத்தியங்கள் பலவற்றை எதிர்த்ததால், அவைகளை மறுபடியும் தீர்க்க யோசித்து ஊர்ஜிதப் படுத்தியது மின்றி, திருச்சபை அதிகாரிகட்குள் எல்லா அந்தஸ்துகளிலும் தோன்றிய ஒழுக்கக் குறைவுகள் அணைத்தும் சீர்திருத்தப் பட்டு, இக்குறைவுகள் பின்னர் நேரிடாதபடி தடுக்க வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. பாப்புவின் சம்மதத்தோடு திருச்சபை அதிகார அந்தஸ்துக்குக் குறிக்கப்பட்டவர்கள் தங்கள் அழைப்பைத் தீர்மானம் செய்யச் சில வருஷங்கள் தங்கி யிருந்து தங்களைச் சோதிக்கும் பொருட்டாய், ஆங்காங்கு குரு மடங்கள் ஏற்பட வேண்டும் என்ற தீர்ப்பும் செய்யப் பட்டது.

சங்கம் முடிந்த பிறகு அர்ச். பாப்புகள் செய்த ஏற்பாடுகளை அதிவிமரிசையுடன் அமுலுக்குக் கொண்டுவர, கிறிஸ்து நாடுக ளெல்லாம் அவற்றைப் பின்பற்றின. அர்ச். 5-ம் பத்திநாதர் விசு வாசிகள் நன்கு அறியும் பொருட்டு டிரென்ட்டு சங்கக் குறிப்பிட மும், குருக்கள் யாவரும் உபயோகிக்க வேண்டிய 'பிரவியரியும்,' திவ்விய பூசையில் வாசிக்கப்படும் 'மிசாலும்' பிரசுரஞ் செய்வித் தார். கடைசியாய் சிக்ஸ்த்துஸ் குயின்த்துஸ் திருச்சபை ஆட்சி யில் கர்தினல்கள் ஏற்று நடத்த வேண்டிய பொறுப்பைத் திட்டஞ் செய்து, பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேலித்தாரில் 70 தலைவர்களை மோசேஸ் நியமித்த பிரகாரம், திருச்சபையிலும் 70 கர்தினல்கள் இருக்கலாம் எனத் தீர்மானித்தார்.

## 2-ம். அத்தியாயம்.

---

### ஜான்செனிய மதம் கி. பி. 1595—1700.

---

உட்பிரிவுகள்:—

திருச்சபையின் துன்பங்கள்; ஜான்சேனிய மதம்; அர்ச்சியசிஷ்டவர்கள்; பாப்புகள்.

### 1. திருச்சபையின் துன்பங்கள்.

திருச்சபை எப்போதும் துன்ப துரிதங்களின் இடையே காலம் கழித்து வருகிறதால், வேதத்திற்கு அத்தாட்சியாக இரத்தஞ் சிந்தாத காலமில்லை. ஒவ்வொரு நூற்றுண்டிலும் வேத சாட்சியம் இல்லாதிருந்ததும் இல்லை. அப்படியே 17-ம் நூற்றுண்டிலும் அஞ்ஞானம், பிரிவினை, வேத தப்பறை, இம்மூன்றும் பலவிடங்களில் விசுவாசிகளின் இரத்தத்தைச் சிந்தக் காரணமாயின. ஜப்பானில் கொடூர வேதகலகம் எழும்பிக் கொஞ்சகாலம் கிறிஸ்து மதமே ஒழியும்படிக்கு ஏதுவாயிற்று. ஐரோப்பாவில் தோன்றிய பல வேதசாட்சிகளில் மூவரைத் திருச்சபை விசேஷ விதமாய் வணங்கி வருகிறது. அவர்கள் அர்ச். பிதேலியார், அர்ச். ஜோசப்பாத், அர்ச். ஆன்று பபோலா.

#### வேதகலகம்.

#### அர்ச். பிதேலியார்.

தானியூப் நதி தீரத்தில் ஓர் சிறு கிராமத்தில் பிறந்து, போதகராகி கால்வின் பதிதர்களான பிரிஜியன் ஜனங்களில் அநேகரை மனந்திருப்பினர். பொறுமை கொண்ட மற்ற பதிதர், அவரைக் கொலை செய்ய எத்தனித்து ஓர் நாள் அவர் கோயிலில் பிரசங்கிக்

கையில் அவரைத் துப்பாக்கியால் சுட்டார்கள். அவர் தப்பித்துக் கோயிலை விட்டு வேறு இடஞ்சென்று பிரசங்கிக்க, அங்கும் சென்று அவரைப் பிடித்து அடித்து வேதத்தை மறுக்கவாவது, உயிரை இழக்கவாவது தீர்மானித்தார்கள். ஒருவன் அவரை உதைத்துக் கீழே தள்ளினான். அவர் முழந்தாள் படியிட்டு, "சேசுவே என்மேல் இரங்கியருளும்; சேசுவின் தாயே! பரிசுத்த மரியே! எனக்கு ஒத்தாசை செய்யும்; சர்வேசுரா! என் விரோதிகளை மன்னியும், ஏனெனில் அவர்கள் செய்வது என்னவென அறிகிறார்களில்லை" என்ற வாக்கியங்களைச் செப்பிய அளவில், ஓர் தடியால் அவர் மண்டையை ஒருவன் பிளக்க இறந்தார். இதைக் கண்ணுற்ற ஓர் பாதிரி குரு உடனே மனந் திரும்பினார்.

## அர்ச். ஜோசப்பாத்.

இவர் லித்துவேனியா தேசத்தில் அதிமேற்றிராணியாராகி அநேகம் பிரிவினைக் காரரை மனந் திருப்ப, அதுவே அவர் மரணத்துக்குக் காரணமாகி, கி. பி. 1623ல் கொலையுண்டு இறந்தார்.

## அர்ச். ஆன்று பபோலா.

அத்தேசத்திலேயே வேறொரு வேத சாட்சியும் தோன்றினார். அவர் அர்ச். ஆன்று பபோலா. அவர் சேசுசபையில் உட்பட்டுப் போலாந்து தேசத்தில் வேதம் போதிக்கையில், கி. பி. 1657ல் கோசாக் என்னும் ருசிய பிரிவினைக் காரரால் கைக்கொள்ளப் பட்டார். இக்கொடிய சேவகர் அவரை வேதத்தை மறுதலிக்கச் செய்ய எவ்வித முயற்சிகள் செய்தும் கூடாதது கண்டு, கரங்களைக் கயிற்றால் கட்டி இருகுதிரைச் சேவகர்கள் இடையில் நடத்திப் பின்னுள்ளோர் கடுகிச் செல்லும்படி அடித்து இழுத்துச் சென்று, ஓர் மேசையின் மேல் கிடத்தி, நகங்களுக்குக் கீழ் மரச்சிப்பிகளை இடித்துக் கண்களைப் பிடுங்கி, மூக்கு காதுகளை அறுத்து, பற்களை உடைத்து, வாயைக் கிழித்துச் சொல்லொண்ணா உபாதை செய்தார்கள். பின்னர் கழுத்தின் சதையைக் கிழித்து, நாக்கைப் பிடுங்கி, கழுத்து முதல் இடுப்புவரை தோலுரித்துக் கடைசியாய்ப்

பலபக்கங்களிலும் கத்தியால் குத்தி வெளியே பாதையில் தள்ளிப் போட்டார்கள். இவர் சாகுமட்டும் தம் எதிரிகளுக்காக வேண்டிக் கொண்டு மரித்தார்.

## முப்பது வருஷ யுத்தம் கி. பி. 1618—1648.

பதினாறும் நூற்றாண்டில் பதித மதம் கிளம்பிக் கிறிஸ்து நாடெங்கும் தேச கலகம் உண்டாக்கியது. அதுவே அடுத்த நூற்றாண்டில் கத்தோலிக்கருக்கும், பதிதருக்கும் முப்பது வருஷ மளவும் நடந்த ஓர் யுத்தத்தைக் கிளப்பியது. ஜெர்மனியின் வட பாகமும், மற்றப் பதித வட நாடுகளும், கிளம்பிக் கிறிஸ்து ஸாம்ராச்சியத்தை அழித்துச் சுயாதீனமும், பதித மதத்துக்கு அங்கீகாரமும் பெற முயன்றன. கடைசியில் கி. பி. 1648ல் யுத்தம் முடிந்து உடன்படிக்கை செய்ததில், அக்காலம் மட்டும் ஐரோப்பாவில் ஒரே வேதமும், ஒரே வேதத்தலைமையும், ஒரே கிறிஸ்து ஸாம்ராச்சியமும் இருந்தவற்றை ஊர்ஜிதப் படுத்தாது, பதித மதத்துக்குச் சுதந்தரமும், பதித நாடுகள் கிறிஸ்து ஸாம்ராச்சியத்தினின்று பிரிந்து கொள்ளும் பாத்தியமும் அளிக்கப்பட்டன. ஆகையால் இதுமுதல் ஐரோப்பாவில் முன்னிருந்த நிலைமை நீங்கி வேறு புதுநிலைமை ஏற்பட்டது. அர்ச். பாப்பு இவ்வுடன்படிக்கையை எதிர்த்தும் உலக அரசாங்கங்கள் கவனிக்கவில்லை. ஆகையால் இது முதல் தேச சர்க்கார்கள் வேத விஷயங்களில் எவ்வித கவனமுமின்றி நடந்து வந்ததால், கி. பி. 1788ல் கிறிஸ்து நாதரையே மறுதலித்துத் தள்ளி, 'சர்க்கார் பொது ஜனங்களுடையது என்றும், சர்வேசுரனுக்கும், தேச சர்க்காருக்கும் எவ்வித ஒட்டும் இல்லையென்றும்' கொள்கை பிறப்பிக்கப் பட்டது.

## 2. ஜான்செனியுஸ் தப்பறை.

பெல்ஜியம் தேசத்தில் மேற்றிராணியாராய் இருந்த ஜான் செனியுஸ் ஓர் பிரபந்தம் எழுதினார். அதின் முக்கிய நோக்கம், அர்ச். அகுஸ்தீன் எழுதிய வரப்பிரசாத சத்தியத்தின் வியாக்கி

யானமாம். அப்புத்தகத்தில் திருச்சபை போதகத்துக்கு விரோத மான சில கொள்கைகள் கையாளப் பட்டதால், அர்ச். பாப்பு முக்கியமான ஐந்து தப்பறைகளைக் கண்டனம் செய்தார். அவற் றில் ஒன்று, "பத்துக் கற்பனைகளில் சில அனுசரிக்க முடியாதவை" என்பது. மற்றொன்று, "சேசுநாதர் சுவாமி எல்லா மனுஷருக் காகவும் இரத்தம் சிந்தி மரித்தது பொய்" என்பது. மற்றத் தப்பறைகளும் இத்தன்மை உள்ளவை. ஜான்செனியுஸைப் பின் பற்றியவர்கள், ஐந்து தப்பறைகளையும் தப்பறைகளென்று ஏற் றுக் கொண்டாலும், அவை ஜான்செனியுஸ் புத்தகத்தில் இல்லை யென்றும், அவை அப்புத்தகத்தில் உள்ளன என்பதை அங்கீகரித் தல் அவசியம் இல்லையென்றும், அர்ச். பாப்பு கண்டித்ததினால் மட்டும் அவைகள் தப்பறைகள் எனத் தாங்கள் ஏற்றுக்கொள்ளக் கடமைப் பட்டவர்கள் என்றும், பிதற்றினார்கள். மேலும் தன் பிள்ளைகள் தப்பறையான புஸ்தகங்களை வாசிக்கல் தகாதெனத் தடுக்கும் சுதந்தரம் திருச்சபைக்கு இல்லையென்றும் நிலை நாட்டப் பார்த்தார்கள்.

இத்தப்பறைகள் பிராஞ்சு தேசத்தில் விசேஷமாய்ப் பரவி, பிரிவினைக்குக் காரணம் ஆகும் போல் தோன்றியதால், கி.பி. 1626ல் அர்ச். பாப்பு முற்கூறிய தப்பறைகள் ஜான்செனியுஸ் புத்தகத் தினின்று எடுக்கப்பட்டவை எனவும், அப்புத்தகத்தில் எவ்வித கருத்துகளுடன் எழுதப்பட்டனவோ அக்கருத்துகளே தப்பறைக கள் எனவும், அவற்றைக் கைக்கொண்டோர் அவற்றை மறுக்க ஓர் நற்சாட்சிப் பத்திரத்தில் கையொப்பம் இடவேண்டும் எனவும் ஆக்கியாபித்தார். அநேகர் பிடிவாதமாய் இது செய்யவில்லை; ஆகையால் கி. பி. 1665ல் பாப்பு இன்னொருமுறை இதை வற்புறுத் தப் பிராஞ்சு ராயர் 14-ம் லூயிஸூம், இதை அநுசரியாதவர் களுக்குக் கடின தண்டனை பிறப்பித்தார். அப்படியிருந்தும் சில மேற்றிராணிமார்கள் இதற்கு உடன்படாமல் மற்ற விசுவாசி களுக்குத் தூண்டுதலும், ஆதரவும் ஆனார்கள். அர்ச். பாப்பு இம் மேற்றிராணிமார்களைத் தக்க விதமாய்த் தண்டிப்போமெனப் பய முறுத்த, இவர்கள் தாங்கள் போதித்த போதனைகளைப் பகிரங்கமாய்த்

தப்பறைகளை ஏற்றுக்கொள்ளாதபடி மன்னித்தால், தங்கள் கொள்கையை முற்றும் விட்டு விடுவோமெனவேண்டிக்கொண்டார்கள். இவர்களுக்கு இரங்கி, அர்ச். பாப்பு அப்படியே செய்யப் பின்னால் இவர்கள் தங்கள் கொள்கைகளை அர்ச். பாப்பு இரகசியமாய் அங்கீகரித்துக் கொண்டார் என்று பிதற்றினார்கள். கலாசாலைகள் எங்கும் இக்கொள்கையைப் பற்றி விவாதம் நடந்துவர, இதனை முக்கியமாய் விரோதித்துக் கடைசியாய் அழித்தவர்கள் சேசுசபையாரே. இந்த ஜெயமே பின்னால் சேசுசபை அழிவுக்கு ஓர் விசேஷ காரணமாயிற்று.

சில காலம் அமர்ந்திருந்து இக்கொள்கை கி. பி. 1701ல், 'மனச்சாட்சி' என்னும் ஓர் புத்தகத்தில் மறுபடியும் கிளம்பிற்று. பாரீஸ் அதிமேற்றிராணியார் இதைக் கண்டித்தார். எனினும் 'புதிய ஏற்பாட்டைக் குறித்த எண்ணங்கள்' என்ற ஓர் புத்தகம் பின்னால் வெளிப்பட, இம்மேற்றிராணியார் அதில் பல தப்பறைகள் இருந்தும், முதல் பதிப்பை வேறோர் மேற்றிராணியார் அங்கீகரித்ததால், கடைசிப் பதிப்பும் அப்படியே இருக்கும் என்று எண்ணி அங்கீகாரம் செய்தார். கி. பி. 1713ல் அர்ச். பாப்பு இப்புத்தகத்தில் கண்ட சுமார் நூறு கொள்கைகள் தப்பறைகள் எனக் கண்டனம் செய்தார்.

அநேக மேற்றிராணிமார்கள் அர்ச். பாப்புவின் தீர்மானத்தை அனுசரித்தார்கள் எனினும், வேறு அநேகர் விரோதித்தார்கள். பாரீஸ் அதிமேற்றிராணியார் கர்தினாலாயினும், தாம் செய்தது தப்பிதமெனப் பகிரங்கமாய் ஏற்றுக்கொள்ளப் போதுமான மனத்திடமின்றி விரோதிகளுடன் கூடினார். அச்சமயம் 14-ம் லூயிஸ் மரித்ததால், பின்னர் தேச மாட்சிமை நடத்திய ஆர்லீன்ஸ் கோமகன் கி. பி. 1718ல் பிராஞ்சு தேசம் அடங்கலும் அர்ச். பாப்புவின் தீர்ப்பை அநுசரித்து நடக்க வேண்டுமென ஆக்கியாபிக்க, ஜான்செனிய கொள்கை கடைசியாய்த் தொலைந்தது.

## காலிய கொள்கை. (Gallicanism.)

பிராஞ்சு தேசத்தின் ஆதிப்பேர் காலியா. பிராஞ்சு தேசத்தார் தேச சர்க்காருக்கும், திருச்சபைக்கும் உள்ள சம்பந்தத்தைப் பற்றிச் சில தப்பறையான எண்ணங்களைக் கொண்டனர். இவைகளுக்கே காலிய கொள்கை எனப் பெயர்.

பிராஞ்சு ராயர் 14-ம் லூயிஸ் அணைகடந்த ஆசைகொண்டு, உலகம் முழுவதையும் தம் கைவசமாக்கும் எண்ணத்துடன், திருச்சபையையும் தனக்குள் அடக்கக் கருதி, கி. பி. 1682ல் பிராஞ்சு மேற்றிராணிமார்கள் சங்கம் ஒன்று கூட்டுவித்தார். அதில் சுமார் 34 மேற்றிராணிமார்களும், வேறு சிலகுருக்களும் இருந்தார்கள்' அவர்கள் பிராஞ்சுதேச திருச்சபை அதிகாரிகளில் சுமார் நான்கில் ஒரு பகுதி கூட இல்லையாயினும், அச்சங்கத்தில் பிராஞ்சு தேச குருக்களின் விஞ்ஞாபனம் என்றஓர் தீர்ப்புச் செய்தார்கள். அதில் முக்கியமானவை: *'பாப்புக்குத் தேச ராசாங்கத்தின் மேல் எவ்வித பாத்தியமும் இல்லை; திருச்சபை மேற்றிராணிமார்கள் கூடிய ஓர் சங்கம் பாப்புக்கு மேலானது; பாப்புவின் அதிகார தோரணை சட்டப்படிக்கு நிரூபிக்கப் படவேண்டும்; வேத சத்தியங்களைக் குறித்துப் பாப்பு செய்யும் தீர்மானங்கள் ஒவ்வொரு தேச சபையும் ஒப்புக்கொள்ள வேண்டியது என்கிலும், சர்வ சபைகளும் ஏற்றுக் கொண்ட பின்னரே, அத்தீர்மானங்கள்மாற்ற முடியாதன வாகும்.'

---

* இக்கொள்கைகள் அப்போதே கண்டனம் செய்யப் பட்டதுமன்றி, கி. பி. 1870ல் கூடிய வத்திக்கான் பொதுச்சங்கம் அர்ச். பாப்புவின் தவறாத வரத்தைப் பகிரங்கப் படுத்தியதால் முற்றிலும் அழிந்தன.

இந்த நான்கு கொள்கைகளால், அர்ச். பாப்புவின் அதிகாரத்தை மறுத்து அவரைச் சாதாரண மேற்றிராணியா ராக்க எண்ணம் கொண்டார்கள். அர்ச். இராயப்பர் அஸ்திவாரக் கல்லா யிருந்து, திருச்சபை அக்கல்லின் மேல் கட்டப் பட்டதால், இராயப்பர் பதிலாளியாகும் அர்ச். பாப்புவே அவர் சுதந்தரங்களைக் கொண்டு திருச்சபையின் அதி உன்னத மேய்ப்பனும், ஆயரும், ஆகிறார், என்பதை இவை மறுக்கின்றன. ஆகையால் பிராஞ்சு தேசம் திருச்சபையில் இருந்து பிரிவு படும்போல் இருந்தது.

முற்கூறிய விஞ்ஞாபனம் பிராஞ்சு தேசம் எங்கும் பகிரங்கப் படுத்தப்பட்டுத் தேச சட்ட சபையாரும் அங்கீகரித்து, எல்லாக் கல்விச் சாலைகளிலும் கூடாயமாய்க் கற்பிக்கப் படும்படிக்குத் திட்டமும் செய்யப் பட்டது. திருச்சபை அடங்கலும் மேற்றி ராணிமார், குருக்கள் இதை விரோதித்தார்கள் எனினும், இவர்கள் பிடிவாதம் செய்து வந்து, கடைசியாய் கி. பி. 1693ல் லூயிஸ் ராயர் தன் குற்றத்தை உணர்ந்து, அர்ச். பாப்புக்கு ஓர் நிருபம் எழுதித் தன்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ள, இவரைச் சேர்ந்த மேற்றிராணி மார்களும் பின் தொடர்ந் தார்கள். ஆயினும் இத்தப்பறையால் தேசத்துக்கு வரவிருந்த கனமான தீமை முறும் நீங்கவில்லை. ஏனெனில், இத்தேசத்தில் திருச்சபை அதிகாரத்தைக் குறைத்த மேற்றிராணிமார், குருக்கள், தங்களுக்கு இருந்த அதிகாரத்தையும், விசேஷ மதிப்பையும் சிறுகச் சிறுக இழந்து வந்தார்கள். தேசத்தில் நாளடைவில் அதிகார தோரணை முற்றும் அற்றுப்போய் வேத விஷயங்களிலும், லௌகிக விஷயங் களிலும், மனிதர் தங்கள் தங்கள் இஷ்டப்படியே நடக்கவும், தொன்று தொட்டு வந்த அதிகாரிகளை நீக்கவும் ஏற்பாடாகி, கடைசியாய் கி. பி. 1789ல் சர்வேசுரனுக்கும் மனிதருக்கும் முற் றிலும் விரோதமாகி, உள்ளன எல்லாவற்றையும் அழித்து நாச மாக்கி, உலகத்தில் பலவித ஒழுங்கீனங்களுக்கும் காரணமாகிய *ராசகலகம் உண்டாயிற்று.

---

* அடுத்த அத்தியாயத்திற் காண்க.

## 3. அர்ச்சியசிஷ்டவர்கள்.

இந்நூற்றுண்டில் திருச்சபைக்குப் பல துன்பங்கள் ஏற்பட்டிருந்தும், அநேக அர்ச்சியசிஷ்டவர்களும், வேதங்காப்போரும் தோன்றினர்கள். கீர்த்தி பெற்றோரில் அர்ச். பிராஞ்சிஸ்கு சலேசியாரையும், அர்ச். பயுல் வின்செண்டையும் விசேஷமாய்ச் சொல்லலாம்.

### அர்ச். பிராஞ்சிஸ்கு சலேசியார், கி. பி. 156—1622.

ஞானசிவியத்தைப்பற்றிய கிரந்த கர்த்தாக்களில் சக்தி பெற்றவராகிய இவர் மேன்குலத்தில் பிறந்து, அன்னசியில் இலக்கிய இலக்கணம் கற்றுப் பின் பாரிஸிலும், பதுவாவிலும் படித்துச் சட்ட சாஸ்திரிப் பட்டம் பெற்றூர். முதலில் வக்கீலாயிருந்து, பிறகு ஜெனீவாவில் குருப்பட்டம் பெற்று, கால்வின் பதிதரை மனந் திருப்பும் அலுவலைச் செய்து,பின்னர் ஜெனீவாவின் மேற்றிராணியாரானர்.

இவரிடத்தில் விளங்கிய முக்கிய குணம் சாந்தமே. இவரை நன்குயறிந்த அர்ச். ஷாந்தால் ஆத்தும ரக்ஷணியமே இவரது முக்கிய நோக்கம் எனக் கூறியிருக்கிறுள் ஷெ அர்ச்சியசிஷ்டவளும், இவரும் கூடி "விஸித்தாசியோன்" என்ற கன்னியர் சபையை ஏற்படுத்தினர்கள். (கி. பி. 1610)

இவர் மிகப் பிரசித்தி பெற்ற நூலாசிரியரானதால் அநேக உன்னதமான நூல்களை எழுதி யுள்ளார். அவற்றில்முக்கியமானவை, "பத்திநெறிப் பிரவேசம், தேவ சிநேக விளக்கம்." வேதாகமம், கிறிஸ்துநாதர் அநுசாரம் ஆகிய இரண்டு நூட்களுக்குப் பிறகு, முக்கியமாய் வாசிக்கப்படும் நூட்கள் முற்கூறிய இவரது புத்தகங்களாம். இரண்டு புத்தகங்களிலும் ஒரே பொருளைக் கையாடியிருக்கிறார். அதாவது தன்னை முற்றும் ஒறுத்தல் செய்வதாகிய தேவ சிநேகமும், பிறர் சிநேகமும் தான் புண்ணிய சாங்கோபாங்கத்தின் பூரண லக்ஷணம் என்பது. கி.பி.1665ல் அர்ச்சியசிஷ்டபட்டமும், கி. பி. 1877ல் "சாஸ்திரி" என்ற பட்டமும் இவருக்கு அளிக்கப்பட்டன.

11-ம் பத்திநாதர் இவரது போதனையைப் பாராட்டி யாவரும் அநுசரிக்க வேண்டியதெனக் கூறி, கத்தோலிக்க நூலாசிரியர்களுக்கும், பத்திராதிபர்களுக்கும், இவரைப் பாதுகாவலராய்க் குறித்து கி. பி. 1922ல் உலகுக்கு ஓர் நிருபம் அனுப்பியிருக்கிறார்.

## அர்ச். பவுல் வின்செண்டு.

"தேவ சிநேகக் கன்னிகள்" என்ற சபையை ஏற்படுத்தி உலகுக்கு அபரிமிதமான நன்மைகளைச் செய்த இவர், பிரனீஸ் மலைச்சாரலில் ஓர் கிராமத்தில் பத்தியுள்ள ஏழைக் குடும்பத்தில் கி.பி. 1576ல் பிறந்தார். பெற்றோர் இவரை முதலில் ஆடுமேய்க்கப் போட்டார்கள். ஆயினும் இவரிடத்தில் விளங்கிய நற்குணங்களைக் கண்டு, பின் ஓர் பிராஞ்சிஸ்கு சபை மடத்துக்கு அனுப்பினார்கள். இங்கு கல்வி கற்கையில் தமக்குள்ள தேவ அழைப்பை உணர்ந்து உலகத்தைத் துறந்து கி. பி. 1600ல் குருப்பட்டம் பெற்றார். கி.பி. 1605ல் கடற் கொள்ளைக் காரரால் பிடிக்கப்பட்டுத் தூனீஸ் நகரில் விற்கப்பட, அங்கு இவரது மூன்றும் எசமானனை மனந்திருப்பி அடிமை மீண்டு பிராஞ்சுக்கு வந்தார். கி.பி. 1609ல் பிராஞ்சுக் கோர்ட்டில் அலுவல் பெற்று, அதில் நிலையாது சீக்கிரம் நீங்கிப் பங்குக் குருவானார். பின்னால் அதையும் துறந்து உபாத்தியாயராகி ஒழுகுங்கால், ஓர் நாள் ஓர் வியாதிக்காரனுடைய பரிதாப அந்தஸ்தைக் கண்டு, பிராஞ்சு தேசப் போதக சபையை ஏற்படுத்தக் கருத்துக் கொண்டார். பின்னால் மறுபடியும் பங்குக் குருவாகி, அநேக உன்னத காரியங்களைச் செய்து முடித்தார். தேவ சிநேக சபையை ஏற்படுத்தி கி.பி. 1618ல் சபை ஒழுங்குகளை நிர்ணயித்து, ஆஸ்பத்திரிகளை நடத்தும் தொழிலை அதற்குக் கொடுத்தார். கடைசியாய்ப் போதக சபை என்ற ஓர் சபையை ஏற்படுத்தி, கி. பி. 1629ல் அர்ச். பாப்புவின் அங்கீகாரம் பெற்றார். இச்சபையோர் மேற்றிராணிமார்களுடைய உத்தரவின் மேலும், பங்குக் குருக்களது அனுமதியுடனும், கிராம ஜனங்களுக்குப் போதிக்கும் அலுவலைச் செய்தார்கள். கி. பி. 1633ல் இதற்கு 'லசார்' சபை எனப் பெயர் அளிக்கப்பட்டது. இது சீக்கிரத்தில்

பல தேசங்களிலும் பரவி, குருமடங்களை நடத்தி வந்தது. இவர் கி.பி. 1660 செப்டம்பர் 27ல் பாக்கியமாய் மரித்தார். கி. பி. 1737ல் இவருக்கு அர்ச்சியசிஷ்ட பட்டம் அளிக்கப்பட்டது.

## அந்நிய போதகம்.

இந்நூற்றாண்டில் ஐரோப்பாவில் வேதத்தைப் பாதுகாக்கச் செய்தவற்றை அறிந்தோம். இக்காலத்தில் பல வேறு குருக்கள் பிரதேசங்கட்குச் சென்று, வேதம் போதித்து அஞ்ஞானிகளை மனந்திருப்பினார்கள். இவர்கள் கிரீஸ், ஆப்பிரிக்கா, எகிப்து, இந்தியா, சீனா, அமெரிக்கா முதலிய தேசங்களில் வேதம் போதித்துத் திருச்சபையை நாட்டி, ஐரோப்பாவில் பதித மதத்தாலும் விசுவாசக் குறைவாலும், திருச்சபைக்கு நேர்ந்த நஷ்டங்களை நிவர்த்தி செய்தார்கள். இவர்களில் பெரும் பான்மையோர் பிராஞ்சு தேசத்தவர்கள் எனினும், இத்தாலியும், ஸ்பெயினும் இவ்வலுவலில் போதுமான சிரத்தை கொண்டன. கன்னடா தேசத்தாரும், தென் அமெரிக்கா, மத்திய அமெரிக்கா இந்தியர்களும் இக்காலத்தில் மனந்திரும்பினார்கள்.

## மற்ற அர்ச்சியசிஷ்டவர்கள்.

இந்நூற்றாண்டில் எல்லாத் தேசங்களிலும், எவ்வித அந்தஸ்திலும் பரிசுத்தத் தனம் விளங்கிற்று. இக்காலத்தில் தான் அர்ச். மார்கரீத் மரியம்மாள் இருந்தது. இந்த அம்மாளுக்குத் திவ்விய இரட்சகர் அருளிய வாக்குத் தத்தங்களால் திரு இருதயத் திருநாளும், வணக்கமும் ஏற்பட்டன. இதே காலத்தில் இந்தியாவில் வேதம் போதித்து மறவன் தேசத்தில் வேதத்துக்காய்த் தலை வெட்டுண்டு முத்திப்பேறு பெற்ற * அருளாந்தையர் வேத சாட்சியானார்.

## 4. பாப்புகள்.

டிரென்ட் சங்கத்திற்குப் பின் வந்த பாப்புகள் எல்லோரும் அதிக உற்சாகமும் மேலான ஒழுக்கமும் உடையோர்கள்

* முத். அருளாந்தையர் சரித்திரம் பார்க்க.

ஆனதுபற்றித் திருச்சபை விரோதிகள் முதலாய் அவர்களுடைய ஒழுக்கமுள்ள நடத்தையை மேம்படுத்திப் பேசுவது வழக்கம்.

கி.பி. 1621ல் பாப்பான 15-ம் கிரெகோரி கர்தினால்களுக்குள் 'விசுவாசப் பரம்புதல்'என்ற ஓர்சபையை உண்டாக்கி உலகமெங்கும் அந்நிய போதகத்தைக் கண்காணித்துவரக் கட்டளையிட்டார். இவரே அர்ச். பாப்பைக் குறிக்கும் விஷயமாய்க் கடைசியான ஏற்பாடு செய்தவர்.

கி. பி. 1667ல் பட்டத்துக்கு வந்த 9-ம் கிளமெண்டு பல வழிகளிலும் திருச்சபையில் சமாதானம் நிலைப்பிக்க முயன்றார். இவருடைய தர்ம நடக்கைகளால் அநேக அவ விசுவாசிகள் மனந் திரும்பினார்கள். வாரத்தில் இரண்டு நாள் தம்மைப் பார்க்க வருகிற யாவருக்கும் பேட்டி அளிப்பார். அடிக்கடி ஆஸ்பத்திரிகட்குப் போய்த் தாம் வியாதிக்காரராயினும், நோயாளிகட்குத் தம் முடைய கையினால் ஒத்தாசை செய்வார். சுகமாயிருக்கும் காலத்தில் ஒவ்வொரு நாளும் பன்னிரண்டு யாத்திரிகளை அழைத்துத் தாமே போசனம் பரிமாறுவார். அநேக அவவிசுவாசிகள் தங்களை ஏழைகள் போல் நடித்து இவரைச் சோதிக்க வந்து, இவரது மேலான நற்குணங்களைக் கண்டு மனந்திரும்பினார்கள்.

கி. பி. 1676ல் 11-ம் இன்னோசெண்டு பட்டத்துக்கு வந்து, பிராஞ்சு தேசம் திருச்சபையினின்று பிரிந்துபோக இருப்பதைக் கண்டு மிக விசனமுற்றார். கி. பி. 1683ல் போலாந்து தேசத்தரசன் *சோபிபெஸ்கி வியன்னா நகரில் துருக்கர் மேல் அடைந்த ஜெயத்தால் மகிழ்வுற்றார். இது முதல் துருக்கர் ஆட்சி ஐரோப்பாவில் குறைந்து வந்து, சென்ற ஐரோப்பா யுத்தத்தில் முழுதும் அழிக்கப்பட்டும், ஐரோப்பிய அரசாட்சிகள் கொன்ஸ்தாந்தினோப்பிலி பட்டணத்தை யார் வைத்துக் கொள்ளுதல் என்பதில் அந்நியோந்நியம் இன்றி, அப்பட்டணமும் அதை அடுத்த சொற்ப தேசமும் மறுபடியும் துருக்கருக்கு விடப்பட்டு இருக்கின்றன.

---

* அர்ச். சூசையப்பர் வணக்கமாதத்தில் காண்க.

# 3-ம். அத்தியாயம்.

## தத்துவ சாஸ்திரம் கி. பி. 1700—1793.

உட்பிரிவுகள்:—

அவவிசுவாசப் பரம்பல்; பாப்புகள்.

### அவவிசுவாசக் காரணங்கள்.

அவவிசுவாசத்திற்கு முக்கிய காரணங்கள் கல்விச் செருக்கும், மனக்கேடுமாம். இக்காரணங்களினாலேயே இங்கிலாந்து திருச்சபையினின்று பிரிவுண்டது. லூத்தர், கால்வின் முதலியோருடைய தப்பறைகளுக்கும், தற்காலத்திய பலவித அவவிசுவாசங்கட்கும் இவையே மூலகாரணங்களாகி, இப்போதனைகளைக் கொண்டோர் ஒருவரை யொருவர் தாண்டிச் செல்ல முயன்று, தங்கள் அறிவுக்கெட்டாத விசுவாச சத்தியங்களையும், மனம்போன போக்கெல்லாம் திரியாது தடுக்கும் கற்பனைகளையும் நாளுக்கு நாள் நீக்கி வருகிறார்கள். தற்காலத்தில் ஐரோப்பாவின் பலவித அநாச்சாரங்கட்கும் மூலமாகிய புரோட்டெஸ்டாண்டு மதத்தினின்று பிறந்து, முதலில் இங்கிலாந்தில் துவக்கி, இந்த அவவிசுவாசம் பிராஞ்சிலும், பின்னர் ஐரோப்பா முழுதும் தத்துவ சாஸ்திரம் என்னும் பெயருடன் பரவியது. இதற்கு முன்னதான ஜான்செனிய கொள்கை ஏற்கனவே ஐரோப்பாவைப் புரட்டி இருந்ததால், அவவிசுவாசம் சுலபமாய்ப் பரம்பலாயிற்று. ஜான்செனியர் அர்ச். பாப்பையும், மேற்றிராணிமார்களையும் எதிர்த்து, விரோதித்துப் போதித்து வந்ததினால், திருச்சபைக்கு ஏற்பட்டிருந்த மதிப்பு ஏற்கனவே சற்றுக் குன்றியிருந்தது. இச்சமயத்தில் தத்துவ சாஸ்திரிகள் என்று பலர் கிளம்பி அவவிசுவாசத்தைப் போதிக்க, முதலில் பிரபுக்கள் ஐசுவரியவான்களும், அப்பால்

சாதாரண ஜனங்களும் இவர்களைச் சுளுவாய்ப் பின் தொடர்ந்தார்கள். ஆகையால் திருச்சபை அதிகாரிகளுடைய குரலொலி, எங்கும் வனாந்தரத்தில் கூவிய குரலொலி போலாயிற்று. திருச்சபையால் கண்டிக்கப்பட்டுத் தத்துவ சாஸ்திரிகள் தேச சர்க்கார்களையும், சட்ட சபைகளையும் தங்கள் வசப்படுத்தி, அவைகளால் தங்களைக்கண்டிக்கும் மேற்றிராணிமார் முதலியோரைக் குரூரமாய் நடத்த ஏற்பாடு செய்தார்கள். மேற்றிராணிமார்களுடைய நிரூபங்களைப் பகிரங்கமாய்த் தீயிலிட்டு வேகவைத்து, அவர்களைத் தேசத்தினின்று துரத்தியும், வேறு பலவழிகளிலும், துன்பம் செய்து, தங்கள் தப்பறைகளை நிலைநாட்டினார்கள்.

## இச்சாஸ்திரத்தின் முக்கிய கர்த்தாக்கள்.

தத்துவ சாஸ்திரத்தை விசேஷ விதமாய்ப் போதித்தோர் ஜீன் ஜாக்குவெஸ் ரூசோவும், வோல்ட்டேரும். ரூசோ போதிப்பதில் மிக்க சாதுரிய முடையவன். தான் போதிக்கும் போதனைகள் முற்றும் தப்பறை யாயினும், அவற்றை உண்மைபோல வெகு சாமர்த்தியமாய் எடுத்துப் போதித்து, ஜனங்களுடைய மனதைக் கிரகிக்கும் வல்லமை உடையவ னாதலால், "பொய்யுடையொருவன் சொல் வன்மையினால், மெய்போலும்மே, மெய்போலும்மே" என்ற மூதுரை வாக்கியம் இங்கு பலித்தது.

இவனது செருக்கு எவ்வளவெனில், "சர்வேசுரன் தன்னைப் பார்க்கிலும் சாமர்த்தியமுடைய ஓர் மனிதனை உண்டாக்கக் கூடுமோ" என்று சபதம் கூறினான். இப்படிச் சபதம் கூறிய இவன் நீசத்தனமாய்ப் பின்னர் நாண்று கொண்டு மரித்தான். இதுவே இவனுடைய சாஸ்திரப் பயன்.

வோல்ட்டேர் முன் காலத்திய ஜூலியனைப் போல் நமது கர்த்தரைத் துவேஷித்து, அவரைச் "சண்டாளனே" என்று சாற்றி, கிறிஸ்து மதத்தை இருபது வருஷங்களில் வேரோடு அறுப்பேனெனச் சபதஞ் செய்தான். ஆனால் இருபதாம் வருஷத்தில்

கடின வியாதிகண்டு பலகாலம் வருந்தி இவன் அபலமாய்ச் செத்தான். இவர்களைப் பின் தொடர்ந்தோர் அவ்விசுவாசத்தில் மிக்க ஆழ்ந்து ரகசியசபையோரும் (Free masons), சுவக்கியான மதத்தோரும் (Rationalists), தற்கால கொள்கையோரும் (modernists) இன்னும் மற்ற பல அவவிசுவாச சபைகளோராகி, அநேகரை ஏமாற்றித் தாங்களும் மிருகங்களைப்போல் சீவித்து நிர்ப்பாக்கியராய் மரிக்கிறார்கள்.

## சேசு சபை அழிக்கப்பட்டது.

பாப்புகளும், மேற்றிராணிமார்களும், கல்வி நிபுணர்களான குருக்களும், மடாதிபதிகளும் விசுவாசத்தைக் காத்து, தத்துவ சாஸ்திரிகளது துர்ப்போதனைகளைப் பிரசங்கங்களினாலும்,பிரபந்தங்களினாலும் அடக்கிவந்தார்கள். ஆயினும் டிரென்ட் சங்கத்திற்குப் பின்னால் திருச்சபையில் அதிகரித்த நன்மைகளால் பொறாமை கொண்ட பசாசு, அந்த நன்மைகளுக்குப் பதில் பன்மடங்கு தின்மை விளைவிக்க ஏற்பட்டு, இத்தத்துவ சாஸ்திரிகளுள் புகுந்தமையால், உலகமே ஒரே கட்டாய்த் திருச்சபையை விரோதித்துச் சத்தியத்தைத் தள்ளி அசத்தியமே வேண்டுமெனக் கிளம்பியது போன்றது. ராசாக்கள், தத்துவ சாஸ்திரிகள், பிரபுக்கள் முதலியோர் இதற்குக் கங்கணம் கட்டிக் கொண்டார்கள். இச்சமயத்தில் திருச்சபையைக் காத்து விசேஷ போர் புரிந்தவர்கள் சேசு சபையாரே! ஆகையால் அவவிசுவாசிகள் எல்லாத் தேசங்களிலும், தங்களை எதிர்த்துத் தங்கள் கொள்கைகளை நிர்மூல மாக்கும் இச்சேசு சபையை எவ்விதத்திலும் அழித்து விட்டால் தங்கள் கருத்துகள் சுலபமாய் நிறைவேறுமென எண்ணித் தேச சர்க்கார்களை வசமாக்கி, அவர்களால் இச்சபையை அழிக்கப் பல ஏற்பாடுகளும் செய்தார்கள். பாப்புகள், மேற்றிராணிமார்கள், இச்சபையைப் பாதுகாக்கச் செய்த முயற்சிகள் எல்லாம் பயனற்றுப் போயின. பிராஞ்சு, ஸ்பெயின், நேப்பில்ஸ், போர்த்துக்கல் முதலிய கத்தோலிக்க தேச சர்க்கார்கள் சேசுசபை தங்கள் தேசங்களில் இருக்கக் கூடாதெனச் சட்டம் பிறப்பித்து,இச்சபையாரை நீசக்குற்றவாளிகளை நடத்துகிற

மாதிரியாய் நடத்தி வெளியேற்றினார்கள். இதுவுமன்றி இச் சபையை வேரோடே அழிக்கவும், அர்ச். பாப்பைப் பலவிதத்திலும் வற்புறுத்தினார்கள். அர்ச். பாப்பும், பிரிவினைபால் ஏற்படக்கூடிய தீமைகள், இதினும் மிக அதிகம் ஆதுமாதலால், அதிகமான தீமைகளைத் தடுக்க இச்சபையைக் கி. பி. 1773ல் அழித்தார். சத்தியம், ஒழுக்கம், நீதி முதலியவற்றைப் பகிரங்கமாய்ப் போதித்துத் தத்துவ சாஸ்திரிகளை எதிர்த் தடக்கி வந்த இச்சபையோர் நீங்க, கி. பி. 1793ம் ஆண்டுக்குள், திருச்சபையின் அதிகாரத்தைத் தொலைக்க ஏற்பட்டோர், தேச அதிகாரத்தையும், தேச ஒழுங்குகளையும், அழிக்க எழும்பிப் பிராஞ்சு தேசத்தில் ராசகலகம் எழுப்பி ராசன், ராக்கினி, பிரபுக்கள் ஆகப் பல்லாயிரம் பேரைக் கொன்று தத்துவ சாஸ்திரப் பசாசுக்குப் பலியிட்டனர். திருச்சபையை அநுசரியாது அபத்தப் பொய்களைப் பரப்ப உதவி செய்த ராசகுலத்தோரும், பிரபுக்களும், "ஐயோ ஏமாந்தோம்! அந்தோ சாகிறோம்!" எனக் கூக்குர லிட்டுக் கொண்டு தேசந் தேசமாய் ஓடினார்கள். ஐரோப்பாவும் இத்துர்ப் போதனைகளை அடக்காது,ஏற்றுக் கொண்டதின் காரணமாக, கி. பி. 1793 முதல் 1815 வரையில் எக்காலத்தும் நடந்திராத கொடும் போரால் அநுபவித்த கஷ்ட நஷ்டங்களைக் கருதவும் எழுதவும் முடியாது.

## 2. பாப்புகள்.

9-ம் கிளமெண்டு கி. பி. 1700ல் சிம்மாசம் ஏறினார். இவர் தாம் ஜான்செனிய கொள்கையை முற்றிலும் தொலைத்தவர். இவர் மகா தருமசிலர். கி. பி. 1720ல் மார்சேல்ஸ் பட்டணத்தில் பிளேக் தொடங்கப் பிரபுக்கள், ஐசுவரியவான்கள், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் ஓடிப்போனார்கள். ஆஸ்பத்திரிகளிலும், வியாதிக்காரர் சாலைகளிலும் உதவி செய்வோர் யாருமில்லை. இச்சமயத்தில் அவர்கள் மேற்றிராணியார் மட்டும் நீங்காது உதவி புரிவோரானார். ஜனங்கள் அவரை நோக்கி, "நீரும் விட்டுப்போம்" என்றார்கள். அவர் அவர்களை நோக்கி, "நான் என் ஜனங்கட்குத் தகப்பன் ஆனமையால், என் சீவனும், காலமும் அவர்களுக்கே

சொந்தம். இதுவே சர்வேசுரனுடைய சித்தம்'' என்று சொல்லி அங்கேயே தங்க, மற்ற குருக்களும் அவரைப் பின் தொடர்ந்தார்கள். அவர் இரவும் பகலும் வியாதிக்காரரைச் சந்தித்துத் தேறுதல் சொல்லியும், பிரசங்கித்தும், தாகந்தீர்த்தும், அவர்களுடைய பாவசங்கீர்த்தனங்களைக் கேட்டும் உதவி புரிந்து வந்தார். அர்ச். பாப்பு இவற்றையெல்லாம் அறிந்து மிக்க திருப்தியடைந்து அவருக்கு இரண்டு நிருபங்கள் எழுதினதும் அன்றி, வியாதி அடைந்தவர்களுக் கெல்லாம் பரிபூரணபலனையும் அளித்தார். மேலும் மூன்று கப்பல்களில் தானியம் நிரப்பி மார்சேல்ஸுக்கு அனுப்பினார். அதில் ஒன்று சமுத்திரத்தில் ஆழ்ந்து போயிற்று. மற்ற இரண்டையும் ஆப்பிரிக்கா மகமதியர் கொள்ளை கொண்டார்கள். ஆனால் அவைகள் அனுப்பப்பட்ட காரணம் அறிந்து, மனங் கரைந்து வந்த வழியே போக விட்டார்கள். கி. பி. 1720 நவம்பர் 1ல் மேற்றிராணியார் தமது மேற்றிராசனத்தைத் திரு இருதயத்துக்கு ஒப்புக்கொடுக்க, அன்றுமுதல் பிளேக் அமர்ந்து சீக்கிரம் நீங்கியது.

## அர்ச்சியசிஷ்டவர்கள்.

### அர்ச். அல்போன்ஸ்சுஸ் லிகோரி.

பதினெட்டாம் நூற்றாண்டின் பல அர்ச்சியசிஷ்டவர்களுக் கெல்லாம் இவரையே முதன்மையாய்க் கொள்ளவேண்டும். இவர் கி. பி. 1696ல் நேப்பில்ஸில் பிறந்தார். இவரே 'பரிசுத்த உலக ரட்சகர் சபையை' ஸ்தாபித்தவர். இவர் பின்னால் மேற்றிராணிப் பட்டம் அடைந்து, வோல்ட்டேர் முதலியோருடைய அவவிசுவாசத்தைக் கண்டித்து அடக்கிப் புண்ணியங்களை விளையச் செய்து கடைசியாய் கி. பி. 1787ல் பாக்கியமாய் மரித்தார். பரம தேவநற்கருணைச் சந்திப்பு என்னும் ஜெபம் இவர் உண்டாக்கியதே. தற்காலம் இவரது "ஒழுக்க சாஸ்திரம்'' என்னும் புத்தகம் ஒவ்வொரு குருவிடமும் உண்டு. கி. பி. 1816ல் அர்ச்சியசிஷ்ட பட்டமும், கி. பி. 1838ல் திருச்சபையின் 'சாஸ்திரி' என்ற பட்டமும் இவருக்கு அளிக்கப்பட்டன.

# ஏழாம் பாகம்.

## ராச கலகம் கி. பி. 1789—1914.

### 1-ம் அத்தியாயம்.

### ராச கலகம். கி. பி. 1789—1878.

உட்பிரிவுகள்:—

6-ம் பத்திநாதரும், ராசகலகமும்; 7-ம் பத்திநாதரும், நேப்போலியனும்; 16-ம் கிரேகோரியும், ராச கலகமும்; 9-ம் பத்திநாதரும், 3-ம் நேப்போலியனும்.

#### 1. 6-ம் பத்திநாதரும், ராசகலகமும்.

6-ம் பத்திநாதர் கி. பி. 1774ல் சிம்மாசன மேறினார். அச்சமயத்தில் கர்தினால்களை நோக்கி, "என்னைப் பாப்புவாய்த் தெரிந்து கொண்டீர்கள். ஆனால் இது எனக்கு மிக்க துன்பத்திற்குக் காரணமாகும்" என்று செப்பியிருந்தார். முதலில் சமாதானம் ஏற்பட்டிருந்தமையால், இக்காலத்தில் திருச்சபை நாட்டில் பல சீர்திருத்தங்கள் செய்தார். எனினும் அவவிசுவாச தத்துவ சாஸ்திரம் இவரைச் சும்மா விடவில்லை. ஆஸ்டிரியாவின் ராயன் 2-ம் ஜோசேப்பும், அவர் சகோதரன் டஸ்கனி குறுநிலமன்னனும், தங்கள் தேசங்களில் அவவிசுவாச போதனைகளை அனுசரித்துத் திருச்சபைக்கு விரோதமான பல ஏற்பாடுகள் செய்தார்கள். சன்னியாசசபைகளைக் குரூரமாய் நடத்தியும், சன்னியாசமடங்களைக் குறைத்தும், குருக்களுக்குச் சேர்ந்த பூஸ்திதிகளைக் கவர்ந்தும்

பாப்புடைய அநுமதியின்றித் தேச சர்க்காரின் அநுமதியுடனே மேற்றிராணிமார்கள் குறிக்கப்பட வேண்டும் எனவும், இன்னும் இப்படியான பல ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

அர்ச். பாப்பு தாமே வியென்னு பட்டணம் சென்று ராயனைக் கண்டு, இவ்வேற்பாடுகளை நீக்க எண்ணினர். இப்படிப் பாப்பு தம் தேசத்திற்கு வெளியில் போவது பல நூற்றாண்டுகளாய் வழக்கம் இல்லையாதலால் கர்தினல்கள் இதற்குச் சம்மதிக்க வில்லை. எனினும் அர்ச். பாப்பு அதற்கு இணங்காமல் வியென்னுவுக்குச் சென்றார். கி. பி. 1782 மார்ச்சு 22ல் இவர் வியென்னு சேர, வி-வாசிகள் அனைவரும் வந்து சூழ்ந்து முழந்தாள் மடித்து வரவேற்றனர். ராயனும் வெகு மரியாதையுடன் ஒழுகி, முன்கூறிய ஏற்பாடுகளை நீக்குவதாய் வாக்குத்தத்தம் செய்தார். ஆயினும் பின்னல் வாக்குத் தத்தத்தை நிறை வேற்றவில்லை. ஜோசப் ராயனும் இதற்குத் தண்டனை அடையாமல் போகவில்லை. இப்போது பெல்ஜியம் என்று சொல்லப்படும் தேசம் விரோதித்துக் கிளம்பிப் பின் ஆஸ்டிரியாவி னின்று முழுதும் பிரிந்தது. அப்பால் கி. பி. 1866ல் ஜெர்மனியிலிருந்த சுதந்திரம் எல்லா மிழந்து, கடைசியாய் கி. பி. 1914ம் ஆண்டில் துவக்கிய யுத்தத்தால் ஆஸ்டிரியா ஸாம்ராச்சியம் முற்றும் ஒழிந்து, ராச வம்சம் துரத்தப் பட்டு, ராசாங்கமே அற்றுப் போயிற்று.

## பிராஞ்சு ராச கலகம்.

தத்துவ சாஸ்திரக் கொள்கையின் பயனுகப் பிராஞ்சு தேசத்தில் பலவிதமாய் வேத விரோதங்கள் ஏற்பட்டன. தத்துவ சாஸ்திர அவவிசுவாசம் வேதத்தையும், ராசாங்கத்தையும், உலகில் ஏற்பட்டிருக்கும் எல்லாவித நல்லொழுக்க ஏற்பாடுகளையும் தொலைக்க எழும்பியதால், கி. பி. 1789ல் பிராஞ்சு ராச்சியத்தில் சீர்திருத்தங்கள் செய்யவெனக் கூடிய பார்லிமெண்டு சங்கம் ராசாங்கத்துக்கு மட்டுமின்றி, வேதத்துக்கும் பெருத்த தின்மைகளை விளைவித்தது. குருக்களுடைய பூஸ்திதிகளைக் கைக்கொள்ளவும்,

அதற்குப் பதிலாக அவர்கட்குச் சம்பளம் அளிக்கவும், சன்னியாச மடங்களில் வசிப்போர்கள் சுயாதீனம் இல்லாதவர்களென்று அம்மடங்களை நீக்கவும், அவைகளிலுள்ள சன்னியாசிகளையும், கன்னியர்களையும் பலாத்காரமாய் வெளியில் துரத்தவும் சட்டங்கள் பிறந்தன. இம்மட்டுமின்றி, மேற்றிராசனங்களைக் குறைத்து ஒவ்வொரு மேற்றிராசனமும், தேச ஜில்லாவுடன் சேர்க்கப்பட்டு, மேற்றிராணிமார்களையும் பங்குக் குருக்களையும் ஜில்லாப் போர்டுகளே தீர்மானிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இப்படியாய்த் திருச்சபையின் அதிகாரமும், சுதந்தரங்களும் கொள்ளை கொள்ளப்பட்டதுமன்றித் திருச்சபை அதிகாரிகள் தேச சர்க்காருக்கும், சட்ட சபைக்கும், ஜனங்களுக்கும் ஊழியர்கள் போலானார்கள்.

ஆகையால் 6-ம் பத்திநாதர் இச்சட்டங்கள் பிரிவினை உண்டாக்குபவை என்றும், இவ்விதமாய்க் குறிக்கப்படும் மேற்றிராணிமார்கள் திருச்சபையின் மேற்றிராணிமார்கள் அல்லவென்றும் தீர்மானித்தார். அநேக மேற்றிராணிமார்களும் குருக்களும் இதைப் பின் தொடர, பிராஞ்சு தேசத்தில் ஆதி திருச்சபையில் தோன்றிய வேத கலகங்களைப் போலக் குரூரமான கலகம் ஏற்பட்டது. மடங்களை இடித்துப் பொருள்களைக் கொள்ளை கொண்டு, அவைகளிலுள்ள, கோயில்களையும், சுரூப முதலியவைகளையும் உடைத்து நாசம் செய்தார்கள். தேசத்தில் தேவாராதனைகளையும் பூசைக் கைங்கிரியங்களையும் நிறுத்திக் கோயில்களிலுள்ள பூஸ்திதிகளெல்லாம் பறிகொண்டு, குருக்கள் சன்னியாசிகளைக் கொன்று, வேதத்தை முற்றும் அழிக்கத் தலைப்பட்டார்கள். கி. பி. 1793ல் தங்கள் ராசனைக் கழுவேற்றி மகா கொடியவர்கள் கூடிய ஓர் குடியரசு ராசாங்கம் ஏற்பட்டது. இதை நடத்தியவர்கள் எல்லோரும் அக்கிரமமே உருவெடுத்தது போன்ற நீசக் குணம் உடையவர்கள். இவர்கள் சற்றுமுன் ஏழைகளாய்த் தெருக்களில் திரிந்து சகலவித அக்கிரமங்கட்குந் தலைப்பட்டுக் கலக காலத்தில் தேசத்தில் சமாதானம் அற்றுப்போய்த் துஷ்டர்கள் எங்கும் முன்னுக்கு வந்து, யோக்கியர்கள் தங்கள் உயிர்க்கும், சொத்துக்கும் பயந்து ஒழிந்துகொள்ள ராசாங்கத்தை நடத்தியவர்கள்.

இவர்கள் சர்வேசுரனுடைய வணக்கத்தை அழித்து; "புத்தி தேவி வணக்கம்" (Worship of Reason) என்ற ஓர் பொய் வணக்கத்தை ஏற்படுத்தித் தேவாலயங்களில் சர்வேசுரனுக்குப் பலி நடத்தி வந்த பலி பீடங்களில், மிகக் கேவலமான தொண்டுகளை இருத்தி வைத்து, அவர்களுக்குத் தூபம் கொடுத்தார்கள். ஐயோ! அஞ்ஞானத்திலும் அஞ்ஞானம்!

இக்கொடியர் செய்யும் நிஷ்டூர செயல்களுக்குத் தப்பித்த குருக்களின் ஒவ்வொரு தலைக்கும், இத்தனை பணம் வெகுமதி கொடுத்தல் எனப் பகிரங்கம் செய்தார்கள். ஆயினும் இக்காலத்தில் முதலாய் குருக்கள் இல்லா திருக்கவில்லை. ஆதி திருச்சபையில் போலவே இரவிலும், தனியான இடங்களிலும், காடுகள், குகைகளிலும்,தேவபலி நடத்தப்பட்டு விசுவாசிகளுக்கு வேண்டிய ஆறுதல்கள் செய்யப் பட்டன. இப்படி ஒளிந்து வந்த குருக்களில் அநேகர் கழுவேற்றப் பட்டும், வேறு அநேகர் இவர்களுக்குப் பதிலாய் வந்தமையால், வேதம் சற்றும் அழிவுறவில்லை.

## 6-ம் பத்திநாதரின் பாடுகள்.

கி. பி. 1795ல் பிராஞ்சில் முந்திய ராசாங்கம் அழிந்து வேறோர் ராசாங்கம் நியமிக்கப்பட்டது. இப்போது கலகக்காரர் தங்களுடன் கூடாமல் தங்கள் செய்கைகளைக் கண்டனம் செய்து வரும் அர்ச். பாப்புவை விசேஷமாய்த் தாக்கினார்கள். கி. பி. 1798ல் பிராஞ்சு படைகள் திருச்சபை நாட்டுக்குள் சென்று பாப்புவின் அரசியலை நீக்கிக் குடியரசு ஏற்படுத்தி அவரைச் சிறைப்படுத்தினார்கள். ஆனால் அவர் ரோமையில் இருப்பதால் காரிய முழுதும் தங்கள் இஷ்டப்படி சித்தியாதது கண்டு, அவரை சியெனா, பிளோரென்ஸ், பார்மா, தூரின், கடைசியாய்ப் பிராஞ்சுக்கும் கொண்டு சென்றார்கள். அவர் சென்ற எல்லா விடங்களிலும் சேவகர் அவரை முழுதும் மறைத்து வைத்தும்,அவரைப் பார்க்க வரும் ஜனங்களைப் பலவிதக் குரூரங்களால் துரத்த முயன்றும், ஜனங்கள் ஏகமாய்க் கூடித் தரையில் சாஷ்டாங்கமாய் விழுந்து வரவேற்றார்கள்.

வாலென்ஸ் பட்டணம் சென்றதும், அவர் அசௌக்கியத்தால் உயிர் துறப்பார் என அறிந்த சேவகர் அங்கேயே அவரைத் தங்குவிக்க அவரும் தம்முடைய அந்திய காலம் கிட்டியது கண்டு, கடைசித் தேவத் திரவிய அநுமானங்களைப் பெற்றுத் தம்மை விடாது பின் தொடர்ந்து வந்த ஊழியர்களைத் தேற்றி வந்தனமளித்து, கி.பி. 1799ம் ஆண்டு ஆகஸ்டு 29ல் அர்ச்சியசிஷ்டவராய் மரித்தார்.

## 2. 7-ம் பத்திநாதரும், 1-ம் நெப்போலியனும்.

### 7-ம் பத்திநாதரின் தேர்தல்.

6-ம் பத்திநாதர் மரித்ததும், வேத விரோதிகள் இவரே கடைசிப் பாப்பெனக் கதறினர்கள். சேசுநாதர்சுவாமி, "நரக வாசல் திருச்சபையை மேற்கொள்ளாது, நாம் திருச்சபையுடன் கடைசி பரியந்தம் இருப்போம்" என்று செய்த வாக்குத்தத்தத்தை இவர்கள் மறந்து விட்டார்கள் போலும்! கர்திநல்கள் எங்கும் சிதறி யிருந்ததால் அவர்கள் ஓரிடத்தில் கூடுவது அசாத்தியமாய் இருந்தது. ஆயினும் சர்வேசுரன் அதற்குப் போதுமான வழி செய்யாதிருக்க வில்லை.

பிராஞ்சுக்காரர் இத்தாலியைக் கைக்கொண்டதும், ரோமையில் குடியரசு எற்படுத்தியதும், அவர்கள் படைக்குத் தளக்கர்த்தனை நெப்போலியனுடைய உதவியால் நடந்தேறியவாம். கி.பி. 1798ல் நெப்போலியன் இந்தியாவைப் பிடிக்க எண்ணி எகிப்துக்குச் செல்ல, அங்கே நீல நதி முகத்துவாரத்தில் பிராஞ்சு கப்பற்சேனை இங்கிலீஷ்காரரால் அழிக்கப்பட்டதால், நெப்போலியன் பிராஞ்சுக்குத் திரும்பிச் சேரமுடியாது போக, கி.பி. 1799ல் இங்கிலாந்து, ஆஸ்டிரியா, ருசியா, பிரசியா, முதலிய சுமார் இருபது தேசங்கள் ஒன்றாய்க் கூடிச் சர்வேசுரனுக்கும், மனுஷனுக்கும் விரோதிகளாய்க் கிளம்பித் தின்மை செய்து வரும் பிராஞ்சின் கலகக்காரரைத் தொலைக்க முன்வந்தன. இவர்கள் பிராஞ்சுக்காரரை, இத்தாலி, ஜெர்மனி, உவர்லாந்து, முதலிய தேசங்களில் நின்று துரத்திக் கடைசியாய்ப் பிராஞ்சுக்குள்ளும் நுழைய ஆயத்தமானர்கள்.

பதித மதத்தைத் தழுவிய இங்கிலாந்து, பிரிவினைபைச் சார்ந்த ருசியா, தப்பறையைக் கைக் கொண்ட ஆஸ்டிரியா, இன்னும் பல நாடுகள் சேர்ந்து பிராஞ்சுக்காரரை இச்சமயம் முறியடித்தல், திருச்சபைக்குத் தலைவரை ஏற்படுத்தச் சர்வேசுரன் செய்ததே. தங்கள் விரோதிகளை அழிக்க எழும்பித் தாங்கள் செய்வது முதலாய் இன்னதென அறியாது இத்தாலிக்குட் சென்று பிராஞ்சுக் காரரைத் துரத்துகிறார்கள். தப்பறையுள்ள ஆஸ்டிரியா மன்னன் வெனிஸ் பட்டணத்தில் கர்தினால்களைக் கூட்டிப் பாப்பைக் குறிக்கிறதுக்குத் தானே உதவி புரிகிறான். சர்வேசுரன் தம் எதிரிகளை ஜெயிக்கும் முறை மிகப் புதுமை யன்றோ? கி பி. 1800ல் 7-ம் பத்திநாதர் வெனிஸில் குறிக்கப்பட்டு ரோமை சென்று சிம்மாசன மேறினார்.

இச்சமயத்தில் ஐரோப்பிய யுத்தம் மாறுபட்டது. ஐரோப்பாவின் அவவிசுவாசத்துக்காய்க் கடவுள் நெப்போலியனைக் கொண்டு மறுபடியும் அதை முற்றும் தண்டிக்கக் கருதினார் போலும், அர்ச். பாப்பு ரோமை சேர்ந்ததும், நெப்போலியனும் எகிப்திலிருந்து பிராஞ்சு சேர்ந்து, முந்திய ராசாங்கத்தை நீக்கித் தன்னைப் பிராஞ்சின் முதல் அதிகாரி யாக்கிக்கொண்டு ஐரோப்பாவின் மேல் யுத்தம் தொடங்க, முந்திய விரோதிகள் எல்லாம் பின்வாங்கி,பிராஞ்சியர் முன்னிலும் பராக்கிரமசாலிகளாய் ஐரோப்பாவுக்கே ராக்ஷதர் போன்றார்கள். ஆகவே தம்முடைய ஸ்தானாதிபதியாகிய பாப்புவைக் குறிக்கிறதற்கே சர்வேசுரன் அநேக நாடுகளை முன் ஒருங்கு சேர்த்தார் என்றோமாகில் யாது தப்பிதம்?

## பிராஞ்சுடன் உடன்படிக்கை.

நெப்போலியன் பிராஞ்சின் பகைவர்களை முறியடித்த பின்னர் கி.பி. 1803ல் தன்னைச் சக்கரவர்த்தி யாக்கிக்கொண்டு, திருச்சபையின் மட்டில் முந்தினவர்களைப் போல் தான் விரோதமின்றி இருப்பதாய் அர்ச். பாப்புக்குத் தெரிவித்து, அவருடன் ஓர் உடன்படிக்கையும் செய்தான். ஐரோப்பாவுக்கே ராவணனைப் போன்ற

அவனைத் தக்க நியாயமின்றிப் பகை செய்தால் துன்பத்துக்கே ஏதுவாகுமாதலால், அர்ச். பாப்பு, வேதத்தையே அழித்துவிட ஏற்பட்ட பிராஞ்சில், வேதத்தின் நன்மையையே கருதியவராய், திருச்சபையின் அநேக சுதந்தரங்களை விட்டுவிட்டு, எப்படியும் சமாதானத்துக்கு இணங்கி வேதத்துக்கு நேர்ந்த பல தின்மைகளையும் நீக்கக் கருதினர். இவர் நெப்போலியன் விஷயத்தில் எவ்வளவு தம்மைத் தாழ்த்தினரெனில், கி. பி. 1804ல் நெப்போலியன் பாரீஸில் தனக்கு முடி சூட்டிக் கொள்ள, அவனுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, முன் ஒருகாலும் நடந்திராத சம்பவமெனினும், முடி சூட்டும் சடங்கைத் தாமே நிறைவேற்றப் போனர். அகங்காரங் கொண்ட நெப்போலியன் ஒருகாலும் நடைபெறாத இச்சம்பவத்துக்கு அர்ச். பாப்பு வந்துநடத்துதலே தனக்கு மகா கவரதையெனக் கொள்ளாது, பூசையில் அர்ச். பாப்பு அவனுக்கு முடிசூட்டத் திரும்புகையில் தானே தனக்கு முடி சூட்டிக் கொண்டான். கிறிஸ்து மதத்தை ரோமை ராசாங்கத்தார் ஏற்றுக் கொண்டது முதல் ஐரோப்பாவில் இவ்வித அநாச்சாரம் ஒருவரும் செய்ததில்லை என்றால், நெப்போலியனுடைய கர்வத்தை யார் அளவிடுவார்?

உடன்படிக்கையின் பின் பிராஞ்சு தேசத்தில் வேத கலகம் தீர்ந்து முன்போல் வேத ஒழுக்கம் நடந்தேறியது.

ஆனால் தனக்கு மேல் யாருமில்லை, எல்லாம் தனக்குள் அடங்கியது என்று அகங்காரச் செருக்குக் கொண்டிருந்த நெப்போலியனுடன் சமாதானம் எவ்வளவு காலம் நீடிக்கும்?

## பத்திநாதர் சிறை.

நெப்போலியன் தம்பி செய்து கொண்ட முதல் கலியாணத்தைப் பாப்பு ரத்துச் செய்யாதது, இத்தாலி தேசத்தில் திருச்சபை அதிகார ஏற்பாடுகள், பாப்பு நெப்போலியனுடைய விரோதிகள் மேல் சண்டை தொடுக்காதது, முதலிய காரணங்களால், கி. பி. 1809ல் நெப்போலியன் ரோமையில் நுழைந்து, சுய அரசாட்சி

ஏற்படுத்திப் பாப்பைச் சிறைப்படுத்திச் சாவோனுவுக்குக் கொண்டு போனன். பின் அங்கிருந்து நீக்கி போன்ட்டெபினெபுளோவுக்குச் சேர்த்து, 5 வருஷமளவும் கடின காவலிலிட்டு, உலகத்துக்கும், பாப்புக்கும் எவ்வித சம்பந்தமு மின்றிச் செய்தான். இங்கும் பாப்பு சமாதானத்தையே கருதி எவ்வளவு இணங்கக் கூடுமோ அவ்வளவும் செய்தும், சர்வேசுரன் சாபம் தலைக்கேறிய நெப்போலியன் ஐயோ பரிதாபம்! திருப்தி அடைந்தானில்லை. ஆகையால் சர்வேசுரன் சாபத்தால் இதுமட்டும் அபஜெயமே இன்னதென அறியாத பராக்கிரம சாலியான நெப்போலியன் கி. பி. 1813ல் ருசியாவின் மேல் படை எடுத்துச் சென்று தோல்வி அடைந்து, வரும் வழியில் ஜெர்மனியிலும் தோற்றுப்போய்ப் பிராஞ்சு சேர, இவனது சேனைகள் அதே காலத்தில் இத்தாலியிலும், ஸ்பெயினிலும் தோல்வியுற்றுப் பின்னடைய, சர்வேசுரன் குறித்த காலம் வந்ததும் மறுபடியும் ஒன்று கூடிய ஐரோப்பியர்கள் பிராஞ்சின் பல பக்கங்களிலும் நுழைய எத்தனித்தார்கள்.

## பத்திநாதர் சிறை மீட்கப்படல்.

இச்சமயத்தில் ஒன்றுந் தோன்றாது நெப்போலியன் தன் ஆட்சியை ராஜீநாமாக் கொடுக்க, எதிரிகள் இவனை இத்தாலிக்குப் பக்கத்தில் எல்பா என்னும் ஓர் சிறு தீவுக்கு அனுப்பி, இங்கிலீஷ் கப்பற் சேனையால் அத்தீவினின்று தப்பிக்காமல் காவலிட்டார்கள். அப்பால் அர்ச். பாப்பு கி. பி. 1814ல் சிறை மீட்கப்பட்டு ரோமை சென்றார். நெப்போலியனுடைய தாயார் இவரிடம் அடைக்கலம் புகுந்தனள். நெப்போலியனுடைய சிறிய தகப்பன் ஒருவர் கர்தினலா யிருந்தார். இவர் அர்ச். பாப்பைக் காண மிகவும் கூச்சப்படுவது கண்டு, பாப்பு "அவர் வரட்டும், வரட்டும்" எனக் கூறி இவரை விசேஷமாய் ஆதரித்தார். இப்படியாய்த் திருச்சபை நாடெங்கும் பிரசைகள் தங்கள் ராயர் சிறைநீங்கி மறுபடியும் தங்கட்குக் கிடைத்ததற்குச் சர்வேசுரனுக்கு மங்களம் பாடி மகிழ்ந்தனர்,

கி. பி. 1815ல் நெப்போலியன் எல்பாவிலிருந்து தப்பித்துப் பிராஞ்சு சேர்ந்து மறுபடியும் ராயனுனன். அர்ச். பாப்பு தமது ஞான திருஷ்டியால் இவ்வாட்சி மூன்று மாதங்கட்கு மேல் நிலையா தென அறிந்து செப்பியது போல், நெப்போலியன் நூறு நாட்களுக்கு மேல் ஆளவில்லை. திருச்சபைக்கும், அதின் தலைவருக்கும் இவ்விதமாய்த் தீங்குகளைச் செய்த நெப்போலியன் கி. பி. 1815ல் தோற்றுப் போய்ப் பிராஞ்சு விட்டு இங்கிலாந்து சென்று சிறைப்பட்டு ஆப்பிரிக்காவின் மேல் சமுத்திரத்தில் ஓர் தீவில் மிகக் கடின காவலில் வைக்கப்பட்டுக் கடைசியாய்த் தன் குற்றங்கள் எல்லாம் உணர்ந்து, தனக்கு அதிகமான தின்மை ஏற்பட்டது தன்னைப் போல் யுத்த வீரர்களான தன் பகைவராலன்றி, சமாதானத்தையே நாடியுள்ள அர்ச். பாப்புவால் என்றும், தான் கத்தோலிக்கனுய்ச் சாகிறேன், எனவும் சொல்லிக் கொண்டு மரித்தான்.

## சிறை நீங்கியபின் ஆட்சி.

7-ம் பத்திநாதர் தம் ஆட்சியைத் திரும்பப் பெற்றது முதல் தேசத்தில் அநேக சீர்திருத்தங்களைச் செய்து, திருச்சபையில் ஏற்பட்ட குறைவுகளை நீக்கி, சேசு சபையை மறுபடியும் நிலை நாட்டித் திருச்சபையிடத்து விசுவாசங் காட்டிய பல ராசாங்கங்களுடன் உடன்படிக்கைகளும் செய்தார். நெப்போலியன் குடும்பத்தார் பிறதேசங்களினின்று துரத்தப்பட அவர்களைத் தம் தேசத்தில் அன்புடன் வரவிடுத்து ஆதரித்து, நெப்போலியன் மரிக்கையில் கடைசி ஆசீர்வாதமும் அனுப்பினுர்.

ஆனுல் வேத விரோதிகளான ரகசிய சபைகள் திருச்சபை நாட்டில் பலவிடங்களில் தோன்றிப் புதிய கலகங்களுக்கு ஏற்பாடுகள் செய்து வந்தன. அர்ச். பாப்பு இவைகளைக் கண்டனம் செய்து கி. பி. 1826ல் பாக்கியமாய் மரித்தார்.

## கார்போனரி.

பிராஞ்சு தேசத்தில் தோன்றிக் கலகஞ் செய்த பிரிமேஷன் கொள்கை, பிராஞ்சு சேனை இத்தாலிக்குள் நுழைந்த போது,

அங்கும் பரவ, அதைச் சேர்ந்தவர்கள் தங்களைக் 'கார்போனுரி' எனப் பெயரிட்டுக் கொண்டார்கள். இவர்களுடைய முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு: இத்தாலியை முழுதும்ஒரே தேசமாய்க் கூட்டிக் குடியரசு ஏற்படுத்தல்; அர்ச். பாப்புவின் லௌகீக ஆட்சியை நீக்கல். இவர்கள் கி. பி. 1815ல் தோன்றி, கி.பி. 1817 முதல் கலகம் செய்தார்கள். 7-ம் பத்திநாதர் இப்படிப்பட்ட இரகசிய சபைகள் விஷயமாய் உலகுக்குப் போதுமான அறிக்கை செய்தும் உலக ராசாங்கங்கள் கவனிக்கவில்லை.

## 12-ம் சிங்கராயர். கி. பி. 1823—1829

இவர் பட்டத்துக்கு வந்ததும் பெரிய வியாதி கண்டு பிழைக்க மாட்டார் போலிருந்து புதுமையாய்த் தப்பித்தார். அப்போது ரோமையிலிருந்த ஓர் மேற்றிராணியார் தம் பூசைப் பலியில் அர்ச். பாப்புவின் உயிர்க்காய்த் தம்மைச் சர்வேசுரனுக்கு அளித்தார். உடனே ஞான திருஷ்டியால் சர்வேசுரன் தமது வேண்டுதலைக் கேட்டார் என அறிந்து தம்மோடு இருந்தவர்களுக்கும் சொன்னர். இவர் திடீரென வியாதி கொண்டு மரிக்க, அர்ச். பாப்பு வியாதி நீங்கிச் சொஸ்தப்பட்டார். இவர் தமது சொற்ப காலத்தில் திருச்சபைக்கும், உலகுக்கும், தமது தேசத்துக்கும் அநேக நன்மைகளையும், சீர்திருத்தங்களையும் செய்தார்.

## 8-ம் பத்திநாதர். கி. பி.1829—1830

இவர் காலத்தில் இங்கிலாந்தின் கத்தோலிக்கருக்கு அவர்கள் இழந்த சுதந்தரங்கள் எல்லாம் மறுபடியும் கொடுக்கப் பட்டன. கி. பி. 1830ல் பிராஞ்சில் ராச கலகம் எழும்பி வேறு சர்க்கார் ஏற்படுத்தப்பட, அர்ச். பாப்பு குறிக்கப்பட்ட சர்க்காருக்கு உண்மையாய் இருக்க வேண்டுமென மேற்றிராணிமார்களுக்குத் திட்டஞ் செய்தார்.

## 3. 16-ம் கிரெகோரியும், பிராஞ்சு ராசகலகமும்.

பிராஞ்சில் எழும்பிய ராசகலகம் ஜெர்மனி, போலாந்து, பெல்ஜியம், ஸ்பெயின், இத்தாலி முதலிய எல்லாத் தேசங்களிலும்

பரவியதுமின்றித் திருச்சபை நாட்டில் முழுமையும் பரவிற்று. ஆஸ்டிரியாவின் உதவியால் அர்ச். பாப்பு திருச்சபை நாட்டில் கலகத்தை அடக்கிப் பிரசைகளுடைய நன்மையின் பொருட்டு அநேக ஏற்பாடுகளைச் செய்தார். இன்னும் கலகம் எழும்பிய எல்லாத் தேசங்களிலும் திருச்சபைக்கு விளைந்த தீமைகளை நீக்க மிகப் பிரயாசையும் பட்டார்.

## விசுவாசப்பரம்புதல் சபை.

ஆனால் இவர் காலத்தில் நடந்தேறிய விசேஷமான சம்பவம் அந்நிய தேசங்களில் விசுவாசம் பரப்புதலாம். இவ்வலுவல் ஒவ்வொர் நூற்றாண்டிலும் மிகச் சிரத்தையுடன் கையாளப்பட்டு வந்தது நாம் அறிந்த விஷயமே.

இவ்வலுவலைச் சரியாய் முன்னேற்றி நடத்துதற்கு கி. பி. 1822ல் "விசுவாசப் பரம்புதல் சபை" லியான்ஸ் பட்டணத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் சேர்வோர் வாரம் ஒரு பென்னி (1 அணா) தர்ம சந்தா கொடுப்பதால் அநேக கோடித் திரவியம் இதுவரைக்கும் வசூலிக்கப்பட்டு, உலகத்தின் எல்லாக் கண்டங்களிலும் அன்னிய நாடுகளில் வேத போதகர்களுக்கு அனுப்பப்படுகிறது. இவ்விதமாய் ஆசியா, அமெரிக்கா, ஆஸ்டிரேலியா, ஆப்பிரிக்கா,பஸிபிக் சமுத்திரத் தீவுகள்,ஐரோப்பாவில் லாப்லாந்து, முதலிய பல கண்டங்களிலும், தேசங்களிலும் அந்நிய போதக சபைக் குருக்கள் பரம்பித் தற்காலம் சத்திய திருச்சபையில் சுமார் 300 கோடி ஜனத்துக்கு மேலிருக்கிறார்கள். அர்ச். பாப்புவின் ஞான ராச்சியமும் உலக முழுவதும் பரம்பி யிருக்கிறது.

## 4. 9-ம் பத்திநாதரும், 3-ம் நெப்போலியனும்.

கிரெகோரி பாப்பு மரித்ததும், திருச்சபைக்கு நேரிடப் போகும் துன்பங்களை அறிந்த சர்வேசுரன் அக்காலத்துக்குத் தகுந்த ஸ்தானாதிபதியைக் கர்தினால்களைக் கொண்டு தெரிந்து கொண்டார். 9-ம் பத்திநாதர் ஏற்கனவே மிகப் பேர்பெற்று,

ரோமையரால் விசேஷித்த விதமாய் நன்கு மதிக்கப் பட்டிருந்தார். இவரது பட்டாபிஷேகத்தின் பொருட்டு மகிழ்ந்து அநேக நற் காரியங்களை எதிர் பார்த்திருந்தார்கள்.

இவர் துவக்கத்திலிருந்து தமது பிரசைகளுடைய நன்மையை விர்த்திசெய்யவும், திருச்சபையின் மகத்துவத்தை அதிகரிப்பிக்கவும் கண்ணுங் கருத்து மாயிருந்தார். கீழ்தேச பிரிவினைக்காரரை மறுபடியும் திருச்சபை ஒற்றுமைக்குக் கொண்டுவர விரும்பி அவர்கட்கு ஓர் நிருபம் எழுதி அனுப்பினர். ஜெருசலேமில் லத்தீன் பிதாப் பிதா ஒருவரை நியமித்தார். மடங்களில் எங்கெங்கே ஒழுக்கக் குறைவுகள் ஏற்பட்டதோ, ஆங்காங்கு வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்வித்தார். தம்முடைய நாட்டில் கலகம் எழுப்பிய வர்களுக்குப் பொறுத்தல் அளித்து, பிரசைகளுக்குக் கூடுமான வரையில் சர்க்கார் விஷயங்களில் சுதந்தரங்களை அளித்தார். ஆனால் பிரசைகள்! இச்சுதந்தரங்களைக் கொண்டு அவருடைய ஆட்சிக்குக் குறைவே செய்தார்கள். எவ்வளவு அதிக சுதந்தரங்கள் கொடுக்கப்பட்டதோ அவ்வளவு அதிகமாய் வேறு சுதந்தரங்களைக் கேட்டதுடன், வெளியில் இவருக்கு மேரை மரியாதையாய் ஒழுகுவதாய் நடித்து, மனதில் இவரது ஆட்சியை எப்படியாவது தொலைக்கக் கருதினர்கள்.

## கி. பி. 1848 ராசகலகம்.

கி பி. 1848ல் பிராஞ்சில் ராசகலகம் எழும்பி ராசாவை நீக்கிக் குடியரசு ஏற்படுத்தப் பட்டது. இக்கலகம் இத்தாலியிலும் நுழையத் திருச்சபை நாட்டில் கலகக்காரர் பாப்புவின் பிரதம மந்திரியைக் கொன்று, குடியரசுக்கு ஏற்பாடு செய்தமையால், பாப்புவின் உயிர்க்கே மோசம் நேரிடக் கூடுமென்று அவர் ரோமை விட்டுச் சென்று நேப்பில்ஸ் அரசனுல் மரியாதையுடன் பாதுகாக்கப் பட்டார். ரோமையில் கலகக்காரர் குடியரசு ஏற்படுத்தி மிகக் குரூரம் செய்தார்கள். உலக முழுவதும் மேற்றிராணிமார்களும், கிறிஸ்துவர்களும் இதைக் கண்டிக்க, நேப்பில்ஸ், ஸ்பெயின்,

பிராஞ்சு, இம்மூன்றும் கலகத்தை அடக்க எழுந்தன. கி.பி.1849ல் பிராஞ்சு சேனை ரோமையை முற்றுகையிட்டுப் பிடிக்க, கி. பி. 1852ல் அர்ச். பாப்பு தம் இடத்துக்குத் திரும்பி வந்தார். இவர் வருவதைக் கண்ட ஜனங்கள், "அர்ச். பாப்பு நீடூழி வாழ்வாராக! பிராஞ்சு சேனை நீடூழி வாழ்வதாக!" என விடாது சொல்லிக் கொண்டு தரையில் விழுந்து சொல்லொண்ணு ஆனந்தத்துடன் வரவேற்ருர்கள்.

இக்காலத்தில் பிராஞ்சில் குடியரசு தலைமையைக் கொண்டிருந்த நெப்போலியன் மட்டில் திருச்சபைக்கு இருந்த நன்றியைக் காட்டவே, அதே வருஷத்தில் பிராஞ்சு மேற்றிராணிமார்களும், குருக்களும் நெப்போலியனைச் சக்கரவர்த்தி ஆக்கத் தங்கள் வோட்டுக் கொடுத்தார்கள்.

## சமாதானம் கி, பி. 1850—58.

இதுமுதல் சுமார் எட்டு வருஷம் திருச்சபை நாட்டில் சமாதானம் நிலைத்தது. இக்காலத்தில் அமெரிக்காவின் ஐக்கிய நாடுகளிலும், மற்ற தேசங்களிலும், இங்கிலாந்திலும், உவர்லாந்திலும், இந்தியாவிலும் மேற்றிராசனங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஸ்பெயின், ஆஸ்டிரியா முதலிய கத்தோலிக்கு தேசங்களுடன் உடன்படிக்கைகளும் செய்யப் பட்டன.

## மாசில்லாத உற்பவம்.

இவ்வித ஜெயமெல்லாம் மகா பரிசுத்த கன்னிகையின் காப்பால் உண்டாயின தென்று, அர்ச் பாப்பு உறுதியாய் விசுவசித்திருந்தார். எக்காலத்திலும் திருச்சபையில் அர்ச். தேவமாதாவுக்கு விசேஷித்த வணக்கம் செய்வது வழக்கம். நமது கர்த்தரும் தமது தாயின் மகத்துவத்தைப் பல காட்சிகளால் உலகுக்குக் காட்டியிருக்கிருர். முதல் நூற்ருண்டிலிருந்து அர்ச். தேவமாதாவுக்க முதல் சென்ம மாசு இல்லாமல் உற்பவித்தவள் எனக் கருதப்பட்டிருந்தது.

"சர்வேசுரனுடைய மதிப்பின் பொருட்டுப் பாவ விஷயத்தைப் பற்றிப் பேசுங்கால், அர்ச். தேவமாதாவின் நாமத்தைச் சொல்லு தல் தகாது" என அர்ச். அகுஸ்தீன் சொல்லி இருக்கிறார். மேலும் ஆதிகால முதல் கீழ்த்தேச திருச்சபையில் தேவமாதா சென்மப் பாவம் இல்லாமல் உற்பவித்த திருநாளைக் கொண்டாடி வந்தார்கள். மேல் திருச்சபையும் அதிக காலம் தாமதிக்க வில்லை. அர்ச். பாப்பு களும் இச்சத்தியத்தைப் பகிரங்கமாய்த் திருச்சபைக்குப் போதிக்கச் சமயம் வந்ததெனக் கொள்ளா திருந்தாலும், இதைத் திருச்சபையில் எங்கும் நன்கு கொண்டாடும் படிக்கு ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். தவிர இச்சத்தியத்தைக் குறித்து எவ்விதமான சந்தேகமும் இருக்க வழியும் இல்லாதிருந்தது. ஏனெனில் ஒரு வரும் இதற்கு விரோதமாய்ப் பேசவும், எழுதவும் கூடாதென்னும் கட்டளை இருந்தது. டிரென்ட்டு பொதுச்சங்கமும் பரிசுத்த கன்னிகையை சென்ம மாசில்லாதவள் என்றே கொண்டிருந்தது.

இவ்விதமாய் இச்சத்தியம் திருச்சபை எங்கும் பரவி, யாதொரு சந்தேகமும் இன்றி யிருந்ததால், இதை உலகுக்குப் பகிரங்கமாய் அளிக்கும் காலம் வந்ததெனக் கருதி, உலகத்தின் பல மேற்றிராணி மார்களுக்குந் தெரிவித்து, திருச்சபை முழுதும் சர்வேசுரனைப் பொதுவாக மன்றாடின பின், மேற்றிராணிமார்களை ரோமையில் கூட்டி கி. பி. 1854ம் ஆண்டு டிசம்பர் 8-ம் தேதி, 9-ம் பத்திநாதர் இச்சத்தியத்தை உலகுக்கு அளிக்கக் கருதினர்.

இச்சம்பவத்துக்குச் சுமார் 200 மேற்றிராணிமாகளும், பல நூற்றுக்கணக்கான குருக்கள் சந்நியாசிகளும், உலகம் எத் திசையினு மிருந்து பல்லாயிரம் கிறிஸ்துவர்களும் வந்து, அர்ச். இராயப்பர் தேவாலயத்தில் கூடினார்கள். அர்ச். பாப்பு திவ்விய பூசைப்பலி துவக்கி, சுவிசேஷம் பாடி முடிந்ததும், தேவாலயத்தில் இருந்தவர்கள் எல்லோரும் முழந்தாள் மடித்து, திவ்விய இஸ்பிரீத்து சாந்துவின் ஞான வெளிச்சத்தை மன்றாடிய பின், பத்திநாதர் தமது சிம்மாசனத்தினின்று எழுந்து, விசுவாசிகளை நோக்கி முகமலர்ந்து, கண்களில் ஆனந்த பாஷ்பம் பொழிய,

"சர்வ வல்லமையுள்ள சர்வேசுரனுடைய விசேஷித்த வரத்தாலும், மனுக்குலத்தின் இரக்ஷகராகிய சேசுக்கிறிஸ்துநாதர் அடைந்துள்ள பலன்களாலும், முத்திப் பேறுபெற்ற கன்னிகையான அர்ச். மரியாயி, கர்ப்பமான முதல் க்ஷணத்திலிருந்தே சென்மப்பாவக் கறையினின்று காப்பாற்றப் பட்டுத் தப்புவிக்கப் பட்டாள், என்பது சர்வேசுரன் திருச்சபைக்கு அளித்த சத்தியங்களில் ஒன்று. ஆகவே விசுவாசிகள் இச்சத்தியத்தைத் திடத்தோடும், நிலையோடும், விசுவசிக்கக் கடவார்கள்" என்று பகிரங்கமாய்ப் போதித்தார். உடனே திருச்சபை எங்கும் இவ்வைபவத்தை விசேஷமாய்க் கொண்டாடத் துவக்கி, இவ்வைபவங்கள் ஓராண்டளவும் நடந்தேறின.

## புதிய கஷ்டங்கள்.

உலகெங்கும் நன்கு மதிக்கப்பட்டுத் தமது பிரசைகளால் வணங்கப்பட்ட பத்திநாதர், இது முதல் தமது தேசத்தில் கலகத்தால் ஏற்பட்ட தீமைகளை நீக்குவதிலும், திருச்சபையைப் பரவச் செய்வதிலும் சிரத்தையாய் இருந்தார். கி. பி. 1857ல் இவர் திருச்சபை நாடு முழுதும் சென்று வருகையில், எவ்விடத்திலும், பிரசைகள் இவரிடத்துத் தாங்கள் கொண்டிருந்த விசேஷ பக்தி விசுவாசத்தைக் காட்டினார்கள், ஆனால் நமது ரட்சகர் ஒட்டோலகராய் ஜெருசலேமுக்குக் கொண்டு வரப்பட்ட சில தினங்களுக்குள் வேதனைப்பட்டது போல், கி. பி. 1859 முதல் இவருக்குத் துன்பங்கள் நேர்ந்தன. இவ்வருஷத்தில் இத்தாலியில் சண்டை கிளம்பிப் பிராஞ்சுக்காரர் இத்தாலியில் பீட்மாண்டுடன் கூடி ஆஸ்டிரியாவை முறியடித்தார்கள். திருச்சபைக்கு உதவியான ஆஸ்டிரியா பின் வாங்கவே, பிராஞ்சுக்காரரால் தூண்டப்பட்டுப் பீட்மாண்டார் அர்ச். பாப்புவின் லௌகீக ஆட்சியைக் குறைத்து, அது வழியாய்த் திருச்சபையையும் அழிக்க முன் வந்தனர்.

"கலகம் எழுப்பவாவது, அர்ச். பாப்புவின் அதிகாரத்துக்கு யாது தீங்கிழைக்கவாவது இத்தாலிக்குள் செல்ல வில்லை" எனச்

செப்பிய நெப்போலியன் இதை மறந்து விட, கி. பி. 1860ல் பீட்மாண்டார் ரோமானுவைத் திருச்சபை நாட்டினின்று கவர்ந் தார்கள். அர்ச். பாப்பு திருச்சபை சொத்துக்களை அபகரிப்பவர் களையும், அவர்களைத் தூண்டித் துர்ப்புத்தி சொல்லிக் கிரியைகளால் உதவி புரிவோரையும் திருச்சபையினின்று நீக்கினர். ஆயினும் பின்னால் பீட்மாண்டு சர்க்கார் நேப்பில்ஸ் தேசத்தைத் தாக்கிப் பிடித்த பின்னர், விரோதிகள் திருச்சபை நாட்டுக்குள் நுழைந்து அதைப் பிடிப்பதைத் தடுப்பது தங்கள் கடமை என்று ஓர் பொய் நியாயத்தைச் சொல்லிக் கொண்டு திருச்சபை நாட்டுக்குள் நுழைந் தார்கள். அர்ச். பாப்புவின் சிறிய சேனை கூடிய மட்டும் சண்டை யிட்டுப் பின் வாங்க, ரோமையைச் சுற்றிலுமுள்ள தேசங்களைக் கவர்ந்தார்கள்.

9-ம் பத்திநாதர் இக்கொள்ளைகளைக் கண்டித்தும், உலக மேற்றிராணிமார்களும், விசேஷமாய்ப் பிராஞ்சு மேற்றிராணிமார் களும் இதை விரோதித்தும், நெப்போலியன் ஒன்றும் செய்ய வில்லை.

இதற்குப்பதிலாய்த் திருச்சபையி னிடத்துத் தன்னை மிகவும் விசுவாச முள்ளவனாய் நடித்து, இனிமையாய்ப் பேசி, பீட்மாண்டு சர்க்காரைக் கண்டிப்பதாய்ப் பாசாங்கு காட்டி நடந்து, மற்ற அரசர்களும் அர்ச். பாப்புக்கு உதவி புரியாது தடுக்க லாயினன்.

கடைசியாய்ப் பிராஞ்சுக்காரரால் வற்புறுத்தப் பட்டு அர்ச். பாப்புக்கு உதவி புரிய வந்தவன், அவருக்குத் தின்மையே புரிந் தான். கி. பி. 1864ல் பீட்மாண்டு சர்க்காருடன் ஓர் உடன் படிக்கை செய்து, அதில் பீட்மாண்டு ராசாங்கத்தை இத்தாலி ராசாங்கம் என அங்கீகரித்துத் திருச்சபைக்கு உதவியாய் இருந்த பிராஞ்சு சேனைகளும் இத்தாலி விட்டுத் திரும்பிப் போகவும் சம்மதித்தான். இத்தாலி ராசாங்கமும் மீதமாயிருக்கும் திருச் சபை நாட்டுக்குள் இனி நுழைகிறதில்லை என்றும், தமது நாட்டுப் பாது காவலுக்கு அர்ச். பாப்பு போதுமான சேனை வைத்துக் கொள்ளலா மென்றும், ஏற்றுக் கொண்டார்கள். ஆக இத்தாலி

ராசாங்கத்தார் கொள்ளை கொண்ட வைகளெல்லாம் அவர்களுக்கே விட்டு விடப்பட்டதும் அன்றித் திருச்சபை நாட்டுக்கு இதுகாறும் இருந்த காப்பும் நீக்கப்பட்டது.

உடன்படிக்கைப் பிரகாரம் பிராஞ்சு சேனை கி. பி. 1866 டிசம்பர் மாதம் இத்தாலி விட்டு நீங்கியது. கி. பி. 1866ல் பிரசியாவுக்கும், ஆஸ்டிரியாவுக்கும் நேர்ந்த யுத்தத்தில் ஆஸ்டிரியா தோற்றுப்போய்ப் பிரசியா பலமானதே பிராஞ்சு சேனை திரும்பிப் போகக் காரணம். ஏனெனில் பிராஞ்சு இப்போது பிரசியாவுக்குப் பயப்பட நேர்ந்தது.

பிராஞ்சு சேனை இத்தாலி விட்டுத் திரும்பியதும், காரிபால்டி என்ற கலகக்காரர் தலைவன் மீதியாயுள்ள திருச்சபை நாடுகளைக் கவர எத்தனித்தான். இத்தாலி சர்க்காருக்கு இது நல்ல சமயமாயிற்று. கி. பி. 1867ல் காரிபால்டியைத் தோற்றுவித்து இத்தாலி ராசாங்கத்தார் தங்கள் இஷ்டம் போல் நடக்க ஆரம்பித்தனர். ஆயினும்நெப்போலியன் ரோமையையும் ரோமையைச் சுற்றி அச்சமயத்தில் பாப்புவின் ஆட்சிக்குக் கட்டுப்பட்ட வைகளையும், இத்தாலி கவர்ன்மெண்டு பிடிக்க ஒருபோதும் சம்மதியேன் எனச் செப்பி, ரோமைக்கு வெளியில் பிராஞ்சு சேனை ஒன்று வைத்திருந்தான். இக்காரணத்தால் ரோமையில் சற்றுக்காலம் சமாதானம் இருந்தது.

## வத்திக்கான் பொதுச்சங்கம்.

சத்தியத்தைப் பாதுகாக்கவும், ஒழுக்கத்தைச் சீர்திருத்தவும் எப்போதும் கருத்துக் கொண்டிருந்த பத்திநாதர் இச்சமாதான காலத்தில் வத்திக்கானில் ஓர் பொதுச்சங்கம் கூட்டுவித்தார். இது கி. பி. 1869ல் கூடியது. இதில் உலகம் எத்திசையி னின்றும் சுமார் 700 மேற்றிராணிமார்கள் வந்து கூடினார்கள். தேச சர்க்கார்கள் இக்கூட்டத்தைப் பற்றி விரோதமான அபிப்பிராயங்கள் கொண்டிருந்தும், ரோமைக்கு வெளியில் பல துர்க்கிரியைகள் நடந்தும், இச்சங்கம் கி. பி. 1870 சூலாய் 18ல் அர்ச். பாப்புவின்

அக்கிராசனத்தின் கீழ் நடந்தேறியது. இதில் 'அர்ச். பாப்பு இராயப்பரின் பதிலாளியும், திருச்சபையின் தலைவரும் என்ற அந்தஸ்தில், சத்தியமும் ஒழுக்கமும் போதிக்கிறதில், தவறாத வரமுடையவர்' என்னுஞ் சத்தியம் ஊர்ஜிதப் படுத்தப் பட்டது. இதினால் பிராஞ்சிலிருந்த காலிய கொள்கையும், இதுபோன்ற மற்ற கொள்கைகளும் வேர் அறுக்கப் பட்டன.

## வத்திக்கான் சிறை.

இச்சங்கம் முடிந்ததும், கி. பி. 1870ல் பிரசியாவுக்கும் பிராஞ்சுக்கும் தொடங்கிய யுத்தத்தில் பிராஞ்சுக்காரர் தோல்வி அடைய, ரோமைக்கு வெளியில் வைக்கப் பட்டிருந்த பிராஞ்சு சேனை திரும்பிச் செல்ல வேண்டியதாயிற்று. நெப்போலியன் தோற்றுப் போய் இராச்சியபாரம் இழந்து, பிராஞ்சில் குடியரசு ஏற்பட்டது. இப்படி பிராஞ்சுக்குக் கஷ்டம் நேரிட, இத்தாலி சர்க்கார் இதுவே சமயமென்று ரோமையைத் தாக்கினார்கள். ரோமை முற்றுகை இடப்பட, ரோமைப் பட்டாளம் கூடியமட்டும் சண்டையிட்டுக் கடைசியாய் அர்ச். பாப்புக்குக் கீழ்ப்படிந்து சைனியங்களைத் தரையில் போட்டார்கள். பிரசியர் பாரீஸில் சேர்ந்த சமயத்திலேயே இத்தாலியர் ரோமைக்குள் நுழைந்து, அர்ச். பாப்புவின் அரண்மனையையும் கவர்ந்து கொண்டார்கள். அர்ச். பாப்பு வத்திக்கானில் சேர்ந்தார். இத்தாலியர் அர்ச். பாப்புவின் சுதந்தரங்களைச் சற்றும் கவனியாது, ரோமையை ராசதானியாக்கி விக்டர் எம்மானுவேல் என்பவனை இத்தாலி தேச முழுமைக்கும் அரசனாக்கினார்கள். அப்பால் இவர்கள் "ஜாமீன் சட்டம்" என்ற ஓர் சட்டம் பிறப்பித்து, அர்ச். பாப்பு தாம் அதுவரையும் ஆண்ட நாடுகளில் எங்கு சென்றாலும் ராசாவுக்குரிய மதிப்புடன் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றும், அவருக்கு வருஷத்தில் ஏதோ திரவிய ஒத்தாசை செய்து வருவதாயும் அச்சட்டத்தில் குறித்துப் பகிரங்கம் செய்தார்கள். அர்ச். பாப்பு இச்சட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. திருச்சபை சொத்துக்களைக் கொள்ளையடித்த இந்தச் சர்க்காருடன் ஒரு

சம்பந்தமு மின்றி வத்திக்கானுக்கு வெளியே வராது சிறையுண்டவர் போன்றிருந்தார். தேச சர்க்கார்கள் எல்லாம் இத்தாலியர் நடத்தையைக் கண்டித்தது போல் பேசினார்க ளொழிய, பாப்புவுக்கு உதவி செய்ய ஒருவரும் கிளம்பினார்களில்லை.

## பத்திநாதர் மரணம்.

இவர் கி. பி. 1876ல் மரித்தார். இவர் மரணத்துக்கு முன் இத்தாலி அரசன் மரிக்கத் திருச்சபையினின்று தள்ளப்பட்டிருந்த அவன் சாகுமுன் திருச்சபையில் சேர்ந்து கத்தோலிக்கனாய் மரிக்க அனுமதி அளித்தார்.

# 2-ம் அத்தியாயம்.

## பாப்புகள்.

### 13-ம் சிங்கராயர்.

9-ம் பத்திநாதர் மரணத்துக்குப் பின் 13-ம் சிங்கராயர் சிம்மாசனம் ஏறினர். திருச்சபையில் 9-ம் பத்திநாதரே அதிக காலம் ஆண்டவர். அவருக்கு இரண்டாவதாய் நீடித்த காலம் திருச்சபை ஆதிகாரம் நடத்திய வர்களில் சிங்கராயர் ஒருவர். மேலும் இவரது அரசாட்சி பாப்புகளின் மிகப் பேர்போன ஆட்சி களிலு மொன்று. இவர் பட்டத்துக்கு வருங்கால் திருச்சபை அநேக தேச ராசாங்கங்களுடன் சமாதான மின்றி இருந்தது. இதை மாற்றித் திருச்சபையின் சுதந்தரங்களைச் சற்றும்இழக்காது, அநேக ராசாங்கங்களுடன் சமாதானம் செய்தார். இத்தாலி சர்க்காரோ பாப்பை விரோதித்துத் திருச்சபை சொத்துக்களை அபகரித்து, அவரைப் பலவாருய்ப் பத்திரிகைகளில் நிந்தித்து வந்தார்கள்.

அவற்றைச் சற்றும் கவனியாது, தேசீய ஆட்சி முதலிய திருச்சபை சுதந்தரங்களின் அவசியத்தையும்,கலியாண அந்தஸ்து, சத்தியம், ஒழுக்கம், போதகம் முதலியவற்றைக் குறித்தும், தத்துவ சாஸ்திரம், பிரமேஷன் சபை, அடிமை அந்தஸ்து, தொழிலாளர்களின் சுதந்தரங்கள், கிறிஸ்து ஜன சமூகத்திட்டம், முதலிய பல விஷயங்களைக் குறித்தும் நிருபங்கள் எழுதியுள்ளார்.

இவரது முக்கிய நோக்கங்கள், ருசியர், முதலிய கீழ்தேச பிரிவினைக்காரரைத் திருச்சபையில் திருப்பிச் சேர்ப்பதும், அந்நிய நாடுகளில் வேதம் போதிக்கப் படுவதுமாம்.

முன் கூறிய பல காரியங்களிலும் இவர் சிறந்து விளங்கி வர, கி.பி. 1887ல் நடந்தேறிய இவரது குருப்பட்டத் தங்க ஜுபிலியில் உலக முழுதும் இவரை மேம்படுத்தியது. உலகம் எங்கும் பல தேச சர்க்கார்களும் இவருக்கு வாழ்த்துதலும், நன்கொடைகளும் அனுப்பினார்கள். மேலும் கி.பி. 1900ல் உலகம் எங்குமிருந்து சுமார் 5 லக்ஷம் ஜனங்கள் ஜுபிலி பலன் அடைய ரோமைக்கு வந்தார்கள். இப்படியாய்ப் பேர் பெற்றிருந்து கி.பி. 1903ல் தமது 93-ம் பிராயத்தில் மரித்தார்.

## 10-ம் பத்திநாதர் கி. பி. 1903—1914

மிக்க தாழ்ச்சியும், பத்தி உள்ளவருமாகிய இவர் ஓர் மகா ஏழைக் குடியானவனுடைய மகன். அர்ச். இராயப்பர் சிம்மாசனத்துக்கும், உலக அரசு சிம்மாசனங்களுக்கும் உள்ள வித்தியாசம் இதுவே. உலகில் எந்த அந்தஸ்தில் பிறந்தாலும் திருச்சபையின் எவ்வித அதிகாரமும் அடையலாம். உலக அரசியலில் அப்படியின்றி, மேம்பிறப்பு அத்தியாவசியமாய்ப் பாராட்டப் படுகிறது.

அன்பு, உறுதி, நம்பிக்கை முதலியன இவரது முக்கிய குணங்கள். இவர் பட்டத்துக்கு வந்தபின் பிராஞ்சு பிரிமேஷன் சர்க்கார் 'பிரிவினைச் சட்டம்' (Law of Separation) என்ற ஓர் சட்டம் பிறப்பித்துத் திருச்சபையுடன் எவ்வித சம்பந்தமும் இல்லாது, தங்கள் ஸ்தானாதிபதியையும் வத்திக்கானிலிருந்து வரவழைத்தார்கள். அதன்பின் போர்த்துக்கல்லில் ராச கலகம் உண்டாகிக் குடியரசு ஏற்பட்டது. அர்ச். பாப்பு மேற்றிராணிமார்களுக்கு நிருபம் எழுதித் தேசீய விஷயங்களில் கலந்து கொள்ளாதிருக்கும்படி திட்டஞ் செய்தார்.

இவரது ஆட்சி திருச்சபையில் பல சீர்திருத்தங் கட்குப் பேர் போனது. சத்தியம், ஒழுக்கம், ஆகிய இவற்றைக் குறித்து எழுதப்பட்ட இரண்டு பிரபந்தங்கள் இவரது ஞாபகத்தை நிலை நாட்டுவதும் அல்லாமல், இவர் காலத்தில் தான் திருச்சபை

சட்டங்கள் (Code of Canon Laws) தொகுக்கப்பட்டு, கி. பி.1917ல் முடிந்தது. இவர் புது நன்மை வயதைப் பற்றியும், அடிக்கடி தேவ நற்கருணை வாங்குவதைப் பற்றியும் இரண்டு நிருபங்கள் எழுதி யிருக்கிறார். இத்துடன் தற்கால கொள்கையையும் (Modernism) கடிந்திருக்கிறார்.

கி. பி. 1914ல் நேர்ந்த இவர் மரணம் மிகப் பரிதாபமானது. ஐரோப்பாவில் யுத்தம் கிளம்புவதையும்,அதைத் தடுக்கக் கூடாமையையும், மனதில் ஆழ்ந்து யோசித்து வியாகுலப்பட்டு, அதே காரணமாய்ப் பீரங்கித் தொனி கேட்டு, "என் முன்னோர்கள் இப்படிப் பட்ட யுத்தத்தைத் தடுத்திருப்பார்கள், நானோ பலனற்றிருக்கிறேன்" எனச் சொல்லிக் கொண்டு மரித்தாரெனில், ஐரோப்பா யுத்தமே இவர் மரணத்துக்குக் காரணம் என்பதில் சந்தேக முண்டோ?

## 15-ம் ஆசீர்வாதப்பர்,

ஐரோப்பிய யுத்தம் நடக்கையில் பட்டத்துக்கு வந்த இவரது ஆட்சி மிகப் பிரசித்தி பெற்றது. ஐரோப்பா முழுதும் இரண்டு கட்சிகளாய்ப் பிரிவுண்டு ஓர்காலும் கேட்டிராத மிகக் கொடிய யுத்தம் நடத்துங் காலமாயிருந்ததால், இவரது நிலைமை மகா சங்கடத்துக் குரியதாம். ஒவ்வொரு கட்சியாரும் மற்ற கட்சியார் மேல் குற்றங்கூறி, அக்குற்றங்களைக் கண்டிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்கள். இருகட்சியிலும் தமது பிள்ளைகள் யுத்தஞ் செய்ய எக்கட்சியாரைக் கண்டனம் செய்வது? அர்ச். பாப்பு ஒருவருக்கும் இணங்காமல் யார் அக்கிரமம் செய்தார்களோ அவர்களை எல்லாம் பொதுவாய்க் கண்டித்தார். ஆகையினால் ஐக்கிய கட்சியார் ஜெர்மனியைச் சார்ந்திருக்கிறார் என்றும், ஜெர்மனியர் ஐக்கிய கட்சியாரைச் சார்ந்திருக்கிறார் என்றும் இவர்மேல் குறை கூறினார்கள்.

இவற்றைப் பாராட்டாது, கி. பி. 1914 செப்டம்பர் முதல், ஒவ்வொரு வருஷமும் இருகட்சியாரையும் சமாதானத்துக்குத் தூண்டி வந்தார். ஆயினும் இவரது சமாதானக் குரலொலியைக் கேட்போர்களில்லை. சண்டையை நிறுத்த முடியாமற் போனாலும், இருகட்சியிலும் காயம்பட்டோர், கைதியானோர், அந்நிய நாட்டுக்குத் துரத்தப்பட்டோர் முதலியோர்களுக்கு எம்மதத்தோராயினும், எத்தேசத்தோ ராயினும், வேண்டிய உதவி புரிந்து, அவரவர்கள் தங்கள் தேசங்கட்குத் திரும்பிச்சேர ஏற்பாடுகளும் செய்தார். ருசியாவில் பஞ்சம் ஏற்பட இரண்டு ரயில் நிறைய போஜன சாமான்களும், உடைகளும் அனுப்பினர். ஒவ்வோர் தேசத்திலும் ஏழைகள், அனாதப் பிள்ளைகள், விதவைகள், முதலியோரைக் கண்காணிக்கும்படி திருச்சபை அதிகாரிகளைத் தூண்டி லக்ஷக்கணக்கான திரவியங்களை அனுப்பினர். இவரால் அடைந்த அபரிமிதமான நன்மைகளை உலகுக்குக் காட்டும் பொருட்டு, இவரது சுரூபத்தைத் துருக்கர் கொன்ஸ்தாந்திநோப்பிளில் பகிரங்கமான ஓர் இடத்தில் ஸ்தாபித்தார்களெனில்,கிறிஸ்துவர்கள் அடைந்த நன்மைகளை எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ?

முற்கூறிய வற்றிலேயே தம் கவனத்தை முற்றும் செலுத்தாமல், சிலாவிய பிரிவினைக் காரரையும், மற்ற கீழ்தேச பிரிவினைக் காரரையும் திருச்சபையில் சேர்க்கக் கருத்துக் கொண்டு, கீழ்தேச விஷயங்களைக் கண்காணிக்க ஓர் மந்திர ஆலோசனை சபையை ஸ்தாபித்து, மேனாட்டுக் குருக்கள் கீழ்தேசங்களில் நுழைந்து பிரசங்கித்துப் பிரிவினையை நீக்கும் பொருட்டு அவர்களை அவ்வுழைப்புக்கு முஸ்தீப்பு செய்வதற்கு ஓர் குருமடமும் ஸ்தாபித்தார். மேலும் அந்நிய போதகர் வேதம் போதித்து வரும் இந்தியா, சீனா, ஜப்பான் முதலிய தேசங்களில் சுதேச குருக்களை விர்த்தி செய்து, நாளடைவில் சுதேச மேற்றிராசனங்களை ஏற்படுத்தும் கருத்துடன், கி. பி. 1921ல் 'மாக்ஸிமம் இலுத்' (Maximum Illud) என்ற ஓர் நிருபமும் எழுதி அனுப்பினர்.

கி. பி. 1922ல் இவர் திடீரென வியாதி கண்டு மரிக்க, 11-ம் பத்திநாதர் சிம்மாசனம் ஏறினர்.

# முடிவு.

மெசியாவின் வருகையிலிருந்து நம் காலமட்டும், திருச்சபை சரித்திரத்தை வாசித்தோம். இதை நன்றாய்க் கவனிப்போ மாகில், எவ்வளவு உன்னதமான விதமாய் உலகை மனிதனுக்காகவும், மனிதனைத் தமக்காகவும் உண்டுபண்ணிக் கடவுள் நடத்தி வருகிறார் என நாம் நன்கு அறியலாம்! சேசுநாதர் சுவாமிக்கு முந்திய காலம், அவருடைய வருகைக்கு முஸ்தீப்புச் செய்த காலமும், அவர் வந்து மனிதனைப் பசாசின் அடிமையினின்று மீட்டபின்னரான தற்காலம் அவரது முழு ஜெயத்துக்கு முஸ்தீப்புச் செய்யும் காலமும் என்றும்நாம்நன்கு உணரவேண்டும். அவர் வருமுன் பல பெரிய ராச்சிய பாரங்கள் இருந்தன. அவர் வந்த பின் ரோமை அஞ்ஞான ராச்சியபாரம் ஒழிந்து, ரோமாபுரி மெஞ்ஞான ராச்சிய பாரமாகிய திருச்சபையின் ராசதானி ஆனதென அறிந்திருக்கிறோம். அதுமுதல் இக்காலம் மட்டும் அநேக ராச்சிய பாரங்கள் ஏற்பட்டிருந்தும், அவைகள் தோன்றுவதும் பின் அறிவதுமாய்க் கண்டோம். மனிதன் அழிவுள்ளவன் ஆனதுபற்றி அவன் கட்டும் இக்கட்டடங்கள் ஓர்கால் அழிய வேண்டியவையே. ஆனால் இக்காலமெல்லாம் சற்றும் அழிவின்றி, நாளுக்கு நாள் மேனோக்கி, என்றும் பழமையாயும், என்றும் புதிதாயும் வளர்ந்து கொண்டிருக்கும் ராச்சியபாரம் நமது ரக்ஷகப் பெருமான் ஸ்தாபித்த திருச்சபை ஒன்றேயாம்.

கற்பாறை மேல் கட்டப்பட்ட திருச்சபையை ரோமை ராச்சிய பாரம் தாக்கித் தாக்கித் தானே அழிவுற்றது. பின்னால் பதிதமதம், அவவிசுவாசம், பிரிவினை, கலகம், தப்பறை முதலியன, திருச்சபையை அழிக்க ஒவ்வொரு நூற்றாண்டிலும் எழும்பின.

பதினாறும் நூற்றாண்டில் ஐரோப்பாவின் வடநாடுகள் பதித நாடுகளாகப் பிரிந்து போக அமெரிக்கா, இந்தியா, சீனா, ஜப்பான், முதலிய தேசங்களைச் சர்வேசுரன் திருச்சபைக்குத் தந்தார்.

பதினெட்டாம் நூற்றாண்டில் அவவிசுவாசம் கிளம்பிப் பதித மதத்துடன் கூடிக் கொண்டதால், அவவிசுவாசிகளும், பதிதரும் திருச்சபை அழிந்து போமென்றும், ஒவ்வொரு பாப்பும் கடைசிப்

பாப்பென்றும் பிதற்றி வந்தார்கள். இப்படிப் பதிதர், அவவிசுவாசிகள், ரகசிய சபையோர் முதலியோர் திருச்சபைக்கு விரோதமாய்க் கிளம்பி, அதன் போதகத்தை ஆங்காங்கு அழித்தும், அது அழியாததால் அவர்களது அழிவுக்குரிய ஏற்பாடுகள் அவர்கள் தலையிலேயே விடிந்தன.

சர்வேசுரனும் அவர்களை அடக்கப் போர்களையும், பஞ்சம், பிணி முதலிய வற்றையும், பின்னும் பின்னும் அனுப்பியும் அவர்கள் திருந்தாததின் காரணமாக, கி. பி. 1914ல் ஓர்காலும் கேட்டிராத மகா கொடிய யுத்தத்தால் அவ்விரோதிகளை அடக்கக் கருதினார். யுத்தம் தொடங்கியகால் உலகத்தில் ஏற்பட்டிருந்த பிறர் சிநேகம், ஒழுக்கம் முதலிய யாவும் ஒழிந்து, எங்கும் கொலையும், தீக்கொள்ளையும் பரவ, மனிதர் பயந்து திடுக்கிட்டு, இவை தங்களது அவவிசுவாச போதனையின் பயனென்று நன்குணர்ந்து, இவற்றைத் தொலைத்துத் திருச்சபையின் ஒழுக்கத்தை நிலைநாட்டா விடில், உலகம் எல்லாம் கொலை, நாசம், என்னும் புசல் காற்றில் அகப்பட்டு அழிவுறுதல் நிச்சயம் என அறிந்தார்கள். இச்சமயத்தில் இப்புசற் காற்றிலிருந்து தங்களைத் தப்புவிக்கிறதற்கு அர்ச். இராயப்பர் படகைத் தவிர வேறு ஒன்றும் இல்லை எனப் பதிதரும், அவவிசுவாசிகளும் நன்குணர்ந்து, அப்படகை நோக்கி ஓலமிட, பதித இங்கிலாந்து, பிரிமேஷனைச் சேர்ந்த பிராஞ்சு, அஞ்ஞான ஜப்பான் முதலிய ராசாங்கங்கள் துரிதமாய் அர்ச். பாப்பிடம் சென்றனர். சென்றும் சிறு பிள்ளைகள் ஒருவரை யொருவர் குற்றம் சாட்டித் தப்பிக்க முயலுவது போல், அர்ச். பாப்பின் முன் ஐக்கிய கட்சியார், ஜெர்மனியரையும், ஜெர்மனியர் ஐக்கிய கட்சியாரையும் குற்றம் சாட்டிக் கொண்டார்களே யொழிய, தேவ பதிலாளியின் ஒழுக்க ஏற்பாடுகளை அந்தோ அனுசரித்தார்க ளில்லை. பின்னர் அவர்கள் செய்த சமாதானமும் நிலைக்கும் சமாதான மாகவில்லை.

இவ்விதமாய்த் திருச்சபை அழிந்ததென்றும், அழிப்போமென்றும் சொல்லிய பலரும், திருச்சபையில் மட்டும் அழிவில்லை என்றும், அது அழிவுறும் தேசங்கட்கும், ஜனங்கட்கும்

அப்பெரும் சங்கடத்தை நீக்க ஒழுக்கம் என்னும் நல்ல மருந்துள்ள வைத்தியன் என்றும், உலகில் சன்மார்க்கம், ஒழுக்கம், நீதி, முதலியவை ரோமையில் வத்திக்கானே உறை விடமாய்க் கொண்டிருக்கின்றன வென்றும், வத்திக்கானில் சென்று இவ்வொழுக்கமாகிய அருவியில் குடித்துத் தங்கள் தேசங்கட்கு உதவ வேண்டும் எனவும், முப்பத்திரண்டு தேச ராசாங்கங்கள் தங்கள் ஸ்தானுதிபதிகளை வத்திக்கானுக்கு அனுப்பி இருக்கிறார்கள். திருச்சபைக்கு இப்போது தேச ஆட்சியில்லை எனினும், அர்ச். பாப்பு தேச ராசாவாய் இருந்த எக்காலத்திலும் இவ்வளவு உன்னதமாய்க் கொண்டாடப் படவில்லை. இதுவன்றோ திருச்சபையின் அழியாத வரத்துக்கு ஓர் முக்கிய அத்தாட்சி?

இப்படிச் சென்ற நான்கு நூற்றாண்டுகளாய்த் திருச்சபைக்கு நேர்ந்த விரோதங்கள் ஒழிந்து, விரோதிகளும் தொகையில் குறைந்து வருகிறார்கள். இங்கிலாந்தில் ஆயிரக் கணக்கான பேர் சத்திய வேதத்தில் சேர்கிறார்கள்; இங்கிலாந்து பதித சபையோ மறுபடியும் ரோமாபுரியுடன் சேரும் வழியிலிருக்கிறது; ருசியா முதலிய பிரிவினை நாடுகளும் வத்திக்கானைக் கடுகி வருகின்றன. [illegible]மேசன் முதலிய ரகசிய சபைகள் கத்தோலிக்க நாடுகளில் [illegible] சர்க்கார்கள் திருச்சபையை மறுபடியும் அணுகுகின்றன.

இவற்றையெல்லாம் இந்திய கத்தோலிக்கராகிய நாம் அறிந்து, திருச்சபை கற்பாறை மேல் கட்டப்பட்டு உலக முடிவு பரியந்தம் நிலைத்திருக்குமென நன்குணர்ந்து, மேனாட்டார் பட்ட பாடுகளெல்லாம் அனுபவியாது, எப்போதும் கற்பாறையாகிய ரோமையைச் சார்ந்து, திருச்சபைக்கு வெளியில் நித்தியசாவும், அதற்குள் நித்திய வாழ்வும் இருப்பதால், அதன் உண்மையான மக்களாய் என்றும் பிரமாணிக்கமாய் நடந் தொழுகுவோமாக.

முற்றிற்று.

## பாப்புகளின் டாப்பு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | அர்ச். இராயப்பர் | ... | கி. பி. | 42—67 |
| 2 | அர்ச். லீனுஸ் | ... | ,, | 67—76 (?) |
| 3 | அர்ச். அனக்கிளேத் (கிளேத்) | ... | ,, | 77—88 (?) |
| 4 | அர்ச். கிளமெண்டு | ... | ,, | 88—97 (?) |
| 5 | அர்ச். எவாரெஸ்து | ... | ,, | 97–105 (?) |
| 6 | அர்ச். அலெக்சாந்தர் | ... | ,, | 105—15 (?) |
| 7 | அர்ச். சிக்ஸ்துஸ் | ... | ,, | 115—25 (?) |
| 8 | அர்ச். தெலெஸ்போருஸ் | .... | ,, | 125—36 (?) |
| 9 | அர்ச். இஜீனுஸ் | ... | ,, | 136—40 (?) |
| 10 | அர்ச். பத்திநாதர் | ... | ,, | 140—55 (?) |
| 11 | அர்ச். அனிசெத் | ... | ,, | 155—66 (?) |
| 12 | அர்ச். சோத்தேர் | ... | ,, | 166—75 (?) |
| 13 | அர்ச். எலூத்தேரியுஸ் | ... | ,, | 175—89 |
| 14 | அர்ச். விக்டோர் | ... | ,, | 189—99 |
| 15 | அர்ச். ஜெப்பெலினுஸ் | ... | ,, | 199–217 |
| 16 | அர்ச். கலிஸ்துஸ் | ... | ,, | 217—22 |
| | இப்பொலிப்த்துஸ் | ... | ,, | 217—35 |
| 17 | அர்ச். அர்பன் | ... | ,, | 222—30 |
| 18 | அர்ச். போன்சியானுஸ் | ... | ,, | 230—35 |
| 19 | அர்ச். ஆந்தேருஸ் | ... | ,, | 235—36 |
| 20 | அர்ச். பாபியன் | ... | ,, | 236—50 |
| 21 | அர்ச். கோர்னீலியுஸ் | ... | ,, | 251—53 |
| | நோவாசியன் | ... | ,, | 251 (?) |
| 22 | அர்ச். லூசியுஸ் I | ... | ,, | 253—54 |
| 23 | அர்ச். எத்தியென் I (முடியப்பர்) | ... | ,, | 254—57 |
| 24 | அர்ச். சிக்ஸ்துஸ் II | ... | ,, | 257—58 |
| 25 | அர்ச். தெனிஸ் | ... | ,, | 259—68 |
| 26 | அர்ச். பெலிக்ஸ் I | .... | ,, | 269—74 |
| 27 | அர்ச். யூட்டிக்கியானுஸ் | ... | ,, | 275—83 |

| | | | | |
|---|---|---|---|---|
| 28 | அர்ச். காயுஸ் | ... | கி. பி. | 283—96 |
| 29 | அர்ச். மார்செலினுஸ் | ... | ,, | 296-304 |
| 30 | அர்ச். மார்செலுஸ் | ... | ,, | 308—09 |
| 31 | அர்ச். யூசேவியுஸ் | ... | ,, | 309—10 |
| 32 | அர்ச். மெல்கியாதெஸ் | .... | ,, | 311—14 |
| 33 | அர்ச். சில்வெஸ்தெர் I | ... | ,, | 314—35 |
| 34 | அர்ச். மார்க்குஸ் | ... | ,, | 336 |
| 35 | அர்ச். ஜூலியுஸ் I | ... | ,, | 337—52 |
| 36 | அர்ச். லிபேரியுஸ் | ... | ,, | 352—56 |
| | பெலிக்ஸ் II | ... | ,, | 355—65 |
| 37 | அர்ச். தமாஸ் I | ... | ,, | 336—84 |
| | உர்ஜீனுஸ் | ... | ,, | 366—67 |
| 38 | அர்ச். சிரிஸியுஸ் | ... | ,, | 384—99 |
| 39 | அர்ச். அனஸ்தாசியுஸ் I | ... | ,, | 399-401 |
| 40 | அர்ச். இன்னோசெண்டு I | ... | ,, | 401—17 |
| 41 | அர்ச். சோசிமுஸ் | ... | ,, | 417—18 |
| 42 | அர்ச். பொனிபாசியுஸ் (பொனிபேஸ்) | | ,, | 418—22 |
| | யூலாலியுஸ் | ... | ,, | 418—19 |
| 43 | அர்ச். செலஸ்தீன் I | ... | ,, | 422—32 |
| 44 | அர்ச். சிக்ஸ்துஸ் III | ... | ,, | 432—40 |
| 45 | அர்ச். சிங்கராயர் I (லெயோ) | ... | ,, | 440—61 |
| 46 | அர்ச். இலாரியுஸ் | ... | ,, | 461—68 |
| 47 | அர்ச். சிம்ப்பிலிசியுஸ் | ... | ,, | 468—83 |
| 48 | அர்ச். பெலிக்ஸ் II (III) | ... | ,, | 483—92 |
| 49 | அர்ச். ஜெலாசியுஸ் I | ... | ,, | 492—96 |
| 50 | அர்ச. அனஸ்தாசியுஸ் II | ... | ,, | 496—98 |
| 51 | அர்ச். சிம்மாக்குஸ் | ... | ,, | 498-514 |
| | லாரென்ஸ் | ... | ,, | 498-505 (?) |
| 52 | அர்ச். ஓர்மிஸ்த்தாஸ் | ... | ,, | 514—23 |
| 53 | அர்ச். அருளப்பர் I | ... | ,; | 523—26 |
| 54 | அர்ச். பெலிக்ஸ் III | ... | ,, | 526—30 |

| | | | | |
|---|---|---|---|---|
| 55 | பொனிபாசியுஸ் II | ... | கி. பி. | 530—32 |
| | தியோஸ்கோருஸ் | ... | ,, | 530 |
| 56 | அருளப்பர் II | ... | ,, | 533—35 |
| 57 | அர்ச். அகாப்பித்துஸ் I | ... | ,, | 535—36 |
| 58 | அர்ச். சில்வேரியுஸ் | ... | ,, | 536—37 |
| 59 | விஜீலியுஸ் | ... | ,, | 537—55 |
| 60 | பெலாஜியுஸ் I | ... | ,, | 556—61 |
| 61 | அருளப்பர் III | ... | ,, | 561—74 |
| 62 | ஆசீர்வாதப்பர் I | ... | ,, | 575—79 |
| 63 | பெலாஜியுஸ் II | ... | ,, | 579—90 |
| 64 | அர்ச். கிரெகோரி I | ... | ,, | 590-604 |
| 65 | சபீனியானுஸ் | ... | ,, | 604—06 |
| 66 | பொனிபாசியுஸ் III | ... | ,, | 607 |
| 67 | அர்ச். பொனிபாசியுஸ் IV | ... | ,, | 608—15 |
| 68 | அர்ச். தேவுஸ்தேதித் | ... | ,, | 615—18 |
| 69 | பொனிபாசியுஸ் V | ... | ,, | 619—25 |
| 70 | ஒனோரியுஸ் I | ... | ,, | 625—38 |
| 71 | செவெரீனுஸ் | ... | ,, | 640 |
| 72 | அருளப்பர் IV | ... | ,, | 640—42 |
| 73 | தியோதோருஸ் I | ... | ,, | 642—49 |
| 74 | அர்ச். மர்த்தீன் I | ... | ,, | 649—53 |
| 75 | அர்ச். யூஜேனியுஸ் I | ... | ,, | 654—57 |
| 76 | அர்ச். வித்தாலியானுஸ் | .... | ,, | 657—72 |
| 77 | ஆதெயோதாத்துஸ் | ... | ,, | 672—76 |
| 78 | தோனுஸ் | ... | ,, | 676—78 |
| 79 | அர்ச். அகாத்தோ | ... | ,, | 678—81 |
| 80 | அர்ச். சிங்கராயர் | ... | ,, | 682—83 |
| 81 | ஆசீர்வாதப்பர் II | ... | ,, | 684—85 |
| 82 | அருளப்பர் V | ... | ,, | 685—86 |
| 83 | கோனோன் | ... | ,, | 686—87 |
| | தியோதோருஸ் | ... | ,, | 687 |

| | | | | |
|---|---|---|---|---|
| | பாஸ்கால் | ... | கி. பி. | 687—92 (?) |
| 84 | அர்ச். செர்ஜியுஸ் | ... | ,, | 687—701 |
| 85 | அருளப்பர் VI | ... | ,, | 701—05 |
| 86 | அருளப்பர் VII | ... | ,, | 705—07 |
| 87 | சிசினியுஸ் | ... | ,, | 708 |
| 88 | கொன்ஸ்தாந்தின் I | ... | ,, | 708—15 |
| 89 | அர்ச். கிரெகோரி II | ... | ,, | 715—31 |
| 90 | அர்ச். கிரெகோரி III | ... | ,, | 731—41 |
| 91 | அர்ச். ஸக்கேரி | .... | ,, | 741—52 |
| | எத்தியென் | ... | ,, | 752 |
| 92 | எத்தியென் II | ... | ,, | 752—57 |
| 93 | அர்ச். சின்னப்பர் I | ... | ,, | 757—67 |
| 94 | கொன்ஸ்தாந்தின் II | ... | ,, | 767—68 |
| 95 | பிலிப்பு | ... | ,, | 768 |
| 96 | எத்தியென் III | ... | ,, | 768—72 |
| 97 | ஆதிரியன் I | ... | ,, | 772—95 |
| 98 | அர்ச். சிங்கராயர் III | ... | ,, | 795—816 |
| 99 | எத்தியென் IV | ... | ,, | 816—17 |
| 100 | அர்ச். பாஸ்கால் I | ... | ,, | 817—24 |
| 101 | யூஜேனியுஸ் II | ... | ,, | 824—27 |
| 102 | வாலென்சின் | ... | ,, | 827 |
| 103 | கிரெகோரி IV | ... | ,, | 827—44 |
| | அருளப்பர் | ... | ,, | 844 |
| 104 | செர்ஜியுஸ் II | ... | ,, | 844—47 |
| 105 | அர்ச். சிங்கராயர் IV | ... | ,, | 847—55 |
| 106 | ஆசீர்வாதப்பர் III | ... | ,, | 855—58 |
| | அனஸ்தாசியுஸ் | ... | ,, | 855 |
| 107 | அர்ச். நிக்கொலாஸ் | ... | ,, | 858—67 |
| 108 | ஆதிரியன் II | ... | ,, | 867—72 |
| 109 | அருளப்பர் VIII | ... | ,, | 872—82 |
| 110 | மாரின் I | ... | ,, | 882—84 |

| | | | |
|---|---|---|---|
| 111 | ஆதிரியன் III | ... | கி.பி. 884—85 |
| 112 | எத்தியென் V | ... | „ 885—91 |
| 113 | பார்மோசுஸ் | ... | „ 891—96 |
| 114 | பொனிபாசியுஸ் VI | ... | „ 896 |
| 115 | எத்தியென் VI | ... | „ 896—97 |
| 116 | ரோமெயின் | ... | „ 897 |
| 117 | தியோதோருஸ் II | ... | „ 897 |
| 118 | அருளப்பர் IX | ... | „ 898—900 |
| 119 | ஆசீர்வாதப்பர் IV | ... | „ 900—03 |
| 120 | சிங்கராயர் V | ... | „ 903 |
| 121 | கிறிஸ்தப்பர் | ... | „ 903—04 |
| 122 | செர்ஜியுஸ் III | ... | „ 904—11 |
| 123 | அனஸ்தாசியுஸ் III | ... | „ 911—13 |
| 124 | லான்டோ | ... | „ 913—14 |
| 125 | அருளப்பர் X | ... | „ 914—28 |
| 126 | சிங்கராயர் VI | ... | „ 928—29 |
| 127 | எத்தியென் VII | ... | „ 929—31 |
| 128 | அருளப்பர் XI | ... | „ 931—36 |
| 129 | சிங்கராயர் VII | ... | „ 936—39 |
| 130 | எத்தியென் VIII | ... | „ 939—42 |
| 131 | மாரின் IV | ... | „ 942—46 |
| 132 | அகாப்பித்துஸ் II | .... | „ 946—55 |
| 133 | அருளப்பர் XII | ... | „ 955—64 |
| 134 | சிங்கராயர் VIII (?) | | |
| | ஆசீர்வாதப்பர் (?) | | |
| 135 | அருளப்பர் XIII | ... | „ 965—72 |
| 136 | ஆசீர்வாதப்பர் VI | ... | „ 972—74 |
| | பொனிபாசியுஸ் VII | ... | „ 974 |
| 137 | ஆசீர்வாதப்பர் VII | ... | „ 974—83 |
| 138 | அருளப்பர் XIV | ... | „ 983—84 |
| 139 | பொனிபாசியுஸ் | ... | „ 984—85 |

| | | | | |
|---|---|---|---|---|
| 140 | அருளப்பர் XV | ... | கி. பி. | 985—96 |
| 141 | கிரெகோரி V | ... | ,, | 996—99 |
| | அருளப்பர் XVI | ... | ,, | 997—98 |
| 142 | சிலுவெஸ்தெர் | ... | ,, | 998—1003 |
| 143 | அருளப்பர் XVII | ... | ,, | 1003 |
| 144 | அருளப்பர் XVIII | ... | ,, | 1003—09 |
| 145 | செர்ஜியுஸ் IV | ... | ,, | 1009—12 |
| 146 | ஆசீர்வாதப்பர் VIII | ... | ,, | 1012—24 |
| | கிரெகோரி | ... | ,, | 1012 |
| 147 | அருளப்பர் XIX | ... | ,, | 1024—33 |
| 148 | சிங்கராயர் IX | ... | ,, | 1033—45 |
| 149 | சிலுவெஸ்தெர் III | ... | ,, | 1044 |
| 150 | கிரெகோரி | ... | ,, | 1045—46 |
| 151 | கிளமெண்டு II | ... | ,, | 1046—47 |
| 152 | தமாசுஸ் II | ... | ,, | 1047—48 |
| 153 | அர்ச். சிங்கராயர் | ... | ,, | 1048—54 |
| 154 | விக்டோர் II | ... | ,, | 1055—57 |
| 155 | எத்தியென் IX | ... | ,, | 1057—58 |
| | ஆசீர்வாதப்பர் X | ... | ,, | 1058—59 |
| 156 | நிக்கொலாஸ் II | ... | ,, | 1058—61 |
| 157 | அலெக்சாந்தர் II | ... | ,, | 1061—73 |
| | ஒனோரியுஸ் II | ... | ,, | 1061—69 |
| 158 | அர்ச். கிரெகோரி VII | ... | ,, | 1073—85 |
| | கிளமெண்டு III | ... | ,, | 1080—1110 |
| 159 | விக்டோர் III | ... | ,, | 1086—87 |
| 160 | அர்பன் II | ... | ,, | 1088—92 |
| 161 | பாஸ்கால் II | ... | ,, | 1099—1118 |
| | தியோதோரிக் | ... | ,, | 1100 |
| | ஆல்பெர்ட் | ... | ,, | 1102 |
| | சிலுவெஸ்தெர் IV | ... | ,, | 1105—11 |
| 162 | ஜெலாசியுஸ் II | ... | ,, | 1118—19 |

| | | | | |
|---|---|---|---|---|
| | கிரெகோரி VIII | ... | கி. பி. | 1112—21 |
| 163 | கலிஸ்துஸ் II | ... | ,, | 1119—24 |
| 164 | ஒனோரியுஸ் II | ... | ,, | 1124—30 |
| | செலஸ்தீன் II | ... | ,, | 1124 |
| 165 | இன்னோசெண்டு II | ... | ,, | 1130—43 |
| | அனாக்கிலித்துஸ் II | ... | ,, | 1130—38 |
| | விக்டோர் IV | ... | ,, | 1138 |
| 166 | செலஸ்தீன் II | ... | ,, | 1143—44 |
| 167 | லூசியுஸ் II | ... | ,, | 1144—45 |
| 168 | யூஜீனியுஸ் III | ... | ,, | 1145—53 |
| 169 | அனஸ்தாசியுஸ் IV (?) | ... | ,, | 1153—54 |
| 170 | ஆதிரியன் IV | ... | ,, | 1154—59 |
| 171 | அலெக்சாந்தர் III | ... | ,, | 1159—81 |
| | விக்டோர் IV | ... | ,, | 1159—64 |
| | பாஸ்கால் III | ... | ,, | 1164—68 |
| | கலிஸ்துஸ் III | ... | ,, | 1168—78 |
| | இன்னோசெண்டு III | ... | ,, | 1178—80 |
| 172 | லூசியுஸ் III | ... | ,, | 1181—85 |
| 173 | அர்பன் III | ... | ,, | 1185—87 |
| 174 | கிரெகோரி VIII | ... | ,, | 1187 |
| 175 | கிளமெண்டு III | ... | ,, | 1187—91 |
| 176 | செலஸ்தீன் III | ... | ,, | 1191—98 |
| 177 | இன்னோசெண்டு III | ... | ,, | 1198—1216 |
| 178 | ஒனோரியுஸ் III | ... | ,, | 1216—27 |
| 179 | கிரெகோரி IX | ... | ,, | 1227—41 |
| 180 | செலஸ்தீன் IV | ... | ,, | 1241 |
| 181 | இன்னோசெண்டு IV | ... | ,, | 1243—54 |
| 182 | அலெக்சாந்தர் IV | ... | ,, | 1254—61 |
| 183 | அர்பன் IV | ... | ,, | 1261—64 |
| 184 | கிளமெண்டு IV | ... | ,, | 1265—68 |
| 185 | அர்ச். கிரெகோரி X | ... | ,, | 1271—76 |

| | | | | |
|---|---|---|---|---|
| 186 | இன்னோசெண்டு V | ... | கி. பி. | 1276 |
| 187 | ஆதிரியன் V | ... | ,, | 1276 |
| 188 | அருளப்பர் XXI | ... | ,, | 1276—77 |
| 189 | நிக்கொலாஸ் III | ... | ,, | 1277—80 |
| 190 | மர்த்தீன் IV | ... | ,, | 1281—85 |
| 191 | ஓனோரியுஸ் IV | ... | ,, | 1285—87 |
| 192 | நிக்கொலாஸ் IV | ... | ,, | 1288—92 |
| 193 | அர்ச். செலஸ்தீன் V | ... | ,, | 1294 |
| 194 | பொனிபாசியுஸ் VIII | ... | ,, | 1294—1303 |
| 195 | ஆசீர்வாதப்பர் XI | ... | ,, | 1303—04 |
| 196 | கிளமெண்டு V | .... | ,, | 1303—14 |
| 197 | அருளப்பர் XXII | ... | ,, | 1316—34 |
| | நிக்கொலாஸ் V | ... | ,, | 1328—30 |
| 198 | ஆசீர்வாதப்பர் XII | ... | ,, | 1334—42 |
| 199 | கிளமெண்டு VI | ... | ,, | 1342—52 |
| 200 | இன்னோசெண்டு VI | ... | ,, | 1352—62 |
| 201 | அர்பன் V | ... | ,, | 1362—70 |
| 202 | கிரெகோரி XI | ... | ,, | 1370—78 |
| 203 | அர்பன் | ... | ,, | 1378—89 |
| | கிளமெண்டு VII (அவிஞன்) | | ,, | 1378—94 |
| 204 | போனிபாசியுஸ் IX | ... | ,, | 1389—1404 |
| | ஆசீர்வாதப்பர் XIII (அவிஞன்) | | ,, | 1394—1424 |
| 205 | இன்னோசெண்டு VII | ... | ,, | 1404—06 |
| 206 | கிரெகோரி XII | ... | ,, | 1406—15 |
| | அலெக்சாந்தர் (பீஸா) | ... | ,, | 1409—10 |
| | அருளப்பர் XXIII (பீஸா)... | | ,, | 1410—15 |
| 207 | மர்த்தீன் | ... | ,, | 1417—31 |
| | கிளமெண்டு VIII (அவிஞன்) | | ,, | 1424—59 |
| | ஆசீர்வாதப்பர் (அவிஞன்) | | | |
| 208 | யூஜீனியுஸ் IV | .... | ,, | 1431—47 |
| | பெலிக்ஸ் V | ... | ,, | 1439—49 |

| | | | | |
|---|---|---|---|---|
| 209 | நிக்கொலாஸ் V | ... | கி. பி. | 1447—55 |
| 210 | கலிஸ்துஸ் III | ... | ,, | 1455—58 |
| 211 | பத்திநாதர் II | ... | ,, | 1458—64 |
| 212 | சின்னப்பர் II | ... | ,, | 1464—71 |
| 213 | சிக்ஸ்துஸ் IV | ... | ,, | 1471—84 |
| 214 | இன்னோசெண்டு VIII | ... | ,, | 1484—92 |
| 215 | அலெக்சாந்தர் VI | ... | ,, | 1492—1503 |
| 216 | பத்திநாதர் III | ... | ,, | 1503 |
| 217 | யூலாஜியுஸ் II | ... | ,, | 1503—13 |
| 218 | சிங்கராயர் X | ... | ,, | 1513—21 |
| 219 | ஆதிரியன் VI | ... | ,, | 1522—23 |
| 220 | கிளமெண்டு VII | ... | ,, | 1523—34 |
| 221 | சின்னப்பர் III | ... | ,, | 1534—49 |
| 222 | யூலாஜியுஸ் III | ... | ,, | 1550—55 |
| 223 | மார்செலியுஸ் II | ... | ,, | 1555 |
| 224 | சின்னப்பர் IV | .... | ,, | 1555—59 |
| 225 | பத்திநாதர் IV | ... | ,, | 1559—65 |
| 226 | அர்ச். பத்திநாதர் V | ... | ,, | 1566—72 |
| 227 | கிரெகோரி XIII | ... | ,, | 1572—85 |
| 228 | சிக்ஸ்துஸ் குயின்த்துஸ் | ... | ,, | 1585—90 |
| 229 | அர்பன் VII | ... | ,, | 1590 |
| 230 | கிரெகோரி XIV | .... | ,, | 1590—91 |
| 231 | இன்னோசெண்டு IX | ... | ,, | 1591 |
| 232 | கிளமெண்டு VIII | ... | ,, | 1592—1605 |
| 233 | சிங்கராயர் XI | ... | ,, | 1605 |
| 234 | சின்னப்பர் V | ... | ,, | 1605—21 |
| 235 | கிரெகோரி XV | ... | ,, | 1621—23 |
| 236 | அர்பன் VIII | ... | ,, | 1623—44 |
| 237 | இன்னோசெண்டு X | ... | ,, | 1644—55 |
| 238 | அலெக்சாந்தர் VII | ... | ,, | 1655—67 |
| 239 | கிளமெண்டு IX | ... | ,, | 1667—69 |

| | | | | |
|---|---|---|---|---|
| 240 | கிளமெண்டு X | ... | ,, | 1670—76 |
| 241 | இன்னேசெண்டு XI | ... | ,, | 1676—89 |
| 242 | அலெக்சாந்தர் VIII | ... | ,, | 1689—91 |
| 243 | இன்னேசெண்டு XII | ... | ,, | 1691—1700 |
| 244 | கிளமெண்டு XI | ... | ,, | 1700—21 |
| 245 | இன்னேசெண்டு XIII | ... | ,, | 1721—24 |
| 246 | ஆசீர்வாதப்பர் XIII | ... | ,, | 1724—30 |
| 247 | கிளமெண்டு XII | ... | ,, | 1730—40 |
| 248 | ஆசீர்வாதப்பர் XIV | ... | ,, | 1740—58 |
| 249 | கிளமெண்டு XIII | ... | ,, | 1758—69 |
| 250 | கிளமெண்டு XIV | ... | ,, | 1769—74 |
| 251 | பத்திநாதர் VI | ... | ,, | 1775—99 |
| 252 | பத்திநாதர் VII | ... | ,, | 1800—23 |
| 253 | சிங்கராயர் XII | ... | ,, | 1823—29 |
| 254 | பத்திநாதர் VIII | ... | ,, | 1829—30 |
| 255 | கிரெகோரி XVI | ... | ,, | 1831—46 |
| 256 | பத்திநாதர் IX | ... | ,, | 1846—78 |
| 257 | சிங்கராயர் XIII | ... | ,, | 1878—1903 |
| 258 | பத்திநாதர் X | ... | ,, | 1903—14 |
| 259 | ஆசீர்வாதப்பர் XV | ... | ,, | 1914—22 |
| 260 | பத்திநாதர் XI | ... | ,, | 1922 |

# பொருள் அடக்கம்.

படம்.

மாட்சிமைதங்கிய அப்போஸ்தலிக்குத் தரிசிகரின்அங்கீகார நிருபம்.

மிகவும் சங். L. பேஷ்ேோ சுவாமிகளின் முகவுரை.

நூலாசிரியர் முகவுரை.

பதிகம்.

## முதல் பாகம்.

## திருச்சபை ஸ்தாபகமும், வேத கலகங்களும்.

### 1-ம் அத்தியாயம்—சேசுக்கிறிஸ்துவின் சீவியம்.

1. மேசியாவின் வருகைக் கெதிர்பார்த்தல்:—உலகத்தின் நிலைமை. 4

2. சேசுநாதரின் சீவியம்:—பிறப்பு அறிவிப்பு; கர்த்தர் பிறப்பு; மூன்று அரசர்கள்; குழவிகள் வதை; யோர்தா நதியில் ஞானஸ்நானம்; முதல் சீஷர்கள்; முதல்புதுமை; திருச்சபை ஸ்தாபகம்; பரிசேயர் பொறாமை; சேசுநாதர் ஓட்டோலகராய் ஜெருசலேம் சென்றது; தேவ நற்கருணை உண்டாக்கியது; பூங்காவனத்தில் இரத்த வேர்வை வேர்த்தது; யூதாசின் சதிமானம்; கைப்பாசன் தீர்ப்பு; போஞ்சுப்பிலாத்து தீர்ப்பு; கல்வாரி மலையில் மரணம்; கர்த்தர் உத்தானம். 17

3. திவ்விய இஸ்பிரீத்து சாந்து வருகை:— இராயப்பர் முதல் பிரசங்கம். 18

### 2-ம் அத்தியாயம்—அப்போஸ்தலர்கள் காலம்.

1. அப்போஸ்தலர்கள் நடவடிக்கை:— அப்போஸ்தலர்களின் துன்பங்கள்; சின்னப்பர் மனந்திரும்பல்; திருச்சபைத் தலைமை; அப்போஸ்தலர்களின் அன்னிய போதகம்; 1-ம் வேத கலகம். 25

2. ஜெருசலேம் அழிந்தது:—யூதேயாவில் கலகம்; ஜெருசலேம் முற்றுகை; தேவாலய அழிவு. 27

3. அப்போஸ்தலர்களின் கால முடிவு:—2-ம் வேதகலகம் அர்ச். அருளப்பர் வேதசாட்சியம்; பதித மதங்கள். 29

## 3-ம் அத்தியாயம்—வேத கலகங்கள்.

1. திருச்சபை சட்டதிட்டம்:— திருச்சபைத் திட்டம்; சன்னியாசிகளும், கன்னியாஸ்திரீகளும்; கிறிஸ்துவர்களின் ஒழுக்கம்; தேவாராதனை; தற்போது திவ்விய நற்கருணை அப்பரூபமாய் மட்டும் கொடுக்கக் காரணங்கள்; ரோமையர் கிறிஸ்துவர்களைப்பற்றிக் கொண்ட தப்பு எண்ணங்கள். 34

2. வேத கலகங்களும், வேதசாட்சியங்களும்:—3-ம் வேத கலகம்; இளைய பிளினியின் அபிப்பிராயம்; அந்தியோக்கியா அர்ச். இஞ்ஞாசியார்; அதிரையான் காலம்: அர்ச். சிம்பரோசா; அர்ச். போலிக்கார்ப்பு; 4-ம் வேதகலகம்; அர்ச். ஆனந்தம்மாள்; அர்ச். ஜஸ்தின் ஞானி; அர்ச். செசிலியம்மாள்; பேரிடி வருத்திய சேனை; 5-ம் வேத கலகம்; அலெக்சாந்தர் செவெருஸ்; 6-ம் வேத கலகம்; 7-ம் வேத கலகம்; 8-ம் வேத கலகம்; தியோக்கிலேசியன்; 9-ம் வேத கலகம்; 10-ம் வேத கலகம்; அர்ச். செபஸ்தியார்; அர்ச். ஆஞ்ஞேஸ்; வேதசாட்சிகளின் காலம்; சமாதானம். 50

# இரண்டாம் பாகம்.

## பதிதமதங்களும், நாகரீகமற்றோரும்.

## 1-ம் அத்தியாயம்—கிறிஸ்து சக்கரவர்த்திகளும், ஆரிய மதமும்.

1. திருச்சபையின் ஜெயம்:— கொன்ஸ்தாந்தீன் சிம்மாசனம் ஏறல்; கிறிஸ்துவர்களுக்கு அளித்தசுதந்தரங்கள்;

லாட்டெரன் அரண்மனை; தோனுத்துஸ் பிரிவினை; விசினியுஸ் வேதகலகம்; திருச்சிலுவை கண்டெடுக்கப்படல்; கிறிஸ்துமத மதிப்பு; கிறிஸ்துமதக் கோயில்கள். 57

2. வனாந்தர ரிஷிகள்:—அர்ச். வனத்துச் சின்னப்பரும், வனத்து அந்தோனியாரும்; துறவிகளின் சீவியம். 60

3. ஆரிய பதிதமதம்:— ஆரியுஸ்; 1-ம் பொதுச்சங்கம், நைசியா; சங்கத் தீர்ப்பு; கர்த்தர் உத்தானத் திருநாள்; நைசியா சங்க ஒழுங்குகள்; ஆரியர் மறுபடியும் கலகம் செய்தல்; டைர் சங்கம்; ஆரியுஸ் மரணம்; கொன்ஸ் தாந்தியுஸ். 68

4. ஜூலியன்:—வேதகலகம்; ஜெருசலேம் தேவாலயம்; பாரசீக யுத்தம், ஜூலியன் மரணம். 73

5. வேத பாரகரும், அர்ச்சியசிஷ்டவர்களும்:— அர்ச். கிரெகோரி நாசியான்சன்; அர்ச். பேசில்; அர்ச். கிறிசொஸ்தோமுஸ் அருளப்பர்; அர்ச்.அம்புரோசியார்; அர்ச். இலாரியும், அர்ச். மர்த்தீனும்; மாசிடோனியர் பதிதமதம்; 2-ம் பொதுச்சங்கம், கொன்ஸ்தாந்திநோப் பிலி. 79

## 2-ம் அத்தியாயம்—மிலேச்சர்கள் படையெழுச்சி.

1. பதித மதங்களும், அவற்றை மறுத்து ஜெயங்கொண்ட வேத சாஸ்திரிகளும்:— ரோமை நாட்டின் நிலைமை; தோனுத்தியரும், அர்ச். அகுஸ்தீனும்; அர்ச். கிறிசொஸ் தோமுஸ் முடிவு; பெலாசிய பதிதமதம்; நெஸ்டோரிய பதிதமதம்; 3-ம் பொதுச்சங்கம், எப்பெசுஸ்; யூட்டிக் கெஸ் பதிதமதம்; எப்பெசுஸ் கள்ளர் கூட்டம்; 4-ம் பொதுச்சங்கம், சால்செடன். 92

2. மிலேச்சர்கள் படை எழுச்சி:— அலரிக்; அட்டிலா; ஜென்செரிக்; மேல்ரோமை ராச்சிய முடிவு. 97

3. அர்ச்சியசிஷ்டவர்களும், பாப்புகளும்:—அர்ச். குள்ள அருளப்பர்; அர்ச். ஸ்தம்ப சிமெயோன்; அர்ச். பாட்டிரிக்; வேத சாட்சிகள்; பாப்புகள். 103

## 3-ம் அத்தியாயம்—மிலேச்சர்கள் மனந்திரும்பல்.

1. மிலேச்சர்கள் மனந்திரும்பல்:— ரோமை நாட்டின் நிலைமை; பிராஞ்சுக்காரர்; பர்கண்டியர்; மேல்காத்தியர்; லொம்பார்டியர்; ஆங்கில சாக்சோனியர். 107

2. பதிதமதங்களும் வேதசங்கங்களும்:— கீழ்ரோமை நாட்டார் பிரிவினை; பதிதர் மறுபடியும் கலகம் செய்தல்; மூன்று அத்தியாயங்கள்; 5-ம் பொதுச்சங்கம், கொன்ஸ்தாந்திநோப்பிலி. 111

3. அர்ச்சியசிஷ்டவர்களும், பாப்புகளும்:—அர்ச். ஆசீர்வாதப்பர்; ஆசீர்வாதப்பர் சபை; ஆசீர்வாதப்பரின் ஒழுங்குகள்; ஆசீர்வாதப்பர் மரணம்; அர்ச். கொலம்பன்; பாப்புகள். 115

## 4-ம் அத்தியாயம்—மகமதிய மதமும், ஏகசித்தக் கொள்கையும்.

1. மகமதிய மதம்:— மகமது; மகமதிய சகாப்தம்; மதஸ்தாபனை; ஏராக்கிலியுஸ் ராயன்; மகமதிய மதம் பரம்பல். 118

2. ஏகசித்தக்கொள்கை:—கான்ஸ்டன்ஸ் சட்டம்; அர்ச். மர்த்தீன் பாப்பு; 6-ம் பொதுச்சங்கம், கொன்ஸ்தாந்திநோப்பிலி. 122

## 5-ம் அத்தியாயம்—கார்லோவிங்கியர்.

1. கீழ்தேச திருச்சபையும், விக்கிரக நிக்கிரகரும்:— லெயோ; வேதகலகம்; அர்ச். தமசீன் அருளப்பர்; இத்தாலியில் துன்பம்; மேல்ரோமை நாடு கீழ்ரோமை நாட்டினின்று பிரிதல்; கொன்ஸ்தாந்தீன் கப்ரோனிமுஸ்; 7-ம் பொதுச்சங்கம், நைசியா. 129

2. மேனாட்டுத் திருச்சபையும்; கார்லோவிங்கியரும்:— அர்ச். பொனிபாசியார்; 3-ம் கிரெகோரி; கார்லோவிங்கியரும், இத்தாலியும்; பாப்புவின் லௌகீக ஆட்சி பகிரங்கப்படல்; சார்ல்மேன் சக்கரவர்த்தி. 132

## மூன்றும் பாகம்.

## கிறிஸ்து நாட்டு ஸ்தாபகம்.

### 1-ம் அத்தியாயம்—திருரோமை ஸாம்ராச்சியம்.


1. கீழ்தேச திருச்சபை, போசியுஸ் தப்பறை:—போசியுஸ் தப்பறை; திவ்விய இஸ்பிரீத்து சாந்து; 8-ம் பொதுச் சங்கம், கொன்ஸ்தாந்திநோப்பிலி; போசியுஸ் தப்பறை முடிவு; சிலாவியரும், பல்கேரியரும் மனந்திரும்பல். 140

2. மேல்ரோமை திருச்சபை:—ஸ்பானியாவில் வேதகலகம்; திருரோமை ஸாம்ராச்சியம்; பாப்புகள்; நார்மானியர் மனந்திரும்பல். 143


### 2-ம் அத்தியாயம்—இரும்புக்காலம்.


1. போது வர்த்தமானம்:—இரும்புக்காலம்; தீயபாப்புகள்; சக்கரவர்த்திகள்; 2-ம் சிலுவேஸ்திரி பாப்பு; அஞ்ஞானிகள் மனந்திரும்பல். 147

2. சந்நியாசிகளும், அர்ச்சியசிஷ்டவர்களும்:— கிளுனி மடம்; கான்ட்டெர்பரி அர்ச். டன்ஸ்ட்டன்; லாத்ருஸ், அர்ச். சின்னப்பர். 149


### 3-ம் அத்தியாயம்—திருச்சபையும், திருரோமை ஸாம்ராச்சியமும்.


1. திருச்சபையும், திருரோமை ஸாம்ராச்சியமும்:—பட்டாபிஷேக தகராறு; 2-ம் என்ரி சக்கரவர்த்தி; தேவயுத்த நிறுத்தம்; பாப்புகள்; 7-ம் கிரெகோரியுஸ், பட்டம் கொடுத்தல் விவாதம்; தகராறு முடிவு. 156

2. கீழ்தேச நாட்டுப்பிரிவும், தப்பறையும்:— கிரீக்கர் தப்பறை. 159


## நான்காம் பாகம்.

## சிலுவை யுத்தங்கள்.

### 1-ம் அத்தியாயம்—முதல் சிலுவை யுத்தங்கள்.


1. சிலுவை யுத்தங்கள்:—முதல் சிலுவையுத்தம்; போர்

புரியும் சந்நியாச சபைகள்; 2-ம் யுத்தம்; ஜெருசலேம் கிறிஸ்து தேசம்; 3-ம் யுத்தம்; 4-ம் யுத்தம். 160

2. திருச்சபை ஆட்சி விஷயங்கள்:—9-ம், 10-ம் பொதுச் சங்கங்கள், ரோமை; 11-ம் பொதுச்சங்கம், ரோமை. 164

## 2-ம் அத்தியாயம்—கடைசிச் சிலுவை யுத்தங்கள்.

1. சிலுவை யுத்தங்கள்:— ஆல்பிசென்சியர்; ஸ்பெயின் சிலுவை யுத்தங்கள்; 5, 6, 7-ம் சிலுவை யுத்தங்கள்; 8-ம் சிலுவை யுத்தம்; சிலுவை யுத்தங்களைப் பற்றிய தீர்மானம். 169

2. அந்நிய தேச போதகம். 170

3. துறவற சந்நியாச சபைகள்:— அர்ச். தமதிரித்துவ சபை; பிரான்சிஸ்கு சபை; தோமினிக் சபை; கர்மேல் சபை; அகுஸ்தீன் சபை. 173

4. பாப்புகள்:—3-ம் இன்னோசெண்டு; 12-ம் பொதுச் சங்கம், ரோமை; 13-ம் பொதுச்சங்கம்; லியான்ஸ் பாப்பு தேர்தலைக்குறித்த ஒழுங்குகள்; மற்ற பாப்புகள். 181

## ஐந்தாம் பாகம்.

## அஞ்ஞான கல்வி எழுச்சி.

## 1-ம் அத்தியாயம்—அவிஞன் பாப்புகள்.

1. அவிஞன் பாப்புகள்:—பொது வர்த்தமானம்; 15-ம் பொதுச்சங்கம், வியென்; ரோமைக் குழப்பம்; ரியென்சி; பாப்பு ரோமைக்குத் திரும்பிச் சேரல். 186

2. அர்ச்சியசிஷ்டவர்கள்:—அர்ச். சியெனா கத்தரீனம்மாள். 187

## 2-ம் அத்தியாயம்—மேனாட்டுப் பெரும் பிரிவினை.

1. பிரிவினைகள்:—காரணங்கள்; இரண்டு கட்சிகள்; பீசா சங்கம்; கான்ஸ்டன்ஸ் சங்கம்; கடைசிப் பிரிவினைகள், 16-ம் பொதுச்சங்கம், பிளோரென்ஸ். 191

2. வேத தப்பறைகள்:—விக்கிலிப் தப்பறை; ஜான்உஸ் தப்பறை; 17-ம் பொதுச்சங்கம், கான்ஸ்டன்ஸ். 193

3. அர்ச்சியசிஷ்டவர்கள்:—அர்ச். லக்செம்பூர்க் அருளப்பர்; அர்ச். பெரர் வின்செண்டு; கிறிஸ்துநாதர் அநுசாரம். 195

## 3-ம் அத்தியாயம்—அஞ்ஞானகல்வி எழுச்சி.

1. பொதுவர்த்தமானங்கள்:— துருக்கர் கொன்ஸ்தாந்திஞேப்பிலைப் பிடித்தல்; அமெரிக்கா கண்டு பிடிக்கப்படல்; போர்த்துக்கேசியர் கண்டு பிடித்தவை; அச்சியந்திரம்; அஞ்ஞான கல்வி எழுச்சி.

2. பாப்புகளும், அர்ச்சியசிஷ்டவர்களும்:— சிறியோர் (The Minims) 203

## ஆறும் பாகம்.
## பதித மதம்.

## 1-ம் அத்தியாயம்—புரோட்டெஸ்டாண்டு பதிதமதம்.

1. பதிதமாற்றம்:—நியாயங்கள்; லுத்தர்; சுவிங்கிலி; இங்கிலாந்தில் பதிதமதம்; கால்வின். 215

2. கத்தோலிக்க சீர்திருத்தம்:— பாப்புகள்; சேசுசபை; அந்நியபோதகம்; 18-ம் பொதுச்சங்கம், டிரென்ட்டு. 218

## 2-ம் அத்தியாயம்—ஜான்செனிய மதம்.

1. திருச்சபையின் துன்பங்கள்:— வேதகலகம்; அர்ச். பிதேலியார்; அர்ச். ஜோசப்பாத்; அர்ச். ஆன்று பபோலா; முப்பது வருஷ யுத்தம். 221

2. ஜான்சேனிய மதம்:—காலிய கொள்கை 225

3. அர்ச்சியசிஷ்டவர்கள்:—அர்ச். பிராஞ்சிஸ்கு சலேசியார்; அர்ச். பவுல் வின்செண்டு; அந்நியபோதகம்; மற்ற அர்ச்சியசிஷ்டவர்கள். 228

4. பாப்புகள்:—15-ம் கிரெகோரி; விசுவாசப் பரம்புதல் சபை; 9-ம் கிளமெண்டு. 229

## 3-ம் அத்தியாயம்—தத்துவ சாஸ்திரம்.

1. அவவிசுவாசப்பரம்பல்:—அவவிசுவாசக் காரணங்கள்;

தத்துவ சாஸ்திரத்தின் முக்கிய கர்த்தாக்கள்; சேசு சபை அழிக்கப்பட்டது. 233

2. பாப்புகள்:—9-ம் கிளமெண்டு; அர்ச்சியசிஷ்டவர்கள்; அர்ச். அல்போன்சுஸ் லிகோரி. 234

## ஏழாம் பாகம்.

## ராச கலகம்.

### 1-ம் அத்தியாயம்—ராச கலகம்.

1. 6-ம் பத்திநாதரும் ராச கலகமும்:— பிராஞ்சு ராச கலகம்; 6-ம் பத்திநாதரின் பாடுகள். 239

2. 7-ம் பத்திநாதரும், 1-ம் நெப்போலியனும்:— 7-ம் பத்திநாதரின் தேர்தல்; பிராஞ்சுடன் உடன்படிக்கை; பத்திநாதர் சிறை; சிறை மீட்கப்படல்; சிறை நீங்கிய பின் ஆட்சி; கார்போனரி; 12-ம் சிங்கராயர்; 8-ம் பத்திநாதர். 244

3. 16-ம் கிரேகோரி, பிராஞ்சு கலகம்:—விசுவாசப்பரம் புதல் சபை. 245

4. 9-ம் பத்திநாதரும், 3-ம் நெப்போலியனும்:— ராச கலகம்; சமாதானம்; மாசில்லாத உற்பவம்; புதிய கஷ்டங்கள்; வத்திக்கான் பொதுச்சங்கம்; பத்திநாதரின் சிறை; மரணம். 253

### 2-ம் அத்தியாயம்—பாப்புகள்.

பாப்புகள்:—13-ம் சிங்கராயர்; 10-ம் பத்திநார்; 15-ம் ஆசீர்வாதப்பர். 257

முடிவு. 260

பாப்புகளின் டாப்பு. 270

பொருள் அடக்கம். 278

பிழை திருத்தம். 279

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| பதிகம் 1 | 3 | முகல் | முதல் |
| 3 | 22 | தொடந்த | தொடர்ந்த |
| 41 | 6 | கடடளை | கட்டளை |
| 67 | 22 | ரயார் | ராயர் |
| 90 | 20 | சர்வேரனுடன் | சர்வேசுரனுடன் |
| 99 | 28 | முமுந்தாளிலிருந்து | முழந்தாளிலிருந்து |
| 112 | 19 | வரப்பிரசாதக்கக் | வரப்பிரசாதக் |
| ,, | 20 | படித்துப் | படுத்துப் |
| ,, | 28 | கீக்கிரத்தில் | சீக்கிரத்தில் |
| 123 | 5 | கௌவுரவமாய் | கௌரவமாய் |
| 131 | 9 | சமமதப்படிக்கு | சம்மதப்படிக்கு |
| ,, | 24 | பஜர்மனி | ஜெர்மனி |
| 161 | 2 | என்றும் | என்னும் |
| 200 | 7 | ஆயினும | ஆயினும் |
| 208 | 20 | தாக்சி | தாக்கி |

Q62:6
N26
78180

4711
3-60